# நீண்ட பயணம்

இன்று வரையும் ஈழத்தில் வெளி வந்த நாவல்களிலே தரமான பத்து நாவல்களைத் தெரிவு செய்வதானால் மண்ணும் மக்களும் தவிர்ந்த ஐந்து நாவல்களும் இடம் பெறும் என்பதில் ஐயமில்லை. **நீண்ட பயணம்; செவ்வானமும்** இவற்றிலே தலையாய படைப்புகள். கணேசலிங்கனுக்குப் பின் ஈழத்து எழுத்தாளர் எவரும் இத்தகைய படைப்புகள்த் தர முயலவில்லை என்பது அவதானிக்கத் தக்கது.

ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்

**கலாநிதி.நா. சுப்பிரமணியம்**

யாழ். பல்கலைத் கழகம்

**நீண்ட பயணம்; சடங்கு; செவ்வானம்** ஆகிய மூன்றும் நிலமானிய அமைப்பிலிருந்து முதலாளித்துவ அமைப்புக்கு மாறும் சமுதாயத்தைச் சித்திரிக்கின்றன. அந்த வகையில் இவற்றை மூன்று நாவல்களின் தொகுதி.... Trilogy எனலாம்.

'தமிழ் நாவல் இலக்கியம்'

**கலாநிதி.நா. கைலாசபதி**

கலை, இலக்கியத்திலும் தலித்தியம் பற்றி இன்று சிறப்பாகப் பேசப்பட்டு வருகிறது. சமூகத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் ஜன நாயாக உரிமைக்காகப் போராடுகிறார்கள். மூன்று தசாபதங்களுக்கு முன்னர் இதே கோட்பாட்டை வைத்து இந்நாவல் எழுதப் பட்டிருக்கிறது.

-பதிப்புரையிலிருந்து

செ. கணேசலிங்கன்

# நீண்ட பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட பயணம்

செ. கணேசலிங்கன்

வெளியீடு & விற்பனை

குமரன் பப்ளிஷர்ஸ்

3, மெய்கை விநாயகர் தெரு,

வழி: குமரன் காலனி 7வது தெரு

வடபழனி :: சென்னை - 600 026.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட பயணம்
முதற் பதிப்பு : செப்டம்பர் 1965
இரண்டாம் பதிப்பு: நவம்பர் 1994
மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2002
©
விலை : ரூ.56.00

TITLE : NEENDA PAYANAM
AUTHOR : SE. GANESALINGAN (C)
SUBJECT : NOVEL IN TAMIL

No. of Pages : 208
Size : 12.5 x 18 crown
Paper : 11.6kg Cream wove
Type : 10 point
Cover : Art Board
Price : **Rs.56**
Publishers : Kumaran Publishers
3, Meigai Vinayagar Street,
(Via) Kumaran Colony 7th Street,
Vadapalani, Chennai - 600 026.

## சில உண்மைகள்

நமது கிராமங்கள் இன்றும் பிரபுத்துவ சமுதாய அமைப்பிலேயே உள்ளன. சாதி வேறுபாடு அதன் சின்னமாக உள்ளது. அங்கு நிரந்தர அமைதி நிலவுவதாகச் சொல்வதற்கில்லை. வளர்ச்சியடையும் குழந்தையிடம் பொறுமையைப் பார்க்க முடியாது.

1956ஆம் ஆண்டை ஒட்டி மூன்று நான்கு ஆண்டுகள் இலங்கை வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த கட்டமாகும். அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள சிறு கிராமமொன்றில் ஏற்படும் மாற்றத்தை எழுத முனைந்தேன். ஒடுக்கப்பட்டவர்கள் ஒரு கல் தூரத்தைக் கடக்கின்றனர்.

சுரண்டல், ஏற்றத்தாழ்வுகள், ஆதிக்க வெறி ஆகியன மனிதரிடை நிலைக்கும் வரை போராட்டம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். மனித உரிமைப் போராட்டம் ஒரு நீண்ட பயணம்.

2500 ஆண்டுகளின் முன்னர் ரோமாபுரியில் அடிமைகள் மிருகங்கள் போல மதிக்கப்பட்டனர். காலில் விலங்கு களோடு மிருகங்களாக வாழ்ந்தனர்; செல்வர்க்காக உழைத்தனர். சிலர் அடிமைகளைப் பட்டிகளாகப் பெருக்கி வாணிபம் செய்தனர். சிலர் அடிமைகளைப் போரிடப் பழக்கி, நகர மைதானங்களில் இரத்தம் பெருகி இறக்கும் வரை அடிமைகள் போரிடுவதை கேளிக்கையாக்கிப் பணம் பெருக்கினர். சிலர் மனிதர்களை சிங்கம், புலி போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய விலங்குகளுடன் போராடச் செய்வதைப் பொழுது போக்காக்கிப் பொருள் சேர்த்தனர்; மிருகங்கள் அடிமைகளின் உடல்களைக் கிழித்து, சதையைச் சுவைப்பதைப் பார்த்துப் பிரபுக்கள் கைதட்டி ஆரவாரம் செய்து களித்தனர். இவ்வித அடிமைத்தனத்தை உடைத்தெறிய அன்று அடிமையாக நசிந்த ஸ்பாட்டகஸ் தொடுத்த போராட்டம் இன்றும் நின்றுவிட வில்லை. ஒடுக்கப்பட்டவர்கள் இன்றும் போராடி வளர்ந்து வருகின்றனர். பயணம் நின்றுவிட வில்லை. மேலே தொடர்கிறது,

இந்நூலை விரைவில் படித்து முன்னுரை வழங்கிச் சிறப்புச் செய்த அகிலன் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி. விரைவில் அச்சிடத் துணைபுரிந்த திரு. கண முத்தையா அவர்களுக்கும் அச்சேற்றிய திரு. ராமன்'ஸ் பிரிண்டிங் பிரஸுக்கும் என் அன்பு.

30.9.65 **செ. கணேசலிங்கன்**

# பதிப்புரை

கலை, இலக்கியத்திலும் தலித்தியம் பற்றி இன்று சிறப்பாகப் பேசப்பட்டு வருகிறது. சமுதாயத்தில் அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் ஜனநாயக உரிமைக்காகப் போராடுகிறார்கள். மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் என் முதல் நாவலிலேயே இதே கோட்பாட்டை வைத்து இந்நாவலை எழுதினேன். இன்று இந்நாவல் மறுபதிப்பாக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அடக்கி ஒடுக்கப்படும் தலித்துகள், பெண்களது ஜனநாயகப் புரட்சி ஒன்று இந்தியாவில் முதலில் ஏற்பட வேண்டும் என கெயில் ஒம் வெல்ட் போன்ற மார்க்சிய அறிஞர்கள் வேண்டுகின்றனர்.

கலை, இலக்கியத் திறனாய்வாளரான கலாநிதி கைலாசபதி நீண்ட பயணம், சடங்கு, செவ்வானம் ஆகிய என் நாவல்களை சம கால வரலாற்று நாவல்களாக இனங்கண்டு மூன்று நாவல்களின் தொகுதி, Trilogy எனக் குறிப்பிட்டுள்ளார்.

'இன்று வரையும்' ஈழத்தில் வெளிவந்த நாவல்களைத் தெரிவு செய்வதானால் கணேசலிங்கனின் ஐந்து நாவல்கள் இத் தெரிவில் இடம் பெறும் என்பதில் ஐயமில்லை. நீண்ட பயணமும், செவ்வானமும் இவற்றிலே தலையாய படைப்புகள் ' என கலாநிதி கா. சுப்பிரமணியன் 'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்' என்ற தமது ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை
*26.11.94* **செ.க.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலனின் முன்னுரை

மனித சமுதாயத்தில்நீண்ட நெடும் பயணமே ஒரு மிகப் பெரிய காப்பியமாகும். முதலும் முடிவும் காண முடியாத மாபெரும் கதை அது. அந்த நீண்ட நெடும் பயணத்தில் யாழ்ப்பாணத்துக் குடிமக்களில் சிலர் எவ்வாறு கலந்து கொண்டு வழி நடக்கிறார்கள் என்பதைச் சொல்லுவதுதான் இந்த 'நீண்ட பயணம்' எனும் நாவல்.

யாழ்ப்பாணத்துக்கு குடிமக்கள் என்றவுடனேயே நமக்கெல்லாம் சமுதாயத்தின் மேல்மட்டத்தில் புலப்படும் தமிழர்களின் நினைவு வருவதுண்டு. தமிழுணர்வும் இறையுணர்வும் போற்றி வளர்க்கப்பட்டு வரும் இடம் யாழ்ப்பாணம். ஆனால் இந்த நாவலில் ஆசிரியர் திரு. கணேசலிங்கன் குடியுரிமையைச் சரியாகப் பெற முடியாமல் தவிக்கும் யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களாகிய பள்ளர் - பறையர் இவர்களது வாழ்க்கைப் போராட்டத்தை எழுதியுள்ளார். வேறு இனத்தாரிடமோ வேறு மொழி பேசுவோரிடமோ தமிழர் நடத்தும் போராட்டத்தின் கதை அல்ல இது. தமிழர்களிடமிருந்தே தமிழர்கள் உரிமை பெறுவதற்காக நடத்தி வரும் சோகம் நிறைந்த அமைதியான போராட்டம். இந்த 'நீண்ட பயணம்' வாயில்லாப் பூச்சிகளின் இதயக் குமுறலே ஆசிரியரின் குரலாக இதனிடையே மெல்ல ஒலிக்கிறது.

இந்த ஒன்றுக்காகவே இதன் ஆசிரியரை நாம் முதலில் மனப்பூர்வமாகப் பாராட்ட வேண்டும். வழக்கமாக எழுத்தாளர்களின் கண்களிலும் கவனத்திலும் படாத வாழ்க்கையின் ஓர் இருண்ட பகுதியை இவர் உற்றுப் பார்த்திருக்கிறார். அதற்குத் தமது பேனா முனையால் ஒளி கொடுத்து மற்றவர்களையும் பார்க்கச் செய்திருக்கிறார். டாக்டர் மு.வ. அவர்களின் 'கரித்துண்டு' என்ற நாவலில்தான் நான் முதன் முதலாக வாழ்க்கையின் அடித்தளத்திலிலுள்ள மக்களின் நிலையை அங்கங்கே காண முடிந்தது. இந்தக் கதையில் அதையே மையமாகவும் முழுமையாகவும் காண முடிகிறது. இது ஓர் புதுமை கொண்ட புதினம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கதை மிகவும் நிதானமாகச் செல்கிறது. அமைதி நிறைந்த அருவியைப் போல் அந்த மக்களின் குடிசை வாழ்வை நின்று நிதானித்துப் பார்க்கும்படி சொல்லிக் கொண்டு செல்கிறது. செயற்கை நிகழ்ச்சிகளோ, எதிர்பாராத சிக்கல்களோ, திடீர்த் திருப்பங்களோ எதுவுமில்லை. இந்தக் காரணங்களாலேயே இதன் சுவை மிகுந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

மரமேறிக் கள் வடிக்கும் பள்ளனாகிய செல்லத்துரையனே இதன் கதாநாயகன். அவனுடைய நண்பனாகவும் புதுயுக இளைஞனாகவும் வருபவன் பறைச்சேரியைச் சேர்ந்த மாதவன். இந்தக் கதையின் இதயத் துடிப்பாக விளங்குபவன் செல்லத்துரையன்; சிந்தனைக் கூர்மையையாகத் தோற்றமளிப்பவன் மாதவன். இன்னும் இவர்களைச் சுற்றிலும் இவர்களைச் சார்ந்த பல்வேறு மக்கள், நம்கண்களில் பட்டும் நாம் காணத் தவறும் மக்கள் சுழன்று வருகிறார்கள். வள்ளி, கற்பகம், சரஸ்வதி முதலிய பெண்களையும் நாம் அவர்களது தனித் தன்மைகளோடு கண்டு அவர்களது இன்ப துன்பங்களில் பங்கு கொள்ள முடிகிறது.

சாதிக் கட்டுப்பாடு என்பது இந்தியாவில் அரசாங்கச் சலுகைகளுக்காகவும், ஓட்டுச் சேகரிப்பதற்காகவும் இப்போது வேற்றுருவில் நிலவுகிற தென்றாலும் அதன் அடித்தளம் இங்கு தகர்ந்து போய் விட்டது. கிராமங்களிலும் அது கலகலத்துக் கொண்டு வருகிறது. ஆனால் தமிழர்கள் சிறுபான்மையினராக உள்ள இலங்கையில் இன்னும் அதன் பிடி தளரவில்லையென்றே தோன்றுகிறது. அந்த அபாயத்தைத் தக்கவாறு கலைநயத்தோடு இதில் சுட்டிக் காட்டியிருக்கிறார். உரிமையை விரும்பும் எந்த மக்கள் கூட்டமும் தன்னில் ஒரு பகுதியினரை உரிமையற்றவர்களாக வைத்திருக்கும் வரையிலும், அது உரிமைக்காகப்போராடும் சக்தியைப் பெறுவதில்லை. சத்தியமும் அதன் பக்கம் சார்வதில்லை. இதைச் சுட்டிக்காட்டும் பாத்திரங்களாக விதானையார் வல்லிபுரம், சீனிவாசகக் கமக்காரர் முதலிய மனிதப்பதர்கள் இதில் வருகிறார்கள். மாறித் தேய்ந்து வலுவிழந்து வரும் போலிப் பெருமையின் கடைசிச் சின்னங்கள் என்று இவர்களைக் கூறலாம்.

இது ஒரு யாழ்ப்பாணத்துத் தமிழ் நாவல்.

யாழ்ப்பாணத்துப் பனைவடலி, வள்ளிக்கிழங்கு, அதன் கீற்று, மண் வளம், இவ்வளவும் இதில் நிறைந்திருக்கின்றன. அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் பெருமைகள், சிறுமைகள், ஆசைகள், நிராசைகள், துன்பங்கள், போராட்டங்கள், சாதிக்கட்டுப்பாடுகள் இவற்றோடு இதில் உலவுகிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்து மக்களாக இருப்பதால், யாழ்ப்பாணத்துத் தமிழிலேயே இயற்கையாகப் பேசுகிறார்கள். இதைப் படிக்கும்போது நம்மை இதன் ஆசிரியர் யாழ்ப்பாணத்துக்கே அழைத்துச் சென்று அதன் குடிசைகள் நிறைந்த பகுதிகளில் விட்டு விடுகிறார்.

தமிழ்நாட்டு வாசகர்களாகிய நமக்கு இந்த நாவலை வேகமாகப் படித்துக் கொண்டே போய்விட முடியாது. ஆனால் அதேசமயம் பொருள் விளங்காத பல சொற்கள் உள்ளன என்றும் சொல்வதற்கில்லை. இதில் யாழ்ப்பாணத்தின் தனித்தன்மை, அந்தத்தமிழின் தனித்தன்மை, மக்களின் தனித்தன்மை, ஆசிரியரின் தனித்தன்மை இவ்வளவும் இருக்கின்றன. இங்கிலாந்தில் உள்ளவர் எழுதும் ஆங்கில நாவல் அமெரிக்கரின் ஆங்கில நாவலைப் போல் இராது. இந்த வேறுபாட்டைக் கற்றோர் கண்டு இன்புற முடியும். அவ்வாறே தமிழ்நாட்டார் தங்களது உடன்பிறந்தவர்களான யாழ்ப்பாணத்து மக்களின் ஒரு பகுதியினரை அவர்களது சூழ்நிலையில் காண இது துணை செய்கிறது. இந்தத் தனித் தன்மையோடு யாழ்ப்பாணத்திலிருந்து இன்னும் பல நாவல்கள் வருவதற்கு இது வழிகாட்டியாகும்.

ஆசிரியர் திரு. செ. கணேசலிங்கன் இளைஞர்; எழுத்து உலகுக்குப் புதியவரல்லர். ஏற்கனவே பல சிறு கதைகள் எழுதித் தமிழ் கூறும் நல்லுலகுக்கு நன்கு அறிமுகமானவர். நாவல் எழுதுவதில் அவரது இந்த முதல் முயற்சியே வெற்றி நிறைந்த முயற்சியாதலால், இன்னும் பல நாவல்கள் அவரிடமிருந்து வெளிவர இது ஊக்கம் தருமென்று நம்புகிறேன். தமிழ்நாட்டு வாசகர்களும் யாழ்ப்பாணத்து வாசகர்களும் இதைப் படித்துப் பாராட்டி மகிழ்வார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. வாழ்க திரு. செ.கணேசலிங்கன்! வளர்க அவர்களது இலக்கியப்பணி!

*171, லாயிட்ஸ்ரோடு,*
*சென்னை - 14*
*21.9.65*

அன்பன்
**அகிலன்**

# நீண்ட பயணம்

## 1

செல்லத்துரையன் தூக்கம் விட்டு எழுந்தபோது பொழுது பனைக்கு மேலே எழுந்து விட்டது. கண்களினிடையே அரும்பியிருந்த பூளையைத் துடைத்து, கைகளையும் கால்களையும் மடக்கி, நீட்டி சோம்பல் முறித்துக் கொண்டே பாயிலே எழுந்திருந்தான். மரம் சீவப் போவதற்கு நேரமாகி விட்டதே என்ற நினைவு எழுந்தது. அதனிடையே முதல் நாளிரவு நடைபெற்ற சம்பவங்களும் கனவுபோல நினைவில் வந்தன. சிந்தனை அதையே தொடர்ந்து இரத்தத்தில் சூடும் உள்ளத்தில் கொதிப்பும் ஏறச் செய்தது. சில நேரம் அன்றைய வேலைகளையே மறந்து அப்படியே இருந்து விட்டான்.

''கோப்பி ஆறிப் போச்சு. குடியனண்ணை..''

அன்னம் ஒரு மூக்குப் பேணியைக் கொண்டு வந்து அவனருகே வைத்து விட்டுச் சென்றாள். எழுந்து தண்ணீர் எடுத்து வாய் கொப்பளிப்பதற்கே மனம் எழவில்லை. படுத்திருந்த கொட்டிலுக்குள்ளே தண்ணீர் இருக்குமா எனச் சுற்றி வரப் பார்த்தான். அன்னத்தைக் கூப்பிடக் கூட விரும்பாதவனாக ஒரு மிடறு கோப்பியை வாயிலே விட்டு அலசி செத்தைக் கரையாகக் கொப்பளித்து விட்டு, மிகுதிக் கோப்பியை 'மடமட'வெனக் குடித்து முடித்தான். உடலிலே சிறிது சூடு ஏறியது.

பின்னர் சுறுசுறுப்புடன் எழுந்து தலையணையுடன் சேர்த்து பாயைச் சுற்றி, செத்தைக் கரையான மற்றொரு பாயுடன் ஆடிக் கொண்டிருந்த அசையில் போட்டுவிட்டு வெளியே வந்தான்.

முற்றத்திலிருந்த தண்ணீர் பானையைச் சரித்து முகத்தைக் கழுவி வேட்டியின் தலைப்பால் துடைத்துக் கொண்டே மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டிலுக்குள்ளே நுழைந்து சீப்பை எடுத்து மயிரைப் பின்புறமாக நாலு தடவை வாரி விட்டான். சீப்பின் வலிமைக்குக் கட்டுப்படாத மயிர்கள் சில சுருண்டு நெற்றியிலே விளையாடின. கொடியிலே கிடந்த ஒரு சேட்டையும் எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே வந்தான்.

''அன்னம்''

இயனக்கூடு, ஏறுபட்டி, தளநாரையும் அன்னம் கொண்டு வந்து கொடுத்தாள்.

''முட்டி வேணுமாண்ணை?''

''வேண்டாம், அங்கை கிடக்கு''

செல்லத்துரையன் பதில் சொல்லிக் கொண்டே இயனக் கூடும் ஏறுபட்டி நளநாரும் கையிலே ஆட ஒழுங்கையை நோக்கி நடந்தான்.

''குரக்கன் புட்டு அவிக்கிறவன் மினைக்கெடாமல் வாண்ணை''

அன்னம் உரத்துச் சொன்னாள். அதைப் பொருட்படுத்தாதவனாக ஒரு காலில் தவம் செயது கொண்டிருந்த ஓலைப் படலையைத் தள்ளிக் கொண்டே ஒழுங்கையில் இறங்கினான். மக்கிக் கல்லுப் பரவிய ஒழுங்கை, கிராமச் சங்க உருளை என்றும் அந்த ஒழுங்கையை மட்டும் எட்டிப் பார்த்ததில்லை. ஒழுங்கையின் இருபுறமும் நெருக்கமாகக் குடிசைகள். பல குடிசைகளின் ஓலைக் கூரைக் கூடாக புகை கிளம்பிக் கொண்டிருந்தது. குழந்தைகள் நிர்வாணமாகவும், கோவணக் கட்டுடனும் விளையாடிக் கொண்டிருந்தன. வீடுகளிலே ஆண்கள் குறைவு. பெண்களும் குறைவுதான். கிழவியர், குமரிகள், குழந்தைகளின் அசுமாத்தமே குடிசைகளில் இருந்தன. செல்லத்துரையன் போவதைக் கண்டு எல்லோரும் அவனை ஆர்வத்தோடு பார்த்தனர்.

எதிரே பரமன் வந்து கொண்டிருந்தான். கொடுக்குக் கட்டிய அரையிலே ஏறுபட்டி இருந்தது. கழுத்திலே தளநார், தலையிலே துண்டு, கையிலே கள்ளுமுட்டி. உழைப்பிலே மெருகேறிய உடல் சுறுசுறுப்பாக அசைந்து கொண்டிருந்தது. வயது நாற்பதுக்கு மேலான போதும் இளமை குன்றாத உடற்கட்டு. மரமெல்லாம் ஏறி முடித்து வந்து கொண்டிருந்தான்.



செல்லத்துரையன் சிரிக்க முயன்றான். பரமன் பற்கள் தெரிய முகமலர்ச்சியோடு சிரித்தான்.

''என்ன தம்பி பொழுது மேலே வந்திட்டுது...''

''திருவிழாவாலை விடியப் புறம்போலை தான் வந்து படுத்தனான்.''

செல்லத்துரையன் தாமதிக்க விரும்பாதவனாக நடந்து கொண்டே பதில் கூறினான். பரமன் ஏதோ கேட்க விரும்பியுவன் போல ஒரு கணம் தாமதித்து விட்டு பின் வழமைபோல எட்டி நடந்தான். பரமன் என்ன பேசவிரும்பினான் என்பதை செல்லத்துரையன் உணராமலில்லை. பரமன் வயதில் மூத்தவனான போதும் செல்லத்துரையனுக்கு மதிப்பளித்தே பேசுவான். செல்லத்துரையனும் பரமனுக்கு ஓரளவு மரியாதை காட்டியே வந்தான். அந்த மரியாதைக்குக் களங்கம் ஏற்படாத முறையில் பரமன் வேறு விஷயம் எதுவும் பேசாது சென்றதே நல்லது என அவனுக்குப் பட்டது.

தெருவிலே ஏறி நடந்தான். வேளாளர் வீடுகள் வரத் தொடங்கி விட்டன. எதிரே எதிர்ப்பட்டவர்களும் தெருப் படலைகளிலே நின்று பேசிக் கொண்டிருந்தவர்களும் அவனை வெறித்துப் பார்ப்பதை அவன் உணராமலில்லை. அவற்றையெல்லாம் பொருட்படுத்தாத வனாகக் காட்டிக் கொண்டே சாவதானமாக நடந்து கொண்டிருந்தான். கொட்டுக் கிணத்தடி ஒழுங்கை முனையில் நாலைந்து பேர் குழுமி நின்று பேசிக் கொண்டிருந்தனர். செல்லத்துரையன் ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தான். இரத்தினத்தையும் நடராசாவையும் இனம் கண்டு கொண்டான். பாதி அழிந்த சந்தனப் பொட்டு அப்படியே இருந்தது. கையிலே வேப்பங் குச்சி, அவனைக் கண்டதும் பேச்சை நிறுத்தி முணுமுணுத்தபடியே வெறித்துப் பார்த்தனர். செல்லத்துரையன் அவர்களை நெருங்கும் வரை நிலத்தைப் பார்த்தபடி நடந்தான். அவர்களைக் கடந்ததும் எதிரே பார்த்து நிமிர்ந்து நடந்து கொண்டிருந்தான்.

''மரமேறிப் பள்ளுகளுக்கு சேட்டும் செருக்கும்''

இரத்தினத்தின் உறுமல் என்பது செல்லத்துரையனுக்குத் தெரிந்தது. இரத்தினம் இப்படி உறுமியது அவனுக்கு ஆச்சரியமளிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு நடைபெற்ற சம்பவத்தின் எதிரொலி என்று எண்ணிக் கொண்டான்.

## 2

அந்தச் சம்பவம் மீண்டும் மீண்டும் செல்லத்துரையன் நினைவிலும் வந்து கொண்டே இருந்தது. இரவு இரத்தம் கொதித்தபோது மூன்று நான்கு நண்பர்கள் கோவிலிலிருந்து இழுத்து வெளியே கொண்டு வந்ததுதான் தெரியும். அப்போது தான் என்ன பேசினேன் என்பதையே அவனால் நினைவில் கொண்டுவர முடியவில்லை. அவர்கள் பிடித்திழுத்து வராதிருப்பின் தான் இறந்திருக்கலாம். அல்லது பெரியாசு பத்திரியில் கிடக்க நேரிட்டிருக்கும் என்பதை அவனால் நன்கு உணர முடிந்தது.

கேணியடி ஒழுங்கையால் இறங்கி, பலாலி ரோட்டில் ஏறி விட்டான். பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகத் தொடங்கி விட்டனர். அவர்களைப் பார்த்தபோது தனது பள்ளிக்கூட நாட்களை நினைத்துப் பார்த்தான். வேதப் பள்ளிக் கூடத்தில் ஐந்தாம் வகுப்பு வரை படித்திருந்தான். முதல் வாத்தியார் வந்து மணியடிக்கும் வரையும் ஒரே விளையாட்டு; சத்தம், கூக்குரல்; மணியடித்ததும் அமைதியாகக் கண்ணை மூடிக் கொண்டு பிரார்த்தனை நடைபெறும். முதல் வாத்தியாரே ஜெபம் சொல்லுவார். அது முடிந்ததும் தமது வீட்டுக்கு அனுப்பி விடுவார். மாடுகளை அவிழ்த்து மேயக் கட்டி, மாட்டுக் கொட்டிலெல்லாம் சாணியள்ளித் துப்பரவாக்கி விட்டு வரவேண்டும். வந்த வேளை நடைபெறும் பாடத்தைத் தொடர்ந்து படிக்க வேண்டியதுதான்.

வேம்பன் ஒழுங்கையில் இறங்கி விட்டான். மலாயன் பென்சன்காரர் சீனிவாசகம் வீட்டுப் படலையைத் திறந்தான். அங்கே இரண்டு தென்னை மரங்கள் ஏறவேண்டும். வழமை போல வீட்டு முற்றத்தால் சென்றான். சீனிவாசகத்தார் வீட்டுக் கதவைச் சாத்திக் கொண்டே முற்றத்தில் இறங்கினார். அவர் வழமையாக செல்லத்துரையனைக் கண்டதும் ஏதாவது பேசாது போகமாட்டார். அன்று அவர் முகம் கடுகடுப்பாக இருந்தது; முற்றத்தில் நின்றபடியே கண்ணாடியைக் கழற்றி தோளில் போட்டிருந்த வெள்ளைச்சால்வைத் தலைப்பால் துடைத்தார். வழமை போலவே மடிப்புக் கலையாத வெள்ளை வேட்டியும் நாஷனலும் அணிந்திருந்தார். கண்ணாடியை



மாட்டிக் கொண்டு செல்லத்துரையனை ஒரு வகையாக முறைத்துப் பார்த்துக் கொண்டே வெளியே நடந்தார்.

செல்லத்துரையன் அடுக்களை முற்றத்திற்குச் சென்று சேட்டைக் கழற்றி வேலியில் போட்டுவிட்டு, கொடுக்கை வரிந்து கட்டிக் கொண்டு பாளைக் கத்தி செருகிய இயனக் கூட்டை அரையில் கட்டினான். முருக்க மரத்தில் கொழுவியிருந்த முட்டியை எடுத்து பின்புற இயனக் கூட்டில் மாட்டிக் கொண்டு வேலி ஓரமாக நின்ற தென்னை மரத்தில் ஏறினான். ஏறிக் கொண்டிருந்தபோது இடையிடை அவன் கண்கள் நிலத்தை துழாவின; எவருமே வரவில்லை. பாளை தட்ட ஆரம்பித்த சிறிது நேரத்தின் பின்னர் முற்றத்தில் நின்று சரஸ்வதி அண்ணாந்து பார்த்தாள். அவள் முகத்தில் ஆரம்பத்தில் ஏக்கமே இருந்தது. அது பின்னர் புன்னகையாக மிளிர்ந்தது.

முதல் மரத்தில் இறங்கியபோது சரஸ்வதியை வெளியே காணவில்லை. அவனும் கூப்பிடவில்லை. இரண்டாவது மரத்தில் ஏறி இறங்கியதும் அவள் அடுக்களை வாயிலில் நின்றாள். செல்லத்துரையன் அவளைப் பார்க்காதவன் போல முட்டியில இறக்கிய கள்ளை வேறோர் முட்டியுள் ஊற்றிக் கொண்டிருந்தான்.

''செல்லத்துரை''

அமைதியான குரலில் அழைத்தாள். அவன் குந்தி இருந்தபடியே திரும்பிப் பார்த்தான்.

''அய்யா ரண்டு போத்தில் வாங்கி வைக்கச் சொன்னார்.''

இரு வெள்ளைப் போத்தில்களை சரஸ்வதி கொண்டு வந்து அவன் எதிரே வைத்துவிட்டு திரும்பினாள். கள்ளைப் பன்னாடையில் வடித்து இரு போத்தல்களையும் நிரப்பிக் கொண்டு வந்து அடுக்களைக் குந்தில் வைத்துவிட்டு திரும்பினான் அவன்.

''செல்லத்துரை..''

சரஸ்வதி வாசலில் வந்து அழைத்ததும் திரும்பிப் பார்த்தான்.

''கோப்பி''

அடுக்களைத் தாவாரத்துக் கூரையிலே செருகியிருந்த மூக்குப் பேணியை எடுத்து அவள் தண்ணீர் விட்டுக் கழுவிக் கொண்டே சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையாக இருக்கும் சரளமான பேச்சுக்களும் பழக்கமும் அன்று இருக்கவில்லை. ஏதோ ஒன்று இருவரது நாவையும் கட்டிக் கொண்டிருந்தது. சரஸ்வதியின் முகத்திலே ஏக்கமும் அச்சமும் நிறைந்திருந்தன. ஏதோ எல்லாம் அவன் வந்ததும் கேட்க எண்ணியிருந்தாள். எதற்கும் துணிவு வர மறுத்தது. தான் பேச்சை எடுக்காவிட்டால் அவன் பேசாமலே போய்விடுவான் என்பதையும் அவள் அறிவாள். அவனது பாதுகாப்பிற்காக வாயினும் யாவற்றையும் சொல்லிவிட வேண்டும் என்று அவள் இதயம் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

கோப்பியை எடுத்துச் சென்று நீட்டினாள். அவனது விழிகளைப் பார்க்கும் துணிவே அவளுக்கு ஏற்படவில்லை. அவன் முகத்திலே மனக் கொதிப்புப் பிரதிபலிப்பதை அவள் முன்பே கவனித்திருந்தாள்.

''செல்லத்துரை''

அவன் எதுவுமே பேசவில்லை. உதடுகள் பேணியில் இருக்க பார்வையை அவள் பக்கம் திருப்பினான்.

''செல்லத்துரை, ராத்திரி என்ன நடந்தது?''

அவன் மீண்டும் மௌனமாகவே இருந்தான்.

''அய்யா என்ன மாதிரியெல்லாம் துள்ளினார் தெரியுமா? அதையெல்லாம் என்ரை வாயாலை சொல்ல மாட்டன். ஆனா ஏதோ நடக்கப் போகுது எண்டு நல்லாத் தெரியுது. ராத்திரி என்ன நடந்ததெண்டு நீ சொல்லமாட்டியா?''

அவளின் குரலில் பதை பதைப்பும் பச்சாத்தாபமும் தொனித்தன. செல்லத்துரையன் மீண்டும் மௌனமாகவே நின்றான். அவள் ஒரு கணம் சுற்று முற்றும் பார்த்தாள். கண்களிலே அச்சம்.

''செல்லத்துரை, ஒண்டு மட்டும் கேக்கிறன், நீத்தத் திருவிழாவுக்கு மட்டும் போய் விடாதை.''

அதற்கு மேலும் அவனால் பொறுமை காக்க முடியவில்லை.

''கோவிலுக்குள்ளையா போறம்? வெளியாலை நிண்டு திருவிழாப் பார்த்து, சாமி கும்பிடக் கூட முடியாதா?''



''நீ போய் அங்கே ஏதாவது செய்தால், இல்லாட்டிப் பேசினா உன்னை வெட்டப் போறாங்களாம். அய்யா சொன்னார். அவரே சேர்ந்து செய்தாலும் செய்வார் போல கிடக்கு. அவர் இப்படி மாறுவார் எண்டே நான் நினைக்கேல்லை.''

''அங்கை போய் நான் சாமி கும்பிடப் போறன். சின்ன மேளம் பார்க்கப் போறன், வேறை என்ன செய்யப் போறன்?''

''பள்ளருக்குக் கட்டின கயிறெல்லாம் அறுத்தெறிவன் எண்டு ராத்திரிச் சொன்னியாம். அதுதான் நீ திருவிழாவில் வந்து அப்படி ஏதாவது செய்திடுவியோ எண்டு வாளுகள், கிறிசுகள் தேடினம். நீ தீத்தத் திருவிழா இரவுக்குப் போனா கட்டாயம் ஏதாவது நடக்கப் போகுது எண்டுதான் பயமாயிருக்கு.''

செல்லத்துரையன் எதுவுமே பேசவில்லை. பேணியைக் குந்திலே வைத்துவிட்டு, முட்டியையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். பேணியை, தாழ்வார இறப்பிலே செருகுவதையும் சிந்தனையில் மறந்து விட்டான். சரஸ்வதி அதைப் பொருட்படுத்தாது எடுத்துக் கழுவி விட்டு முன் இருந்த இடத்தில் செருகி வைத்தாள்.

## 3

அடுத்ததாக, செம்பாட்டுப் புறத்திலிருந்த கோவில் பங்கு கிணற்றடிக்குச் செல்ல வேண்டும். அங்கே ஆறு தென்னை ஏற வேண்டும். சிந்தனையில் மூழ்கியபடியே செல்லத்துரையன் தோட்டங்களினூடாகச் சென்ற ஒற்றையடிப் பாதை வழியே நடந்தான். இருமருங்கும் கத்திரியும் இராச வள்ளிக்கொடியும் சூழ்ந்த தோட்டங்கள். இடையிடை பயறும் மரவள்ளியும் வளர்ந்திருந்தன. முற்றிய பாசிப் பயற்றங் காய்கள் சிலவற்றைப் பிடுங்கிக் கோதிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இருநாட்களின் முன்னர் மழை பெய்திருந்ததினால் தோட்டங்களிலே தண்ணீர் இறைப்போர் இல்லை. துலாக்களெல்லாம் ஓய்ந்து போயிருந்தன. கோவில் பங்கு கிணற்றடியும் ஓய்ந்து போயிருந்தது. தோட்டத்தின் எல்லையில் இரு பெண்கள் இராசவள்ளிக் கொடியுள்ளே புல்லுப் பிடுங்கிக் கொண்டிருந்தனர். அடுத்த தோட்டத்திலே ஒருவர் மாடுகளுக்கு தொட்டிலினுள்ளே புல்லை உதறிப் போட்டுக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையன் கோவில் பங்குக் கிணற்றடியை அடைந்ததும் தன் வேலையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டான். பாளை தட்டும் வேலையை குறைத்துக் கொண்டு, கள்ளை எடுத்து முட்டியில் ஊற்றிக் கொண்டு, பாளைகளைச் சீவி முட்டியைக் கட்டி விட்டு இறங்க எண்ணினான்.

நெட்டைத் தென்னையில் இருந்து கொண்டு முருகனின் குடிசையைப் பார்த்தான். முற்றத்தில் நின்றபடியே நெற்றியிலே சூரியனின் ஒளியை மறைக்க கைவிரல்களை மடித்துப் பிடித்துக் கொண்டே வள்ளி ஆவலோடு பார்ப்பதைக் கண்டான். அவளின் பார்வையிலிருந்துகுடிசையில் வேறு ஒருவரும் இல்லை என்பது தெரிந்தது.

செல்லத்துரையன் ஆறாவது மரத்தால் இறங்கவும் வள்ளி அவன் வரவை நோக்கி வாய்க்கால் வழியே வருவது தெரிந்தது. செல்லத்துரையன் அவளை நோக்கி வாய்க்கால் வழியே நடந்தான். ஏதோ செய்தி கொண்டு வருபவள் போல அவளின் நடை இருந்தது. நடு உச்சி எடுத்து மயிரை அள்ளி முடித்திருந்தாள். மூக்கில் உள்ள ஒரே நகையான மூக்குத்தி சூரிய ஒளியில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. தோய்த்துச் சாயம் போய்ச் சுருங்கிய சட்டையில் மார்பை மூடும் முந்தானையில் நாலு ஊசிகள். சட்டையின் இருபுற முனைகளையும் சேர்த்து ஒரு முடிச்சு. அரையிலே ஆறு முழச் சேலை ஒன்றைச் சுற்றிக் கட்டியிருந்தாள். வெட்கமும் நாணமும் அவள் முகத்தில் விளையாடின.

''அந்தக் கமக்காறிச்சி உங்களை ரண்டு தரம் வந்து தேடினா.''

செல்லத்துரையனின் பக்கமாக நடந்தபடியே தான் கொண்டு வந்த செய்தியைச் சொன்னாள். அவனோடு பேச ஆரம்பிப்பதற்கு ஒரு வேலை கிடைத்ததையிட்டு அவளடைந்த மகிழ்ச்சி பேச்சில் தொனித்தது.

''எந்த மனுஷி?''

''கதிராசிக் கமக்காறிச்சி.''

''அந்தக் கிழவியா? கள்ளுக் கேட்டுதா?''

செல்லத்துரையனின் அலட்சியப் பேச்சு வள்ளிக்குப் புரியவில்லை. மற்றவர்களெல்லோரும் 'கமக்காறிச்சி' என்று கூப்பிடுகிறார்கள்;



கதைக்கும் போதும் வெள்ளாடிச்சி என்று மரியாதை காட்டுகிறார்கள்; இவர் மட்டும் ஏன் மனுஷி, கிழவி என்று பேசுகிறார் என வள்ளி மனதிற்குள்ளே நினைத்துக் கொண்டாள். ஒரு நாளைக்குக் கேட்டுப் பார்க்க வேண்டும் எனவும் அவள் மனம் குடைந்தது.

''பத்துப் போத்தில் கள்ளாவது இண்டைக்குப் பின்னேரம் வேண்டுமெண்டு சொல்லச் சொல்லிச்சுது.''

செல்லத்துரையன் எதுவுமே பேசவில்லை. அவன் மனம் எங்கோ இருந்தது.

''அந்த வெள்ளாடிச்சி ஏன் பத்துப் போந்தில் கள்ளு ஒரே நேரத்திலே கேக்குது?''

குழந்தை போல அவள் கேட்டாள். செல்லத்துரையனுக்கு உள்ளூறச் சிரிப்பு வந்தது.

''நீ கேட்டுப் பார்க்காதையன்!''

''நானெப்பிடிக்கேப்பன். உங்களுக்குத் தெரியாமலிருக்குமா? இவ்வளவையும் குடிக்கவா, இல்லாட்டி விக்கவா?''

''விக்க!''

செல்லத்துரையன் குறும்பாகச் சிரித்தான்.

''வெள்ளாடிச்சி கள்ளு விக்கிறதா?''

''சாராயம் விக்கிறா!''

''அப்ப கள்ளு?''

''சாராயம் காச்ச!''

''நாங்க காச்சப்படாதா?''

''இல்லை.''

''ஏன் காச்சத் தெரியாதா?''

''இல்லை. அது கள்ளச் சாராயம். நாங்க காச்சப் படாது.''

''ஏன்?''

''நாங்க பள்ளராம். சட்ட விரோதமாக காசுழைக்கப் படாதாம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மேலும் 'ஏன்' என்று கேட்க வேண்டும் போலவே வள்ளிக்குத் தோன்றியது. அவனது கடுகடுப்பையும் சீற்றத்தையும் கண்டு அவள் ஆர்வத்தை அடக்கிக் கொண்டே அமைதியாக நடந்தாள். தன்னைக் கண்டதும் குழைவாகவும் கனிவாகவும் பேசுபவர் இன்று ஏன் இவ்வாறு கொதிப்போடு பேசுகிறார் என்பதை அவளால் நன்கு அறிந்து கொள்ள முடியவில்லை. முதல் நாளிரவு திருவிழாவில் நடைபெற்ற சம்பவம் பற்றி முருகன் வள்ளியின் தாய் பொன்னிக்குச் சொன்னதை அவள் ஊன்றிக் கவனிக்கவில்லை. அப்போது, தான் அரைத் தூக்கத்திலிருந்து கேட்டது நினைவில் வந்தது. அதைப்பற்றி அவனைக் கண்டதும் விபரமாகக் கேட்க இருந்தாள். அந்த எண்ணத்தை அவனின் நிலையறிந்து விட்டுவிட்டாள். பொழுதுபட மரமேற வருவார்தானே அப்பொழுது பார்க்கலாம் எனச் சொல்லி மனதைத் தேற்றிக் கொண்டாள். இருவரும் குடிசையை அடைந்தனர்.

தளநார், முட்டிகள், இயனக்கூடு யாவற்றையும் குடிசையின் முற்றத்தில் வைத்துவிட்டு செல்லத்துரையன் வேட்டியைச் சரி செய்து உடுத்தான். பின்னர் முற்றத்திலிருந்த பானைத் தண்ணீரில் முகத்தைக் கழுவினான். சேட்டைப் போட்டுக் கொண்டு வேம்பன் ஒழுங்கையை நோக்கிப் புறப்பட்டான்.

''தேத்தண்ணி குடிச்சிட்டுப் போங்கோ.''

வள்ளி குடிசைக்குள்ளே ஓடினாள்.

''இப்ப வேண்டாம், நான் சிங்கன் கண்டிப் பக்கம் போட்டு வாறன்.''

அவளின் பேச்சு எதையுமே எதிர்பார்க்காது அவன் நடக்கத் தொடங்கினான். முகம் கழுவியபின் தன்னோடு ஓய்வாக செல்லம் பேசி, தான் அவித்த மரவள்ளிக் கிழங்கைக் கடித்து தேனீரும் குடிப்பான் என எதிர்பார்த்த வள்ளிக்கு ஏமாற்றமாகி விட்டது. குடிசைக்குள்ளே நுழைந்து குந்திலே படுத்துக் கொண்டாள்.



## 4

செம்பாட்டுப் பக்கத்திலேயுள்ள சிங்கன்கண்டி என்ற இடத்திலும் நூற்றுக்கு மேலான பள்ளர் குடும்பங்களிருந்தன. 'செம்பாட்டுப் பள்ளர்' என்று வேளாளர் அவர்களை அழைத்தனர். வேம்பன் ஒழுங்கை வழியே சென்று சுடலைப் பக்கத்தில் தெற்கே திருப்பி செல்லத்துரையன் நடந்தான். அவன் வரவை அந்தப் பக்கத்திலே கண்ட பள்ளர் அனைவரும் ஆவலோடு பார்த்துப் பேசிக் கொண்டனர். செல்லத்துரையன் நேரடியாக இராமனின் குடிசைக்குள்ளே நுழைந்தான். அங்கே வெறும் பாயிலே நல்லான் படுத்திருந்தான். சுற்றவர இரண்டு பெண்களும், அவனது நண்பர்களான பெடியங்களும் இருந்தனர். வெள்ளைச்சி மண் சட்டியில் இருந்த வெந்நீரில் ஒரு அழுக்குத் துணியை நனைத்து மார்பில் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள். 'அம்மா... அம்மா..'' என்று நல்லான் அனுங்கிக் கொண்டேயிருந்தான்.

செல்லத்துரையனைக் கண்ட யாவரும் எழுந்து வழிவிட்டனர். அவன் பாயிலே வந்து உட்கார்ந்தான். நல்லானின் மார்பிலே தொட்டுப் பார்த்தான். காய்ச்சல் காய்வது நன்கு தெரிந்தது. ஒரு கன்னம் வீங்கி கண் சிறுத்துப் போயிருந்தது. உடலில் வீங்கியிருந்த சில இடங்களை விரல்களால் சிறிது அழுத்தினான். ''அய்யோ.. அம்மா'' நல்லான் சத்தமிட்டான். உடலெல்லாம் ஊமைக் காயங்கள். செல்லத்துரையன் நல்லானின் மோசமான நிலையை உணர்ந்து கொண்டான்.

''பெரியாசுபத்திரிக்குக் கொண்டு போறதுதான் நல்லது.''

செல்லத்துரையன் சொன்னான். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை.

''இராமனண்ணை எங்கே?''

செல்லத்துரையன் மீண்டும் கேட்டான்.

''அவர் ஒட்டகப் புலத்துக்குப் புக்கை வாங்கப் போட்டார். இனி வந்திடுவார். விதானைக் கமக்காரனும் பெரியாசுபத்திரிக்குப் போக வேண்டாம், நோவுள்ள இடத்துக்குப் புக்கை கட்டி விட்டால் நோ எடுபட்டிடும் எண்டு சொன்னவர். இனி நாங்க போறதெண்டா வீண் தொல்லையுக்கை வந்து முடியும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்தடம் கொடுத்தபடியே வெள்ளைச்சி சொன்னாள். செல்லத்துரைக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''இவ்வளவு நடந்திட்டுதாம், இனி என்ன வீண் தொல்லை வர இருக்கு?'' செல்லத்துரையன் கேட்டான்.

''குடி இருக்கிற நிலம் அவற்றை, நாங்க இண்டுற நாலு பரப்புத் தோட்டங்கூட அவற்றை தானே..''

செல்லத்துரையனால் நிலைமையை நன்கு உணர முடிந்தது. எத்தனை கூறியும் அவர்களை அசைத்துவிட முடியாது என்பதை உணர்ந்து கொண்டான். நல்லானின் நிலையைப் பார்த்தபோது நெஞ்சம் வெந்தது. அவனது தலைமயிரைப் பின்புறமாக வருடி விட்டான். நல்லான் தன் வேதனையை மறந்து சிரிக்க முயன்றான். முடியவில்லை.

நல்லானைப் பார்ப்பதற்கு வேறும் பலர் வந்து போய்க் கொண்டிருந்தனர். எல்லோரும் இரங்கினர். நேற்றுவரை பெடியனாக ஓடித்திரிந்து கொண்டிருந்தவனுக்கு இன்று இந்த நிலை.

செல்லத்துரையனின் கொதிப்பு ஆறி மனம் உருகியது.

''போட்டு வாறன்'' என்று சொல்லிக் கொண்டே குகை போல் இருந்த அந்தக் குடிசையிலிருந்து வெளியே வந்தான். நல்லானின் முகத்தின் தோற்றம் அவன் கண் முன்னே தோன்றியது. துக்கத்தால் விம்மிய நெஞ்சு உடைந்து அவனது கண்களைக் கலக்கியது. அரும்பிய துளிகளைத் துடைத்துக் கொண்டான். முதல் நாளிரவு நடந்த அந்தச் சம்பவம் மீண்டும் நினைவில் வந்தது. நொந்த இதயத்தில் மீண்டும் வேதனையை ஏற்றியது.

நல்லான் என்ன தவறு செய்தான்? அவன் நினைத்து எதுவுமே செய்யவில்லையே, அதற்கு இத்தனை தண்டனையா?''

விடை காண முடியாத கேள்விகள் மனதில் எழுந்தன.

செல்லத்துரையன் முருகன் வீட்டை நோக்கி வந்த வழியே நடந்தான். இரவு நடந்த திருவிழா நிகழ்ச்சிகள் அவன் நெஞ்சில் நிழலாடின.



# 5

அரசடிப் பிள்ளையார் கோவிலில் எட்டாம் நாள் சப்பிரத் திருவிழா. சுருட்டு முதலாளி கந்தையா பிள்ளையின் உபயம். சோடனைகள், மின்சார வெளிச்சம், சப்பிரம், வாணம், மேளம், சின்ன மேளம் - எல்லாம் ஒரே தடபுடல். ஒரே சனக் கூட்டம். ''பஞ்சமர்களுக்குத் தனியிடமுண்டு'' என்று திருவிழா விளம்பர நோட்டீசில் குறிப்பிட்டிருந்தது போலவே கோவிலின் வெளிப்புறத்திலே ஒதுக்குப்புறமாகக் கயிறு கட்டப்பட்டிருந்தது. அங்கும் ஒரே நெருக்கம். தாழ்த்தப்பட்ட சாதிப் பையன்களெல்லோரும் நான் முந்தி, நீ முந்தி என கயிற்றோரமாகப் போயிருந்தனர். சின்ன மேளம் பார்க்க ஒரே ஆவல். மேளச்சமா முடிவடைய இரண்டு மணியாகி விட்டது. தூங்கிக் கொண்டிருந்த பையன்களெல்லோரும் விழிப்பாக இருக்க முயன்றனர். சனம் இருத்துவதற்கும், நடனராணி தாராபாயின் பார்வையில் விழுவதற்குமாக சில இளைஞர்கள் முன் நின்றனர்.

செல்லத்துரையனும் திருவிழாப் பார்க்க வந்திருந்தான். பஞ்சமர்க்குரிய பக்கத்திலே தூரத்தில் நின்று தெரிந்த அளவில் நாட்டியத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான். நடன ராணி தாராபாயின் ஒரு ஆட்டம் முடிந்து உடை மாற்றுவதற்காக மடப்பள்ளி அறைக்குச் சென்று விட்டாள். பிற்பாட்டுக்காரன் மத்தளத்துடன் தன் வித்துவத் தன்மையைக் காட்டிக் கொண்டிருந்த பெடியங்கள் சிலர் நிலத்திலே கயிற்றோரமாகச் சாய்ந்து விட்டனர். நல்லானும் கயிற்றைப் பிடித்தபடியே நிலத்திலே சாய்ந்து தூங்கி விட்டான். நிலத்திலே கிடந்த நல்லான் ஒரு தடவை புரண்டு படுத்தபோது பாதி உடற்பக்கமும் காலும் கயிற்றின் அந்தப் பக்கமாகப் போய்விட்டது.

''பள்ளப்பிள்ளை படுத்திருப்பதைப் பார்.''

''உள்ளுக்கை வந்து கிடக்கிறான்.''

''பிள்ளையார் வாசல் பக்கம் கால் நீட்ட என்ன துணிச்சல்?''

ஒரு சிலர் குமுறினர். சுட்டிக் காட்டினர். இரத்தினம், நடராசா உட்பட நாலைந்து வாலிபர்கள் 'பள்ப்பிள்ளைக்கு இண்டைக்குப் பாடம் படிப்பிக்க வேணும்' என்று பொருமிக் கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்புறமாக வந்தனர். பள்ளர் வகுப்பைச் சேர்ந்த ஒரு பெடியனைப் பிடித்து ''போய் அவனை எழுப்பி கூட்டி வா'' என்று ஏவினர், அப்பாவியான அவனும் சென்று நல்லானைப் புரட்டி எழுப்பினான். எதுவும் புரியாதவனாக அரைத் தூக்கத்திலே ஆடியபடி, நெருங்கியிருந்த பள்ளர் கூட்டத்திற்கூடாக வெளியே வந்தான். அதைச் செல்லத்துரையனும் கவனித்துக் கொண்டிருந்தான்

பெரிய கமக்காரரைக் கண்டதும் நல்லான் ஒன்றும் புரியாதவனாக திருதிருவென விழித்தான்.

''இஞ்சைவா'' என்று அவனைக் கோவிலின் பின்புற வீதிக்கு அழைத்துச் சென்றனர். அவன் பின் தொடர்ந்தான்.

நடைபெறப் போவதை ஓரளவு ஊகித்த செல்லத்துரையனும் அவனைச் சார்ந்த சிலரும் பின் தொடர்ந்தனர்.

மேற்கு வீதியை அடைந்ததும், ''பளார், பளார்'' என நல்லானின் கன்னத்திலும் முதுகிலும் அடி விழுத்த சத்தம் இருளிலே கேட்டது.

''அய்யோ, சாமி.. கமக்காரன்.. அடிக்காதையுங்கோ.. அய்யோ..'

ஒருவர் மாறி ஒருவராக நின்றவர்களெல்லோரும் அடித்து உதைத்தார்கள். நல்லான் பதைபதைத்துச் சத்தமிட்டான். நிலத்திலே விழுந்து கத்தினான். அவர்கள் உதைத்து உருட்டினார்கள்.

செல்லத்துரையன் ஓடிப்போய் ''அவனை விடுங்க, விடுங்க'' என்று நல்லான் அருகே நின்று தடுத்தான்.

''நீ யாரடா?''

அவனுக்கும் ஓரிரு உதைகள் விழுந்தன. உதையைத் தாங்கிக் கொண்டு மறுதடவை உதைத்த ஒருவரின் காலைப் பிடித்தான். உதைத்தவர் நிலத்திலே விழுந்தார். உடனே மற்றவர்கள் செல்லத்துரையனைத் தாக்கச் சென்றனர். இதற்கிடையில் கூட்டம் கூடிவிட்டது செல்லத்துரையனை அவனது ஆட்கள் சிலர் பிடித்து வெளியே இழுத்து வந்தனர். அவ்வேளையில் அவனது வாயிலிருந்து, கொடுமையைக் கண்டு சகிக்க முடியாத உள்ளக் கொதிப்பு வார்த்தைகளாக வெளிவந்தன. என்ன பேசினான், எது பேசினான் என்று அவனுக்கே தெரியாது. சின்ன மேளம் பார்த்துக் கொண்டிருந்த



பெருங்கூட்டம் கலைந்து கோவில் வீதிச் சம்பவத்தை அறிய வந்து விட்டது.

''பளீப் பிள்ளை பேசிறதா? என்ன திமிர்'' சாதிவெறி கொண்டவர்கள் ஆவேசத்துடன் சத்தமிட்டனர். பலர் குமுறியெழுந்தனர்.

செல்லத்துரையனை அவனது ஆட்கள் பலர் சேர்ந்து கோவில் வீதியிலேயே நில்லாதபடி இழுத்துச் சென்றனர். அவனுக்கு ஏற்பட்ட மனக் கொதிப்பில், தான் அன்று இறக்க நேரிட்டாலும் பாதகமில்லை என்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. தன் ஆத்திரம் தீர அந்தச் சாதி வேளாளரை, நல்லானை உதைத்து போன்று உதைக்க வேண்டும் போலத் தோன்றியது. மானமும் ரோசமும் மனக்கொதிப்பும் ஏற்பட, உயிர் ஒரு துரும்பாக அவனுக்குத் தோன்றியது.

கோவில் பக்கமே வராது அவனுக்காகப் பலர் காவல் புரிந்தனர். நல்லானை வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டனர்; அவனுக்கு எவ்வித ஆபத்துமில்லை என எல்லோரும் அவனுக்குச் சொல்லிச் சமாதானப்படுத்தினர். வேறு வழியின்றி அவன் வீட்டிற்கு வந்து படுத்தான். தூக்கம் வராது பாயிலே புரண்டான்.

காலையில் ஓரளவு ஆறியிருந்த மனக்கொதிப்பு நல்லானின் நிலைமையைப் பார்த்ததும் மீண்டும் புரையெடுத்தது. முருகன் வீட்டிற்கு எப்படி வந்தேன் என்பதையே அவனால் நம்ப முடிய வில்லை.

''நல்லானுக்கு எப்படித் தம்பி இருக்கு?''

முருகன் குடிசையிலிருந்து வெளியே வந்தபடியே செல்லத் துரையனைக் கேட்டான். பொன்னியும் முற்றத்திற்கு வந்தாள். வள்ளி உள்ளே குந்தில் இருந்தபடி அவனது பதிலை ஆவலோடு எதிர்பார்த்தாள். முருகனும் பொன்னியும் தோட்டத்திலிருந்து வந்ததும் வள்ளியின் துணிச்சல் அடங்கி விட்டது.

''பாடாய்த்தான் கிடக்கு.''

மனவேதனையோடு சொன்னான்

''பிழைக்க மாட்டானா?''

''சொல்ல முடியாது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் போய் பாத்திட்டு வாறன். தங்கமான பெடியன். இந்த வயசிலே இப்பிடி நடக்கவா வெள்ளச்சி பெத்து விட்டாள்.''

பொன்னி சொல்லிக் கொண்டே புறப்பட்டாள்.

''நானும் ஒருக்கா போகவேணும்'' என்று முருகன் சொன்னான்.

''முட்டியெல்லாம் இப்படியே கிடக்கட்டும், நான் பின்னேரம் வாறன்.''

செல்லத்துரையன் முருகனுக்குச் சொல்வது போல வள்ளிக்குத் தெரிவித்தான்.

''அப்பு, தேத்தண்ணி''

வள்ளி முருகனுக்கு நினைவூட்டினாள்.

''தம்பி தண்ணி குடிச்சிட்டுப்போ''

செல்லத்துரையன் திரும்பு முன்னர் தகப்பனுக்கு ஒரு செதுக்கிய சிரட்டையையும், செல்லத்துரையனுக்கு ஒரு கோப்பையையும் நீட்டினாள். அவனும் மறுக்க முடியாதவனாக வாங்கிக் குடித்துவிட்டுப் புறப்பட்டான். அடுத்த கிணற்றடியில் இரண்டு மரம் அவன் ஏறவில்லை. பின்னேரம் பார்க்கலாம் என விட்டு விட்டுப் புறப்பட்டான்.

உச்சிப் பொழுதான பொழுதும் செல்லத்துரையனுக்குப் பசியே எழவில்லை. கவலை தோய்ந்த முகத்துடன் தெருவழியே வீட்டை நோக்கி நடந்தான். எல்லோரும் அவனை விசித்திரமாகப் பார்ப்பது நன்கு தெரிந்தது.

முதல் நாளிரவு, தான் ஆத்திரத்திலே வாய்க்கு வந்தபடி பேசிய பேச்சுக்கள் எப்படியெல்லாம் பரவி கிலி ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் பிறரின் பார்வையிலிருந்து அவனால் ஓரளவு உணர முடிந்தது. என்ன வார்த்தைகள் பேசினான் என்பதையே அவனால் நினைவில் கொண்டுவர முடியவில்லை.

''பள்ளருக்குக் கட்டிற கயிறெல்லாம் அறுத்தெறிவன்.''

சரஸ்வதி நினைவூட்டிய வார்த்தைகள் நினைவில் வந்தன. அவ்வார்த்தை கிளப்பிவிடக் கூடிய குரோதத்தை ஒரு கணம் எண்ணிப் பார்த்தான். அவனுக்கே சிரிப்பு வந்தது.



# 6

உச்சி வெயில், கொட்டுக் கிணத்தடி ஒழுங்கை முனையில் எவருமில்லை. எட்டி நடந்து நிழல் வாடி ஒழுங்கையில் இறங்கினான். பள்ளர் பறையர் மட்டுமே அந்த ஒழுங்கையை நிழல்வாடி ஒழுங்கை என்று கூறுவார்கள். மக்கிக் கல்லுப் போட்ட ஒழுங்கை. அது கால் மைல் தூரம் சென்று மேற்குப்புறமாக திரும்பி பனைவடலி களினூடாகச் செல்லுகிறது. முதல் கால் மைல் தூரம் பள்ளர் குடிகள் இருந்தன. அதன் மேல் பறையர் குடிகள்.

செல்லத்துரையன் படலையைத் தள்ளிக் கொண்டே உள்ளே நுழைந்தான். முற்றத்திலே கதிரனும், வெறிக்குட்டி தம்பிப் பிள்ளையும் பேசிக் கொண்டு நின்றனர்.

வெறுங்கையை ஆட்டிக் கொண்டு வந்த செல்லத்துரையனைக் கண்டதும் இருவரது பார்வையும் அவன் மேல் சென்றன.

''ஏண்டா நீ மரஞ்சீவப் போகேல்லையா?''

கதிரன் கேட்டான்.

''சீவிவிட்டுத்தான் வாறன்.''

''கையாட்டிக் கொண்டு வாறாய் கள்ளெங்கை?''

''அங்கையே வித்துப்போட்டன்.''

வெறிக்குட்டித் தம்பிப் பிள்ளையின் முகத்தில் ஏமாற்றம் எதிரொலித்தது. அவர் நித்திரையால் எழுந்ததுமே 'தண்ணீரில் முகம் கழுபுபவர்' என்று ஊர் முழுவதும் பெயர். மலாயாவிலிருந்து பென்சன் வருகிறது. மனைவி இன்னும் ஆசிரியராக உழைக்கிறார். பிள்ளைகள் கொழும்பில் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அவர் குடித்துக் கொண்டே திரிகிறார். மதுவெறியிலிருக்கும் வரை அவர் சாதி பேதமே பார்க்க மாட்டார்.

''பறவாயில்லை அப்ப நான் வாறன் கதிரன்.. வந்து.. நான் சொன்ன விஷயம் ஞாபகமிருக்கட்டும்... வந்து தீத்தத் திருவிழா வந்து..''

காலையில் குடித்த கள்ளச் சாராய வெறியில் ஆடிக் கொண்டே படலையை நோக்கி நடந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காலமை அவிச்ச குரக்கன் புட்டு காஞ்சு போச்சு. கெதியாய் வரச் சொல்லிச் சொன்னன், நீ கேட்டாத்தானே, வந்து சாப்பிடண்ணை.''

அன்னம் வந்து அழைத்தாள்.

''உச்சிப் பொழுதாய் போச்சு. நேரத்துக்கு வந்தாவது சாப்பிடக் கூடாதே, வாவன் தம்பி.''

தாய் நாகியும் குகைபோலிருந்த குசினிக்குள்ளிருந்து வந்து அழைத்தாள்.

''எனக்குப் பசிக்கேல்லை'' என்று சொல்லிக் கொண்டே அவனும் குசினிக்குள் நுழைந்தான். கதிரன் ஏதோ பேசுவதற்குத் துடித்துக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது.

செல்லத்துரையன் அடுப்பங்கரையில் குந்தி இருந்தான். எதிரே அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. ஒரு அடுப்பில் அரிசி அவிந்து கொண்டிருந்தது. அன்னம் திருவலகையை எடுத்து அவன் உட்காரப் போட்டாள். ஒரு வாழையிலைத் துண்டில் இரண்டு கட்டிக் குரக்கன் புட்டையும் மிளகாய் சம்பலையும் வைத்தாள். அவன் புட்டுக்கட்டிகளை உடைக்கவும் முதல் நாளிரவு காய்ச்சிய கருவாட்டுக் குழம்பில் எஞ்சியிருந்ததை ஒரு சட்டியோடு எடுத்து அன்னம் புட்டின் மேல் ஊற்றினாள்.

செல்லத்துரையன் பாதியைச் சாப்பிட்டு விட்டு மிகுதியை இலையோடு தூக்கிக் கொண்டே வெளியே வந்து 'உச்சூ' என்று கூப்பிட்டான். வெள்ளை நாய் ஒன்று ஓடி வந்து வாலாட்டிக் கொண்டு நின்றது.

''நீ ஏண்டா சும்மா இருக்க மாட்டாமல் இந்தச் சண்டைகளுக்கை போய் தலையைக் குடுக்கிறாய்?''

கதிரன் கேட்டான். செல்லத்துரையன் மௌனமாக இருந்தான்.

''உன்னால் நான் வெளியிலை தலைகாட்ட முடியாமலிருக்கு. கமக்காறங்கள் பள்ளருக்கெண்டு கயிறு கட்டி விடுறாங்கள். இவன் கயித்துக்கங்காலை - வெள்ளாடிச்சியள் இருக்கிற பக்கமாய் போய் படுத்துக் கிடந்தால் சும்மா விடுவாங்களா?''

கதிரன் விரிவாக, தான் கேட்டு அறிந்ததைச் சொன்னான்.



''ஆர்போய் கிடந்தது. அவன் குழந்தைப் பெடியன். பன்ரண்டு பதின்மூன்று வயதுதானே இருக்கும். கயித்துக் கிங்காலை படுத்துக் கிடந்தவன். திரும்பிப் படுக்கையுக்கைகால் அங்காலை போட்டு தெண்டு, போட்டு இரக்கமில்லாமல் உதைக்கிறாங்கள், அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா?''

செல்லத்துரையனின் பேச்சிலே உக்கிரம் தொனித்தது.

''அதுக்கு நீ ஏன் அந்த வெள்ளாடப் பெடியங்களோடை போய் மிண்டி என்ரை மானத்தையும் வாங்கிறாய். சோலி சுறட்டில்லாமல் வாழுறவன் எண்டு நான் இத்தனை காலமாய் பேரெடுத்தன். நீ இப்ப ஒருத்தன் வந்து..''

கதிரனின் முகத்தில் கவலை தோய்ந்து போயிருந்தது. நிறுத்திய பேச்சை மீண்டும் தொடர்ந்தான்.

''தெருவிலை காணுற கமக்காறனெல்லாம் உன்னைப் பற்றித்தான் சொல்லுறாங்கள். நீ ராத்திரி என்னவெல்லாமோ பேசினாயாம். எங்கடை தலைவிதி, என்ன நடக்கப் போகுதோ தெரியல்லை. நீ மட்டும் இனி அந்தக் கோவில் பக்கம் போகாதை.''

''நான் போகத்தான் போறன். செய்யிறவன் செய்து பார்க்கட்டும். நல்லானுக்கு நடக்காதது எனக்கு நடக்கப் போகுது. அங்கை அவன் சாகக் கிடக்கறான்.''

செல்லத்துரையன் சொல்லிக் கொண்டே மனமுடைந்தவனாக கொட்டிலுக்குள்ளே போய் பாயை விரித்துக் கொண்டு படுத்தான். இரவு போதிய தூக்கமில்லை. தேக உளைச்சலும் மன உளைச்சலும் ஒன்று சேர்ந்து வாட்டியது. பாயிலே கிடந்து புரண்டான். தன் தந்தையின் அடிமைத் தனத்தை அவன் நன்கு உணர்ந்திருந்தான். கதிரன் கோடிப் புறத்திலே கிடாய்களுக்கு பிண்ணாக்கு தீத்தும் ஆரவம் கேட்டது.

கோழி கூவும் நேரந் தொடக்கம், இராத்திரி வரை கதிரன், நாகி இருவரது உழைப்பும் அடைவுகாரச் செல்லையாவினுடைய தோட்டத்திலேதான். வேலை அதிகமாகும்போது செல்லத் துரையனையும் அழைத்துச் செல்வான். தனக்கென ஒரு ஆயிரம் கன்று நிலம் பயிர் செய்வதற்கு அவன் கேட்டுக் கொண்டே வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து வருடமாய் கேட்டபின்னர் செம்பாட்டுக்கலட்டி நிலத்தில் நாலாயிரம் கன்று நிலத்தைக் காட்டி, இந்த நிலத்தின் கல்லைக் கிளப்பித் திருத்து; 'நான் உனக்கு ஆயிரம் கன்று நிலம் தருவேன்' என்று சொன்னார். வெடிமருந்து மட்டும் செல்லையா வாங்கிக் கொடுத்தார். அவரின் தோட்டத்து நாளாந்த வேலைகள் முடிந்த பின்னர் சிறிது சிறிதாக கல்லுக்கிளப்பினான். வெய்யில் மழை என்று பாராது மேலதிகமாக நாலு வருடம் உழைத்த பின்னர் அவனுக்குப் பயிர் செய்ய ஆயிரம் கன்று நிலத்தைக் கொடுத்தார். அவனது நெடுநாளைய ஆசைநிறைவேறியது. அந்த நிலத்திற்குக் கொடுக்க வேண்டிய குத்தகைக்காக திருத்திய மற்ற நிலத்திற்குத் தண்ணீர் இறைக்கும் வேலையையும் செல்லையா கதிரன் தலையில் கட்டிவிட்டார். கதிரன், நாகி, செல்லத்துரையன் யாவரும் தமது மேலதிக நேரத்தையெல்லாம் அந்த நிலத்தைக் கிண்டுவதிலேயே கழித்தனர். இரண்டு மூன்று ஆண்டுகள் கஷ்டப்பட்டு உழைத்துச் சேர்த்த நாநூறு ரூபாயைக் கொண்டு மூத்த பெண்ணுக்கு வெளியூரில் கலியாணம் செய்து வைத்தான் கதிரன். அந்த ஆண்டிலே புகையிலையில் ஐந்நூறு கன்றுகள் நட்டு விட்டு மிகுதி நிலத்திலே மிளகாயும் மரவள்ளியும் நட்டான். புகையிலையில் கிடைத்த லாபத்தை எடுத்து செல்லத்துரையனிடம் கொடுத்தான். அவன் பத்துத் தென்னை மரத்தில் கள்ளு இறக்க 'லைசென்சு' பெற்றான். தென்னைமரச் சொந்தக்காரருக்கு மரத்திற்கு இருபது ரூபா பேசி, ஐந்து ரூபா வீதம் முன்பணமும் கொடுத்தான். மிகுதியைக் கள்ளு விற்றுக் கொடுத்து விடலாம். மேலும் சில மரங்களுக்கு 'லைசென்சு' பெற்று விடலாம். ஓரிரு வருடத்தில் ஏதாவது சேர்த்து அன்னத்தையும் கட்டிக் கொடுத்து விடலாம் என்ற துணிவும் நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது. பின்னர் தம்பியை மேல் வகுப்பு வரை படிப்பிக்க வேணும். அதன் பின்னர்... தன்னளவில் அவனுக்கு எத்தனையோ எண்ணங்கள்... கற்பனைகள்... ஆசைகள்.

பொழுது பனைக்குக் கீழே சாய்ந்து விட்டது. 'அண்ணன் பாவம் நித்திரை கொள்ளட்டும்' என்று விட்டுக் கொண்டே யிருந்த அன்னம் சென்று அவனை எழுப்பினாள். அவனது பரந்த உடலெல்லாம் வியர்வை வடிந்து கொண்டிருந்தது. எழுந்து வியர்வையைத்துடைத்துக் கொண்டே முற்றத்திற்கு வந்தான். சோம்பல் தீர்ந்ததும் குளிக்க



வேண்டும் போல இருந்தது. அதற்குச் செம்பாட்டுக் கிணற்றடிக்குத் தான் போக வேண்டும். நேரம் போய்விட்டது. இரவுக்குப் பார்ப்பம் என எண்ணிக் கொண்டே குடத்துத் தண்ணீரை ஒரு சட்டியிலே ஊற்றி, முகத்தையும், முதுகு, மார்புப் பகுதியையும் கழுவினான். அன்னம் எடுத்துக் கொண்டு வந்த துண்டால் துடைத்துக் கொண்டே, சாப்பிடச் சென்றான். அரிசிச் சோறும் தினைச் சோறும் ஆக்கியிருப்பதைப் பார்த்தான். அன்னம் அரிசிச் சோறு முழுவதையும் அவனுக்குப் போட்டாள்.

''ஏன்ரி, நான் தினைச்சோறு சாப்பிட மாட்டனா.''

''நான் சாப்பிடுவனண்ணை, நீங்க உதைச் சாப்பிடுங்கோ.''

''இராசன் பள்ளியாலை வந்திட்டானா?''

''வந்து சாப்பிட்டுட்டு தோட்டத்துக்குப் போட்டான். ஆச்சி அவனை அனுப்பச் சொல்லிப் போட்டுப் போனவ.''

சாப்பாடு முடிந்ததும் சேட்டை எடுத்துப் போட்டுக் கொண்டே வெளியே புறப்பட்டான். படலையைத் திறந்ததும் சின்னான் வந்து கொண்டிருந்தான். ஊரெல்லாம் நடந்து வந்த களைப்பு அவன் முகத்திலே தெரிந்தது. வேட்டியை முழங்காலுக்கு மேலே கட்டி அதை வரிந்து ஒரு துண்டு கட்டியிருந்தான். நெஞ்சின் எலும்புகள் யாவும் தெரிந்து கொண்டிருந்தன. குடுமியை அள்ளி முடித்திருந்தான். தோளிலே ஒரு பறைமேளம் தொங்கிக் கொண்டிருந்தது. கையிலே பறையடிக்குந் தடி இருந்தது.

''சின்னான், என்ன விசேஷம்?''

செல்லத்துரையன் கேட்டான்.

''அதுதான் தம்பி இந்தத் தீர்த்தத் திருவிழாவுக்குப் பறை போட்டிட்டு வாறன். சின்ன மேளம், பெரிய மேளம், சப்புறம், வாணம் எல்லாம் இருக்காம்.''

செல்லத்துரையன் ஒழுங்கை வழியே போய்த் தெருவிலே ஏறிநடந்தான். அவன் மனம் குழம்பிக் கொண்டிருந்தது.

முருகன் வீட்டிற்கு முதலில் சென்று ஏறுபட்டி, தளநார், முட்டியை எடுத்துக் கொண்டு கட்டுவன் கிணற்றடிக்குச் சென்று காலையில் சீவாத இரு மரங்களையும் சீவி முடித்து விட்டு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனும் பொன்னியும் தோட்டத்திற்குப் போய்விட்டபடியால் வள்ளி துணிச்சலோடு நின்றாள், பொழுது கருகிக் கொண்டிருந்தது.

''பொழுது படுது. நான் முதலில் சீனிவாசகத்தாற்றை வீட்டு மரங்களைச் சீவிப் போட்டு வாறன். கதிராசிக் கிழவி வந்தால் இருக்கச் சொல்லு.''

## 7

செல்லத்துரையன் எட்டி நடந்தான். அவனது சுறுசுறுப்பான நடையையும் உடற்கட்டையும் வள்ளி பார்த்துக் கொண்டே நின்றாள்.

செல்லத்துரையன் சீனிவாசகத்தார் வீட்டுக்குப் போன போது சரஸ்வதி விளக்கேற்றிக் கொண்டிருந்தாள். மரங்களைச் சீவி விட்டு அவன் இறங்கியதும் அவள் அவனுக்குச் செய்தி வைத்திருந்தாள்.

''மத்தியானம் அய்யா சாப்பிடவரேக்கை ஆரோ ஒருத்தன் கூட வந்திருந்தான். இங்கே கிடந்த வாளையும் கிறிசையும் அவன் வாங்கிக் கொண்டு போனான். எனக்குப் பயமாயிருக்கு ஏதோ நடக்கப் போகுது. அதுதான் நீ திருவிழாப் பக்கம் மட்டும் போய்விடாதை.''

அவளின் பேச்சிலே மன்றாட்டம் தொனித்தது. செல்லத்துரையன் எதுவும் பேசாது வந்த வழியே முட்டிக் கள்ளுடன் நடந்தான்.

கோவில் பங்கு மரங்களில் விரைந்து ஏறினான். இருளை நிலவின் ஒளி சிறிது சிறிதாக விழுங்கிக் கொண்டிருந்தது. நாலு மரம் ஏறி முடிந்ததும் வள்ளி கீழே நின்றதைக் கவனித்தான்.

''கதிராசிக் கமக்காறிச்சி கள்ளை வீட்டிலை கொண்டு வந்து தரட்டாம்.''

''நீ நிக்கச் சொல்லேல்லையா?''

''அப்படித்தான் நீங்க சொன்ன தெண்டன். நீங்க கொண்டருவியள் எண்டு சொல்லிப் போட்டுப் போட்டா.''

மற்ற இரு மரங்களை ஏறி முடிக்கும் வரை அவள் கீழே காத்திருந்தாள். தென்னை மர ஓலைகளின் சலசலப்புத் தவிர ஓரே அமைதி.



''வீட்டிலை ஒருத்தருமில்லையா?''

''விளக்கைக் கொளுத்திப் போட்டு வந்திட்டன். அப்புவும் ஆச்சியும் வர இன்னும் நேரங் கிடக்கு.''

''ஆராவது கள்ளர் வந்தால்.''

''அங்கை எடுக்க என்ன கிடக்கு. ஆச்சி தோட்டத்தாலை சங்கக் கடைக்குப் போய் கூப்பனரிசி வாங்கியந்தாப் போலைதான் சமையல். அதுக்குள்ளே நான் கறிகாச்சிப் போடுவன்.''

வாய்க்காலின் இருபுறமும் இராச வள்ளிக் கொடிகள் கிளுவந்தடிகளைச் சுற்றி வளர்ந்திருந்தன.

''நான் உங்களை ஒண்ணு கேக்க வந்தனான்.''

மௌன நடையினூடே வள்ளி திடீரெனப் பேச்சை ஆரம்பித்தாள். செல்லத்துரையனில் மாற்றம் இருப்பதை அவள் நன்கு அறிந்து கொண்டாள்.

''கேளன்.''

''கோவிலிலை ஏதோ சண்டை நடக்கப் போகுதாம். எல்லோரும் கதைக்கினம். எனக்குப் பயமாய் கிடக்கு.''

''ஆர் சொன்னது?''

''எல்லாரும் கதைக்கினம். கதிராசிக்கமக்காறிச்சி கூடச் சொன்னா. இந்த நல்ல பெடியன் ஏன்வீணாய் இதுகளுக்கை போய் சண்டை போடுது. திருவிழாவிலை என்ன நடக்கப் போகுதோ தெரியாது எண்டு சொன்னா. எனக்கு நெஞ்செல்லம் பதறிப் போச்சு. சொல்லுங்கோ, இல்லாட்டி ராத்திரிக்கு எனக்கு நித்திரை வராது.''

''ஏன் வராது?''

''ஏதோ தெரியேல்லை. என்ரை மனசு என்னவோ செய்யுது.''

''ஒண்டும் நடக்காது. நீ பேசாமல் இரு. ஆரோ கதை கட்டி விட்டினம்.''

''ராத்திரி நடந்தது.''

''நல்லானுக்கு அவங்கள் அடிச்சாங்கள். இனி ஒண்ணும் நடக்காது. நீ கவலைப்படாமலிரு.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையன் அதட்டிப் பேசினான். முன்பெல்லாம் அவன் இப்படிப் பேசுவதில்லை. வள்ளி பயத்தோடு மௌனமாக நடந்தாள்.

''தேத்தண்ணி குடிப்பியளா'' என்று கூடக் கேட்கப் பயமாயிருந்தது.

## 8

செல்லத்துரையன் சேர்ந்த கள்ளு யாவற்றையும் இரண்டு முட்டியிலே ஊற்றிக் கொண்டு கதிராசி வீட்டை நோக்கி நடந்தான். இயனக் கூடு, ஏறுபட்டி, தளநார் யாவையும் எடுத்துக் கொண்டே சென்றான். வள்ளி ஊமையாக குடிசைக்குள்ளே நுழைந்தாள்.

நாளைக்கு வருவார்தானே என்ற நம்பிக்கையில் மனதைத் தேற்றிக் கொண்டாள்.

செல்லத்துரையன் கதிராசியின் வீட்டுப் படலையைத் திறந்து கொண்டே உள்ளே நுழைந்தான். நாய்தான் குரைத்து அவனை வரவேற்றது. 'என்னை வரச் சொல்லிவிட்டு இந்தக் கிழவி எங்கை போட்டுது?' என்று மனதிலே குமைந்து கொண்டே கதிராசிக்காகக் காத்து நின்றான். வீட்டிலே விளக்கே ஏற்றப்படவில்லை. நாய் குரைத்து ஓய்ந்து விட்டது. கள்ளின் மணத்தை மோப்பம் போட்டபடி செல்லத்துரையனைச் சுற்றி வந்து வாலை ஆட்டிக் கொண்டு நின்றது. பல வேளாளர்களும் அப்படித்தான். சாதிப் பெயரைச் சொல்லி ஏசிக் கொண்டேயிருப்பார்கள். பின்னர் கள்ளின் நினைவு வந்ததும் பள்ளர் வீடுகளுக்கே கடனாகக் கள்ளுக் குடிக்க, நயமாகப் பேசிக் கொண்டு வருவதை அவன் பார்த்திருக்கிறான். கதிராசி கூட இந்த நிலைக்கு விலக்கானவளல்ல என்பதை செல்லத்துரையன் அறிவான். கதிராசி 'வெள்ளாடிச்சி'யாக இருந்த போதும் வாழ்க்கையோடு அன்றாட போராட்டம். ஆயினும் மானம், ரோசம், சாதித் திமிர்க் கொண்டவள். வீட்டிலே அடுப்பு மூட்டவே முடியாத வேளையிலும் வயிற்றைக் கட்டிக் கொண்டு தண்ணீரைக் குடித்துக் கொண்டு கிடப்பாளே யல்லாது எவருக்கும் தன் வறுமை பற்றிக் காட்டிக் கொள்ள மாட்டாள்.

கதிராசியின் குடும்பத்தோடு நீண்ட காலம் பழகியிருந்ததால் செல்லத்துரையனுக்கு அவர்கள் மேல் ஓரளவு பச்சாத்தாப உணர்ச்சி இருந்து வந்தது.



இரு குழந்தைகளுடன் இளமையிலேயே விதவையாகி விட்ட கதிராசி கணவன் விட்டுச் சென்ற நாலுபரப்புக் காணியைக் கிண்டுவதிலேயே பொழுது பூராவையும் கழித்தாள். தோட்டத்திலிருந்து வரும்போது தெருவிலே காணும் சாணகத்தைக் கூட வீண்போக விடாது குனிந்து அள்ளித் தலையிலுள்ள கடகத்தில் போட்டு வீட்டிற்குக் கொண்டு வருவாள். ஒழுங்கையிலே, வீட்டிலே விழும் சருகு, குப்பை யாவையும் கூட்டிச் சேர்ந்து தோட்டத்திற்குப் பசளையாக்கி விடுவாள். அந்த நாலு பரப்பு நிலத்திலும் காய்கறி நட்டு, மாடு, ஆடு, கோழி வளர்த்து பிள்ளைகள் இருவரையும் வளர்த்து வந்தாள். மூத்தவன் தங்கரராசா பரங்கியர் நிறம். உடலெல்லாம் வெள்ளை. தூரத்தில் பார்ப்பவர்கள் 'இதென்ன, வெள்ளைக்காரன் வேட்டி கட்டிக் கொண்டு போறான்' என்றே ஆச்சரியப்படுவர்.

பரங்கியர் ஆண்ட காலத்தில் அவர்கள் காட்டிய ஒழுக்கத்தின் சின்னம் இன்னும் அழிந்துவிடவில்லை என்று ஊரில் பேசிக் கொள்வோருமுண்டு. தங்கராசா உத்தியோகம் பார்க்கும் அளவிற்குப் படிப்பித்து விடக் கூட கதிராசி தயாராக இருந்தாள். வெள்ளைத் தோலோடு வெய்யில் காயமாட்டான் என்று அவள் எண்ணினாள். அவன் வளர்ந்து விட்டால் கஷ்டம் நீங்கிவிடும் என்ற துணிச்சலில் பிள்ளைகளைப் பட்டினியின்றி வளர்ப்பதற்காக உயிருக்கு ஒரே நம்பிக்கையாக இருந்த அந்த நாலு பரப்புத் தோட்ட நிலத்தையும் ஆயிரம் ரூபாவிற்கு ஈடு கூட வைத்து விட்டாள். மகள் அன்னம்மாவும் பூரிப்போடு வளர்ந்து வந்தாள். பரந்த முகமும், நீண்ட மூக்கும், உருண்டு திரண்ட மார்பும் உடலுமாக வளர்ந்து விட்டாள். தங்கராசா ஒருநிலை பெற்றதும் அவளையும் நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்து விடலாம் என்று கதிராசி கனவு கண்டு கொண்டிருந்தாள்.

அவள் கனவுகள் எதுவும் நனவாகி விடவில்லை. தங்கராசா படிப்பைக் குழப்பிவிட்டு தாயோடு தோட்டத்திற்குச் செல்லத் தொடங்கினான். செல்லத்துரையன் அவர்களின் பயிர்களுக்குத் தண்ணீர் இறைப்பதற்கு உதவி செய்து வந்தான். வாலிபப் பருவத்திலேயே வாழ்க்கையை வெறுத்தவன் போல தங்கராசா அடிக்கடி பேசுவதை செல்லத்துரையன் கேட்டிருக்கிறான். மகன் உழைப்பும் சேர தோட்டப் பயிர்கள் சில வேளைகளில் நல்ல வருவாய் தந்தன. சில வேளைகளில் ஏமாற்றம். ஆயினும் இடைக்கிடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தையிலிருந்து திரும்பும்போது தங்கராசாவின் கைகளிலும் சில நோட்டுகள் புரளத் தொடங்கின.

திடீரென ஒருநாள் தங்கராசா பாஷாணம் சாப்பிட்டு விட்டான். எவருக்குமே சரியான காரணம் தெரியவில்லை. ஆயினும் செல்லத்துரையனால் காரணத்தை ஓரளவு அறிந்து கொள்ள முடிந்தது.

எதிர்வீட்டில் இராசம்மா வாழ்ந்து வந்தாள். அவளைப் பற்றி கேவலமாக ஊரில் கதைத்துக் கொண்டனர். ஒரு குழந்தையுடன் அவளைக் கைவிட்டு விட்டு அவளின் கணவன் கந்தசாமி சிங்கப்பூருக்கு ஓடியவன்தான். பின்னர் திரும்பி வரவேயில்லை. மனைவிக்கும் குழந்தைக்கும் வருஷப் பிறப்பு, தீபாவளிக்குக் கூட ஒரு சதமும் அவன் அனுப்பியதில்லை. அவன் அங்கே ஒரு மலாய்க்காரியை வைத்திருப்பதாகவும் பேசிக் கொண்டனர். தோட்ட நிலக் குத்தகைப் பணத்தைக் கொண்டு எத்தனை நாள்தான் மானத்தோடு வாழ முடியும்? ஊர் அடங்கிய பின்பும் சிலர் அந்த ஒழுங்கையால் அடிக்கடி சென்று வந்தனர். வயிற்றில் கர்ப்பம் உண்டானதோ இல்லையோ எவரும் அறியார். வீட்டிலே மரியாதையாக ஒரு புருஷனைப் பிடித்து வைப்பதற்கோ, பழியிலிருந்து விடுபடுவதற்கோ தெரியாது. மூன்று பேரிடம் தனித்தனியே காணும் போது சொல்லி அழுதாளாம். ''நான் உங்களுக்குத்தான் பிள்ளைத்தாச்சி. நான் எவனையும் தலை நிமிர்ந்து பார்த்ததில்லை. பிள்ளையாராணை, உங்களாணை, நான் பெத்த பிள்ளையாணை. என் பேச்சை நம்புங்க. ஒரு உசிரை அழிக்கிறது பெரிய பாவம். என் மானத்தைக் காப்பாத்துங்க. நான் தெய்வமாக உங்களை வைத்துப் பூசிப்பன்.''

இந்தப் பேச்சை நம்பி மானம் காப்பதற்காக தங்கராசா உயிரை விட்டான். எதுவும் அறியாத கதிராசி ''என் தங்கமான பிள்ளையை அள்ளிக் கொண்டு போனியே நீ வாழுவியா'' என்று கடவுளைத் திட்டி, தலையிலடித்து, விதியை நொந்து கொண்டாள். அவளின் வாழ்க்கைப் போராட்டம் அத்தோடு நின்றுவிடவில்லை. தொடர்ந்து வேகத்தோடு மீண்டும் அவள் போராட நேர்ந்தது.

''செல்லத்துரையன்.. வந்திட்டியா..?''

கதிராசி குரல் கொடுத்துக் கொண்டே வந்தாள். நாய் மகிழ்ச்சிக் குரல் கொடுத்துக் கொண்டே அவள் பின்னே பாய்ந்து பாய்ந்து சென்றது.



''கொஞ்சம் பொறு வாறன்.''

கதிராசி வீட்டுக்குள்ளே சென்று தூணுக்கு மேல் தடவி தீப்பெட்டியை எடுத்து விளக்கை ஏற்றினாள். விளக்கைக் கொண்டு வந்து திண்ணைக்குந்தில் வைத்துவிட்டு அவனிடம் வந்தாள். முட்டிகள் இரண்டையும் கையிலே வாங்கிக் கொண்டாள்.

''எத்தனை போத்தில்..''

''பன்ரண்டு போத்தில்.''

''கொஞ்சம்கூட எல்லே கேட்டனான்.

''இதுதான் சேர்ந்துது. மிச்சம் நாளைக்குப் பாப்பம்.''

''உந்த விளக்கை ஒருக்கா எடுத்துக் கொண்டு வா..''

கதிராசி கோடிப் புறமாக நடந்தாள். செல்லத்துரையன் விளக்கை எடுத்துக் கொண்டே பின் தொடர்ந்தான். கதிராசி கோடிப் புறத்தில் சுவர் ஓரமாக வந்ததும் முட்டிகளை நிலத்திலே வைத்தாள். சுவரோடு போடப்பட்டிருந்த சில பழைய கிடுகுகளை எடுத்து விட்டாள். பின்னர் நிலத்தோடு ஒட்டிக் கிடந்த இரண்டு தகர மூடிகளை எடுத்து சுவரோடு வைத்தாள். நிலத்திலே புதைந்து கிடந்த இரண்டு பெரிய பானைகளின் வாய்கள் மட்டும் தெரிந்தன. புளிப்படைந்த கள்ளின் நெடி புகையிலைக்கோடா மணத்தில் வீசியது. முட்டிக் கள்ளை கதிராசி பானைகளுக்குள்ளே கொட்டினாள். பின்னர் தகர மூடிகளால் பானை வாய்களை மூடி, கிடுகுகளைப் பழையபடி போட்டு விட்டு, விளக்கை வாங்கிக் கொண்டாள்.

செல்லத்துரையன் முட்டிகளை எடுத்துக் கொண்டே பின் தொடர்ந்தான்.

கதிராசி அறைக்குள்ளே விளக்குடன் சென்றாள். இரண்டு ரூபா நோட்டு ஒன்றைக் கொண்டு வந்து செல்லத்துரையனிடம் நீட்டினாள்.

''இதுதான் இப்ப கிடக்கு.''

''இதென்னணை ஒண்டுக்கும் போதாது.''

''பழைய கணக்கோடை இன்னும் நாலரை ரூபாத் தர வேணும். நாளைக்கும் மிச்சத்தைக் கொண்டு வந்து தந்திடு. இரண்டு மூன்று நாளிலே கணக்கெல்லாம் தீத்திடுறன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையன் கிடைக்கதை வாங்கிக் கொண்டான்.

''அப்ப போட்டு வாறன்.'

முட்டிகளை கையில் எடுத்துக் கொண்டே திரும்பினான். படலை திறந்து மூடும் ஓசை கேட்டது. கதிராசியின் மகள் அன்னம்மாவும் பிள்ளையுமாக எதிரே வருவது மங்கிய ஒளியில் தெரிந்தது.

''என்ன பிள்ளை கோயிலாலையோ.''

''இண்டைக்குத் தேரல்லே. இப்பதான் தேராலை சாமி இறக்கி அபிஷேகம் எல்லாம் முடிஞ்சுது.''

''எங்க ஊரிலே பகல் திருவிழா முடிய ராவாகிப் போகுது. இராத்திருவிழா முடிய பகலாகிப் போகுது. எல்லாம் தலைகீழாகத்தானே இங்கை நடக்குது.''

''அப்பிடித்தான் அங்கையும் எல்லோரும் உன்னைப் பற்றிப் பேசினாங்கள். செல்லத்துரையன், நீ அண்ணன் இருந்த காலத்திலை தொடங்கி எங்களோடை பழகினதுக்காகச் சொல்லுறன். நாளை ராத்திரிக்குத் தீத்தத் திருவிழாவுக்கு மட்டும் கோவில் பக்கம் வந்திடாதை.''

அன்னம்மாவின் குரலில் முரட்டுத் தன்மை தொனித்தது. அவள் எப்பொழுதும் வெட்டொன்று, துண்டுரண்டாகவே பேசுபவள். அவளின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாதவன் போல் செல்லத்துரையன் சொன்னான்.

''நாளைக்கு வந்துதான் பாப்பமே.''

அன்னம்மா கூட அந்தப்பக்கமாக நின்று பேசுவதுதான் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளே எச்சரிக்கை விடுபவள் போலப் பேசுகிறாள். சாதி என்றதும் சமுதாயத்திலே சாதியின் காவலாளாக அவளும் நெஞ்சை நிமிர்த்தி நிற்கிறாள். அவளின் வறுமை, குடும்ப நிலை, பழைய வாழ்வு, தற்போது செய்யும் இழிதொழில் யாவும் மறைந்து விடுகின்றன.

அவள் வாழாவெட்டியாக வாழ்ந்தபோதும் செருக்கு மட்டும் அடங்கிவிட வில்லை.



மகன் இறந்ததும் கடனை அடைக்க முடியாது. தோட்ட நிலத்தையே கதிராசி விற்றுவிட நேர்ந்தது. அவ்வேளையில் அவளால் சாப்பாட்டுக்கே வழியில்லை.

வட்டியும் முதலும் போக எஞ்சியது ஆயிரம் ரூபாய். கையெழுத்துப் போட்டு விட்டு அதை வாங்கியபோது அவள் கண்ணீர் விட்டாள். மற்றொரு பிள்ளையைப் பிரிந்த கவலையோடு சில காலம் வாழ்ந்தாள். அப்பணத்தை வைத்துக் கொண்டு மகளுக்கு எங்காவது நல்ல இடத்தில் திருமணம் செய்து வைக்க விரும்பினாள். நல்ல இடமென்றால் நாலு பேருடன் தானும் தலை நிமிர்ந்து செருக்காகப் பேசத்தக்க சாதி முக்கியமாக இருக்க வேண்டும் என்பது அவள் அர்த்தம். அறிந்தவர்கள், கலியாணத் தரகர் யாவரிடமும் காணும் போதெல்லாம் நினைவூட்டிக் கொண்டேயிருந்தாள். சுருட்டுக் கொட்டிலில் மேற்பார்வையாளரான தம்பிராசாவிடமும் சொல்லி வைத்தாள்.

## 9

அன்னம்மாவின் விளைந்து, பொலிந்த அழகில் சுருட்டு வெட்டும் சுந்தரத்திற்கு ஒரு கண் இருந்தது. இதையறிந்த தம்பிராசா 'சுந்தரத்தைப் பேசிப் பார்க்கட்டா, நல்ல பெடியன்' என்று கதிராசியைக் கேட்டுப் பார்த்தார். சுந்தரமும் வேளாள வகுப்பையே சேர்ந்திருந்த போதிலும் கதிராசிக்கு திருப்தி ஏற்படவில்லை.

'கோணா மூலையார், அதுக்கை இப்ப பலதும் பத்தும் வந்து சேர்ந்திட்டுது. வேறை எதாவது இருந்தா சொல்லுங்கோ.'

தம்பிராசாவிற்கு ஒரே ஏமாற்றம். சுருட்டுக் கொட்டிலில் அவரின் தீர்மானங்களெல்லாம் நிறைவேறிவிடும். கதிராசியின் முன் ஒரே தோல்வி.

சுந்தரத்தின் காதல் கிள்ளி எறியப்பட்டு விட்டது.

பூவடிக் கிராமத்திலிருந்து கல்யாணத் தரகன் ஒருவன் திருமணம் ஒன்று பேச வந்தான். கதிராசி வீட்டில் இல்லாத வேளையாக தரகன் மாப்பிள்ளையையும் கூட்டி வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆச்சி ஆடு ஒண்டு விக்கிறதாகச் சொன்னா, இவருக்கு ஒருக்காகக் காட்டலாமா.''

ரகன் அன்னம்மாவைக் கேட்டான்.

''ஆச்சி, தோட்டத்துக்குக் கொண்டு போட்டா.''

''பரவாயில்லை. இன்னொரு முறை பாப்பம்.''

மாப்பிள்ளைக்கு அன்னம்மாவை நன்கு பிடித்துக் கொண்டது. தரகன் நெருக்கிப் பிடித்து கையிலே பச்சை நோட்டு ஒன்றையும் வைத்து ஒரு போத்தில் வடிசாராயத்தையும் வாங்கிக் கொடுத்தான், மாப்பிள்ளை மயில்வாகனம்.

''மிச்சமெல்லாம் கலியாணம் முடியட்டும். கவனித்துக் கொள்ளுவன்.''

''தாலிக்கொடி வாங்கவே வழியில்லாத நீ என்னைக் கவனிக்கப் போறியா.''

தரகன் கேலியாகச் சொன்னான்.

''அவ்வளவு கேவலமாகப் பேசாதையண்ணை. பேசி முற்றுக் கொண்டு வா. அச்சவாரமாக நூறு ரூபாத் தாறன். மிச்சம் கலியாணம் முடிஞ்ச பிறகு.''

''பிறகு சீதனம் கீதனம் என்று கணக்குப் பேசப் படாது.''

''என்ரை மானத்தை வெறுமனே வாங்கி விடாதை. ஒரு பிள்ளை எண்டு சொன்னாய். கிடைக்கிறதையெல்லாம் வாங்கித்தா. அதுக்குத் தக்கபடிதான், உன்னைக் கவனிப்பன்.''

கதிராசியின் பலவீனங்களையெல்லாம் தரகன் நன்கு அறிந்திருந் தான். அதற்குத் தக்கபடி கதிராசியுடன் பேசினான்.

''பெடியனுக்கு என்ன தொழில்?''

கதிராசி முதல் கேள்வி போட்டாள்.

''கண்டியிலை கடை வைத்திருக்கிறான். நீ கூட ராப் பகலாய் மண்ணைக் கிண்டவே வேண்டியதில்லை. பூவடியிலை மாப்பாண முதலி வமிசத்தைச் சேர்ந்த பெடியன். உன்னட்டை அவன்ரை



தகுதிக்குக் கொடுக்க என்ன சீதனம்கிடக்கு. அந்தக் காலத்திலே நீங்க வாழ்ந்த வாழ்வெல்லாம் எனக்குத் தெரியாதா என்ன? அந்த அடிகொடிகளுக்காகத்தான் கண்ட இடங்களிலை கலக்காது, அந்த அடிகொடியைக் காப்பார்த்தத்தான் அதிட்டம் வந்து படலையைத் தட்டுது. ஜாதகம் கூட நல்ல பொருத்தம். தொழில் செய்யிற பெடியன். கொடுக்க முடிஞ்சதை காசாகக் கொடுத்து விட வேணும்.''

கதிராசி மெய் மறந்து விட்டாள். கடைசி காலத்திலை யாதல் கடவுள் கண் திறந்து விட்டார் என்று எண்ணி மகிழ்ந்தாள். அவசரத்திற்கு குடியிருந்த நிலத்தையும் விற்க முடியவில்லை. நல்ல காலம் வரப் போகிறது, என்றோ ஒரு நாளைக்கு மீண்டு விடலாம் என்ற தெம்பும் ஏற்பட ஈடு வைத்து, கை கடன் பட்டு, பிரட்ட முடிந்த பணம் யாவையும் பிரட்டி திருமணத்தைச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்தாள்.

''கதிராசி கண்ணை மூடிக் கொண்டு போய் கிடங்குக் குள்ளை விழப் போகுது. பெடியனைப் பற்றியோ சாதியைப் பற்றியோ அவ்வளவு நல்லாய் ஆரும் பேசினதாய் தெரியேல்லை.''

கதிராசியுடன் நிமிர்ந்து பேசுவதற்குத் துணிச்சலுள்ள ஓரிருவர் மறைமுகமாகச் சொல்லினர்.

''எல்லாம் பொறாமை பிடிச்சதுகள். வாறத்தையும் குத்திக் கெடுத்துப் போடுங்கள். அதுதான் நானும் அவசரப்பட்டு எல்லாத்தையும் முடிக்கப் பாக்கிறன்.''

திருமணம் சிறப்பாக நடந்து முடிந்தது.

பதினாலு பவுணிலை தாலிக்கொடி, ஐநூறு ரூபா விலையில் கூறைச் சீலை வாங்கினார்களாம்.

கதிராசி சில நாட்களாக நிமிர்ந்து நடந்தாள். மாப்பிள்ளை அங்கேயே குடியேறினார்.

கண்டிக்குப் போக நாளிருக்கு என்று மாப்பிள்ளை சொல்லிக் கொண்டிருந்தார். கதிராசி தோட்டங்களையும் மறந்து, பட்ட கடனுடன் மேலும் கடன்பட்டு சாப்பாட்டை விருந்தாக சமைத்துப் போட்டுக் கொண்டிருந்தாள்.

மூன்று வாரம் கழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை அன்று பகல் யாழ்ப்பாணம் பெரிய கடைக்கு போய் வருவதாகச் சொல்லி விட்டுப் போய் விட்டார்.

'ஆச்சி, இந்தத் தாலிக் கொடியைக் கொஞ்சம் பார். கறுக்குது போல் கிடக்குது.

தலையைக் குனிந்து தாலிக் கொடியை அன்னம்மா காட்டினாள்

குசினி வாசலருகே மீன் வெட்டிக் கொண்டிருந்த கதிராசி ஒரு தடவை கூர்ந்து பார்த்தாள் ஒருகணம் அவள் நெஞ்சம் அதிர்ந்தது. மீண்டும் கூர்ந்து கொடியில் கோர்த்திருந்த தாலியோடு கொடியை ஒப்பிட்டுப் பார்த்தாள். தன் அதிர்ச்சியை அவள் வெளிக்காட்ட வில்லை.

''என்ரை கண்ணும் பூஞ்சலாப் போட்டுது. ஒருக்கா கொடியைக் கழட்டி சோப்புப் போட்டு 'பிரசா'லை கழுவிப் பார், நிறம் வரும்.''

அன்னம்மா குட்டத்தடிக்குப் போய்விட்டாள். கதிராசியால் வெட்டிக் குறையாக இருந்த மீனை வெட்டி முடிக்க இயலவில்லை. கைகள் பலமிழந்து விட்டன. சிந்தனை வேகம் சுருக்கம் விழுந்த முகத்திடையே வியர்வைத் துளிகளை ஊறச் செய்தது. அரிவாள் எதிரே மீனைப் பிடித்த கையுடன் எதிரே வெறித்துப் பார்த்தாள். யாவும் சூன்யமாகத் தெரிந்தது

அரிவாள் பெருவிரலை வெட்டியதே தெரியவில்லை. வெட்டிய மீனில் இரத்தம். குனிந்து பார்த்த கதிராசி பெரு விரலை வாயில் வைத்து உறிஞ்சினாள்.

'கறுப்புப் போகுதில்லை ஆச்சி.

அப்போதும் அன்னம்மாவின் மனசில் களங்கம் ஏற்படவில்லை.

''இஞ்சைதாடி ஒருக்கா.''

கதிராசி தாலிக் கொடியைப் பிடுங்கி முந்தானைச் சேலைக்குள் கட்டிக் கொண்டு புறப்பட்டாள்.

''தட்டானிட்டைக் காட்டிப் போட்டு வாறன் ''

பத்து நிமிடத்தில் பேயறைந்த பிணம் போல அவள் திரும்பி வந்தாள்.



''கிலிட்டு, ஏமாத்திப் போட்டாங்கள். அய்யோ இப்பிடியா என்ரை தலைவிதி.''

தாலிக் கொடியை வீசி எறிந்து விட்டு அறைக்குள்ளே சென்று நிலத்திலே விழுந்து கதிராசி கதறி அழுதாள்.

தாலிக் கொடியை எடுத்துப் போடுவதா விடுவதா என்ற போராட்டம் அன்னம்மாவுக்கு ஏற்பட்டது. தாய் ஊட்டி வளர்த்த மானமும் ரோசமும் தலைகாக்கின.

மாப்பிள்ளை மயில்வாகனம் பசிக்களையோடு வீட்டுக்கு வந்தார்.

''டே அயோக்கியா, நில்லடா

குலைந்த மயிரும், புழுதி படிந்த உடலும், சிவந்த கண்களுடனும் கையிலே தாலிக் கொடியை ஏந்தியபடி அன்னம்மாள் நின்றாள்.

பேயுருக் கொண்ட கண்ணகியின் உருவமா?

மலைத்துப் போய் நின்றான், மயில்வாகனம்.

'இந்தாடா நீ கட்டின தாலிக்கொடி. வீட்டுக்கை நுழையாதை, இப்படியே போய்விடு.''

கால் தூசுக்கும் மதிக்காத உதாசீனப் பேச்சு.

''இல்லை அன்னம். அவசர நேரத்திலை பண கஷ்டத்திலை செய்தனான். ஒரு மாதத்திலை தங்கத் தாலை.''

''ஒண்ணும் பேசாதையடா. உன்ரை காதல் பேச்சை யெல்லாம் எங்கையேன் வேசையளோடை வைத்துக் கொள். ஏமாத்தி வாழத்தக்க சாதீலை கொண்டே உன்ரை கிலிட்டுத் தாலியைக் கட்டு.''

தாலிக் கொடியை அவன் நெஞ்சிலே பட வீசினாள். அது நெஞ்சில் பட்டு காலில் விழுந்தது. அவனது உடுப்புப் பெட்டியையும் எடுத்து வந்து அவன் காலடியில் வீசி விட்டாள்.

ஒரு நாளைக்கு இந்தப் பிரச்சனை வரும் என்பதை மயில்வாகனம் அறிந்திருந்தான். எவரும் அறியாதவிதமாக எப்படிச் சாதுரியமாக சமாதானம் சொல்லிச் சமாளிப்பது என்பதையெல்லாம் அவன் தீர்மானித்து வைத்திருந்தான். தாலி கட்டிய பின் இது ஒரு பிரச்சனையா;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் பெண்ணும் கணவனின் நிலையை உணர்ந்து காப்பாற்றிக் கொள்வாள் என்பது அவன் துணிபு.

அவன் நினைத்ததற்கு மாறாக சம்பவங்கள் நடந்தன.

பெட்டியையும், உயிரிழந்த பிணம் போலக் கிடந்த தாலிக் கொடியையும் எடுத்துக் கொண்டு கண்டிக்கு ரெயில் ஏறியவன்தான், அதன் பின்னர் அவன் அந்தப் பக்கம் தலைகாட்டியதேயில்லை.

தாலியை அறுத்தெறிந்த போதும் மூன்று வாரமாக வாழ்ந்த காதல் வாழ்வை அவளால் முற்றாகத் துறந்துவிட இயற்கை இடம்தரவில்லை. அவ்வினிய வாழ்வின் நினைவாக ஒரு குழந்தை. அதை வளர்ப்பதே அவள் வாழ்வாக மாறியது. கழுத்தில் தாலி இல்லாதபோதும் அவள் செருக்கு அடங்கி விடவில்லை.

கன்னி கழிந்த துணிச்சல், ஒழுக்கம் என்ற செருக்கு ஆகியவற்றோடு கிராமத்தில் அவள் தலைநிமிர்ந்து நடக்கிறாள்.

செல்லத்துரையன் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

பிறப்பால் உயர்வா? வாழ்ந்து காட்டும் வாழ்வால் உயர்வா? பணத்தால் உயர்வா?

ஒவ்வொருவரும் தமக்குக் கிடைத்ததை வைத்துக் கொண்டு பிறரை அடக்கி ஒடுக்கி வாழ முற்படுகிறார்களா?

நாம் மட்டும் இவற்றிடையே கிடந்து நசிந்து கொண்டே ஊமைகளாக வாழ வேண்டுமா? எத்தனை காலம் வாழ்வது?

அன்னம்மாவின் செருக்கு வார்த்தைகள் செல்லத்துரையனின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன.

''எனக்குப் பயமாக் கிடக்குது. திருவிழாப் பக்கம் மட்டும் போயிடாதை?''

அதே சாதியைச் சேர்ந்த மற்றோர் பெண்ணின் வாஞ்சைக் குரல்.

'என்ரை மனசு துடிக்குது'' என்ற வள்ளியின் பயந்த குரல்.

யாவும் அவன் செவிகளில் ஒலித்து, நெஞ்சத்தைப் பல்வேறு கோணங்களில் இன்ப துன்பமாகப் பிரித்துக் கொண்டிருந்தது.



## 10

வீட்டுக்குச் சென்றபோது கதிரனோடு அயல் வீட்டு வெள்ளையன், கதிரனின் தமையன் மகன் இலட்சுமணன் ஆகிய இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். நாகி வெற்றிலையைப் போட்டுக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தாள். செல்லத்துரையன் தம்பி இராசன் கைவிளக்கு ஒன்றின் முன்னிருந்து சத்தமிட்டுப் படித்துக் கொண்டிருந்தான்.

செல்லத்துரையன் வந்ததும் பேச்சுக்கள் ஓய்ந்தன. கதிரன் மனதுள்ளே குமுறிக் கொண்டிருந்தான். எவராலும் அவனுடன் பேசமுடியவில்லை. அவன் எதுவுமே பேசாது முட்டிகளை ஒதுக்குப்புறமாக வைத்துவிட்டு முகம் கழுவுவதற்காக பானைத் தண்ணீரைச் சரித்தான். தண்ணீர் முடிந்து விட்டது. பானையையும் எடுத்துக் கொண்டு கிணற்றடியை நோக்கி நடந்தான்.

அந்த ஒழுங்கையிலிருந்த பள்ளருக்காக அங்கு ஒரு கிணறு மட்டுமே இருந்தது. ஐம்பது குடும்பங்கள் வரை அந்தக் கிணற்றையே நம்பியிருந்தன. வேளார் குடும்பங்களில் வீட்டுக்கு ஒரு கிணறு இல்லாவிடினும் இரண்டு மூன்று வீட்டிற்காகவது நிச்சயமாக ஒரு கிணறு இருக்கும். அக்கிணறுகளையும் இதே பள்ளர் வெட்டியபோதும், ஆபத்தான வேளையிலும் கிணற்றிலே தண்ணீர் அள்ளும் உரிமை அவர்களுக்கு இல்லை.

கிணறு இல்லாது தனிமையாக வாழும் பள்ளர், பறையர் ஆகிய கீழ் சாதியினர் வேளாளர் வீட்டுக் கிணற்றடிக்குக் குடங்களுடன் சென்று தூங்கி நிற்க வேண்டும். அவர்கள் அள்ளி ஊற்றும்போது தான் தண்ணீர் கிடைக்கும். அல்லது அவர்கள் தோட்டங்களிலுள்ள கிணறுகளுக்குச் செல்ல வேண்டும். இதனால் தண்ணீருக்கு வசதியான கிணற்றை ஒட்டியே குடியேறி நெருங்கி வாழ்ந்தனர்.

கிணற்றில் தண்ணீர் அள்ளி சிறிது தாராளமாக முகம், உடலைக் கழுவினான் செல்லத்துரையன். குடத்திலும் தண்ணீர் நிறைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான். வெள்ளையனும் இலட்சுமணனும் போய்விட்டனர். கதிரன் முற்றத்து நிலவிலே ஆழ்ந்த சிந்தனையுடன் இங்குமங்குமாக நடந்து கொண்டிருந்தான். தகப்பனுடன் மகன் கதைக்கவே விரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய குகை போன்ற அடுக்களைக்குள்ளிருந்து மிளகாய் பொரித்த மணம் அவன் மூக்குக்குள் நுழைந்தது. ஒரு தும்மல். அதைத் தொடர்ந்து மற்றொன்று.

"சாப்பிட வாவனண்ணை."

அன்னம் அழைத்தாள்.

தினையரிசிச் சோறு போட்டாள். மிளகாய் பொரியல், கத்தரிக்காய் குழம்புடன் அதைச் சாப்பிட முனைந்தான். அவனுக்கு சாப்பாட்டில் மனமே ஓடவில்லை. ஆயினும் அன்னத்தைத் திருப்திப்படுத்துவதற்காக சிறிதளவு சாப்பிட்டு முடித்தான்.

இல்லாவிட்டால், 'நானும் சாப்பிட மாட்டேன்' என்று அவள் அடம் பிடிப்பாள் என்பது அவனுக்குத் தெரியும்!

அன்னமும் உருண்டு, திரண்டு வளர்ந்திருந்தாள். இரண்டு வருடங்களின் முன் தைத்த ரவிக்கை ஒன்றை மார்பை மறைக்க இழுத்துப் பிடித்து ஊசி இரண்டைக் குற்றி கீழ்ப்புறமாக முடிச்சுப் போட்டிருந்தாள். அவளின் வளர்ச்சியைப் பொறாது அந்த ரவிக்கைச் சட்டை பின்புறமாக வெடித்துக் கொண்டிருந்தது. தாய் உடுத்துக் கிழிந்த கருநீலச் சேலை ஒன்றின் பாதியை அரையில் சுற்றிக் கட்டியிருந்தாள். அந்தச் சேலையின் நிறத்தோடு ஒட்டவே அவளின் நிறமும் இருந்தது.

அவன் சிந்தனை சிறிது நேரம் அன்னத்தைப் பற்றியே வட்டமிட்டது.

அன்னத்திற்கும் திருமணம் செய்து வைக்க வேண்டிய வயதாகி விட்டது. அதன் பின்னர் இத்தனை சிரத்தையோடு யார் உணவு தரப் போகிறார்கள்? நாகியும் சேர்ந்து உழைத்தால்தான் ஓரளவு மானத்தோடு வயிறார உண்டு வாழ முடிகிறது.

இவற்றிடையே அக்கிரமத்தை எதிர்த்து நிற்க வேண்டியிருக்கிறது. மனிதன் மானம், ரோஷத்தோடு சுதந்திரமாக நீண்ட நாள் வாழ முடியாதா? அடிமையாக நசிந்துதான் வாழ்நாளை நீட்டிக் கொள்ள வேண்டுமா? எத்தனை பரம்பரையாக, சந்ததி சந்ததியாக இப்படி வாழ்வது?

"மாதவனும் வல்லியும் வந்து உன்னைக் கூப்பிட்டாங்களண்ணை. அப்பு சொல்லேல்லையா?"



அன்னம் மெதுவாகச் சொன்னாள்.

"இல்லை"

"சின்னத்தம்பியன், முருகேசன் கூட வந்து தேடினாங்கள். ஏனெண்டே தெரியேல்லை. இந்தத் தொல்லைகளுக்கை போய் உனக்கு ஏதாவது நடந்திட்டால் பிறகு நாங்களிங்கை எப்படியண்ணை வாழ முடியும்?"

அன்னமும் தன் மனவேதனையைச் சொல்லிவிட்டாள். இதற்கிடையே தலை நீட்டுவது என்பது எத்தனை சிரமம்?

கையைக் கழுவி பானைத் தண்ணீரைக் குடித்து விட்டு பறையர் பகுதிக்குச் சென்றான். பூரணைக்கு முதல் நாள் இரவு. பகல் நிலவு வீசிக் கொண்டிருந்தது. மனத் துன்பத்திடையேயும் அந்த நிலவால் மனதிற்கு ஓரளவு இதம் ஏற்படுத்த முடிந்தது. சீழ்பிடித்த புண்ணை அழுத்துவதில் ஏற்படும் வேதனையும், பின் ஏற்படும் சுகமும் மனதில் இரண்டறக் கலந்தன

## 11

வாழ்க்கையின் கரடு முரட்டுத் தன்மையை பள்ளர் பறையருக்கு நடைமுறையில் காட்டுவதற்காக கிராமச் சங்கத்தாரால் ஒழுங்கையில் பரவப்பட்ட மக்கிக் கற்கள் கால்களைப் பதம் பார்த்துக் கொண்டிருந்தன. கிராமச் சங்கத்தாரிடம் உருளை இல்லாமலில்லை. பள்ளர் பறையர் என்ற உதாசீனம். வண்டிற் சில்லுகள் நெரித்து மட்டப்படுத்திய பாதை வழியே நடந்தான். பனை ஓலைகளின் சலசலப்பு. இடையிடை நாய்களின் வரவேற்பு.

மாதவனின் குடிசை வாசலில் நின்று செல்லத்துரையன் குரல் கொடுத்தான். அவன் தமையன் வல்லியின் மனைவி பூதாத்தை வெளியே வந்தாள். மார்பின் மேல் சேலையைக் குறுக்காக கட்டியிருந்தாள். பள்ளர், பறையர் பெண்களிடையே குறுக்குக் கட்டுவது சாதாரணம். இந்த நிலை மாறி வந்து கொண்டிருந்தது. தற்போதைய பெண்கள் ரவிக்கை போட்டு, சேலையைத் தாவணியாக தோள் மேலால் போடத் தொடங்கி விட்டனர். அள்ளிச் செருகும் மயிரை பின்னலாகவும் கொண்டையாகவும் போடத் தொடங்கி விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பறை, பள்ளுகளெல்லாம் எறிதாவணி போடத் தொடங்கி விட்டுதுகள். அவளவையின்ரை நடையென்ன ஒய்யாரமென்ன, பள் பறையெண்டே வித்தியாசம் பிடிக்க முடியாத காலம் வந்து விட்டுது.''

சந்து முனைகளிலிருந்து பள்ளர், பறையர் தாவணி போடுவதைப் பார்த்துப் பொறுக்க முடியாத உயர்சாதியினரின் நச்சரிப்பு நடந்து கொண்டேயிருந்தது.

''சாப்பிடுறார். இப்ப வந்திடுவார்.''

பூதாத்தை சொன்னாள். இருக்கும்படி சொல்லவே அவளுக்கு வார்த்தை வரவில்லை. வர முடியாது. செல்லத்துரையன் பள்ளன்; அவள் பறைச்சி. பள்ளரிலும் குறைந்த சாதி. எப்படி வீட்டில் வந்து இருக்கும்படி வேண்ட முடியும்?

வல்லியின் முக்கிய தொழில் வேலியடைப்பது. இதுதவிர கிராமத்தின் ஒரு பகுதி அவனுக்குக் குடிமையாகவும் இருந்தது. குடிமையென்றால் அவ்வெல்லைக்குள் சாவீடுவரின் பறை மேளம் அடிப்பதற்கு அவனே பொறுப்பு. அதைத் தொடர்ந்து சுடலையாற்றும் போது சாம்பல்களை குழி வெட்டிப் புதைப்பது, இறந்த எட்டாம் நாள் சடங்கின்போது சில கடமைகள் ஆகியனவற்றிற்கு அவன் தவறாது சமூகந்தர வேண்டும். இவற்றிற்காக சுடலையில் படைக்கும் ரொட்டிகளும், வீட்டில் பேய்க்காகப் படைக்கும் சோறும், கள்ளுக்காக இரண்டு ரூபா பணமும் கிடைக்கும்.

மாதவன் மனைவி சீதை வெளியே வந்தாள். அவள் ரவிக்கை போட்டு சேலையை தோள் மேலாக தாவணியாகப் போட்டிருந்தாள். தலைமயிரை அள்ளிக் கொண்டையாக முடிந்திருந்தாள்.

''உள்ளை வந்து இருக்கச் சொன்னார்.''

மாதவன் சொல்லிக் கொடுத்ததை அவள் நயமாகச் சொன்னாள்.

''பரவாயில்லை.மாதவன் சாப்பிட்டு வரட்டும்.''

உள்ளே சென்று இருப்பதில் செல்லத்துரையனுக்கு ஆட்சேபமு மில்லை. ஆயினும் வெளியே சென்று நிலவில் இருந்து பேசுவது நல்லது எனத் தீர்மானித்திருந்தான்.

மாதவன் பறையனாக இருந்த போதும் செல்லத்துரையனுக்கு அவன் மேல் ஒரு தனி மதிப்பு இருந்தது.



மாதவன் யாழ்ப்பாண முனிசிபாலிட்டியில் தோட்டி வேலை செய்து வந்தான். பறையர் பகுதியிலிருந்து பெரும்பாலான ஆண்கள் அங்கேயே வேலை செய்து வந்தனர். யாழ்ப்பாணம் பட்டணம் குரும்பையூர் கிராமத்திலிருந்து ஐந்து மைல் தூரத்திலிருந்தது.

அதிகாலை நாலு மணிக்கே பறைய பகுதிக் குடிசைகளிலெல்லாம் விளக்கு எரியத் தொடங்கி, புகை கிளம்பிவிடும். ஐந்தரை மணிக்கெல்லாம் கஞ்சியைக் குடித்து விட்டு சோறு, சுட்ட மிளகாய், கருவாட்டுக் கறி அல்லது கத்திரிக்காய் கறியையும் பொட்டலமாகக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விடுவார்கள். மழை, பனி எதுவும் அவர்களின் அந்த நீண்ட பயணத்தைத் தடுத்துவிட முடியாது. அசுர வேகத்தில் இருளைப் பிரித்துக் கொண்டே நடப்பார்கள். ஆறே முக்காலுக்கெல்லாம் பேர் கொடுத்துவிட வேண்டும். பின்னர் தனித்தனி குழுக்களாகப் பிரிந்து வேலைக்குச் சென்று விடுவர். தோட்டி வேலை, தெருக்கள், சந்தைகள் பெருக்கும் வேலை. இறந்த மிருகங்களைப் புதைக்கும் வேலை ஆகியன வாரத்தில் ஏழு நாட்களும் வருடத்தில் முன்னூற்று அறுபத்தைந்து நாட்களும் இருக்கத்தான் செய்யும். அவர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் ஓய்வு மட்டும் கிடைத்து வந்தது. நண்பகலில் ஒரு மணி நேர ஆறுதல். நாலு மணிக்குப் பெயரளவில் வேலை முடிந்த போதும் முனிசிபாலிட்டி அலுவலகத்திற்கு நடந்து வந்து உபகரணப் பொருட்களை ஒப்படைத்து பெயர்போட்டு வீட்டுக்குப் புறப்பட ஐந்து மணியாகிவிடும். காலையில் புறப்படும்போது இருக்கும் வேகம் மாலையில் திரும்பும்போது இருப்பதில்லை.

குழந்தைகளின் நினைப்புடன் வருவார்கள். காலையில் புறப்படும்போது தூங்கியிருந்த பிள்ளைகள் இரவில் மீண்டும் தமது தூக்கத்தை ஆரம்பித்து விடுவதும் உண்டு. வாரத்தில் ஒரு நாள் மட்டுமே குழந்தை மனைவியருடன் ஓய்வாக இருக்க முடியும். நோய், விடுமுறை காரணமாக வேலையாட்கள் குறையும்போது அந்த ஒரு நாள் ஓய்வும் சில வேளைகளில் கிடையாது போய்விடும்.

இவ்வாறு உழைப்பதால் பறையருக்கு சாதிகளால் ஏற்படும் நெருக்கடிகளைப் பற்றிக் கவனம் செலுத்தவே நேரமில்லை.

மாதவன் எதற்காகத் தேடி வந்தான் என்பதை வீட்டிலிருந்து புறப்பட்ட நேரம் தொட்டே ஆராய்ந்து பார்த்தான். சாதி, சமயப்பிணக்குகளில் அதிகமாக அவன் ஈடுபடுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவனுக்கும் செல்லத்துரையனுக்கும் இடையில் இருந்த ஐக்கியத்தை அறிந்து எவராவது புத்தி சொல்லும்படி தூண்டி அனுப்பினார்களோ!

பறையர்களிடையேயும் மாதவனுக்கு நல்ல மதிப்பு இருந்தது. மேலும், யாழ்ப்பாண முனிசிப்பல் தொழிலாளர் சங்கத்தின் செயற்குழுவிலும் அவன் அங்கம் வகித்தான். தொழிற் சங்க வேலைகளில் அதிக ஊக்கமெடுத்து வந்தான். மிஷன் பள்ளிக்கூடத்தில் படித்திருந்த எழுத்தறிவை வளர்ந்த பின் கைவிடாது, கிடைக்கும் நூல்களையெல்லாம் படித்து கல்வியறிவை விருத்தி செய்து கொண்டான். தொழிலாளர்களின் லீவு, மாற்றம், வேலைக் கஷ்டங்கள் பற்றியெல்லாம் நகர சபைக்கு முறைப்பாடு எழுதும் வேலைகளையெல்லாம் அவன் செய்து வந்தான். முனிசிப்பல் சபையின் சுற்றறிக்கைகள், சட்ட திட்டங்கள் யாவையும் ஓரளவு ஒழுங்காகப் படித்தறிந்து வைத்திருந்தான்.

தொழிலாளர் நலன்களைப் பாதிக்கும் சட்ட திட்டங்கள், சுற்றறிக்கைகள் வரும்போது விஷயங்களைச் சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, சங்கம் மூலம் எதிர்ப்புகளைத் தெரிவித்துக் கொண்டு வந்தான். தொழிலாளரைத் தண்டித்தல், வேலை நீக்கம் செய்தல் ஆகியவற்றிலெல்லாம் தனியாகவும், தொழிற்சங்க மூலமும் போராடி வந்தான். இதனால் கிராமத்துத் தொழிலாளர்களிடை மட்டுமல்லாது பிற கிராமங்களிலிருந்து வரும் தொழிலாளர்களிடையும் அவனுக்குச் செல்வாக்கும் மதிப்பும் இருந்து வந்தது.

மாதவனுடன் ஓரளவு பழக ஆரம்பித்தபோதே அவனது பரந்த சிந்தனையும், விஷயங்களைப் புதுமாதிரியாகப் பார்க்கும் முறையும், பிறருக்கு எதற்கும் உதவி செய்ய முன்வரும் தன்மையும் செல்லத்துரையனை மிகவும் கவர்ந்தன.

ஒழுங்கைக்குக் கல்லுப் போடுவதற்கு, அரிசிக் கூப்பன் புத்தகம் தராது விதானையார் வல்லிபுரம் ஏமாற்றும்போது, சங்கக் கடையில் தாழ்ந்த சாதியினருக்கு ஓரவஞ்சகம் செய்யும் போது, பொலிசார் தமது அதிகாரத்தை மீறி அவர்கள்மேல் வீண் பழி சுமத்தும் போதெல்லாம் எவரெவருக்கு எப்படியெப்படி முறைப்பாடு எழுத வேண்டும் என்பதையெல்லாம் அவன் நன்கு அறிந்திருந்தான். சில சில



விஷயங்களை அவன் தொழிற்சங்க சம்மேளனத்துடன் கலந்து பேசி ஆவன செய்வான். ஊரிலுள்ள அதிகாரிகளை எதிர்ப்பதற்கு யாவரும் அஞ்சியே வந்தனர். மாதவன் அவற்றையெல்லாம் உயர்ந்த சாதியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்கள் மூலம் செய்து வந்தான்.

## 12

**மா**தவன் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தான்.

''வீட்டை வந்ததெண்டு தங்கச்சி சொல்லிச்சுது. அதுதான் வந்தனான்.''

''வா, நிலவிலை இருந்து கதைப்பம்.''

முன்னே நடந்த மாதவன் மனைவியைப் பார்த்துத் திரும்பி ''வல்லி அண்ணன், சின்னட்டியன், சின்னானையும் வரச் சொல்லு'' என்று கூறினான்.

மனித சாதியிடையே பேதம் காட்டாத வெண்ணிலா வான் பரப்பை அளந்து கொண்டிருந்தான். மனிதர்களால் எட்ட முடியாத தொலைவில் அவன் பவனி வந்து கொண்டிருந்தான்.

இருவரும் நிலவிலே புல் தரையில் உட்கார்ந்தனர். வல்லி, சின்னட்டியன், சின்னானும் கூட வந்து சுற்றிவர உட்கார்ந்தனர். செல்லத்துரையனுக்கு அவர்கள் ஓரளவு மரியாதை செலுத்தினர்.

''திருவிழாவிலை நடந்த சங்கதியெல்லாம் கேள்விப்பட்டன். அதுதான் ஒருக்காப் பார்க்கலாமென்று வந்தன். நீ தொழிலாலை வரேல்லை எண்டு வீட்டிலை சொல்லிச்சினம்.''

மாதவன் பேச்சை ஆரம்பித்தான்.

''நல்லான் நிலமை எப்படியிருக்கு?''

''உடலெல்லாம் ஊமைக் காயங்களாயிருக்கு. என்ன நடக்கும் எண்டு சொல்ல முடியாது. அவனுக்கு நடந்ததை நினைக்கேக்கை ரத்தமே கொதிக்குது.''

''பெரியாசுபத்திரிக்கு கொண்டு போயிருக்கலாமே.''

''விதானையார் வல்லிபுரம் தலையிட்டு நிப்பாட்டி வைச்சிருக்கிறார். அதை மீறி வெளியேறத் தக்க துணிச்சல் இராமனிட்டையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்யிறது? நோவுக்குப் புக்கை கட்டுறாங்கள். அதோடை குணப்படத்தக்கதாகத் தெரியேல்லை.''

''நாங்கள் இதிலையெல்லாம் நேரடியாய் வாறது சரியில்லை. இராமனைச் சரிப்படுத்தி வழிக்குக் கொண்டு வர முடியாதா. உங்களுக்கை ஒற்றுமையும் கட்டுப்பாடும் ஏற்படுத்த வேணும். அப்பதான் நிலைமையை ஓரளவு சீர்படுத்தலாம். உதிரிகளாய் இருக்கும் மட்டும் உங்களிடையே சிலரை ஆயுதமாக்கி மற்றவர் மேல் பாயவிடுவாங்கள். ஒற்றுமை ஏற்படுத்துவதும் அத்தனை சுலப மில்லை. நாங்களிதுக்குள்ளை வந்தா 'பறையங்கள் எங்களுக்கென்ன புத்திமதி சொல்லிறது' எண்டுதான் சொல்லுவினம்.''

மாதவன் ஓரளவு விரிவாக நிலமையை விளக்க முனைந்தான். பறையர்களிடையே உள்ள ஒற்றுமையும் கட்டுப்பாடும் தங்களிடை யில்லை என்பதை செல்லத்துரையன் அறிவான். அதற்குரிய காரணத்தை மாதவனே நன்கு உணர்ந்திருந்தான். பள்ளரிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதிலுள்ள சிரமத்தையும் அவன் அறிவான். முன்னர் ஒருமுறை மாதவன் செல்லத்துரையனுக்கு இவ்வேறுபாடு களை ஓரளவுக்கு விளக்கியிருந்தான்.

பறையரில் பெரும்பாலோர் ஒரே இடத்தில் வேலை செய்கிறார்கள். தொழிற் சங்கத்தில் அங்கத்தவராயிருக்கின்றனர். தொழிலாளர் என்ற வர்க்க உணர்ச்சி, ஒற்றுமையின் வலிமை ஆகியவற்றை ஓரளவாவது உணரத் தக்க சந்தர்ப்பம் அவர்களுக்கு மட்டும் ஏற்பட்டது. பள்ளர் உதிரிகளாக அங்கங்கே உழைத்து வந்தனர். ஒற்றுமைப்படுத்துவது எளிதல்ல.

''நல்லான் செத்தாலும் இராமன்ரை மனசைத் திருப்ப முடியாது. வேறு வழியில்லை. நடக்கிறதைக் காண வேண்டியதுதான்.''

சோர்வோடு செல்லத்துரையன் பதில் கூறினான். அவன் உள்ளத்தின் நோவு பெருமூச்சாக வெளிவந்தது.

''நானறிஞ்ச அளவிலே நிலைமை மோசமாக உருவாகிக் கொண்டே வருகுது. அந்த வெறியோடை இந்த வேளையிலை நாங்க மோதிறது அவ்வளவு நல்லாயில்லை. ஒதுங்கிப் போறதுதான் நல்லதுபோலை கிடக்கு.''



மாதவன் தன் கருத்தைத் தெரிவித்தான். செல்லத்துரையனுக்கு மாதவன் பேச்சே ஆச்சரியமாக இருந்தது. மாதவனா இப்படிப் பேசுவது. அவனையும் எதிரிகள் விலைக்கு வாங்கி விட்டார்களோ என்றே சந்தேகப் பட்டான்.

''மாதவன், நீ கூட இப்படிப் பேசிறது எனக்கே ஆச்சரியமாய் கிடக்கு. நாங்கள் போய் மிண்டுறமா? இல்லாட்டி நான்தான் தனியப் போய் எதிர்க்கிறனா? நேற்றைக்கு அந்த அக்கிரமத்தைப் பாத்துச் சகிக்க முடியேல்லை. என்ரை நரம்புகளிலையும் இரத்தந்தானே ஓடுது. அந்தக் கொதிப்பிலை அண்டைக்கே நான்கூடச் சாகத் தயாராயிருந்தன். வாயிலை வந்தபடி பேசினேன். அதை வைச்சுக் கொண்டு படை திரட்டுறாங்கள். வேணுமெண்டால் என்னையும் கொண்டு போட்டுப் போகட்டும். நான் இதுக்காக எந்த நேரமும் சாகத் தயார்.''

உள்ளக் கொதிப்போடு செல்லத்துரையன் பேசினான். நிலவொளியில் அவன் முகம் பயங்கரமாகத் தோற்றமளித்தது. ஆயினும் மாதவன் இப்பேச்சினால் சிறிதளவும் அசைந்துவிடவில்லை.

''செல்லத்துரை, உன்ரை உணர்ச்சியை, நியாயத்தை நாங்க உதாசீனப்படுத்தேல்லை. இப்பிடியான மோதல்கள் சமுதாயத்தில் ஏற்படத்தான் செய்யும். இதன் மூலமே மனித சமுதாயம் சிறிது சிறிதாக வளர்ந்து வந்திருக்குது. உன்ரை தியாக உள்ளத்தை நான் மதிக்கிறேன். எண்டாலும் அங்கை வளரும் வெறித் தீ உன்னோடை மட்டும் நிக்கும் எண்டு நினைச்சு விடாதை. அவங்களிட்டை எல்லாப் பலமுமிருக்கு. அவங்க தீ எங்களை எந்தளவில் சுட்டுவிடும் எண்டே சொல்ல முடியாது. எப்படியும் நாங்க விழிப்பாயிருக்கிறதே நல்லது.''

மாதவன் அமைதியாக விளக்கினான். வல்லி, சின்னட்டி சின்னாலும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

வல்லி மௌனத்தைக் கலைத்துக் கொண்டு சொன்னாள்.

''ஓம் தம்பி''

சின்னட்டி சின்னானும் ஆமோதித்தனர்.

''சாமி கும்பிட, திருவிழாப் பார்க்கப் போற உரிமை கூட எனக்கில்லையா? கடவுள் சந்நிதியிலை என்னைப் பலி எடுக்க வேண்டுமெண்டால் எடுத்திட்டுப் போகட்டும். எனக்கும் தன்மானம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோசம் இருக்கு. ஒண்டு மட்டும் நீங்க வேண்டியதுக்காகச் சொல்லுறன். நான் ஒருக்காலும் அவங்களோடை வில்லங்கத்துக்குப் போய் மோத மாட்டேன். இது சத்தியம்.''

அவர்கள் மனம் ஓரளவு சாந்தியடைந்தது. செல்லத்துரையன் போனாலென்ன, போகாவிட்டாலென்ன ஏதாவது நடந்துதான் இந்த வெறி அடங்கும் என்றே மாதவன் மனம் சொல்லியது.

''சரி, நாங்களும் முடிஞ்சதைப் பார்த்துக் கொள்ளுவம்.'' மாதவன் சொன்னான்.

மாதவன் காலையில் வேலைக்குப் போக வேண்டியதை நினைவூட்டினான். எல்லோரும் எழுந்தனர். செல்லத்துரையன் விடைபெற்றுக் கொண்டு வந்த வழியே புறப்பட்டான்.

வெண்புகார்கள் வானத்திலே விளையாடிக் கொண்டிருந்தன. ஊமை நிலவு காய்ந்து கொண்டிருந்தது. செல்லத்துரையன், வண்டிப் பாதை வழியே மெதுவாக நடந்தான். ஒருகணம், ஊமை நிலவைப் பால் நிலவு துரத்திக் கொண்டிருந்தது. வானத்தை நிமிர்ந்து பார்த்தான். சிறிது முனை உடைந்த சந்திரனைச் சுற்றிப் பரிவட்டம்.

நினைவலைகள் பின்னோக்கி ஓடின. வள்ளியின் நினைவு ஒரு கணம் இதயத்தைக் குளிரச் செய்து, வேதனை தந்தது. நல்லூர் கந்தனின் மஞ்சத் திருவிழா நாள். மாலையில் பெரிய கடைக்கு ஒரு அலுவலாகப் போய்விட்டுத் திரும்பும்போது முருகனைக் கும்பிடுவதற்காக வந்தான். மரமேற வேண்டியிருந்ததால் இராத் திருவிழாவுக்கு நிற்க முடியவில்லை. வீதியை வலம் வந்து முருகனை வழிபட்டான். வீட்டிற்குத் திரும்பும் போது மேற்கு வீதி வழியே வந்தான். சனக் கூட்டம் அப்பொழுதுதான் வரத் தொடங்கியிருந்தது. கடைத் தெருவைப் பார்த்துக் கொண்டே நடந்து வந்தான். இமிட்டேசன் முத்துமாலைகள் அவன் கண்ணில் பட்டன. ஒரு மாலையை அவன் வாங்கி வந்தான்.

கிராமத்திற்கு வந்த போது ஏழு மணிக்கு மேல் ஆகிவிட்டது. வீட்டிற்குப் போகுமுன்பே மரமேறும் வேலையை முடிக்க முயன்றான்.



## 13

**கோ**வில் பங்குக் கிணற்றடி மரங்களில் ஏறும்போது வள்ளி பால் நிலவில் தோய்ந்தபடியே நின்று அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள். வாளிப்பான அவளின் உருவம் அவனை மெய்மறக்கச் செய்தது.

மரங்களேறி முடித்ததும் வள்ளியிடம் வந்தான்.

''கொப்பர் கோச்சி இல்லையா?''

''கோவிலுக்குப் போட்டினம்.''

வாய்க்கால் பிட்டியில் நின்ற வள்ளியை நிலவைப் பார்க்கும்படி சொல்லிக் கொண்டே அந்த இமிட்டேசன் முத்து மாலையை அவள் கழுத்திலே கட்டிவிட்டான்.

வள்ளியின் முகம் நிலவு போல் சிரித்தது.

''நிலவைப் பாத்தியே, அதைச் சுத்தி என்ன போட்டிருக்கு.''

''பரிவட்டம்!''

வள்ளி பதில் சொல்லிவிட்டு கலகலவென சிரித்தாள்.

''இல்லை. இன்னொரு தடவை நல்லாய்ப் பார்.''

அவள் கழுத்தை நிமிர்த்திக் கூர்ந்து பார்த்தாள். அவன் குனிந்து அவள் கழுத்திலே முத்தமிட்டான்.

அன்று மாலையில் வள்ளிக்கு ஆறுதல் வார்த்தை கூறி வராததற்காக அவன் மனம் வருந்தியது.

''நாளைக் காலை பார்ப்போம்'' என்று மனதைத் தேற்றிக் கொண்டான்.

குடிசையை அடையும்போது ஒழுங்கை முகப்பில் சின்ன தம்பியன், முருகேசன், பரமன் ஆகிய மூவரும் நின்றனர்.

''நீங்க வந்ததாய் அன்னம் சொன்னாள். ஒரு அலுவலாய் பறைய கடவைப் பக்கம் போக வேண்டியிருந்தது. போட்டு இப்பதான் வர்றன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையன் சாவதானமாகக் கூறினான்.

''நீ கண்டபடி தனியத் திரியறது அவ்வளவு நல்லதாயில்லை. அங்கையெல்லாம் சண்டைக்குத் தயார் பண்ணுறாங்கள். நாங்க மட்டும் சும்மாயிருப்பதா? வாள், கத்தி, கிறிஷ் ஏதாவது தேட வேண்டாமா?''

சின்னத்தம்பியன் கேட்டான். முருகேசன் இடைமறித்துக் கேட்டான்.

''முதலிலை நாளைக்குத் திருவிழாவுக்குப் போறதா இல்லையா என்பதை முடிவு கட்ட வேண்டும்.''

''திருவிழாக்குப் போய்த்தான் தீர வேண்டும்.''

''அப்ப ஆயுதமேதாவது இரவைக்கே தேடி வைக்க வேண்டும்.''

சின்னத்தம்பியன் சொன்னான்.

''நாங்க நாளைக்கு ஆயுதங் கொண்டு போறது எல்லா வகையிலும் ஆபத்து. ஒண்டும் இல்லாமல் சாமி கும்பிடப் போறதே நல்லது.''

''இதுதான் ஆபத்து எண்டு நான் சொல்லிறன்.''

முருகேசன் சொன்னான்.

செல்லத்துரையன் பல காரணங்கள், சூழ்நிலைகள் யாவையும் சொல்லி விளக்கினான். அவர்களைச் சாந்தப்படுத்தி வழியனுப்புவதே பெரிய வேலையாகி விட்டது.

மாதவன் கூறிய சில வார்த்தைகள் அப்போதுதான் அவன் நினைவுக்கு வந்தன. அவன் பலியாக நேர்ந்தாலும் அத்துடன் போராட்டம் நின்றுவிடுமா? அதைத் தொடர்ந்து அவன் நண்பர்கள், உறவினர், சாதிக்காரர் பேசாது இருந்து விடுவார்களா?

''நான் பலியானாலும் பரவாயில்லை. ஏன் பிறரையும் இதற்குள் மாட்டித்துன்பப்படச் செய்ய வேண்டும்.''

புதிய கேள்வி ஒன்று அவன் மனதில் எழுந்தது.

குடிசைக்குள் நுழைந்து ஒரு மூலையில் பாயைப் போட்டுப் படுத்துக் கொண்டான். தூக்கம் வர மறுத்தது. தூரத்திலே இடையிடை நாய்களின் ஊளைக் குரல் கேட்டுக் கொண்டிருந்தது. நெஞ்சக் கடலில் பல்வேறு சிந்தனையலைகள் எழுந்து மோதிக் கொண்டிருந்தன.



நல்லான் உயிரை எப்படிக் காப்பாற்றுவது?

செம்பாட்டுப் பள்ளர்கள் கொஞ்சம் பயபக்தியானவர்கள் என்பது உயர் சாதிக்காரரின் முடிவு. அப்படியிருந்தும் நினையாது செய்த தவறிற்காக இத்தனை தண்டனையா? அவர்களைப் பொறுத்த வரையில்தானே அது தவறு. கடவுளைப் பொறுத்தவரையில்? தெய்வமொன்றிருந்தால் இந்தக் கொடுமையைப் பார்த்துக் கொண்டிருக்குமா? நான் மனிதன், என்னால் சகிக்க முடியாது போய்த்தானே இப்பொழுது நிலைமை மோசமாக உருவாகிக் கொண்டிருக்கிறது. மாதவன் எத்தனை விசித்திரமான மனிதன்? அவன் கோவிலுக்குச் செல்வதே மிகக் குறைவு. அவன் நெற்றியில் திருநீறு, சந்தனத்தையே காண முடியாது. ஆயினும் அவன் எந்தத் தெய்வத்தையும், மதத்தையும் என்றும் இழிவாகப் பேசியது கூடக் கிடையாது. மற்றப் பறையரெல்லாம் திருநீறு, சந்தனம் பூசிக் கொண்டே அதிகாலையில் வேலைக்கு ஓடுகின்றனர். மாதவன் எத்தனை பொறுமையோடு விஷயங்களை விரிவாகப் பார்க்கிறான். அவனுக்கு கோபமோ, ஆத்திரமோ சீறி வருவதை அவன் கண்டதேயில்லை. ஆயினும் செம்பாட்டுப் பள்ளனான நல்லானுக்காகவே அவன் இரங்குகிறான். எப்படியும் நல்லானைக் காப்பாற்ற நாளைக்கு ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும்.

இராமன் எத்தனை அடிமைத்தனத்தில் ஊறிக் கிடக்கிறான். பள்ளராக இருந்தபோதும் செம்பாட்டுப் பள்ளர் எங்களுக்குக் குறைந்தவர்களாகவே தம்மைக் கருதிக் கொள்ளுகிறார்கள். ஒரே கிராமத்திலிருந்தபோதும் எங்களிடையே கலியாணங்கள், கொண்டாட்டங்கள் எதுவுமே கிடையாது. வள்ளிகூட அவர்களைச் சேர்ந்தவள். அப்பு ஆச்சி அவளை வீட்டுக்குக் கூட்டி வர விடமாட்டார்கள். முருகன் பொன்னி கூட இதை அறிவார்கள். வள்ளியை அவர்கள் எச்சரிக்காது விட்டிருப்பார்களா? எந்தச் சூழ்நிலை ஏற்பட்ட போதிலும் ஏதோவோர் மாபெரும் சக்தி அவன் இதயத்தின் அடியில் ஒலித்துக் கொண்டிருந்தது.

இராமனுக்கு எப்படித் துணிச்சல் ஏற்படுத்த முடியும்? அவன் விதானையார் பேச்சை மீறினால் தண்டனை கூட இதிலும் மோசமாக மாறலாம். அவர்கள் நிலத்திலே எல்லாமே நெருங்கிய சிறுசிறு குடிசைகள். அவற்றிலிருந்து வெளியேற்றவோ அவற்றைத் தீவைத்துக் கொளுத்தவோ கூட அவர்கள் தயங்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14

வேதக்காரப் பள்ளர் என்று மற்றோர் பிரிவு கிழக்கு மூலைப் பகுதியில் ஏற்பட்டதற்கு எவர் காரணம்?

செல்லத்துரையன் நினைவில் சிறு வயது நினைவுகள் வட்டமிட்டன.

செல்லத்துரையனுக்கு அப்போது பன்னிரண்டு பதின்மூன்று வயதிருக்கும். அம்மன் கோவிலிலே அன்று குளிர்த்தித் திருவிழா. கிராமத்தில் அம்மன் நோய்கள் வரக் கூடாது, மழை பெய்ய வேண்டும் என்பதற்காக கிராம மக்களால் செய்யப்படும் திருவிழா; ஊரிலுள்ள தென்னை மரங்களிலுள்ள இளநீர், பசுக்களில் கறக்கப்படும் பால் யாவற்றாலும் அம்மனுக்கு அபிஷேகம் நடைபெறும். பின்னர் இரவிரவாக சுவாமி கிராமம் பூராவும் பவனி வரும் திருவிழா.

சுவாமி வலம் வரும் வீதிகள், ஒழுங்கைகள் யாவற்றிலும் வரிசை வரிசையாகப் பூரண கும்பங்கள் வைத்திருப்பதைக் காணலாம். ஒவ்வொரு வாயிலிலும் ஐயர் அர்ச்சனைப் பணம் பெற்று தீபம் காட்டியதும் ஒருவர் நிறைகுடத்தை எடுத்து சுவாமி செல்லும் வழியில் ஊற்றி விட்டு குடத்தை உரியவர்களிடம் கொடுத்து விடுவார். பள்ளர், பறையர் வீட்டு ஒழுங்கைகளாலும் அம்மன் சுற்றுலா வர நேரும். அவர்களிடமும் ஐயர் பணத்தை மட்டும் பெற்று கற்பூர தீபம் காட்டுவார். ஆனால் நிறைகுடம் எடுத்து அம்மன் முன்னிலையில் ஊற்றும் வழக்கம் மட்டும் இல்லை. கிழக்கு மூலைப் பள்ளர் வாழும் ஒழுங்கை வழியே சுவாமி உலாவி வரும்போதும் இதே வழக்கமே தொடர்ந்தது.

செல்லப்பன் சிந்தனைக்கு அது விசித்திரமாகத் தோன்றியது. சாமிக்கு எங்களுடைய தண்ணீர் கூட தீட்டாகி விடுமா? வேளாளர் அள்ளி ஊறிய தண்ணீர்தான் அதிகமான நிறைகுடங்களில் நிரப்பப் பட்டிருக்கின்றன. வாலிப இரத்தம் சிந்தனையில் ஏறியதும் அவனால் பொறுக்க முடியவில்லை. அவன் தாய் சீதேவி அர்ச்சனைக்காக ஒரு பணம் காசு வைத்ததும் ஐயர் தீபம் காட்டினார். அம்மன் புறப்பட இருந்ததும் செல்லப்பன் தாங்கள் வைத்த நிறைகுடத்தைத் தூக்கிக் கொண்டு போய் சுவாமி முன்னிலையில் கொட்டத் தொடங்கினான்.



''நிறுத்தெடா.''

''இதென்ன எண்டுமில்லாத வழக்கம்.''

''பள்ப் பிள்ளைக்கு மரியாதை தெரியேல்லை.''

குரல்கள் ஒலித்தன. சில கண நேரந்தான். செல்லப்பனை ஒழுங்கை வேலியோடு இழுத்துத் தள்ளினார்கள். அவன் திமிறினான். அடி, உதை எல்லாம் தாராளமாகக் கிடைத்தது.

''அய்யோ, செல்லப்பா..''

சீதேவி கத்தினாள்.

அம்மன் பவனி அதைப் பொருட்படுத்தாது முன்னேறிக் கொண்டிருந்தது.

செல்லத்துரையன் பவனியின் பின்புறமாக சுண்டல், வாழைப் பழத்திற்காக வந்தவன். வாயில்களில் படையல் வைப்போர் வேளாளப் பிள்ளைகளுக்கு கொடுத்து முடிந்த பின் எஞ்சியிருப்பின் பள்ளர், பறையர் பிள்ளைகளுக்கும் கொஞ்சம் கிடைக்கும்.

பிணம் போல செல்லப்பன் விழுந்து கிடந்த காட்சி, சீதேவியின் ஒப்பாரி, அவன் கண் முன்னே நேற்று நடந்தசம்பவம் போல ஒரு கணம் தோன்றி மறைந்தது. சிறிய விஷயங்கள் கூட எத்தனை பலத்துடன் அடக்கப்பட்டன. பள்ளர் எதற்குமே தலைகாட்டவிடாதபடி அடக்கி விட முற்பட்டனர்.

அதைத் தொடர்ந்து, பல சம்பவங்கள் அந்தப் பக்கத்திலே நடந்தன. பள்ளர்களின் கொதிப்பை வெந்நீர் கொட்டி அடக்க முயன்றார்கள். அதுவும் முடியாதபோது தீ வைத்தார்கள். பள்ளர் குடிசைகளெல்லாம் சாம்பலாயின. நிற்பதற்கே மர நிழலில்லாது போய்விட்டது.

பட்டணத்தில் மிஷன் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த பையன் ஒருவன் கத்தோலிக்க பாதிரியாரிடம் நிலமையைச் சொன்னான். அவர் உடனே துணை ஆட்களுடன் வந்து புகுந்தார். வெள்ளைக்கார ஆட்சியின் செல்வாக்கும் அவர் புறமிருந்தது. பொலிசார் வந்து பாதுகாப்பளித்தனர்.

கூடாரங்கள் போட்டு தற்காலிகமாக இருக்கச் செய்தனர். உணவும் சில நாள் இலவசமாகக் கொடுக்கப்பட்டது. அரசாங்கத்திற்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்களில் சிறு குடிசைகள் எழுந்தன. கிணறு ஒன்று தனியாகத் தோண்டப்பட்டது.

கிறிஸ்தவ கோவில் ஒன்று எழுந்தது. அதையடுத்து சிறு பள்ளிக்கூடமொன்று கட்டப்பட்டது. புதிய பாதிரியார் ஒருவர் அப்பகுதிக்காக நியமிக்கப்பட்டார். எல்லோருக்கும் ஞானஸ்நானம் அளிக்கப்பட்டு, புதிய பெயர்கள் சூட்டப்பட்டன.

சாதிபேத மோதல்கள் எதுவும் ஏற்படாதவிதமாக பாதிரியார் பார்த்துக் கொண்டார். அமைதி ஏற்பட்டது. பள்ளர்கள் மதம் மாறியதற்காக சைவ வேளாளர் ஒரு சிலரே வருத்தப்பட்டனர்.

''நாளைக்கு எங்கடை கோவிலுக்கை கூட நுழைய வருவாங்கள். அதிலும் பார்க்க இப்படிப் போய்விடுறது நல்லது.''

பெரும்பாலோர் மனதைச் சமாதானம் செய்து கொண்டனர்.

வேளாளர் தோட்டங்களில் கூலி வேலை செய்வது தொடர்ந்து நடந்து வந்தது. ஆயினும் வேளாளரால் முன்னர் காட்டிய மிடுக்கு இப்போது காட்ட முடியவில்லை. வேதக்காரப் பள்ளர் என்று அவர்களுக்குப் பெயர் வந்து விட்டது. அவர்களை வளர்ப்பதற்கு கல்வி கற்று, மத நலம் தவிர, சுயநலம் எதுவுமற்ற பாதிரியார் இருந்தார். மோதல்கள் எதிலும் அகப்படாது அவர்கள் வளர்ந்து கொண்டிருந்தனர்,

நாமும் மதம் மாற முடியுமா? மத நம்பிக்கையை மாற்றுவது என்பது அத்தனை சுலபமா? மதம் மாறிய போதும் பள்ளர்கள் பள்ளர்களாகவே கிராமத்திலே கருதப்பட்டு வருகிறார்கள். அவர்களும் தனிச்சாதியாகி விட்டனர். மற்றப் பகுதியில் வாழும் பள்ளர்களின் கலியாணம், கொண்டாட்டங்களில் கூட அவர்கள் கலந்து கொள்வதேயில்லை.

## 15

பாயில் புரண்டு நினைவலைகளில் மிதந்து கொண்டிருந்த செல்லத்துரையனின் சிந்தனை ஒடுங்கி விட்டது. அவன் கண் விழித்தபோது காலைக் கதிரவனின்ஒளிக் கீறுகள் குடிசையின் கூரையில் ஏறிவிட்டன.



கதிரனும் நாகியும் வேலைக்குப் போய்விட்டனர். அன்னம் தண்ணீரள்ளி, நிலம் கூட்டி, அடுப்பு மூட்டிக் கொண்டிருந்தாள். அவன் படுத்திருந்த இடம் தவிர மற்ற நிலமெல்லாம் சாணத்தால் பெருக்கியிருந்தாள்.

அன்று தீர்த்தத் திருவிழா என்பது உடனே அவன் நினைவில் தோன்றியது. பிள்ளையாரின் கடைசித் திருவிழா அதுவே.

கோவிலிலே திருவிழாத் தொடங்கி விட்டால் அந்தப் பத்து நாளும் அக்கிராமமெல்லாம் திருவிழா மணம் வீசிக் கொண்டேயிருக்கும். எந்நேரமும் கோவிலுக்குப் போய் வருவோரைத் தெருவில் காணலாம். சிறுவர் சிறுமியருக்கு ஒரே உற்சாகம்.

தோட்டப் பகுதியில் அந்தப் பிள்ளையார் கோவில் இருந்ததினால் பயிர் செய்யும் வேளாளர் அனைவரிடையேயும் பிள்ளையாருக்கு நல்ல செல்வாக்கு இருந்து வந்தது. எப்பயிர் விளைச்சலிலும் முதல் அறுவடையில் ஒரு பங்கு பிள்ளையாருக்கே கிடைத்து வந்தது.

வெளியூர்களில் உத்தியோகம் பார்ப்போரும் திருவிழாக் காலம் என்றதும் அங்கே வந்துவிடுவர். புதிய உத்தியோகம் எவருக்குக் கிடைத்தாலும் முதல் சம்பளத்தில் பிள்ளையாருக்கு பிரமாதமான ஓர் அபிஷேகம் நடைபெறும்.

பிள்ளையார் கோவில் மணி அக்கிராமம் மட்டுமென்ன சுற்றிவரவுள்ள இணுவில் கோண்டாவில் கிராமமெல்லாம் கணீரென எதிரொலிக்கும். பிள்ளையாருக்கு அக்கோவில் மணி கிடைத்தது பற்றியே ஒரு கதையுண்டு.

கள்ளக் கடத்தல் வியாபாரம் செய்த கந்தசாமியின் காரை ஒரு நாள் போலிசார் வழிமறித்துச் சோதனை போட்டனர். பின் டிக்கி, முன்புற எஞ்சின், உள்புறம் யாவும் பொலிசார் பார்த்தபின், பின் 'சீட்டை'யும், வெளியே எடுத்துச் சோதனை போட்டனர். அப்போது கந்தசாமி, பிள்ளையாரை வேண்டினான்.

''பிள்ளையாரே, தப்பினால் இதில் கிடைக்கும் பணம் எல்லாம் உனக்குத்தான்.''

எல்லா 'சீட்'டையும் பிரித்துப் பார்த்தவர்கள், 'டிரைவரி'ன் சீட்டை மட்டும் பார்க்காது ''சரி போலாம்'' என்று சொல்லி விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசாமியின் இடியிடித்த நெஞ்சத்தில் பிள்ளையார் பால் வார்த்ததாக எண்ணனார். அந்த அபினில் கிடைத்த ரூபா எண்ணாயிரத்திற்கு புதிய கோபுரம் எழுந்து புதிய கோவில் மணி ஏறியது. பூசை வேளையெல்லாம் இரண்டு மூன்று மைல் சுற்று வட்டாரத்தில் மணியின் கண நாதம் ஒலித்துக் கொண்டிருந்தது.

தீர்த்தத் திருவிழாவைச் செய்து வந்த சிதம்பரப்பிள்ளை மலடாக மரித்ததும் கந்தசாமி அத்திருவிழாவின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். கந்தசாமி வயதானவரான போதும் தீர்த்தத் திருவிழா வழமைபோல மிகச் சிறப்பாகவே நடந்து கொண்டு வந்தது. டாக்டர், இஞ்சினியரை மணந்த அவரது புத்திரியர் இருவர். அரசாங்கத்தில் பெரிய உத்தியோகத்திலுள்ள மக்கள் மூவர், மற்றும் உறவினர் யாவரும் வெளியூர்களிலிருந்து தீர்த்தத் திருவிழாவிற்கு வந்து விடுவர். அவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் கிடைக்கக் கூடிய மேளவித்துவான், சின்ன மேளம், வாணம் யாவையும் அங்கு கண்டு, கேட்டு ரசிக்கலாம். சாத்துப்படி, பாம்புருவில் மலர்ச்சப்பிரம் யாவும் கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும்.

செல்லத்துரையன் எழுந்து பனைப் பக்கமாகப் போய் விட்டு வேப்பங்குச்சி ஒன்றால் பல் துலக்கியபடியே வந்தான். முற்றத்தில் வந்து நின்றதும் அன்னம் மூக்குப் பேணிக்குள் கோப்பி ஊற்றிக் கொண்டு வந்தாள். அதிகாலையிலேயே தோய்ந்து, சட்டையையும் அரைச் சேலையையும் மாற்றியிருந்தாள். உலராத தலைமயிரை விரித்து நுனிப் புறத்தில் ஒரு முடிச்சுப் போட்டிருந்தாள்.

முற்றத்துப் பானையைச் சரித்து வாயை அலம்பி, முகத்தைக் கழுவி விட்டு கோப்பியை வாங்கிக் கொண்டான்.

''இண்டைக்கு எல்லாரும் விரதம். உனக்கு மட்டும் பழைய தினைச் சோறு இருக்கண்ணை. பிளி மாங்காய் போட்டுச் சம்பலரைச்சுத்தாறன்.''

''நான் மரஞ்சீவிப் போட்டு வாறன். பிறகு பாப்பம். எனக்குப் பசியே இல்லை. இவன் ராசனெங்கை.''

''இண்டைக்குப் பள்ளியில்லை. அவனையும் அப்பு தோட்டத்துக் குக் கூட்டிக் கொண்டு போட்டார்.''



''படிக்கிறவனைப் படிக்க விடாது தோட்டத்துக்குக் கிழுத்தால் அவன் எப்பிடி உருப்படப் போறான்.''

கோப்பியைக் குடித்தபடியே பொச்சரித்தான்.

''உன்னை நாலஞ்சு வருஷமாய் பள்ளிக்கு அனுப்பினதாலைதான் நீ கெட்டுப் போனாயெண்டு அப்பு நேற்றுக் கூடத் துள்ளினார். ராசன்ரை படிப்பையும் நிப்பாட்டினாலும் நிப்பாட்டி விடுவார்.''

''அதை நானும் ஒரு கை பார்க்கத் தான் வேணும்.''

செல்லத்துரையன் ஆத்திரத்தோடு பேசினான்.

மாதவன் அடிக்கடி சொல்வது அவன் நினைவில் வந்தது.

''நாங்ளெல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டாவது எங்கடை பிள்ளைகளைப் படிப்பிக்க வேணும். அப்போதுதான் எங்கடை சந்ததியாவது முன்னேறி இந்த இழி நிலையை ஒழித்து விடுவர்.''

கல்வி. அதற்குக் கூட எத்தனை சிரமம். கிராமத்தில் இரண்டு சைவத் தமிழ் பாடசாலை, ஒரு ஆங்கிலப் பாடசாலை இருந்தும் அவர்களுக்கே அங்கே இடமில்லை. மிஷன் பாடசாலை ஒன்றுதான் அவர்களுக்குத் தஞ்சம். அங்கு பள்ளிக்கூட நேரத்தில் படிப்பது மட்டுமல்ல ஆசிரியர் வீடுகளுக்குச் சென்று வேலையும் செய்ய வேண்டும். வேளாளர் பிள்ளைகள் அங்கே குறைவு. அவர்களுக்கெல்லாம் தனியே இடம். பள்ளருக்கு வேறு இடம். பறையருக்கு வேறு, பள்ளர் பறையருக்கு பிரம்பால் தான் பாடம் படிப்பிக்கப்படும். வேளாளப் பிள்ளைகளுக்குத் தனி மதிப்பு. தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் சிறு வயதிலேயே இவ்வேறுபாடுகளால் குறைந்தவர்களாகத் தம்மை எண்ணிக் கொண்டு விடுகிறார்கள்.

ஏதோ நாலு எழுத்து எழுதுகிறோம் படிக்கிறோம் என்ற பெருமை. பெருவிரலடையாளமிடாது கையெழுத்துப் போடுவது என்பதே தனிப் பெருமையாக அவர்களிடை இருந்து வந்தது. தெருவிலே ஒட்டப்படும் நோட்டீஸ், விளம்பரப் பலகைகள் ஆகியவற்றை எழுத்துக் கூட்டிப் படிக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16

எதையும் வாசித்துப் பார்த்து கையெழுத்துப் போட முடியாததால் பரம்பரை பரம்பரையாக விதானைமாராலும் பிறப்பு இறப்புப் பதிவாளராலும் பள்ளர் பறையரும் மற்றைய குறைந்த சாதியினரும் ஏமாற்றப்பட்டே வந்தார்கள்.

குழந்தைகள் பிறந்ததும் பதிவாளர் பரமசாமியிடம் பெயர் பதியப் போய் விட்டு வாசலில் காத்து நிற்பார்கள். தன் வேலை யெல்லாம் முடித்து விட்டு அவர் பதிவேடு சகிதமாக வருவார். விபரமெல்லாம் கேட்டு எழுதிக் கொள்வார்.

''ஆனா, பெண்ணா?''

''ஆண்தானுங்க.அவள் என்ரை மனுஷி நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு நேர்த்திக்கடன் செய்தாளாம். கந்தசாமி எண்டு வைச்சிடுங்கோ முதலி.''

பதிவாளர் பரமசாமி ஒரு தடவை விழியை மேலே புரட்டிப் பார்ப்பார். நெஞ்சத்திலே முணுமுணுத்துக் கொண்டே ''கந்தன்'' என்று எழுதிவிட்டு, 'சரி இந்தா இதிலை பெருவிரலைத் தொட்டு வை' அவர் காட்டுமிடத்தில் பெருவிரலை அழுத்தி விட்டு மனத் திருப்தியோடு போவான்.

''கந்தசாமியாம்.. கந்தசாமி... ஆசையைப் பாரு பறைப் பிள்ளைக்கு.''

பரமசாமி அவனைப் போகவிட்டுப் பார்த்துக் கொண்டே பொருமினார்.

சுப்பிரமணியம் சுப்பனாகவும், சின்னத்தம்பி சின்னனாகவும், தம்பிப்பிள்ளை தம்பனாகவும், வள்ளி நாயகி வள்ளியாகவும், வெள்ளையம்மா வெள்ளைச்சியாகவும் அவர் பதிவேட்டில் இடம் பெறுவர். வீட்டிலே அவர்கள் என்ன பெயர் சொல்லி அழைத்தாலும் வேளாளர் அவர்களின் பெயர்களை பதிவாளர் போல மட்டமாக வெட்டியே அழைப்பார்கள்.

அவர்கள்தான் பழந்தமிழ் பெயர்களை இன்னும் காத்து வருவதாக ஒரு பண்டிதர் அடிக்கடி சொல்லிக் கொள்வார்.



அரசாங்கத்தில் வேலைக்கோ, வழக்கு சம்பந்தமான விஷயங்களுக்கோ பிறப்புப் பதிவு அல்லது இறப்புப் பதிவில் பிரதி தேவைப்படும்போதுதான் இந்த ஏமாற்று அம்பலமாகும். ஆயினும் பதிவாளரை எதுவும் செய்துவிட முடியாது.அவர் தொடர்ந்து தமது 'கப்பாத்து' வேலையைச் செய்து கொண்டே வந்தார்.

இதை ஒழிப்பதற்கு நாம் எதையும் வாசித்துவிட்டு கையெழுத்துப் போடுமளவிற்காவது கற்க வேண்டும் என்று மாதவன் அடிக்கடி சொல்லி வந்தான்.

செல்லத்துரையன் தன் பெயரை ஓரளவு காப்பாற்றி வந்தான். செல்லன் என்று வேளாளர் வெட்டிக் கூப்பிடும் போதெல்லாம் 'என் பேர் செல்லத்துரை, செல்லனில்லை' என்று திருத்தி வந்தான். உள்ளத்தில் மனமில்லாதபோதும் வேறு வழியின்றி அவனை 'செல்லத்துரையன்' என்று ஆண்பால் 'அன்' விகுதி சேர்த்து நல்ல தமிழில் அழைத்து வந்தனர்.

மலாயன் பென்சன்காரர் சீனிவாசகத்தாரின் மகள் சரஸ்வதி மட்டும் ஆட்கள் எவராவது வீட்டில் இருக்கும் போது 'செல்லத்துரையன்' என்று அழுத்தமாக அழைப்பாள். எவருமில்லாதபொழுது 'செல்லத்துரை' என்று கூப்பிடுவாள். சரஸ்வதியின் பிணைப்பே விசித்திரமாக இருந்தது. அவளுக்கு வயது செல்லத்துரையனிலும் பார்க்க ஒன்பது, பத்தாவது அதிகமாக இருக்கும். முப்பத்தைந்தைத் தாண்டியிருக்கலாம். இன்னும் திருமணமேயாகவில்லை.

சீனிவாசகம் கண்மூடிக் கொண்டிருந்தார். சரஸ்வதிக்கும் கலியாணம் நடந்து புருஷனோடு போய்விட்டால் வயதான காலத்தில் தன்னை எவர் திரும்பிப் பார்ப்பார் என்ற சுயநலமும் அவரிடமும் குடிகொண்டிருப்பது நன்கு தெரிந்தது.

மகளின் கலியாணம் பற்றி விசாரிப்பவர்களிடம் 'முடிந்த வரை பார்க்கிறேன். இன்னும் காலஞ் சரிவரேல்லை' என்று சொல்லிக் கொண்டே வந்தார்.

வேலையிலிருந்து பென்சன் பெற்று, மனைவியை இழந்தவராக சலரோக நோயுடன் இரு குமருகளையும் அழைத்துக் கொண்டு மலாயாவிலிருந்து அவர் அங்கு வந்து பத்து வருடங்களாகி விட்டன. அப்போது அவரிடம் சொத்துகள், பணங்கள் ஏராளமாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் பெரிய மனுஷர் வரிசையில் அவரும் இடம்பெற முனைந்தார். கூட்டுறவுச் சங்கம் தொடக்கம் கிராமச் சங்கம் வரை எல்லாச் சங்கங்களிலும் இடம் தேடிக் கொண்டார். சாதிகள், சமயங்களிலெல்லாம் கடும் வைதீகமாகவே இருந்து வந்தார். கிராமத்திலேயே அவர் முடிவையே எல்லோரும் மதிக்க வேண்டும் என எதிர்பார்த்தார். தமது செல்வாக்கைக் காப்பாற்றுவதற்காக பணம் செலவு செய்ய வேண்டிய இடங்களில் அவர் சிறிதும் தயங்காது செலவு செய்தார்.

காலையில் உணவை முடித்துக்கொண்டு புறப்பட்டால் இரண்டு மணிக்கு மத்தியானச் சாப்பாட்டிற்கே வீட்டுக்கு வருவார். சாப்பாடு முடித்து ஒரு மணி நேரம் பூனைத் தூக்கம் போட்டுவிட்டுப் புறப்பட்டால் பின்னர் இரவு ஒன்பது பத்து மணிக்கே மதுவெறியுடன் வீடு திரும்புவார். சரஸ்வதி விழிப்பாக இருந்து சாப்பாடு கொடுத்துப் படுக்க வைப்பாள். அவருக்கு வேண்டிய கடமைகளையெல்லாம் அவள் ஒழுங்காகச்செய்து வந்தாள்.

மலாயாவிலிருந்து வந்த காலம் தொடக்கம் அவர் மகளுக்குத் திருமணம் பேசிக் கொண்டேயிருந்தார். தரகரும் மற்றவர்களும் பேசிக் கொண்டு வரும் எந்தத் திருமணமும் அவருக்குத் திருப்தி தரவில்லை. சாதி, ஜாதகம், மாப்பிள்ளையின் அந்தஸ்து யாவையும் உயர்வாகவே தேடித் திரிந்தார். ஆரம்ப காலத்தில் பணத்திற்காகத் தேடி வந்தவர்களும், பின்னர் அவரின் பணம் கரைவதைப் பார்த்து ஒதுங்கி விட்டனர்.

சரஸ்வதியும் இளமையின் பொலிவில் இருந்த வேளையில் அவளிலே கண் வைத்து வந்த வாலிபர்களையும் வெடுக்கோடு பேசி ஒதுக்கி வந்தாள்.

சரஸ்வதிக்கு ஐந்து வயது இளமையாக இருந்த அவளின் தங்கை மகேஸ்வரி வாழப் பிறந்தவள். தன் வாழ்க்கையைத் தானே தேடிக் கொண்டாள்.



## 17

பஞ்சலிங்கம் ஏழைதான். படித்துவிட்டு சங்கக் கடையில் வேலை செய்து வந்தான். சீனிவாசகம் சங்கக் கடைக்குச் செயலாளர், பொருளாளராக இருந்தபோது அடிக்கடி அங்கு வந்து செல்ல நேரிட்டது. சரஸ்வதி, 'பஞ்சனா' என்று அவனை மிகவும் குறைவாக நினைத்து கதவைத் திறந்து உள்ளே விட்டு வெறுப்புக் காட்டும்போது மகேஸ்வரியோ, 'பஞ்சு உள்ளே வாவன். அய்யாவை வரச் சொல்லுறன். கதிரையிலே உட்கார்!' என்று மரியாதையாக வரவேற்றுப் பழகி வந்தாள். சரஸ்வதிக்குப் பிடிக்காதபோதும் கோப்பி கொடுத்து உபசரித்து வந்தாள். சில வேளைகளில் இரவிலே சீனிவாசகத்தாரின் வருகைக்காக அவன் அங்கே காத்திருக்க வேண்டியிருக்கும்.

பஞ்சலிங்கத்திற்கு கொழும்பிலே கம்பனி ஒன்றில் வேலை கிடைத்தபோதும் வீட்டிற்கு வந்து இருவருக்கும் பயணம் சொல்லிவிட்டே சென்றான். விடுமுறையில் கிராமத்திற்கு வரும் போதெல்லாம் நாள்தோறும் சீனிவாசகத்தார் இல்லாத நேரமாக அவரைக் காண வருபவன் போல் வந்து செல்வான்.

கொழும்புக்குத் திரும்புவதற்கு முன் நாளிரவு மட்டும் அவர் வரும் வரை காத்திருப்பான்.

''சனிக்கிழமை கொழும்பாலை வந்தனான். இரண்டு மூன்று தடவை உங்களைத் தேடி வந்து ஏமாந்து போனன். நாளைக்குப் பயணம். எப்பிடியெண்டாலும் இண்டைக்கு உங்களைப் பாத்திட்டுப் போறதெண்டுதான் இருந்தன். உங்களைப் போலை ஆர் இந்தக் கிராமத்துக்காக உழைக்கினம். உங்களைக் காண்பதெண்டாலே சும்மாவா.''

பஞ்சலிங்கம் சாதுரியமாகப் பேசுவான். அவன் இல்லாத காலத்தில், தான் செய்த வீரப்பிரதாபங்களையெல்லாம் அவர் அளந்துகொண்டே போவார். அவரின் சலிப்புத் தட்டும் பேச்சுக்களை அவன் சுவையாகக் கேட்பவன் போல் கேட்டுக் கொண்டிருப்பான். மகேஸ்வரி தகப்பன் பக்கமாக, பின்புறச் சுவரோடு நின்று பஞ்சலிங்கத்தோடு கண்ணால் பேசுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மகேசு, தம்பிக்கு ஏதாவது கோப்பியாதல் கொண்டு வாவன். எங்கை சரசுவைக் காணேல்லை.''

''அவ படுத்திட்டா, நான் கோப்பி கொண்டு வாறன்.''

பஞ்சலிங்கம் மீண்டும் ஒரு தடவை அவள் தயாரித்து வந்த கோப்பியை சுவைத்துப் பருகுவான்.

மகேஸ்வரியின் போக்கை அக்காவால் கட்டுப்படுத்த முடியவில்லை. மகேஸ்வரி அவ்வளவிற்குத் துணிச்சல் பெற்று விட்டாள்.

''நீ பொத்தடி வாயை. இந்தக் கிழவன் உன்னைப் பற்றியே கவலைப்படாமல் ஊர் வேலையோடு, சுத்தித் திரியும். குடிக்கும், வீம்புக்கும் பணமெல்லாம் கரைஞ்சுபோகுது. உன்னைப் பற்றிக் கவலைப்படாது கண்மூடிக் கொண்டு திரியிற கிழவன் என்னைப் பற்றியா கவலைப்படப் போகுது. சலரோகம் வேறை. நாளைக்குச் செத்துப் போனா உன்னோடை என்னையும் நடுத்தெருவிலே நிக்கச் சொல்லுறியா. உன்ரை மூஞ்சையை கண்ணாடியிலை பார்க்கிறியா. எலும்பாகிக் கொண்டு போகுது. இனி எவன் உன்னைத் திரும்பிப் பார்க்கப் போறான்.''

மகேஸ்வரி, அக்கா என்ற மரியாதை சிறிதும் காட்டாமலே குத்திக் குத்திப் பேசத் தொடங்கி விட்டாள். தலைநிமிர்ந்து நிற்க முடியாத சரஸ்வதி கட்டிலிலே குப்புற விழுந்து, நெஞ்சு வரண்டு, கண்ணீர்காயும் வரை அழுவாள்.

அக்கா தங்கை இருவருக்குமிடையில் பொறாமைப் போராட்டம் வெளியே தெரியாதபடி நடைபெற்றுக் கொண்டிருந்தது. சீனிவாசகத் தாருக்கு எதுவுமே தெரியாது. சரஸ்வதியும் எதுவும் சொல்லவில்லை.

தந்தைக்குச் சொல்லி எதுவும் நடைபெறாது என்பதை மகேஸ்வரி நன்கு அறிவாள். அக்கா இருக்கத் தங்கையின் கலியாணம், பஞ்சலிங்கத்தின் குறைவான அந்தஸ்து, வேளாளரான போதும் நிகரான குடும்பம், ஜாதகப் பொருத்தம் ஆகியவை குறுக்கே நிற்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

பஞ்சலிங்கம் ஒரு தடவை கிராமத்திற்கு லீவில் வந்து திரும்பும் போது தகப்பனுக்கோ அயலவருக்கோ தெரியாமலே அவளும் புகை வண்டியில் கொழும்புக்குப் புறப்பட்டு விட்டாள்.



கொடிகாமத்திலிருந்து பஞ்சலிங்கம் பொழுதுமங்கிய பின் வாடகைக் கார் ஒன்று அழைத்து வந்திருந்தான். தனக்குரிய தாயின் நகைகள், தன் உடைகளை மட்டும் அவள் எடுத்துக் கொண்டாள். காரில் ஏறுமுன் சரஸ்வதிக்கு அவள் கடைசி வார்த்தையாகக் கூறினாள்:

''உனக்கும் வாழ விரும்பினால் நீ கிழவியாக முன் என்னைப் போல துணிச்சலோடை கண்ணிறைஞ்ச ஒரு ஆம்பிளை எவனையாவது பிடிச்சுக் கொள். இல்லாட்டி கிழவன் செத்தபின் நீ கிழட்டுக் குமரியாகத்தான் சாவாய். இல்லாட்டி என்னோடைதான் வந்திருப்பாய்.''

மகேஸ்வரியின் கடைசி வார்த்தைகள் அவளின் இதயத்தை வெடி வைத்துப் பிளப்பதாக இருந்தன. வாழ்க்கையைப் பற்றி அவள் இதுவரை காலமும் கொண்டிருந்த கருத்தெல்லாம் உடைந்து சிதறியது.

ஒரே துணையும் தஞ்சமும் அவளின் கட்டில் மட்டுமே. அதிலே போய் குப்புற வீழ்ந்தாள்.

சாகும்வரை நான் இப்பிடித்தான் வாழ வேண்டுமா?

நெஞ்சிலும் தலையிலும் பலங்கொண்ட மட்டும் அடித்துக் கொண்டாள்.

மார்பில் ஏற்பட்ட நோவு இதயத்திற்குச் சிறிது இதமாக இருந்தது.

சீனிவாசகத்தார் வீட்டுக்கு வந்து குரல் கொடுத்தபோது எவரையும் காணாதது ஆச்சரியமாயிருந்தது. உள்ளே வந்து அறைகளைப் பார்த்தார். சரஸ்வதியின் விம்மல் குரல் கேட்டது. அவர் விரைந்து வந்து ''என்ன? என்ன நடந்தது?'' என்று கேட்டார். அவளால் வாய் திறந்தே எதுவும் பேச முடியவில்லை.

''பிள்ளை சொல்லு, சொல்லு, என்ன நடந்தது? இவளெங்கை, மகேசு.. மகேசு.!''

பதட்டத்தோடு அழைத்தார், பதில் எதுவுமேயில்லை.

''இவள் மகேசு இந்த நேரத்திலை எங்கை போட்டாள். பிள்ளை சரசு நீ ஏன் அழுகிறாய்? சொல்லு சொல்லு.''

கட்டிலின் அருகே உட்கார்ந்து அவளைத் தடவிக் கொடுத்தார். அவளின் விம்மல் அடங்க நெடுநேரமெடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மகேசு எங்கை போட்டாள், காணேல்லே, ஏதாவது சண்டை பிடிச்சியளா?''

''மகேசு.. பஞ்சலிங்கத்தோடை.. ஓடி..''

அதன்மேல் வார்த்தைகள் வரவில்லை.

சீனிவாசகம் சிலைபோல் இருந்து விட்டார். அவரால் எதுவுமே பேச முடியவில்லை.

சரஸ்வதி மீண்டும் மீண்டும் விம்மி விம்மி அழுதாள். மகேசு போய்விட்டதற்காக அவள் அழுகிறாள் என சீனிவாசகம் எண்ணியிருப்பார். அவள் தன் வாழ்விற்காக அழுகிறாள் என்பதை அவளைத் தவிர எவர் அறிவார்.

சீனிவாசகத்தின் சிந்தனையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நிழல்போல் வந்து மறைந்து கொண்டிருந்தன.

''பஞ்சலிங்கன்... என்ன நம்பிக்கைத் துரோகம் செய்தான். என்ன நெஞ்சழுத்தம்! நாலு சல்லிக்குப் பெறாத நாய் என்ரை செல்வத்தை அள்ளிக் கொண்டு போறதா. அவன் சாதி என்ன, எங்கடை பரம்பரையென்ன? எங்கோ கம்பனியிலை கணக்கெழுதுகிற கழுதை, இப்படிக் காலாலை உதைக்கு மெண்டு ஆர் நினைச்சது? அவன்தான் நாய். இந்தப் பெட்டைக்குக் கண் எங்கை போனது, அய்யோ.''

தன் வேட்டி உரிந்து விழுந்து, தெருவிலே நிர்வாணமாக நிற்பதைப் போல உணர்ந்தார்.

''சீனிவாசகத்தின்ரைமேள் சிந்தாத்தையின்ரை பேரன் பஞ்சலிங்கத்தோடை ஓடி விட்டாளாம்.''

தெருவிலே எல்லோரும் அவரைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கிறார்கள். இதிலும் பார்க்கத் தூக்குப் போட்டுச் செத்துவிடலாம் போல் தோன்றியது அவருக்கு.

வயதுவந்த பெண். பொலீசிலே சொல்லியும் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்தார்.

சாராயத்தைக் குடித்துக் கொண்டே ஒரு கிழமையாக வீட்டை விட்டு வெளியே தலைகாட்டாது கிடந்தார்.



## 18

நாள் போகப் போக தன் தங்கை மகேஸ்வரி துணிச்சலோடு செய்தது சரிபோலவே சரஸ்வதிக்குப் பட்டது. இளமைச் செருக்கும் அந்தஸ்தும் பார்த்து, தன் வாழ்க்கையைப் பாலைவனமாக்கி விட்ட தவறை உணர்ந்தாள்.

அவள் உதாசீனப்படுத்தியனுப்பிய நேசதுரை கூட வாடகைக் கார் ஓட்டிப் பிழைத்து குடும்பமாக வாழ்கிறான். நேசதுரையை நினைக்கும் போதெல்லாம் அவளையறியாது அவள் இதயம் கனிவதுண்டு. அவளுக்காக உயிரைக் கூட கொடுக்க அவன் சித்தமாக இருந்ததை அவள் அறியாமலில்லை. எத்தனையோ நாட்கள் அவன் கண்கள் அவளைப் பார்த்துக் கனிந்ததை அவள் காணாமலில்லை. கார் ஓட்டிய காசு வாங்கவரும் சாட்டாக வந்து, பேசத் துணிச்சலின்றிச் சென்றதை அவள் உணராமலில்லை. கடைசியில் தயக்கத்தோடு காதல் கடிதம் எழுதி கண் முன்னே காலடியில் போட்டு விட்டுச் சென்றான்.

அக்கடிதத்தைச் சுட்டெரித்து சாம்பலை மற்றோர் கடித உறையுள் போட்டு கடுகடுத்த முகத்தோடு அவள் திருப்பிக் கொடுத்தாள்.

ஆனால், நேசதுரைக்கு திருமணம் என்று அறிந்தபோது அவளால் தாங்க முடியவில்லை. அன்றிரவு முழுவதும் அவள் நெஞ்சம் பொங்கிப் பொருமியது; உடைந்த கண்ணீராகப் பெருகியது.

நேசதுரையின் கலியாண வீட்டிற்கு மேளமடித்தபோது அவளால் கொட்டுமேளத்தைக் கேட்கவே முடியவில்லை. இதயத்தின் இரு புறத்திலும் தடியால் அடிப்பது போலிருந்தது. காதுகளைப் பொத்திக் கொண்டே கட்டிலில் புரண்டு உருண்டாள்.

எத்தனை வருடங்கள் ஓடி விட்டன. நேசதுரையின் ஐந்து வயது நிரம்பிய குழந்தையை அவள் ஒரு நாள் கிராமத்தில் நடந்த நாடகம் ஒன்றிற்குச் சென்றபோது பார்த்தாள்.

அக் குழந்தையின் நினைவு தோன்றும் போதும் அவள் மனம் குழையும்; வேதனைப்படும்.

''அப்படி ஒன்றை நான் பெற்று வளர்க்க..''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ நாட்கள் கனவிலே கூட அக்குழந்தை வந்து தன் மார்பிலே படுத்திருப்பதுபோல நினைத்து, அணைத்து, ஏமாந்து, விழித்து அழுதிருக்கிறாள்.

மனிதத் தொடர்புகள் எப்படியெல்லாம் இதயத்திலே கோடுகளைக் கீறிவிட்டு ஓடுகிறது. அவற்றிலே சில கால வெள்ளத்தில் அழிந்து கொண்டே செல்ல புதிய தொடர்புகள் மீண்டும் கோடுகளைக் கீறிச் செல்கின்றன. ஆயினும் காலவெள்ளத்தாலும் அழியாத சில கோடுகள் மனித இதயங்களில் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றின் நினைவு வாழ்வோடு ஒட்டிய இன்பதுன்பமாகத் தொடரத்தான் செய்கிறது.

என் மேல் ஆசைப்பட்ட அவனைக் கட்டியிருந்தால்கூட காரோட்டியாவதுஎன் வாழ்க்கையைச் சிறப்பாக்கியிருப்பான். அடிமனம் ஒலித்துக் கொண்டிருந்தது.

தென்னை மரத்திலே தளநார், விட்டுவிட்டு உராய்ந்த சத்தம் கேட்டு சரஸ்வதி வெளியே வந்து ஒரு தடவை அவனைப் பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தாள்.

சீனிவாசகத்தார் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். கிளாசிலே கோப்பியைக் கொண்டு வந்து வைத்தாள், சரஸ்வதி.

மரத்திலே பாளை தட்டும் சத்தம் கேட்டது.

''நல்ல பெடியனெண்டு நாங்கள் கொஞ்சம் இடங்கொடுக்க இவன் இப்ப மார்பிலே பாய்கிற அளவுக்கு வந்திட்டான், இவனுக்கு கள்ளுச்சீவ மரமே கொடுக்கப்படாதெண்டு எல்லாரும் தீர்மானிச் சிட்டாங்கள், இதுதான் அவனுக்குக் கடைசித் தடவை.''

சரஸ்வதி எதுவும் பேசாது மௌனமாக நின்றாள். சிறிது நேரம் கழித்து கேட்டாள்:

''லைசென்சு எடுத்த மரத்தை இடையிலை நிப்பாட்டலாமா?''

''இவங்களெல்லாம் என்ன சட்டம் பேசிறது. கொடுத்திட்டம் போகுது. இந்த வருஷம் முடியுமட்டும் சீவிப் போட்டுப் போகட்டும். இந்த ஊரிலையே இவனுக்குக் கள்ளிறக்க இனி மரங்கிடையாது.''

அவர் குரலில் ஆத்திரம் தொனித்தது.

''அப்ப உங்களுக்குக் கள்ளு.''



''அதுதான் வேறை எவனையாவது சீவச் சொல்லிறது. இல்லாட்டி வேறை எவனிட்டையாவது சொன்னால் வீட்டிலை கொண்டு வந்து வைச்சிட்டுப் போறான்.''

கோப்பியைக் குடித்து விட்டு எழுந்து அவரது வழமையான உடையை அணிந்தார். மடிப்புக் கலையாத வெள்ளை வேட்டி உடுத்து நாஷனல் சட்டையைப் போட்டார். மடிப்புக் குலையாத 'பரமாஸ்' சால்வையை தோளிலே போட்டு, செருப்பைக் காலிலே மாட்டிக் கொண்டார். கண்ணாடியைக் கழட்டி சால்வையின் நுனியில் அழுக்கு நீங்கத் துடைத்துக் காதிலே மாட்டினார். கையிலே வெள்ளிப்பூண் ஒளிர்விடும் கைத்தடியை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினார்.

''செல்லத்துரையனிட்டை எத்தினை கள்ளு வைக்கச் சொல்லிறது?''

சரஸ்வதி கேட்டாள். அவர் சொல்ல மறந்தாலும் அவள் இரண்டு போத்தல் தவறாது வாங்கி வைத்து விடுவாள். தன் கவனத்தை நினைவூட்டி அவர் அன்பைப் பெறுவதற்காகவோ, கள்ளையும் அவனது நன்றியையும் நினைவூட்டி அவரின் மனநிலையை மாற்றுவதற்காகவோ தெரியவில்லை. அவள் கேட்டுவிட்டாள். சாம்பலென்று கைவைத்ததும் தணல் நெருப்புச் சுட்ட நிலை ஏற்பட்டது.

''ஒண்ணும் வைக்க வேண்டாமெண்டு சொல்லு.''

''ஏன் அய்யா, மத்தியானம் வராமாட்டியளோ.''

''நான் வருவன்தான். ஆனால் உவன்ரை கள்ளு வேண்டாம். உவன் கள்ளுக்கை நஞ்சையே போட்டுத்தரத் தக்கவன்.''

இதயத்தில் முள் குத்திய வேதனை!

கள்ளையே நஞ்சு என்று எவரோ ஒரு பெரியவர் சொன்னதாக அவள் எங்கோ படித்தது நினைவில் வந்தது. அந்த நஞ்சுக்குள் நஞ்சு போட்டுக் கொடுப்பதா? அதுவும் செல்லத்துரையா?

அவனுக்கு எதிராக ஊரிலே பரப்பப்படும் நச்சுக்காற்று அவர் மூச்சில் வந்ததை சரஸ்வதி கண்டு கொண்டாள். அவர் நெஞ்சிலேயே நஞ்சு தூவப்பட்டு விட்டது. இனி செல்லத்துரையன்பாடு கஷ்டந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மனம் இரங்கியது. அவன் மரத்தால் இறங்கி வந்தான்.

படலையைப் பார்த்துவிட்டு அவள் கோப்பியைக் கொண்டு வந்து கொடுத்தாள். அவள் முகத்திலேயிருந்த மாற்றத்தை அவன் காணாமலில்லை. அவன் முகத்திலும் ஓயாத சிந்தனையின் நிழல் படிந்திருந்தது.

தந்தை கூறிய செய்திகளைப் பச்சையாகச் சொல்லி அவனை மேலும் வருத்த அவள் விரும்பவில்லை. ஆயினும் விழிப்பாக இருக்கும்படி சொல்லி வைக்கவே விரும்பினாள்.

''அய்யாவுக்கு எத்தினை வைக்கிறது.''

''இண்டைக்கு ஒண்ணும் வேண்டாமெண்டார்.''

''ஆச்சரியமாய் கிடக்கு. தீர்த்தத் திருவிழாவுக்கு விரதமோ?''

நளினமாகவே கேட்டான். திருவிழாவை யொட்டி அவரெடுக்கும் பங்கைப் பற்றி அவளே சொல்லியிருந்தாள்.

''இல்லை. பகலுக்கு வரமாட்டனெண்டு சொல்லிவிட்டுப் போனார்.''

''அப்ப நான் வரட்டா.''

கையிலே கள்ளு முட்டிகளைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான்.

''செல்லத்துரை.''

எதுவும் பேசாது திரும்பிப் பார்த்தான்.

''இந்தச் சண்டை சச்சரவுகளிலையிருந்து நீ ஒதுங்கியிருக்கப் படாதா.''

''நானென்ன போய் மோதுறனா? சண்டை பிடிச்சு நாங்க உசந்த சாதியாய் வரப்பாக்கிறமா! அண்டைக்கு ஒண்டும் அறியாத நல்லானைப் போட்டு உதைச்சினம். அதைக் கண் கொண்டு பார்க்க முடியாத ஆத்திரத்திலை நான் பேசினனான்தான். அதுக்காக என்ரை உசிரைக் குடிக்க வேணுமெண்டால் குடிச்சிட்டுப் போகட்டும். அங்கே நல்லான் சாகக் கிடக்கிறான். என்ரை உசிர் அதிலும் பார்க்கப் பெரிசா?''

''என்ன கெட்ட காலமுனக்கு. எல்லா வழியாலையும் உன்னை வாழவிடாமல் நஞ்சு விதைச்சுத் திரியிறாங்கள். அந்தக் கருணாகரப் பிள்ளையார்தான் உன்னை இந்தச் சிக்கலிலையிருந்து காப்பாத்த வேணும்.''



''நல்லானை உதைய அந்தப் பிள்ளையார்தான் பார்த்துக் கொண்டிருந்தார்.''

''இண்டைக்கு நாளைக்கு என்னதான் நடக்குமோ எண்டு எனக்குப் பயமாய் கிடக்கு. உனக்குக் கள்ளுச்சீவ ஒருத்தரும் மரமே குடுக்கக் கூடாதெண்டு சந்தியிலை பேசினாங்களெண்டு அய்யா சொல்லுறார்.''

மறைமுகமாக, தந்தைமேல் அதிக பழிபோடாதவிதமாக விஷயத்தைச் சொன்னாள். தன்னை ஒடுக்கப் புதிய முயற்சி யொன்று உருவாகியிருப்பதையும் அவன் அப்போதுதான் அறிந்து கொண்டான்.

''கையிலை உரமிருக்கு. உடலிலை வலுவிருக்கு. உழச்சுப் பழகின உடலைச் சும்மா வைச்சிருக்க முடியாது. இந்தத் தொழிலில்லாட்டா செத்துப் போறதா? எங்கையெண்டாலும் நிலத்தைக் கிண்டுவதும், இல்லாட்டி அடுத்த ஊரிலையாதல் போய் கூலி வேலை செய்தாவது வாழுவந்தானே.''

விட்டுக் கொடுக்காதவாறு பேசினான். ஓர் ஆண் மகனுக்கு இருக்க வேண்டிய உடற்கட்டும் உழைப்பும் பேச்சும் நம்பிக்கையும் அவனில் நிறைந்திருப்பதை அவள் உணராமலில்லை.

''செல்லத்துரை, நான் கேக்கிறதுக்காக ஒண்டாவது செய்வியா?''

''நீங்க வேண்டுறதுக்காக என்ரை உயிரை விடுற காரியமானாலும் செய்வன். ஆனா உயிரிருக்கு மட்டும் ஆத்மாவை விக்கிற காரியம் மட்டும் கேக்க வேண்டாம்.''

''கோயிலுக்குப் போய் கும்பிடு. கொஞ்ச நேரம் திருவிழாப் பார்த்தால் போதாதா, நெடுக நிக்காதை.''

## 19

கோவில் பங்கு மரங்களில் ஏறும்போது செல்லத்துரையன் அடிக்கடி வள்ளியின் குடிசையைப் பார்த்தான். அவளின் நடமாட்டத்தையே காணவில்லை. கூரைக்குள்ளால் புகைகூடக் கிளம்பவில்லை. அவன் மனதிற்கு ஒரே ஏமாற்றம் மட்டுமல்ல, பலவகையாகச் சிந்தனையும் ஓடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ அவளைப் பார்ப்பதில் அவன் மனதில் ஒருவகைத் திருப்தி, சாந்தம் ஏற்படத்தான் செய்தது. அதிலும் இப்போது மனம் குழம்பிய நிலையில் அவளை ஒரு தடவைபார்க்க வேண்டும் போல் தோன்றியது.

அவளின் குழந்தைச் சுபாவமும் குறுகுறுத்த விழிகளும், நினைக்கும் போதே நெஞ்சைக் குளிரச் செய்தன. அவளைச் சீண்டி விட்டு வேடிக்கை பார்ப்பதிலேயே அவனுக்கு ஒரு திருப்தி.

இறக்கிய கள்ளுடன் குடிசையின் முற்றத்திற்கு வந்து பார்த்தான். எவ்வித அரவமுமேயில்லை. கள்ளு நிறைந்த முட்டிகளை ஒதுக்குப்புறமாக வைத்துவிட்டு வெறும் முட்டியுடன் மற்றப் பகுதிக்குச் சென்றான்.

அங்கு கள்ளிறக்கி விட்டுத் திரும்பியபோதும், எவரும் குடிசைக்கு வரவில்லை. முட்டி, நளநார், இயனக்கூடு யாவையும் அங்கே வைத்து விட்டு நல்லானைப் பார்க்கச் செம்பாட்டுப் பள்ளர் பகுதிக்குச் சென்றான்.

நல்லான் கட்டுகளுடன் பாயில் கிடந்து அனுங்கிக் கொண்டிருந் தான். அவனால் திரும்பிப் படுக்கவே முடியாமலிருந்தது.

இராமன் வெளியே போயிருந்தான். வெள்ளைச்சி மட்டும் தான் இருந்தாள்.

செல்லத்துரையன் நல்லானோடு கதைத்து நிலமையை அறிய முயன்றான். நல்லானால் பேசுவதைக் கேட்கவோ, பதில் கூறவோ முடியவில்லை. நெஞ்சைமட்டும் தொட்டுக் காட்டினான். கையைத் தூக்கிய வேதனை தாங்காது முகத்தைச் சுளித்தான்.

நெஞ்செல்லாம் வீங்கியிருந்தது. விலா எலும்புகள் முறிந்திருக்க வேண்டும். உடலெல்லாம் புக்கை கட்டாலும் மாற்ற முடியாத நிலை.

''பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு போறதைப் பற்றி இராமனண்ணை என்ன சொல்லுறான்?''

செல்லத்துரையன் வெள்ளைச்சியைக் கேட்டான்.

''விதானைத் தம்பி சம்மதிச்சாத்தான் எண்டு சொல்லிக் கொண்டிருக்கிறார். என்ரை பிள்ளை இப்பிடிக் கிடக்க நான் எப்படி வேலை செய்யிறது? என்ரை அடி வயிறு எரியுது. இண்டைப் பொழுது போகட்டும். நாளைக்காகவாவது தம்பி நீ எங்கையிருந்தாவது ஒரு கார் பிடிச்சுக் கொண்டு வந்தால் இந்த மனுஷனுக்குத் தெரியாமல் ஆசுபத்திரியிலே சேர்த்து விடுவம். பிறகு என்ன நடந்தாலும் நடந்திட்டுப் போகட்டும். இந்த உதவி ஒண்டைமட்டும் செய் தம்பி. இங்கை இருக்கிற வங்கள் ஒருத்தனும் இந்த மனுஷன் சொல்லாமல் ஒண்ணும் செய்ய மாட்டாங்கள்.''



செல்லத்துரையனுக்கு சிறிதளவு தெம்பு ஏற்பட்டது.

''நல்லானை இப்படியே கிடந்து சாக விடுறது பெரிய குற்றம். சமுதாயத்துக்கும் தனி மனிதனுக்கும் செய்யும் துரோகம்.''

முதல் நாளிரவு மாதவன் சொன்னது அவன் நினைவில் வந்தது.

''நான் கட்டாயம் கார் கொண்டு வாறன். ஆனால் எந்த நேரம் வசதியாயிருக்கும். எப்ப இராமனண்ணை வெளிக்கிடுவான்?''

''நாளைக் காலையிலை ஆறுமுகக் கமக்காறருக்கு இறைப்பு. நிலவான படியாலை மனுஷன் கோழி கூவுமுன் போய்விடும். காலையிலை பனைப் பொழுதுக்கை நீ தம்பி காறைக் கொண்டு வந்திடு.''

''சரி. நான் விடியவே கொண்டு வாறன். கவனமாய் பார்த்துக்கொள் ஆச்சி. நிலைமை மோசமடைஞ்சால் சொல்லியனுப்ப வேணும். நான் போட்டு வாறன்.''

செல்லத்துரையன் எழும்பி குடிசை வாசலுக்கு வந்தான். வெள்ளைச்சியும் பின் தொடர்ந்து வந்தாள்.

''ஆனால், ஒரு விஷயந் தம்பி.''

செல்லத்துரையன் திரும்பி வெள்ளைச்சியைப் பார்த்தான். அவனது துணையால் அவன் மனதில் ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டபோதும் ஆறாத கவலை, தூக்கமின்மை, பட்டினியால் அவளின் முகமெல்லாம் காய்ந்து போயிருந்தது. செம்மண்ணோடு உறவாடிய சேலையொன்றை மார்பிற்கு மேலே குறுக்காகக் கட்டியிருந்தாள். அந்தப் பக்கத்திலை ரவிக்கையும் தாவணியும் போடுவோர் மிகக் குறைவு.

''ஆசுபத்திரியிலை வெள்ளாளர் அடிச்சாங்கள் அப்பிடி இப்பிடி யெல்லாம் சொல்லிப் போடப்படாது. மரத்தாலை விழுந்திட்டான் எண்டுதான் சொல்லவேணும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைச்சியின் முகத்தில் பயத்தின் நிழல் படர்ந்ததையும் அவன் கவனித்தான்.

''சரி அப்படியே சொல்லுவம்.''

எப்படியும் ஆசுபத்திரியிலே சேர்த்து அவன் உயிரை முதலில் காப்பாற்றிவிட வேண்டும் என்பதே அவன் குறிக்கோள். மனிதர்கள் அடித்தார்கள் என்று சொல்வதிலுள்ள ஆபத்து, சிக்கல்கள் அவற்றால் ஏற்படக் கூடிய விளைவுகளை அவன் அறியாமலில்லை. அவற்றைப் பிறகு பார்க்கலாம் என்று மனதைத் தேற்றிக் கொண்டான்.

சிறு முட்டிகளில் இருந்த கள்ளையெல்லாம் பெரிய முட்டி ஒன்றில் ஊற்றிக் கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டான். வள்ளியைக் காணாது போவது மனத்திற்குப் பாரமாகவே இருந்தது.

காலையில் நடந்தது போலவே எல்லோரும் அவனை ஒரு வகையாகப் பார்ப்பதை அவன் காணாமலில்லை. அவற்றைப் பொருட்படுத்தாது நடந்து கொண்டிருந்தான்.

வீட்டுக்குச் சென்றதும் வெறிக்குட்டி தம்பிப் பிள்ளையோடு வேறும் இரண்டு பேர் கள்ளுக்காகக் காத்துக் கொண்டு நின்றனர். அவர்கள் கேட்டதைப் பிளாக்களில் ஊற்றிக் கொடுத்துவிட்டு குடிசைக்குள் நுழைந்தான்.

அன்னம் சமையல் செய்து கொண்டிருந்தாள். செல்லத்துரையன் வந்ததைக் கண்டதும் சாப்பிட வரும்படி அழைத்தாள்.

''காலையிலை கூட சாப்பிடாமல் போட்டாய்.''

''நான் குளிச்சிட்டு வாறன். ஆரேன் கள்ளுக்கு வந்தால் ஊத்திக்குடு. இல்லாட்டி நான் வருமட்டும் நிக்கச் சொல்லு.''

வாளியைக் கையில் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றான்.

காலையில் கூட அவன் சாப்பிடவில்லை. அன்னம் நினைவூட்டும் வரையும் அவன் உணவைப் பற்றியே எண்ணவில்லை.

சமையல் முற்றாக முடியவில்லை. ஆயினும் குளித்து வந்ததும் சாப்பிடும்படி அன்னம் அழைத்தாள்.

மாலைக் கள்ளுச் சீவும் நேரத்துக்கு முன் ஒரு தடவை பட்டணம் போய் விட்டு வர முடிவு செய்திருந்தான். தலையை சீவி வேட்டியை



மாற்றிக் கட்டிக் கொண்டு அன்னம் தோய்த்துக் கொடியில் போட்டிருந்த சேட்டை எடுத்துப் போட்டான். அப்படியே வந்து குசினிக் குகைக்குள் நுழைந்தான்.

தினைப்பழஞ் சோறை வடித்துப் போட அவள் விரும்பவில்லை. அப்போதுதான் கஞ்சி வடித்து இறக்கிய சோறை அள்ளிப் போட்டாள். பழஞ்சோறுக்காக அரைத்தசம்பலையும் அடுப்பால் இறக்கி வைத்த பருப்பையும் போட்டாள். அடுப்பிலே தூள் மணம் மாறாது கொதித்துக் கொண்டிருந்த வெண்டிக்காய் குழம்பை அகப்பையால் அள்ளி விட்டாள்.

எவ்வித சுவையைப் பற்றியும் கவலைப்படாதவனாக சோற்றை அள்ளி வாய் வழியே வயிற்றில் தள்ளிவிட்டு எழுந்தான்.

படலையடியில் தம்பிப் பிள்ளை தன் சகபாடிகளுடன் சத்தம் போட்டு விவாதித்துக் கொண்டிருந்தார். வெறியேறத் தொடங்கி விட்டது என்பது அவர்கள் பேச்சுகளிலிருந்து நன்கு தெரிந்தது.

## 20

வாடகைச்சயிக்கிள் ஒன்றை எடுத்துக் கொண்டு செல்லத்துரையன் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டான். முதல் வேலையாக வாடகைக் கார் ஒன்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

யாழ்ப்பாணத்திலே வாடகைக் கார்களுக்குரிய சிவத்த நம்பர் போட்ட கார்களையே காண்பது மிக அபூர்வமாக இருந்தது. தனிப்பட்ட பெயரிலே வாடகைக் கார்கள் இருந்தன. கிராமத்திலேயே ஏழு எட்டு வாடகைக் கார்கள் இருந்த போதும் ஆபத்துக்குத்தானும் தாழ்த்தப்பட்ட சாதிக்காரர்களுக்கு உதவுவதற்காக கார் ஓட்டும் துணிச்சலுள்ளவர் எவருமில்லை. அயல் கிராமங்களிலும் இதே நிலையே இருந்தது. பட்டணத்திலுள்ள பெரும்பாலோர் சாதியைப் பொருட்படுத்துவதில்லை. பணத்திற்காக எவருக்கும் கார் ஓட்டத் தயாராயிருந்தனர். தாழ்த்தப்பட்ட சாதியாரிலும் சிலர் சாரதிகளாயிருந்தனர்.

எங்கள் கிராமத்திற்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆபத்திற்குதவ நாம் ஒரு காராவது வைத்திருக்க வேண்டும் என்று செல்லத்துரையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணினான். நேரத்திற்கு ஆசுபத்திரிக்கு கொண்டு செல்லாததால் பிள்ளை பிறக்கும் வேளையில் இரத்தம் பெருகி இறந்த பெண்கள், கத்திக் குத்து காயமடைந்து காருக்காகக் காத்திருந்து இறந்தோர் யாவரும் அவன் நினைவில் தோன்றி மறைந்து கொண்டிருந்தனர்.

வழிநெடுக கோண்டாவில், தின்ன வேலிக் கிராமங்களிலும் தாழ்த்தப்பட்டோர் ஒதுக்குப் புறமாக குடிசைகளில் வாழ்வதை அவன்பார்த்து மனம் நொந்தான்.

பட்டணம் சேர்ந்ததும் முதல் வேலையாக மறுநாட் காலையில் குரும்பையூருக்கு வருவதற்கு ஒரு வாடகைக் காரை ஏற்பாடு செய்தான். அதன் பின்னர் மாதவனை ஒரு தடவை பார்த்துப் பேச விரும்பினான்.

மலம் சேர்க்கும் வண்டி ஒறைத் தள்ளிச் சென்ற தோட்டி ஒருவனை இடைமறித்துக் கேட்டான்.

''மாதவனை எங்கே பார்க்கலாம்?''

''மாதவன் அண்ணனையா. அவர் காலையிலை லொறியோடு போனவரு. கண்டுபிடிக்கிறது கஷ்டந்தான். எண்டாலும் பெரிய கடைப் பக்கமாய்ப் போய் நிண்டு பாருங்க.''

மாதவனுக்கு தொழிலாளரிடையே இருக்கும் மதிப்பு அவன் பேச்சில் தொனித்தது.

அவன் சொன்னபடி பெரியகடைப்பக்கமாகச் சென்று காத்து நின்றான். பொழுதுபட மாதவன் ஊருக்கு வந்துவிட வேண்டும். சில வேளைகளில் அவன் பிந்தி வரலாம். வந்த பின்பும் அயல் கிராமப் பக்கமாக கூட்டங்கள் அலுவலாகச் செல்லலாம். எதற்கும் இங்கேயே பார்த்துச் செய்தி சொல்லிவிட்டுச் சென்றால் நல்லது என்றே அவனுக்குப் பட்டது.

சிறிது நேரம் கழிந்தது பின்புற வாய் திறந்தபடி லொறியென்று ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. நாலு தொழிலாளர்கள் ஓடோடி குப்பைகள், கழிவுப் பொருட்கள், எச்சில் இலைகள் போட்டிருந்த தகரங்கள், பெட்டிகளை எடுத்து லொறியின் பின்புறத்தில் கொட்டிக் கொண்டிருந்தனர். வெய்யில் நெருப்பாக எரிந்து கொண்டிருந்தது. அவர்களின் உடலெல்லாம் வியர்வை குளமாகி வழிந்து



கொண்டிருந்தது. ஆயினும் அவர்களின் சுறுசுறுப்பும் லொறியைத் தொடர்ந்த ஓட்டமும் சிறிதும் குறையவில்லை. இப்படி வேலை செய்தால் எந்தப் பறையன்தான் குடிக்க மாட்டான் என்று அவன் மனம் எண்ணியது. நால்வரில் ஒருவன் மாதவன். வேறு வழியின்றி மாதவன் ஓடி வந்து தேநீர்க் கடை ஒன்றின் வாயிலில் கிடந்த எச்சிலிலைப் பீப்பாவைத் தூக்கும் போது செல்லத்துரையன் முன்னே வந்து 'மாதவன்' என்றான்.

''தம்பி நீயா?''

வியப்போடு வார்த்தை வெளிவந்தது.

''இங்கை எங்கை இந்த நேரத்திலை வந்தாய். ஏதாவது நடநது போச்சா..''

கேட்டபடியே முன்னே பார்த்துச் சொன்னான்:

''வேலண்ணை, அந்த லொறியைக் கொஞ்சம் நிப்பாட்டு''

''முருகனுக்குத் தெரியாமை நாளைக்கு நல்லானை ஆசுபத்திரியிலை சேர்க்கிறதுக்கு வெள்ளச்சி சம்மதிச்சிட்டுது. அதுதான் காருக்குச் சொல்ல வந்தன்.''

''மிச்சம் நல்லது.''

''வெள்ளச்சிக்கு நான் வாக்குக் குடுத்தன். பனையாலை விழுந்தான் எண்டு சொல்லுறதாக. அதிலை ஏதாவது தொல்லை வருமா?''

''அப்பிடி ஒண்டும் வராது. முதலிலை அவன்ரை உயிரைக் காப்பாத்துவம். காலையிலை சேத்துவிடு. நான் மத்தியான லீவு நேரத்திலை வந்து பார்த்து, எங்கடை தொழிலாழிகளிட்டையும் சொல்லி விடுறன்.''

லொறி காத்துக் கொண்டு நின்றது. மற்றத் தொழிலாளர்கள் வியர்வைகளைத் துடைத்து நிழலிலே ஓய்வெடுத்துக் கொண்டு நின்றார்கள். செல்லத்துரையனும் அவர்கள் வேலையைத் தடை செய்ய விரும்பவில்லை.

''ஊரிலை நிலமை எப்பிடி.''

''அப்பிடித்தான் கிடக்கு. நானும் கோயிலுக்குப் போட்டு வரத்தான் இருக்கிறன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அங்கை ஒண்டும் நடக்காது. பயப்பிடாமல் போய் விட்டு கனநேரம் நிக்காது வந்திடு. நானும் நேரங் கிடந்தால் வாறன்.''

''அப்ப நான் போட்டு வாறன்.''

''சரி''

மாதவனின் பேச்சில் நேற்றில்லாத நம்பிக்கை இன்று இருந்தது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

பட்டணத்திலும் அவன் நுழைந்து தேநீர் குடிக்கத் தக்க கடை இரண்டு மூன்றே இருந்தன. மற்றைய பெரிய தேநீர்க் கடைகளில் மன நிம்மதியோடு சென்றுதேநீர் குடிக்க முடியாது. எவராவது அறிந்தவர் இருந்தால் போதும். ஆபத்துத்தான். முதலாளியிடமோ சாப்பாடு வைப்பவர்களிடமோ கண்காட்டி விட வேண்டியதுதான். பின்னர் என்ன நடக்கும் என்றே சொல்ல முடியாது.

இதற்காக எவரும் துணிந்து அந்தத் தேநீர் கடைகளில் காலடி எடுத்து வைப்பதேயில்லை.

ஆரிய குளத்தடிச் சந்தியில் இருந்த கடை ஒன்றில் தேநீர் மட்டும் வாங்கிக் குடித்து விட்டு வீடுநோக்கிப் புறப்பட்டான்.

நிர்மலமான நீலவானம். சூரியனை நிமிர்ந்து பார்க்க முடியாத கோர வெய்யில். அடிவானத்தில் கூட வெண் புகாரையும் காண முடியவில்லை.

வீட்டுக்கு வந்தபோது கதிரன், நாகி இராசன் எல்லோரும் வந்துவிட்டனர். முழுகிவிட்டு காய்வதற்காக குடும்பி மயிரை விரித்து விட்டுக் கொண்டே வாயில்வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந் தான் கதிரன். நாகி கூந்தல் மயிர் காய்வதற்காக அதோடு சேர்த்துப் பழைய துணி ஒன்றைக் கொண்டையாக முடிந்திருந்தாள். வாயிலே கையால் உருட்டிய புகையிலைச் சுருட்டு ஒன்று புகைத்துக் கொண்டிருந்தது.

இராசன் சாப்பிட்ட களையில் மூலையிலே தூங்கிக் கொண்டிருந்தான்.

அவனோடு கதிரன் எதுவுமே பேசவில்லை.

வாயில் புகைந்திருந்த சுருட்டைக் கையில் எடுத்துக் கொண்டே நாகி சொன்னாள்:



''இந்த வெய்யிலுக்கை எங்கை போட்டு வாறாய்?''

அவள் பதில் எதிர்பார்க்கவில்லை. மீண்டும் சுருட்டை வாயில் வைத்துப் புகைத்தாள்.

''அப்போதை அரை குறையிலை சாப்பிட்டிட்டு ஓடினாய். சமைச்சு முடிஞ்சுது. சாப்பிட வாவனன்ணை.''

அன்னம் வேண்டினாள்.

''வேண்டாம், தண்ணி மட்டும் கொண்டா.''

உடுப்பை மாற்றிவிட்டு, தண்ணீரைக் குடித்து விட்டுப் படுத்துக் கொண்டான். உடல் அலுத்திருந்த போதும் பகல் நித்திரை அன்று வர மறுத்தது.

பொழுது சரிந்து கொண்டிருந்தது. வள்ளியின் நினைவு திடீரென அவன் மனதில் தோன்றியது. நேரத்தோடு மரமேறப் போக வேண்டும் என முதலில் எண்ணினான். பின்னர் பொழுது கருகிய பின்புதான் கோவில் பங்குக்குச் செல்வதாகத் தீர்மானித்தான்.

பூரணை என்ற நினைவு வந்ததுமே, உள்ளத்திலே குளிர்மை ஏற்பட்டது. இதயத்திலே ஒரு கிளுகிளுப்பு.

## 21

உடலிலே துளிர்த்திருந்த வியர்வையைத் துண்டால் துடைத்துக் கொண்டே எழுந்திருந்தபோது கதிரனும் நாகியும் தோட்டத்திற்குப் போய்விட்டனர். அன்னத்தோடு வெள்ளையனின் மகள் கற்பகம் பேசிக் கொண்டே கடலை கொறித்துக் கொண்டிருந்தாள்.

செல்லத்துரையன் எழுந்து வந்ததும் கற்பகம் ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டாள். அவளை இரண்டு, மூன்று நாட்களாகவே அவன் அந்தப்பக்கம் காணவில்லை.

''கோவிலாலை ஆச்சி கடலை கொண்டு வந்தா. நீயும் கொஞ்சம் சாப்பிடனண்ணை.''

அண்ணை என்று அழைக்கும் மறைவுக்குள் அவள் தன் எண்ணத்தை மூடி மறைக்கிறாள் என்று அவன் உணராமலில்லை. கைநிறையக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலையைக் கொண்டு வந்து நீட்டினாள். மறுக்க முடியாதவனாக வாங்கிக் கொண்டான்.

''இரண்டு மூன்று நாளாய் இந்தப் பக்கமே உன்னைக் காணேல்லை.''

''நான் வந்து கொண்டுதானிருந்தன். அண்ணனைத் தான் காணேல்லை. அக்கையைப் போலை எனக்கும் விடிஞ்சா ராத்திரி வரை வேலை. அக்கை என்ரை வீட்டைக் கூட எட்டிப் பார்க்கிறேல்லை. அண்ணன் கூட எட்டிப் பார்க்குதா?''

கலகலப்பாகப் பேசினாள். தோய்ந்து விட்டு வாராத மயிரை அள்ளி முடிந்திருந்தாள். வெள்ளை ரவிக்கை, அரையிலே சாயம் போன பச்சைச் சேலை ஒன்றைச் சுற்றிக் கட்டியிருந்தாள். நெற்றியிலே திருநீற்றை அப்பி, சந்தணப் பொட்டுப் போட்டிருந்தாள்.

அவளின் கலகலப்பான பேச்சையும் சுறுசுறுப்பையும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்.

தோழியாக அவள் இருந்த போதும் அடிக்கடி அண்ணன் இருக்கும் வேளை பார்த்து வந்து 'அண்ணன்' என்று தானும் உரிமை பேசிக் கதைப்பதை அன்னம் விரும்பியதில்லை. ஆயினும் தடை போட முடியாதபடி கற்பகம் முந்திக் கொள்வாள். அண்ணன் கூட அவளுக்கு அதிக இடம் கொடுப்பதையும் அவள் விரும்பியதில்லை.

வள்ளியைப் போல் கற்பகம் வெறும் குழந்தைச் சுபாவம் கொண்டவளல்ல. எல்லா விஷயமும் நன்கு அறிந்தவள். சிக்கனமாகக் குடும்பம் நடத்தத் தெரிந்தவள். சாதுரியமாகப் பேசத் தெரிந்தவள். 'அண்ணன், அண்ணன்' என்று உரிமையோடு பேசி அவன் இதயத்தில் ஒரு பகுதியையாவது அவள் ஆக்கிரமித்துத்தான் இருந்தாள்.

என்ன சிறப்பு அவளில் இருந்தாலும் அவள் தங்கள் வீட்டில் வந்து தன் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்வதை அன்னம் என்றும் விரும்பியதில்லை.

''போயிடாதை, தேத்தண்ணி கொண்டாறன் அண்ணை.''

அன்னம் குசினிக்குள் நுழைந்தாள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கற்பகம் கேட்டாள்.



''மற்றமுறை பட்டணம் போகேக்கை கல்லு வைச்ச காதுக்குச்சி சோடி வாங்கித் தாறியா? நான் காசு சேர்த்து வைச்சிருக்கிறன்.''

அவளுடைய காதிலை குழந்தைகளின் காதில் வளைத்து விடும் வட்டக்கம்பிதான் தொங்கிக் கொண்டிருந்தது. அது கூட அவளுக்கு அழகாகவே இருந்தது.

''என்ன பற்றனிலை உனக்கு வேணும்?''

''எதெண்டாலும் உனக்குப் பிடிச்சதாய் வாங்கினாச் சரி. பன்ரண்டு ரூபாதான் வைச்சிருக்கிறன். அதுக்கை பார்த்து வாங்கினாப் போதும்.''

அன்னம் மூக்குப் பேணியுக்கை தேத்தண்ணி கொண்டு வெளியே வந்தாள். கற்பகம் ஒதுங்கி நின்று நிலத்தைப் பார்த்தபடி வலது கால் பெருவிரலால் முற்றத்து நிலத்திலே வட்டம் கீறிக் கொண்டிருந்தாள். கல்லுவைத்த காதுக் குச்சியை நினைத்தபோது, அவள் உடலே சிலிர்த்தது. நாளைக்கே அவன்வாங்கித் தரப் போகிறான் என்பதை அவளால் நினைக்கவே முடியவில்லை. முகத்தில் பொங்கிய பெருமிதத்தை அன்னத்திற்கு மறைத்துக் கொண்டே கதையை உடனே மாற்றிப் பேசினாள்.

''ராத்திரிக்குத் தீத்தத் திருவிழாவுக்கு எங்கடையாக்கள் எல்லாரும் போகாது விட வேணுமெண்டு அப்பு சொன்னார். நீயும் ஏனண்ணை போகவேணும். நானும் அக்கையும் சேர்ந்து எப்பிடியாவது மறிக்கிறதெண்டு முடிவு கட்டியிருக்கிறம். என்னக்கை!''

நிலத்தைப் பார்த்த பார்வையை மேலே பாய்ச்சினாள், கற்பகம்.

''சீனி முடிஞ்சு போச்சு, பனங்கட்டிதான் கிடக்கு. இந்தா அண்ணை.''

மூக்குப் பேணியையும் பனங்கட்டியையும் அன்னம் கொடுத்தாள்.

கற்பகத்தின் வலிந்திழுத்த மாற்றுப் பேச்சு அன்னத்திற்கு அவ்வளவு பிடிக்கவில்லை.

''அண்ணன் முடிவு செய்தால் பிறகு ஆண்டவன் வந்தாலும் மாத்த முடியாது. நானும் நீயும் சொல்லுறதைக் கேட்டுத்தான் இப்ப ஆடப் போறார்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகத்திற்கு அன்னத்தின் பேச்சு சிறிது சுட்டுவிட்டது. ஆயினும் சமாளித்துக் கொண்டே கதையை நகைச்சுவையாக்க விரும்பினான்.

''இப்பிடியிருக்கிறவைதான் பிறகு கலியாணங்கட்டினதும் பெண்டாட்டீன்ரை சொல்லைக் கேட்டு ஆடிக் கொண்டிருப்பினம்.''

கேலியாகச் சிரித்தபடியேதான் கற்பகம் சொன்னாள். ஆனால் அன்னத்திற்கு கோபம் சீறிக் கொண்டு வந்தது. அத்தனை நேரமாகப் பொருமிக் கொண்டிருந்த பொறாமை, வெஞ்சினம் எல்லாம் ஒன்று திரண்டு வந்தன.

''நீதான் இப்ப பெண்டாட்டியாய் வந்து என்ரை அண்ணனை ஆட்டப் போறியா, உனக்கும் அப்பிடி எண்ணமோ?''

கற்பகத்தின் கன்னத்தில் அறைந்தது போலிருந்தது. அவளால் அந்த வார்த்தைகளைத் தாங்க முடியவில்லை. கண்களில் நீர் நிறைந்து எல்லாம் மங்கலாய் தெரிந்தது.

செல்லத்துரையன் ஆத்திரம் தாங்க முடியாது அன்னத்தின் கன்னத்திலே அறைந்தான். அவள் கன்னத்தைப் பொத்தியபடியே 'அய்யோ' என்று அலறியபடி அப்படியே இருந்து விம்மி அழுதாள்.

கற்பகம் கலங்கிய கண்களோடு வீட்டுக்குப் போகத் திரும்பினாள். அவளின் குதூகலமும் கலகலப்பும் ஒருகணத்தில் மாறி விட்டன. அவள் என்றும் எதிர்பார்க்காத பயங்கர நிழலொன்று இதயத்தில் படர்ந்தது.

''கற்பகம் இங்கைவா.''

அச்சத்தோடு அவள் திரும்பி வந்தாள்.

''நீங்க ரண்டு பேரும் பக்கத்து வீட்டிலை இருக்கிறவங்கள். வீட்டிலை ஆம்பிளை இல்லாதபோது ஒருத்தருக்கொருத்தர் துணையாயிருக்க வேணும். இப்பிடிப் பகைச்சுக் கொண்டு போகப்படாது. ஒற்றுமையாகித்தான் போக வேணும்.''

செல்லத்துரையனின் பேச்சில் அதிகாரம் தொனித்தது.

சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்து விட்டு அவள் அன்னத்தை நோக்கி அடிமேலடி யெடுத்து வைத்து நடந்தாள்.

''சரி அன்னம் எழும்பு. நீயும் இப்பிடிப் பேசியிருக்கப் படாது. நானும் அடிச்சிருக்கப்படாது?''



கன்னத்தை ஒரு தடவை தடவி விட்டான். விம்மல் ஓய்ந்தது. அவள் எழுந்து கண்ணீரைப் புறங்கையால் துடைத்தாள்.

''அக்கை நான்பகிடிக்குத்தான் பேசினன், என்னோடை கோபமா.''

கற்பகம் முந்திக் கொண்டாள். அன்னம் அத்தனை இலகுவில் விட்டுக் கொடுக்கத் தக்க சுபாவம் கொண்டவளல்ல, ஆயினும் ஒன்றும் எதிர்ப்புக் கூற முடியாத நிலையில் தலையசைத்தாள்.

''இந்தா அன்னம் பானையுக்கை தண்ணீரில்லை. கொஞ்சத் தண்ணி அள்ளிக் கொண்டு வா.''

அன்னம் எழுந்து குடத்தை எடுத்தாள்.

''நானும் போட்டு வாறனக்கை.''

கற்பகமும் தன் குடிசையை நோக்கி ஓடினாள்.

அன்னம் திரும்பி வருவதற்கிடையில் கற்பகம் காசும் கையுமாய் ஓடிவந்தாள்.

''இந்தா காசு, நாளைக்கு மறந்திடாதை. உன்னைக் கொண்டு வாங்கிப் போடவேணுமெண்டு நீண்ட நாளாய் எனக்கு ஆசை. ராத்திரி நிலவிலை நேரஞ் செல்ல இந்த ஒழுங்கையாலை வந்தனியா.''

''வந்தன்தான். நீயெங்கை பார்த்தாய்.''

''நாய் குலைச்சுது. எழும்பி வேலியாலை பார்த்தன். நீ பேசாமல் போய்க் கொண்டிருந்தாய். உங்கடை படலையிலையும் ஆரோ நிண்டினம்.''

அதற்கு மேல் அவள் அங்கு நிற்க விரும்பவில்லை. அன்னம் தண்ணீர் கொண்டு வருவதற்கிடையில் ஓடி விட்டாள்.

அவிழ்ந்த கூந்தலை அள்ளி முடித்தபடியே அவள் ஓடியதை அவன் பார்த்துக் கொண்டு நின்றான்.

## 22

முகத்தைக் கழுவி தலையைச் சீவிக் கொண்டு கள்ளு இறக்குவதற்குரிய உபகரணங்களுடன் ஒழுங்கையில் ஏறி நடந்தான். வாயைப் பிளந்து கொண்டிருந்த மக்கிக்கல்லொன்று வலது கால் பெருவிரலைப் பதம் பார்த்துவிட்டது. கையில் தொங்கியிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டியை கீழே வைத்துவிட்டு இரத்தம் பாயாது கல்லடித்த இடத்தை கைப்பெருவிரலால் சிறிது நேரம் அமுத்தியபடி பிடித்திருந்தான். பின்னர் துப்பலை எடுத்து அதன் மேல் பூசிக் கொண்டு புறப்பட்டான். இரத்தம் சிறிது கசிந்து கொண்டிருந்தது. கிராமச் சங்க அங்கத்தவர் மேல்தான் அவன் கோபம் பாய்ந்தது.

கிராமச் சங்கத் தேர்தலின் போது மறக்கணாப் பள்ளர் பறையர் பகுதியை உள்ளடக்கிய மேற்கு வட்டாரத்திற்கு பென்சன்கார இராசையாவும் சுருட்டு முதலாளி சின்னத் தம்பியாரும் போட்டி யிட்டார்கள். செம்பாட்டுப் பகுதியை உள்ளடக்கிய தெற்கு வட்டாரத்திற்கு சீனிவாசகத்தாரும் சிதம்பரப் பிள்ளை ஆசிரியரும் போட்டியிட்டனர்.

சீனிவாசகத்தாருக்காக அவன் பாடுபட்டான். அவரின் வேண்டுதலின்படி மேற்கு வட்டாரத்திற்கு இராசையாவை ஆதரித்தான். இருவரோடும் பள்ளர் பறையர் வீடுகளெல்லாம் சென்று அவர்களுக்காக வாக்குப் பெற்றுக் கொடுத்தான். இருவரும் வெற்றி பெற்றனர். மற்ற வட்டாரங்களில் சீனிவாசகத்தாரின் ஆட்கள் வெற்றி பெறவில்லை. அதனால் கிராமச் சங்கத் தலைவர் பதவி அவருக்குக் கிடைக்கவில்லை.

இருவருக்காகப் பாடுபட்டும் எவ்வித பலனும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. தேர்தல் முடிந்த பின்னர் ஒப்புக் கொண்ட எதையுமே அவர்கள் செய்யவில்லை. அவன் எத்தனையோ நாள் அலைந்த பின்னர்தான் ஒழுங்கைக்கு மக்கியாவது போட்டனர், அதற்கு இன்னும் உருளையே உருட்டவில்லை. மூன்று மாதமாகக் காணும் போதெல்லாம் இராசையரைக் கேட்டுக் கொண்டே திரிகிறான். சீனிவாசகத்தாரிடமும் சொல்லிப் பார்த்தான். எதுவும் நடைபெற வில்லை.

செம்பாட்டுப் பகுதிப் பள்ளருக்கு ஒரு கிணறு பறையர் பகுதிக்கு ஒரு கிணறு வெட்டித் தருவதாகவும் வாக்குக் கொடுத்திருந்தனர். எதுவும் நடைபெறவில்லை.

''தலைவர் பதவி எனக்குக் கிடைக்கவில்லை. நான் என்ன செய்யலாம்'' என்று சீனிவாசகத்தார் கையை விரித்து விட்டார்.



இப்பொழுது வாக்குத் தவறியது மட்டுமல்ல, வாக்குச் சீட்டுப் போடும்படி எவரைக் கெஞ்சினார்களோ, அவர்களையே ஒழித்துக் கட்டத் திட்டமிடுகிறார்கள். வாழவொட்டாமல் மட்டந்தட்டப் பார்க்கிறார்கள்.

''நாங்களென்ன பூந்தொட்டி மரங்களா? வளர விடாது விரும்பியபோதெல்லாம் விரும்பிய விதமாய் கத்தரித்துவிட.''

மாதவன் அன்றொரு நாள் சொன்னது அவன் நினைவில் படர்ந்தது. மேலும் சொன்னான்:

''எலக்ஷனின் போது மட்டும் கெஞ்சி விட்டு எலெக்ஷன் முடிஞ்ச பின் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டே வர்றாங்கள். எத்தனை காலந்தான் இப்படி ஏமாத்துவாங்கள் எண்டு பாப்பம். இதுக்கும் ஒரு வழி செய்யத்தான் வேணும்.''

மாதவன் ஏதோ திட்டத்தோடுதான் சொல்லியிருப்பான். அவனோடு சேர்ந்து இதுக்குமொரு வழிகாணத்தான் வேண்டும்.

மனதிற்குள்ளே சொல்லிக் கொண்டான்.

எத்தனையோ வேலையெல்லாம் செய்ய இருக்கிறது. முளையிலேயே கிள்ளப் பார்க்கிறார்கள். இப்படித்தான் அனாதி காலந்தொட்டு கிள்ளி வருகிறார்களா?

வளர வேண்டுமாயின் இரத்தப் பலி கொடுத்துத்தான் வளர வேண்டுமா?

சீனிவாசகத்தார் வீட்டுக்கு வந்து விட்டான். முற்றத்தில் நின்றபடியே அழைத்தான்.

''பிள்ளை இருக்கிறியா, காலிலை கல்லடிச்சுப் போட்டுது. எதாவது மருந்திருந்தா கொஞ்சம் தா பிள்ளை.''

சீனிவாசகத்தார் சில வேளை உள்ளே இருக்கலாம் என்றே செல்லத்துரையன் அவ்வாறு அழைத்தான்.

''ஆர் செல்லத்துரையா, காலிலை கல்லடிச்சுதா. இதோ வாறன்.''

குரலில் வருத்தம் தொனித்தது. துடைத்துக் கொண்டிருந்த விளக்கை வைத்து விட்டு சரஸ்வதி ஓடிவந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனிவாசகத்தார் உள்ளேயிருந்திருந்தால் காலைக் காட்டி ஆத்திரம் தீரப் பேசியிருப்பான்; நாளைக்கே உருளையைப் போடும்படி கேட்டிருப்பான்.

சரஸ்வதி வந்து நிலத்திலே இருந்து கொண்டே இரத்தம் கசிந்த இடத்தைப் பிரித்துப் பார்த்தாள்.

''உஸ்..''

நோவைத் தெரிவித்தபடியே காலை அசைத்தான்.

''பலமா அடிச்சுப் போட்டுது. எங்கை கல்லுக்கை போனாய்.''

''உங்கடை அய்யா போடுவிச்ச கல்லுத்தான். உருளை போடும்படி மூண்டு மாதமாய் கேட்டுக் கொண்டு திரியிறன். இனியெங்கை, அடுத்த எலெக்ஷன் வரும்மட்டும் போடமாட்டாங்கள்.''

சரஸ்வதி உள்ளே ஓடிப்போய் ஒரு பெட்டியும் கையுமாக வந்தாள். உடைந்த தோலை கத்திரிக் கோலால் வெட்டி எரி மருந்து போட்டுத் துடைத்து, சிவத்த மருந்தொன்றை வைத்து சுருளாக இருந்த 'பண்டேஜ்' துணியால் காயத்தைக் கட்டி விட்டாள்.

''இரண்டு மூன்று நாளைக்கு தண்ணி படவிடாதை.''

''பாப்பம்''

அவன் மரமேறத் தொடங்கினான். அவள் விளக்கேற்றச் சென்றாள்.

## 23

அங்கிருந்து கோவில் பங்குக்குப் புறப்படும்போது சூரியன் விட்டுச் சென்ற நீண்ட நிழல்களை பூரண சந்திரன் விழுங்கித் தன் நிழலைப் பரப்பத் தொடங்கி விட்டான்.

''செல்லத்துரை மறந்திடாதை, நான் சொன்னபடி செய்.''

சரஸ்வதி வாசல் வரை வந்து சொல்லி வழியனுப்பினாள்.

அவன் உயிருக்காக அவள் ஏன் இத்தனை கவனம் எடுக்க வேண்டும்!



பதில் கூற முடியவில்லை. பெரிய புதிராகவே அவனுக்குத் தோன்றியது.

அன்பும் வெறுப்பும் பழக்கத்தால் மட்டுமா ஏற்படுபவை?

நல்லானுக்காக அவள் பரிதாபப்படவில்லை. என் இதயம் கலங்குகிறது. சாதி உணர்ச்சியாலா? வர்க்க உணர்ச்சியாலா?

''மனித இனத்தையே நாம் நேசிக்கப் பழக வேண்டும்.''

மாதவன் ஒருநாள் சொன்னது நினைவில் வந்தது. தோட்ட வேலை செய்யும் பறையனால் இப்படிப் பேச எப்படி முடிகிறது? எங்கே இப்படிப் பேசக் கற்றுக் கொண்டான்?

சமய அறிவிலே திளைத்த ஞானிகள் கூட மற்ற மதத்தவர்களைத் தூற்றுகிறார்கள்.

கோவில் பங்குக் கிணற்றடிக்குச் சென்றபோது வள்ளி முற்றத்திற்கு வருவதும் உள்ளே செல்வதுமாக நிற்பதை அவன் கண்டான். மர நிழலில் கரும்புகாரில் மறைந்த நிலவொளி மங்கலாக வீசியது. அரவமின்றி அவன் மரத்தில் ஏறினான். மரத்தின் வட்டிலிலே இருந்து கொண்டு குடிசையைப் பார்த்தபோது நிலவை மங்கலாக்கிய கரும்புகார் நீங்கிவிட்டது; அவள் கண்டு விட்டாள். நிலவொளியில் பற்கள் தெரிய அவள் நகைத்தாள்.

குடிசையின் கூரையால் புகை கிளம்பிக் கொண்டிருந்தது. அவள் சமைத்துக் கொண்டிருந்தாள்.

கடைசி மரத்தால் இறங்கியதும் ஓடி வந்தாள்.

''காலையில் எங்கை போனன் எண்டு பார்த்து ஏமாந்தியளா?''

''ஏன் நான் ஏமாற வேணும்? நான் மரஞ்சீவவே வரேல்லையே. நீதான் பார்த்திருந்து ஏமாந்தியோ.''

வள்ளிக்கு ஒரே ஏமாற்றமாகி விட்டது. அவள் முகமே சோர்ந்து வாடியது. மௌனமாக நின்றாள்.

''எங்கை போனதெண்டைத்தானே சொல்ல ஓடி வந்தான். சொல்லி முடியன்.''

உண்மையாகப் பேசுகிறானா, சொல்லாமல் போன வஞ்சத்தில் பேசுகிறானா என்பதை அவளால் கண்டு கொள்ள முடியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாளிரவு தான் சொல்ல மறந்ததற்காக மன்னிப்போடு நீர்வேலிக்கு தாயின் உறவினர் ஒருவரின் கலியாண வீட்டிற்குச் சென்று வந்த செய்தியைச் சொன்னாள்.

''பொழுது படேக்கைதான் வந்து சேர்ந்தம். அப்புவும் ஆச்சியும் தோட்டத்துக்குப் போட்டினம்.''

அவள் என்ன எதிர்பார்க்கிறாள் என்பதை அவன் உணராமலில்லை. இவற்றால் ஏற்படக் கூடிய சிக்கல்களை உணர முடியாத பேதமை நிலைமையிலேயே அவள் இருந்தாள். தன் இதயத்தையே அவள் அப்பொழுதே அவன் காலடியில் அர்ப்பணித்து விட்டாள். இனி அவன் விட்ட வழிதான். வாய் திறந்து எந்த உறுதிமொழியையும் அவள் என்றும் கேட்டதில்லை. எதிர்கால வாழ்க்கையைப் பற்றியே அவள் எவ்வித திட்டமும் போட்டு வைக்கவில்லை. போட்டிருந்தால் அவனை ஒரு சொல்லாவது கேட்டிருப்பாள்.

மெய்மறந்த நிலையில் சில வேளைகளில் அவள் கண்கள் மட்டும் துளிர்க்கும். அவன் உருவம் அவ்வேளை மங்கலாகத் தோன்றும். அக்கண்ணீர்த் துளிகள் பேசும் வார்த்தைகளை அவன் கேட்க விரும்புவதில்லை. அவளின் சேலையிலேயே துடைத்து விட்டுப்போய் விடுவான்.

இத்தனையெல்லாம் உரிமையோடு பேசும் அவளுக்கு வாய் திறந்து கேட்கும் துணிவு ஒன்றுமட்டும் இன்னும் ஏற்படவில்லை.

பெரிய முட்டியில் கள்ளை நிரப்பி கையிலே தூக்கிக் கொண்டு கதிராசி வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

''ராத்திரிக்குத் திருவிழாவுக்குப் போவியள்?''

''போவன். உனக்கும் கடலை வாங்கிக் கொண்டு வந்து நாளைக்குத் தாறன்.''

எவராலும் கட்டுப்படுத்த முடியாத தன்மையொன்று அவனில் இருப்பதை அவள் உணராமலில்லை. ஏதோவெல்லாம் அவள் சொல்ல விரும்பினாள். அவன் கேட்டுக் கொண்டு நிற்கத் தயாராக இருந்தால்தானே.

முதல் நாள் போலவே, கதிராசி வீட்டிற்குக் கள்ளைக் கொண்டு போனான்.



படலையைத் திறந்தபோது எவனோ ஒருவன் வெளியே சென்று கொண்டிருந்தான். அவன்தான் அந்த மது பரிசோதனைப் பகுதியைச் சேர்ந்த இன்ஸ்பெக்டரோ? கதிராசிக்கும் மகளுக்கும் அந்த இன்ஸ்பெக்டர் ஒருவனின் அணைவு இருப்பதால்தான் ஒருக்காலும் பிடிபடாமல் கள்ளச் சாராயம் காய்ச்சிச் சீவிக்க முடிகிறது என்று ஊரில் பேசிக் கொண்டனர்.

வந்த மருமகனின் ஏமாற்றத்தைச் சகிக்க முடியாமல் கதிராசி சில மாதம் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். தோட்டம் ஆடு மாடுகளைப் பார்ப்பதற்கே எவருமில்லை.

புருஷன் கையில், கட்டிய தாலியைக் கொடுத்துக் கலைத்த அன்னம்மா சத்தியையும் பொருட்படுத்தாது துணிச்சலோடு தோட்டத்திலே போய் வேலை செய்யத் தொடங்கினாள்.

## 24

கதிராசி நோயிலிருந்து மீண்டு எழுந்து பழையபடி உழைக்கத் தொடங்கினாள். அன்னம்மாவின் வளர்ந்து வந்த வயிறு, போதிய கவனிப்பு இல்லாமல் இருந்த பயிர், ஈடுவைத்த கடன், அறிந்தவரிடமெல்லாம் பட்ட கைகடன் யாவும் சேர்ந்து வாழ்ந்து வந்த சிறு வீடுவளவு, அன்னம்மாவுக்குக் கலியாணத்திற்குப் போட்ட நகை யாவையும் கவர்ந்து விட்டன. மேலும் சில கை கடன்கள் கொடுக்க வேண்டியிருந்தன. அன்னம்மாவின் பிள்ளைப் பேறு வேறு பார்க்க வேண்டியிருந்தது.

வேறுவழியின்றி, கிராமத்திலே ஏழைகள் வழியொன்றும் இல்லாதபோது மானம் மரியாதையை விட்டு சட்டத்தை மீறத் தொடங்கும் சூதாட்டம் போன்ற குடிசைத் தொழிலை கதிராசி ஆரம்பித்தாள்.

தோட்டத்திலே வருமானம் வராதபோதும் பிழைப்புக்குரிய ஒரு தொழிலாக தோட்டத்து உழைப்பை வெளியே காட்ட முடிந்தது. வீடு விலைப்பட்டதுமே கிராமத்தின் ஒதுக்குப் புறத்தில் தனியேயிருந்த அந்தப் பாழடைந்த வீட்டில் குடியேறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயும் மகளும் பகலிலே தோட்டம். இரவிலே புளித்த கள்ளைப் பனங்கட்டியுடன் ஓசைப்படாது கலக்கி வைத்துப் பதம் வந்ததும் இரவிரவாகப் பானையில் விட்டு எரித்து ஆவியாக்கி, அதைக் குளிரச் செய்து வடித்து போத்தல்களில் அடைத்து விற்றுப் பிழைத்து வந்தனர்.

மது பரிபாலனப் பகுதியின் தயவு தொடர்ந்து இருக்கும் வரை பணம் உழைக்கத்தக்க இத் தொழிலையும் வேளாளர் தமக்கு மட்டுமே உரிமையாக வைத்துக் கொண்டனர். அத்தொழிலுக்குரிய முக்கியப் பொருளான கள்ளை மட்டும் பள்ளர் இறக்கி அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

பள்ளர், பறையர் எவராவது கள்ளச் சாராயம் வடிக்கத் தொடங்கினால் சில நாட்களுக்கு மட்டுமே அத்தொழிலைச் செய்ய முடியும். அரசாங்கத்திற்கு மட்டுமே உரித்தான இத்தொழிலை பிறர் செய்வது தண்டனைக்குரிய குற்றம். மது பரிபாலனப் பகுதியார் உயர்சாதியாரின் அறிவித்தல் கிடைத்ததும் சாராயம் வடித்த தாழ்த்தப்பட்டவர்களை கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டு போய் கூண்டில் நிறுத்துவர். தெண்டம் கட்ட முடியாது ஆறு மாதமாவது கம்பி எண்ணி விட்டுத்தான் திரும்ப வேண்டும்.

கதிராசி விளக்குப் பிடிக்க, முதல் நாளிரவு போல பானையில் கள்ளை ஊற்றி விட்டு செல்லத்துரையன் வீடு திரும்பினான்.

தீர்த்தத் திருவிழா, பிள்ளையாரின் கடைசித் திருவிழா. மேளங்கள், சின்ன மேளம், வாணங்கள், மலர்ச் சப்பிரம், முதல் தரமான சாத்துப்படி, மின்சார விளக்கலங்காரம்.

ஊரே கோவிலை நோக்கித் திரண்டு கொண்டிருந்தது.

செல்லத்துரையன் வீட்டிற்குப் போய் சேர்ந்ததும் முட்டிகளை வைத்துவிட்டு வாளியை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றான். குளித்துவிட்டு வந்ததும் அன்னம் பகலில் சமைத்து வைத்த சோறைப் படைத்தாள். சோறு ஆறி வியர்த்துப் போயிருந்தது. கறிகளை மட்டும் சூடேற்றியிருந்தாள்.

சோற்றைப் பிசைந்து கொண்டே அன்னத்தின் முகத்தைப் பார்த்தான். அவள் முகத்தில் முந்திய கலகலப்பு இருக்கவில்லை.

''இன்னும் கோபம் ஆறேல்லையா அன்னம்''



செல்லமாகக் கேட்டான். அவள் பதில் பேசவில்லை.

''வேட்டி சால்வையை தோய்ச்சுப் போட்டியா?''

''காஞ்சு போச்சு. மடிச்சுக் கொடியிலை போட்டிருக்கிறேன்.''

''அப்பு என்னவாம்''

படலையடியில் வரும்போது அவருடைய ஏச்சுச் சத்தம் அவன் காதில் விழுந்திருந்தது.

''நீ கோவிலுக்குப் போறத்தைப் பற்றி ஏசிக் கொண்டேயிருந்தார். உன்னைக் கண்டதும் விட்டிட்டார். இந்தப் பக்கத்திலையே ஒருத்தரும் கோவிலுக்குப் போகேல்லையாம். ராசன் போனதுக்கும் ஆச்சியைப் பேசிக் கொண்டிருந்தார். ஆச்சி வெள்ளையண்ணை வீட்டை போட்டா.''

அதிகமாகச் சாப்பிடவே முடியவில்லை. இலையையும் சோற்றையும் கொண்டு வந்து நாய்க்குப் போட்டுவிட்டு கையைக் கழுவினான். தண்ணீரால் வயிற்றை நிரப்பி விட்டு உள்ளே சென்றான். வேட்டியை மாற்றிக் கட்டினான். சால்வையை தோளில் போட்டான். செத்தையிலே தொங்கிக் கொண்டிருந்த கோதிய முழுத்தேங்காய் சிரட்டையுள்ளே கைவைத்து விபூதியைத் தொட்டு ''சிவ சிவ, கருணாகரா'' என்று முணுமுணுத்தபடியே பூசினான். முற்றத்தில் இறங்கிய போது பலத்த குரலில் சொன்னான்:

''அன்னம் கோவிலுக்குப் போட்டு வாறன்.''

கதிரனுக்கும் சேர்த்துத்தான் அவன் சொன்னான்.

கதிரனால் மகனை எதிர்த்துப் பேசவே துணிச்சலேற்படவில்லை.

''எனக்கு மேலாலை வளந்தவனோடை என்ன பேச்சு. இவனெல்லோ புத்திசாலியாய் நடக்கவேணும். இவனுக்கொண்டு நடந்திட்டா நாங்க சும்மா இருக்க முடியுமா?''

இதுவே கதிரனின் கேள்வி.

''நல்லானுக்கு நடந்து போச்சு; கேட்பாரில்லை. அவன் உன் மகனாயிருந்தால் நீ என்ன செய்வாய்? அதைச் செய்.''

செல்லத்துரையனின் பதில் இது. கதிரன் கேள்வியை நேரடியாக மகனிடம் கேட்கவில்லை. அவனும் முன்னே நின்று பதில் கூறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையன் ஒழுங்கை வழியே வந்து நிழல்வாடி மரத்தடியில் தெருவிலே ஏறும்போது அங்கே பரமன், சின்னதம்பியன், இலட்சுமணன் ஆகிய மூவரும் நின்றனர்.

''செல்லத்துரையா, நாங்களும் வாறம்.''

காத்திருந்து கூடிச் செல்பவர் போலச் சென்றனர்.

பிளையார் கோவில் திருவிழாவென்றால் பத்து நாளும் கிராமத்திலே கொண்டாட்டந்தான். பணமுள்ள பத்துபேர் பிள்ளையாரின் கருணையையும் ஊராரின் மதிப்பையும் பெறுவதற்காகப் பணத்தை அள்ளி வீசுவர். அவர்கள் பணம் எப்படி உழைக்கிறார்கள் என்பது பற்றி பிள்ளையார் அறிய வேண்டியதில்லை.

'பள்ளர் பறையர் துப்புரவில்லாதவர்கள், கள்ளுக்குடிப்பவர்கள், மீன், இறைச்சி, அருந்தி விட்டு கோவிலுக்கு வருவார்கள். உள்ளே எப்படி விட முடியும்?'

இவ்வாறு கோவிலில் - கடவுளின் முன்னிலையிலும் சாதியைக் காப்பாற்றுவதற்குச் சாட்டுச் சொல்வோர் இருந்தனர்.

தெருவால் நடந்து கோவில் ஒழுங்கையிலே இறங்கியதும் திருவிழா உபயகாரர் கந்தசாமியின் மைத்துனர் குருசாமியின் வீடு. அதை நெருங்கியதும் இறைச்சியின் மணமும், சாராயத்தின் நெடியும் வீசியது.

பெரிய மேளக்காரர், சின்ன மேளக்காரர் எல்லோருக்கும் அங்கேதான் விருந்து. அதற்காக ஒரு ஆட்டுக்கடாவாவது சமைக்கப்பட்டிருக்கும். சுவாமிக்குச் சாத்துப்படி போடுவோருக்கும் சாராயம் ஊற்றப்படுவது அங்கு வழமை!

கோவிலை நெருங்கியதும் மின்சாரம் தரும் யந்திரத்தின் ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. ஒலி பெருக்கியில் மேளக் கச்சேரி மிதந்து வந்தது. கோவிலெல்லாம் ஒரே ஒளி மயம். பூப்பந்தல், மாவிலைத் தோரணங்கள், கோவிலின் ஒவ்வொரு சுவரிலும் கிராமத்தின் செழிப்பைக் காட்டவல்ல பெரிய குலைகள் தொங்கும் வாழைகள்; செவ்விள நீர்க்குலைகள். அவற்றிடையே மின் விளக்குகள்!

கோவில் முகப்பில் வேலைப்பாடமைந்த பெரிய சப்பிரம் மின் விளக்கால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.



ஒரு புறத்தில் சுவாமி எழுந்தருள, சர்ப்ப உருவில் மலர்ச் சப்பிரம் தயாராகிக் கொண்டிருந்தது. வீதிகளெல்லாம் குருவிவாணங்கள், வெடிகள்; தொடர்ந்து வெடிக்கக் கூடிய கோட்டைகள் தயாராகிக் கொண்டிருந்தன.

ஒரே சனத்திரள் கோவில் உள்ளேயும் வெளியேயும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இரத்தினம், நடராசா, மயிலன் ஆகியோர் சனங்களை இருத்திக் கொண்டிருந்தனர். பஞ்சமர் என்று கூறப்படும் பள்ளர் பறையருக்காக ஒதுக்குப் புறத்தில், வழமையிலும் பார்க்க உறுதியாக தூண்கள் நட்டு வரிசையாகக் கயிறு கட்டப்பட்டிருந்தது.

தலையாட்டியபடியே முன்புறத்திலிருந்தோர் மேளத்தையும் நாதஸ்வரத்தையும் ரசித்துக் கொண்டிருந்தனர்.

ஆயினும் எல்லோருக்கும் சின்ன மேளத்திலேயே கண். அதைப் பார்ப்பதற்காகவே, பொழுதுபடவே வந்து இடம் பிடித்தோர் பலர்.

## 25

வேளாள வாலிபர் பலர் தலைவர்களின் முன்னறிவித்தலின் படி கத்தி, கிறிஸ், வாள், பொல்லுகள் யாவும் தயாராகக் கொண்டு வந்திருந்தனர். கோவிலடியிலேயே பாதுகாப்பான இடங்களில் பதுக்கி வைத்திருந்தனர். சிலர் இடுப்பிலேயே செருகி வைத்திருந்தனர்.

செல்லத்துரையனின் ஆத்திரப் பேச்சுக்கு அத்தனை மரியாதை கொடுத்திருந்தனர்.

எவனொருத்தனாவது பஞ்சமர்களுக்காகக் கட்டப்பட்ட கயிற்றை அறுத்துவிட்டுத் தப்பி விட்டால் அயல் கிராமங்களிலேயே அங்குள்ள வேளாளர்களுக்கு - முக்கியமாக வாலிபர்களுக்கு - மதிப்பு இல்லாது போய்விடும் என்பதும் அவர்கள் கருத்து.

எவருமே எதிர்பாராதவிதமான சம்பவம் ஒன்று அன்று நடந்து விட்டது. எல்லோரும் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தனர்.

செல்லத்துரையன்தானா இதைக் கிள்ளி விட்டு வேடிக்கை பார்க்கிறான் என்றே சிலர் சீற்றமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தத் திருவிழாவிலுமில்லாத வழக்கத்துக்கு மாறாக இரண்டு பொலிசார் குண்டாந்தடி சகிதமாக வந்திருந்தனர்.

எப்படியிருந்தாலும் விதானையார் வேளாளர் பக்கந்தானே. விதானையார் சொல்வதை மீறியா பொலிசார் நடக்கப் போகின்றனர்.

பலருக்குத் துணிச்சல் இருந்தது.

சீனிவாசகம், இராசையா மற்றும் இரண்டு மூன்று பெரிய மனுஷர் விதானையாரிடம் போய் சொன்னார்கள்.

''என்ன வல்லிபுரம் இந்த விளையாட்டு? தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுகிறீரோ?''

''ஏன்? என்ன நடந்தது?''

விதானையார் வல்லிபுரம் ஆச்சரியத்தோடு கேட்டார்.

''நாங்கள் ஏதோ ஆயித்தமெல்லாம் செய்ய நீர் பொலிசுக்காரருக்குச் சொல்லி அனுப்பிவிட்டு வந்திருக்கிறீரோ.''

நளினமாகக் கூறினார் இராசையா. விதானையாரின் முகத்தில் கேள்விக்குறி விழுந்தது.

தனக்கு அறிவியாது பொலிசார் வந்ததை அவமதிப்பாகவும் கருதினார்.

''எனக்கு ஒண்டுமே தெரியாது. எங்கை வாங்கோ பாப்பம்.''

கோவிலுக்குள்ளே நின்ற விதானையார் அவர்களுடன் வெளியே வந்தார்.

விதானையாரைக் கண்டதும் பொலிசார் புன்னகை புரிந்தனர்.

''உம்மைத்தானே தேடித்திரியிறம்.''

விதானையார் தமது மதிப்பில் கொஞ்சம் திரும்பி வந்ததாக உணர்ந்தார்.

''அப்ப வாருங்களேன் போவம்.''

வெளியே கூட்டிச் செல்ல விதானையார் முயன்றார்.

''இல்லை. விதானையார். இங்கே திருவிழாவுக்குத்தான் 'டியூட்டி'லை வந்திருக்கிறம்.''



முதல் முயற்சிதோல்வியடைந்தது.

''இங்கை உங்கள் 'டியூட்டியே' அவசியமில்லை. நான் இங்கைதானே நிக்கிறன். ஏதாவது நடந்தா சொல்லியனுப்ப மாட்டனா? நீங்க போய் நான் சொன்னதாக இன்ஸ்பெக்டரிட்டைச் சொல்லுங்கோ.''

''இல்லை விதானையார், இங்கை ஒண்டும் நடக்காது எண்டு நீங்களே சொல்லுறீங்க. அப்பிடியெண்டா நல்லதுதானே. உங்களுக் கென்ன, நாங்களும் நிண்டு திருவிழாப் பாத்திட்டுப் போறம். எங்களுக்கு 'வத்தா' கிடைக்கட்டன். ஆனா இது இன்ஸ்பெக்டர் உத்தரவில்லை. சுப்பிறிண்டனின் உத்தரவு.''

விதானையார் வல்லிபுரம் ஒருகணம் அசந்து போனார்.

அவ்வளவுக்கு விசயம் போய் விட்டதா என்று அதிர்ச்சியடைந்தார்.

பள்ளர், பறையரில் சுப்பிரண்டன் வரை போவதற்கு இங்கே எவர் இருக்கிறார்கள்?

அவராலேயே பதில் காண முடியவில்லை. சுப்பிரிண்டனுக்குப் பெட்டிசம் எழுதினாலும் அவர் இன்ஸ்பெக்டருக்கு அனுப்புவார். இன்ஸ்பெக்டர் விதானையாருக்கு அனுப்புவார். விதானையாருக்கு எப்படிப் பதில் எழுதுவதென்று தெரியும். பெட்டிசம் எழுதிய வனுக்கும் எப்படிப் பாடம் படிப்பிப்பதென்றும் அவருக்குத் தெரியும். இது புது முறையாக இருப்பது அவர் மூளையைக் கலக்கியது.

''ஆற்றையேன் கள்ளப் பெட்டிஷத்தை நம்பி சுப்பிரிண்டன் இன்ஸ்பெக்டருக்கு எழுதியிருப்பார்.''

விதானையார் வல்லிபுரம் தன் மனச்சாந்திக்காகவும் பொலிசாரைத் திருப்திப் படுத்துவதற்காகவும் சும்மா சொன்னார்.

''இல்லை, இண்டைக்குப் பின்னேரம் போலைதான் சுப்பிரண்டன் இன்ஸ்பெக்டருக்கு 'டெலிபோனி'லை உத்தரவு கொடுத்தார்.''

விதானையாரின் ஆரூடமெல்லாம் பிழைத்துக் கொண்டே வந்தது. இனி வேறு வழியில்லையென்று கண்டார். தன்னை நம்பிய தன் சாதியர்ரையும் காட்டிக் கொடுக்கப்படாது. அசம்பாவித சம்பவம் ஏதுவும் நடைபெறாதும் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கிடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையும் மீறிச் சம்பவங்கள் நடைபெற்று விடுமோ என்ற பீதியும் தலை தூக்கியது. எதற்கும் பொலிசாரைத் தன் கையில் போட்டு வைத்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

''அதிலையென்ன இண்டைக்குத்தானே பிரமாதமான திருவிழா. அரசாங்கச் சிலவிலை நீங்களும் பாத்திட்டுப் போகலாம். திறமான சின்னமேளம். நான் முன் வரிசையிலே இருத்தி விடுகிறேன். தூக்கம் வந்தால் கொஞ்ச நேரம் கண் மூடவும் பக்கத்து வீட்டிலையே ஒழுங்கு செய்யிறன். எங்க ஊருக்குவிருந்தாளி மாதிரி வந்ததாக நினைச்சுக் கொள்ளுங்கோ.''

சூழ்நிலையை அறிந்து வல்லிபுரம் சாதுரியமாகப் பேசினார். மேலும் தொடர்ந்தார்.

''சின்னராசா, இஞ்சைவா. இந்தரண்டு அய்யாமாரும் தூரத்திலை யிருந்து திருவிழாப் பார்க்க வந்திருக்கினம். இன்னும் தண்ணி கூடக் குடிக்கேல்லை. குருசாமி வீட்டை கூட்டிக் கொண்டுபோய் நான் அனுப்பியதெண்டு சொல்லி சாப்பாடெல்லாம் கொடுத்து அழைச்சுவா.''

பொலிசார் மறுக்கமுடியாத விதமாக அவர் பேசினார்.

''நான் இங்கைதான் நிப்பன். முதலிலை சாப்பிட்டிட்டு வாங்கோ.''

இருவரது முதுகிலேயும் தட்டி, நட்புப் பாராட்டி, வல்லிபுரம் அவர்களை அனுப்பி வைத்தார். பொலிசாருக்கு பெரிய வரவேற்பு. மேசையில் இலைபோட்டு நாற்காலியில் இருத்தி ஆட்டிறைச்சியோடு விருந்து நடைபெற்றது. போதிய பொரிச்ச இறைச்சித் துண்டுகளோடு குடிக்க முடிந்தளவு சாராயம். தவறணைச்சாராய மல்ல. குரும்பையூர் முதல் வடிச் சாராயம். அதற்கென்று அயல் கிராமங்களெல்லாம் தனி மதிப்பு இருந்து வந்தது.

பிள்ளைப் பெற்றவுடன் பெண்களுக்குக் கொடுப்பதற்கு மேல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிரண்டியிலும் பார்க்க குரும்பையூர் முதல் வடி சிறப்பானது என்று தேடி வாங்கிச் செல்வோர் பலர் படித்தவர்களிடையேயும் இருந்தனர்.

பொலிசாருக்குப் பூரண திருப்தி. விதானையார் மேல் நல் மதிப்பு ஏற்பட்டது.



வல்லிபுரம் கோவிலடியில் தன் நிலைமையை ஓரளவு விளங்கப் படுத்தினார்.

பொலிசாரை அனுப்பியவர் யார் என்று எவராலும் ஊகிக்க முடியவில்லை. சுப்பிரண்டன் வரை போவதற்குச் செல்வாக்குள்ளவர் தாழ்த்தப்பட்டவர்களிடையே எவருமில்லை என்று முடிவு செய்தனர்.

தம்மிடையே கருங்காலிகள் எவராவது? அப்படி ஊகிப்பதற்கும் எவருமில்லை.

அந்தப் புதிர் புதிராகவே இருந்தது.

## 26

ஆயுதங்களையெல்லாம் கூடியவரை மறைவாக வைக்கும்படி விதானையார் மன்றாடி வேண்டிக் கொண்டார். ஆனால் எவரும் அவர் வேண்டுதலுக்குச் செவி கொடுத்ததாகத் தெரியவில்லை.

செல்லத்துரையன் நண்பர்களோடு வந்தபோது பொலிசார் விருந்துக்குச் சென்றிருந்தனர். எவ்வித வேறுபாட்டுணர்ச்சியும் காட்டாத விதமாக சனத்திரளிடையே ஒதுங்கி நடந்து பிள்ளையார் வாசலடியில் வந்தனர். தலையில் குட்டி வணங்கிவிட்டு பஞ்சமர்களுக்கான பகுதியில் வந்து நின்றனர்.

பல விழிகள் அவனையும் கூட்டாளிகளையும் வெறித்துப் பார்த்தன. மடியிலே கத்தி ஏதாவது வைத்திருப்பார்களோ என்று அரையையும் தூர நின்று சிலர் ஆராய்ந்து பார்த்தனர்.

சின்னத்தம்பி கடலை வாங்கிக் கொண்டு வந்தான். தன் சால்வையை நடுவே விரித்து கடலையைக் குவித்தான். யாவரும் சுற்றிவர இருந்து கடலையைக் கொறித்துக் கொண்டே மேளத்தையும், நாதஸ்வர இசையையும் சுவைத்துக் கொண்டிருந்தனர்.

கடலையைச் சாப்பிடும் போது செல்லத்துரையனுக்கு வீள்ளியின் நினைவு வந்தது. திருவிழாவால் திரும்பும் போது அவளுக்குக் கடலை வாங்கிக் கொண்டு போக வேண்டும் என்பதையும் நினைவுபடுத்திக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் இராசன் வந்து சொன்னான்:

''அண்ணை ரண்டு பொலிசுக்காரர் வந்திட்டுப் போயிருக்கினம்.''

செல்லத்துரையனுக்கே திகைப்பாயிருந்தது. பொலிசார் வர விதானையார் விடமாட்டாரே என்பதை அவன் நன்கு அறிவான். அப்படியாயின் இது எவர் வேலையாயிருக்கும்? அவன் சிந்தனை பலவாறு சுழன்றது.

அவர்கள் வந்தது எல்லோர் நன்மைக்குந்தானே என்று எண்ணி மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டான்.

அங்கு வந்த பொலிசாரையும் நிற்க விடாது விதானையார் அனுப்பியிருப்பார் என்று எண்ணினான்.

அப்போது பொலிசார் மீண்டும் வந்து நிற்பதாகச் செய்தி வந்தது. எதையும் சிரத்தையோடு எடுப்பவன் போலக் காட்டிக் கொள்ளாது அவன் கடலையைக் கொறித்துக் கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணப் பொலிஸ் சுப்பிறிண்டன் ஆணைப்படி சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அனுப்பச் செய்தாராம். அதனால், விதானையாரால் அவர்களைத் திருப்பி அனுப்ப முடியாது போய்விட்டது.

வேளாளர் கதைகளினூடாக செய்தி செல்லத்துரையனுக்கும் வந்தது.

இவ்வளவு தூரத்துக்கு இந்த விஷயத்தை எடுத்துச் சென்றது யார்? பள்ளர் பறையரில் எவருமில்லை. வேளாளரில்? அவர்கள் எவருக்கெதிராகப் பாதுகாப்புத் தேட வேண்டும்? நாங்கள் எவராவது அவர்களை அடிக்கப் போகிறோமா? கொலை செய்யப் போகிறோமா?

நானும் மனிதன் தானே, ஆத்திரத்திலே, ரோச உணர்ச்சியிலே, 'கயிற்றை அறுப்பன்' என்று மட்டுந்தானே சொன்னேன் - அதற்காக எத்தனை பேர் கத்தி, வாள்களுடன் வந்திருக்கிறார்கள். இதற்கு மேலாக இவர்களுக்குப் பாதுகாப்பாம்.

கடலை முடிந்ததும் நால்வரும் எழுந்தனர். பூரண நிலவு பால் போலப் பொழிந்து கொண்டிருந்தது. நால்வரும் வீதி வழியே பேசியபடியே உலாவிக் கொண்டிருந்தனர். வடக்கு வீதியில் வந்த



போது காரொன்று வந்து நின்றது. சிறுவர், சிறுமியர், வாலிபரெல் லோரும் ஓடிவந்து காரைச் சூழ்ந்து கொண்டனர்.

சின்ன மேளக்காரர் காரிலே வந்திறங்கினர். நாட்டியமாடும் பெண்கள் இருவரையும் இரத்தினமும் நடராசாவும் கோவிலின் வடக்குப்புறக் கதவு வழியாக உள்ளே அழைத்துச் சென்றனர். அதைத் தொடர்ந்து அந்தக் கூட்டமும் வேடிக்கை பார்த்துக் கொண்டே சென்றது.

கோவில் ஐயரின் மடப்பள்ளி அறைக்குள்ளே விட்டுக் கதவை அடைத்த பின்னர்தான் கூட்டம் ஓரளவு கலைந்தது. பின்னரும் சிலர் வெளியே வரும்போது பார்க்கலாம் என்று தூங்கிக் கொண்டு நின்றனர்.

''சின்ன மேளம் கோவிலிலை ஆடப்படாது, கோவிலின் தூய்மை கெடுகிறது'' என்று எதிர்க்கும் பக்தர்களும் இருந்து வந்தனர். அவர்கள் நாட்டியக்காரிகளால் ஏற்படும் ஒழுக்கமின்மை, ஆபாச சம்பவங்கள், வாலிபரிடையே ஏற்படும் சண்டைகள் பற்றியெல்லாம் பிரசாரம் செய்து வந்தனர்.

சுவாமிக்குப் படைக்கும் பொங்கல் பலகாரங்கள் தயாரிக்கும் மடப்பள்ளியில் மாமிசம் சாப்பிட்டு வரும் ஒழுக்கங்கெட்ட நாட்டியக்காரை விடலாமா? அவர்கள் என்ன சாதிக்காரர்? காசுக்காகத் தீட்டோடும் வருவார்கள். மடப்பள்ளிக்குள்ளேயே தூங்குவது, துப்புவது மட்டுமல்ல, இளநீர் கோம்பைக்குள்ளே சிறுநீர் கழித்து விடுகிறார்கள். இந்தச் சாதி வேளாள வாலிபர்கள் அவற்றை எடுத்துச் சென்று வெளியே வீசுகிறார்கள். மானம் வெட்கமின்றி தோட்டி வேலை செய்கிறார்கள். சில வேகைளில் பூசாரி ஐயரே இந்த வேலையை மறுநாள் இரகசியமாகச் செய்ய வேண்டி நேரிடுகிறது. பள்ளர் பறையரைக் கோவிலுக்குள் விட்டால் கூட இவ்வளவு தீட்டு ஏற்படாது.

இப்படியான பேச்சுகளெல்லாம் தாழ்த்தப்பட்டோரின் காது களுக்கும் எட்டாது போய்விடுவதில்லை.

இவற்றை வைத்துத் தக்க சந்தர்ப்பம் வாய்க்கும்போது பள்ளரே பகிடி பகிடியாக, பச்சை பச்சையாக சாதி வேளாளர் தலைகுனியத் தக்கதாகக் கொடுத்து விடுவார்கள். தலை குனிந்து செல்வது தவிர அவர்களால் அப்போது ஒன்றும் பேச முடியாது போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன மேளக்காரருக்கு நடைபெற்ற வரவேற்பைப் பார்த்துக் கொண்டுவந்த செல்லத்துரையனுக்குத் திடீரென மாதவன் நினைவு வந்தது. அன்று மத்தியானம் அவன் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளை ஒருதடவை அசை போட்டுப் பார்த்தான்.

கோவிலுக்கு அன்றிரவு போவதைத் தடை செய்த மாதவன் இன்று மத்தியானம் என்ன சொன்னான்?

''கோவிலிலை ஒண்டும் நடக்காது. பயப்பிடாமல் போய் விட்டு கன நேரம் நிக்காது வந்துவிடு.''

இப்படித்தான் சொல்லியிருந்தான். மாதவன்தான் தன் சங்கத்துப் பெரிய தலைவர்கள் மூலம் பொலிஸ் சுப்பிரிண்டனுக்குத் தெரிவித்து இந்தவித நடவடிக்கை எடுத்திருப்பானோ?

வேறு யாரால் முடியும்?

மாதவன்தான்!

அவன் உள்ளத்துப் புதிரொன்று விடுபட்டது. அதை அவன் வெளியே சொல்லவில்லை.

வடக்கு வீதியில் நடமாட்டம் குறைவாகவேயிருந்தது. நிலவொளியில் சிலர் சீட்டாடிக் கொண்டிருந்தனர். சிலர் சுற்றிவர இருந்து கடலை கொறித்துக் கொண்டே குசியாகப் பேசிக் கொண்டிருந்தனர். வீட்டிலே தூங்கி விட்டு நாட்டியம் பார்ப்பதற்காக அப்போது வந்த சிலர் கிணற்றடியை நோக்கிச் சென்றனர்.

எதிரே பொலிஸ்காரர் இருவரும் வல்லிபுரம், சின்ன ராசா, நடராசா சகிதம் வந்து கொண்டிருந்தனர். சீட்டாடிக் கொண்டிருந்த சிலர் சீட்டுக் கட்டைப் போட்டுவிட்டு எழுந்து நழுவினர்.

அவர்களை நோக்கியே பொலிசார் வந்தனர்.

''நீதானா செல்லத்துரையன்?''

இருவரில் நெட்டையான பொலிஸ்காரன் கேட்டான். அவர்களில் வாயிலே இறைச்சியின் வெடுக்கும் சாராய நாற்றமும் வீசின.

''ஓம். நான்தான்.''



முன்னுக்கு வந்து நின்றான். அவனது அரையைத் தடவிப் பார்த்தனர். பின்னர் சின்னத் தம்பியன், பரமன், இலட்சுமணன் அரையையும் தடவிப் பார்த்தனர். எதுவுமில்லை.

''சரி போங்கோ.''

வெறியிலே தள்ளாடிக் கொண்டு சென்றனர். மற்றவர்கள் முகத்திலே வெற்றிப் பெருமிதமும் ஒருவித நளினப் பார்வையும் சிரிப்பும் மிளிர்ந்தன.

மற்றவர்கள் ஆச்சரியமடைந்தபோதிலும் செல்லத்துரையன் சிறிதும் அசைந்துவிட வில்லை.

விதானையாரின் லஞ்சம் வேலை செய்திருக்க வேண்டும்; தோல்வியையும் வெற்றியாக்க அவர்கள் கண்ட புது வழி என்று எண்ணிக் கொண்டனர்.

## 27

**ச**ந்திரன் மேலே ஏறிக் கொண்டேயிருந்தான்.

மாதவன், சரஸ்வதியின் வேண்டுகோள்கள் அவன் நினைவில் வந்தன. ஆயினும் இப்போது அவசரப்பட்டுச் செல்வது தமது தன்மானத்துக்கு இழிவாகிவிடுமென்று எண்ணிக் கொண்டான்.

சிறிது நேரமாவது நாட்டியம் பார்த்துவிட்டே செல்வது என்று முடிவு செய்து கொண்டே பஞ்சமர்களுக்கான பகுதிக்கு மீண்டும் வந்தனர்.

இரண்டு மூன்று மேளங்களிடையே 'சமா' நடந்து கொண்டிருந்தது. மேளக்கச்சேரி முடியப் போவதை உணர்ந்து நாட்டியம் பார்ப்பதற்குக் கூட்டம் நெருங்கிக் கொண்டேயிருந்தது.

பெண்கள் சிறுமியர் கூட எழுந்து நெருங்கிக் கொண்டிருந்தனர்.

ஒரு சிறுமியின் காதிலே வளைந்து தொங்கிய கம்பியைப் பார்த்தபோது கற்பகத்தின் நினைவு அவனுக்கு வந்து இதயத்தில் இதமூட்டியது. நாளைக்கு எப்படியான கல்லு வைத்த தோடு வாங்குவது; கண்ணுக்கெட்டிய தூரம் வரை உள்ள வேளாளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் காதுகளையெல்லாம் நோட்டம் போட்டான். அவை யெல்லாம் அவனுக்கோ அவளுக்கோ எட்டாதவை. அவள் ஒற்றைக் கல்லு வைத்த குச்சியையே கேட்டிருந்தாள். பஞ்சமர் பகுதிப் பெண்கள் காதுகளையும் ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். கற்பகம் கேட்டது போன்ற சிலவற்றை தூரத்திலே மட்டும் பார்க்க முடிந்தது.

நாளைக்கு நகைக் கடையில் பார்ப்போமென்று மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டான்.

நாட்டியக்காரிகள் வந்தபோது கூட முதலில் அவர்களின் காதுகளையே பார்த்தான். இமிட்டேசன் மணிகளில் கட்டிய தொங்கட்டான் போலத் தெரிந்தது.

நாட்டியக்காரியின் அலங்கரிப்புகள் கிராமத்தின் நாகரிகமாக மாறுவதுண்டு.

தாளமும் சலங்கையொலியும் மேளமும் பாட்டும் காற்றிலே மிதந்து எல்லோரையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தது. எல்லோர் விழிகளும் இமை வெட்டாது நாட்டியக்காரியரின் அசைவையே பார்த்துக் கொண்டிருந்தன.

ஒரு பையன் மூச்சிழுக்க ஓடிவந்து செல்லத்துரையனைத் தட்டிச் சொன்னான்:

''நல்லான் செத்துப்போனான்.''

இதயமே ஒரு கணம் நின்று விட்டது போலாகியது. நெஞ்சம் அடைத்தது. கண்ணெதிரே எதுவுமே தெரியவில்லை. சூனியமாகத் தோன்றியது.

செய்தி எங்கும் பரவியது.

பாரமான நெஞ்சை சுமந்து கொண்டே நடந்தான். சின்னதம்பியன், பரமன், இலட்சுமணன் பின்னே வந்தனர். அவர்களுடனேயே எதுவுமே அவனால் பேச முடியவில்லை. அவர்களைத் தொடர்ந்து செம்பாட்டுப் பள்ளர், பள்ளியர் எல்லோரும் எழுந்து வந்தனர். அதைத் தொடர்ந்து அங்கு வந்திருந்த மறக்கணாப் பள்ளர், பள்ளியர்; வல்லியும் சின்னட்டியனும் மற்றப் பறையருமாகப் பறைச்சியரை எழுப்பி வரும்படி சொன்னார்கள்.



கண்ணிலே காணாத பள்ளன் ஒருவனுக்காக பறையர் பறைச்சியரே எழுந்து தங்கள் வீடு நோக்கிப் புறப்பட்டனர்.

கோவில் ஒழுங்கையிலே ஒரு ஊர்வலம், மரண ஊர்வலம் ஒன்று போய்க் கொண்டிருந்தது.

கயிறு கட்டியிருந்த பஞ்சமர் பகுதி வெறிச்சோடிக் கிடந்தது. வேளாளர் முகத்திலே கரி பூசப்பட்டது போலிருந்தது.

வேளாளரிடையே கதை பரவியது. நாட்டியத்தை மறந்து குசுகுசுவென்று எல்லோரும் பேசிக் கொண்டனர். பின்னர் அமைதி, மரண அமைதி போலிருந்தது. சலங்கை ஒலியும் பாட்டும் பிணக்காட்டிலே ஒலிப்பது போலிருந்தது. பலரின் முகத்திலே அச்சத்தின் நிழல்படியத் தொடங்கியது.

''நல்லான் செத்துப் போனானாம்; நல்லான் செத்துப் போனானாம்'' எங்கு திரும்பினாலும் ஒரே பேச்சொலி.

நாட்டியத்திலேயோ திருவிழாவிலேயோ எவராலும் மனம் செலுத்த முடியவில்லை. எல்லோர் மனதிலேயும் நல்லானே குடிகொண்டிருந்தான். பார்க்குமிடமெல்லாம் நல்லானின் பயங்கர உருவம்; பிண உருவமே தெரிந்தது. கோவிலெல்லாம் நல்லானின் மரணத்தின் நிழல் படர்ந்து விட்டது.

திருவிழா பிணவிழாப் போலானது.

விதானையார் வல்லிபுரத்தின் இதயம் எல்லோர் இதயத்திலும் பார்க்க வேகமாக அடித்துக் கொண்டது. அவர் தமது பதவியின் ஆதிக்கத்தால் அமுத்திக் கட்டி வைத்த புண் வெளியே தெரிய வந்து நாற்றமெடுத்து விடுமோ என்று அஞ்சினார்.

ஆயினும் நடந்ததை யோசித்து வருந்துவதிலும் ஆத்திரமடைவதிலும் நேரத்தை வீணாக்காது, செய்ய வேண்டியவற்றைப் பற்றி யோசித்தார். அவர் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. இப்படி எத்தனையோ நெருக்கடிகளைச் சமாளித்த அனுபவம் அவருக்கு இருந்தது.

முதல் விஷயமாக பொலிஸ்காரர் காதுகளில் இந்த விஷயம் விழாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல வேளை. அவர்கள் இன்னும் அயலிலுள்ள பண்டாரி வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தனர்.

நாட்டியத்தை உடனே நிறுத்திவிட்டு, பூசையை முடிக்க வேண்டும்! தாமதமின்றி சுவாமி வீதிவலம் வரவேண்டும்.

உரியவர்களிடம் சொல்லிவிட்டு, கோவில் பெரிய மணியை அவராகவே இழுத்து அடித்தார்.

நாட்டியம் முடிந்தது. எல்லோரும் எழுந்தனர்.

விஷயம் எதுவும் அறியாதவர்களுக்கு ஏமாற்றமாகி விட்டது.

''மிகுதி நடனம் வடக்கு வீதியிலை நடைபெறும்.''

கதை பரப்பப்பட்டது.

பூசை ஆரம்பமாகியது.

உள் வீதிவலம் முடிவடைந்ததும் நாக சர்ப்பத்தின் உருவில் மலரினால் செய்யப்பட்ட சப்பிரத்தில் பிள்ளையாரை ஏற்றினார்.

குருவிவாணக்கோட்டை, வெடிக்கோட்டை யாவுக்கும் நெருப்பு வைக்கப்பட்டது. மத்தாப்புகள் வானத்தில் வெடித்து வர்ண ஜால விளையாட்டுக் காட்டின.

வெடிச் சத்தத்தில் பொலிசுக்காரர் எழுந்து விட்டார்களோ என்று ஒரு தடவை விதானையார் ஓடிச் சென்று பார்த்து வந்தார். அவர்கள் அசையாது குறட்டை விட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்கள் எழுந்ததும் தனக்கு வந்து அறிவிக்கும்படி ஒருவனைக் காவலாக வைத்தார். கோவிலுக்குத் திரும்பி விரைவிலே திருவிழாவை முடிப்பதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தார்.

விதானையாரின் திட்டங்களெல்லாம் வெற்றிகரமாக நடந்து முடிந்தன.

பொலிசுக்காரர் தூக்கம் விட்டெழுந்தபோது விடிந்துவிட்டது. திருவிழாவும் முடிந்து விட்டது.

''நாட்டியத்திற்கு எழுப்புவதாகச் சொன்னீர்களே, எழுப்பேல்லை?''

ஒரு பொலிஸ்காரன் கேட்டான்.



''மகாமோசமாயிருந்தது. நாங்களே பாதியிலை நிறுத்திப் போட்டம். அந்தக் கண்றாவியை காட்டுவதிலும் பார்க்க தூங்க விடுறது நல்லதெண்டு தீர்மானிச்சுத்தான் விட்டன். இங்கை அசம்பாவிதமாக எதுவும் நடக்கேல்லை. நீங்க நிம்மதியாகப் போய் இன்ஸ்பெக்டரிட்டைச் சொல்லுங்க.''

அவர்களுக்கு ஒருவகைத் திருப்தி.

ஒரு காரிலே அவர்களைச் சுன்னாகத்திற்கு அனுப்பி வைத்தார்.

விதானையார் வல்லிபுரத்தின் விருந்தையும் உபசரிப்புகளையும் பாராட்டிக் கொண்டே சென்றனர்.

## 28

வீட்டிற்கு வந்ததும் நல்லான் விஷயமாக அவர் மூளை வேலை செய்தது. சென்ற இரவு போல எதிர்பாராது ஏதாவது நடைபெற்றால் சமாளித்து விடுவதற்கேற்ற வழி வகைகளை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்.

செம்பாட்டுப் பள்ளர் பகுதிக்கு அண்மையாகவே சின்னராசாவின் வீடு இருந்தது. அங்கு அவசரமாக இறப்புப் பதிவேட்டுடன் வரும்படி பிறப்பு இறப்புப் பதிவாளரான பரமசாமிக்கு ஒரு காரை அனுப்பினார் விதானையார். இருவரும் வழமையாகவே ஒருவருக்கொருவர் தொழில் விஷயங்களில் சிக்கல் ஏற்படும்போது உதவி செய்து சமாளித்துக் கொள்வார்கள்.

வல்லிபுரம் சின்னராசா வீட்டில் இருந்து கொண்டு இராமனைத் தனியே எவரும் சந்தேகப்படாத விதமாக அழைத்து வரும்படி சின்னராசாவையே அனுப்பினார்.

எவரும் சந்தேகிக்காதபடி சின்னராசா இராமனை அழைத்து வந்துவிட்டான்.

''இனி என்ன செய்யிறது இராமன். இப்பிடி நடக்குமெண்டு நான்கூட கனவிலே நினைக்கேல்லை. இல்லாட்டி நானே ஆசுபத்திரிக்குக் கொண்டு போய் சேர்த்திருக்க மாட்டனா. ஏதோ சும்மா, புக்கை கட்டிவிட்டால் போய்விடும் எண்டு நினைச்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசமான நிலையெண்டு வெள்ளைச்சி அல்லது நீயாவது வந்து சொல்லியிருக்கலாம். இனி யென்ன செய்யிறது. அவன் தலைவிதி. எல்லாம் தலைவிதிப்படி நடந்து முடிஞ்சு போச்சு. தொல்லை எதுவுமில்லாமல் வேளைக்கே எடுத்துப் போடுறது நல்லது. உனக்கும் சிலவு கிலவுக்குக் காசிருக்காது. இந்தா இதை வைச்சுக் கொள்.''

உண்மையிலேயே அனுதாபப்படுபவர் போலப் பேசி நூறு ரூபாயை அவன் கை...யிலே திணித்தார். அவனும் மறுக்காது வாங்கிக் கொண்டான்.

''ஆரும் கேட்டால் மரத்தாலை விழுந்து புக்கை கட்டினது எண்டு மட்டும் சொல்லிப்போடு. இல்லாட்டி பிரேதம் எடுக்க விடாமல் வெட்டிக் கீறி நாற வைச்சிடுவாங்கள். வீண் தொல்லையெல்லாம் வரும்.''

''அப்பிடியெல்லாம் நான் விடமாட்டன் கமக்காரன். நீங்க சொன்னபடியே சொல்லிவிடுவன்.''

''நானும் 'டயரி'யிலை அப்படித்தான் எழுதி வைச்சிருக்கிறன். இதிலை நீயும் ஒரு கையெழுத்துப் போடுறது நல்லது.''

இராமன் பெருவிரலை நீட்டினான். மையிலே தொட்டு 'டயரி'யில் விதானையார் அவன் விரலை அழுத்தி விட்டார்.

அவரின் இதயத் துடிப்பு நிதானத்திற்கு வந்தது. சின்னராசாவையும் அயல் வீட்டுத் தம்புவையும் அழைத்து சாட்சிகளாகக் கையெழுத்துப் போடச் செய்தார்.

அப்போது பிறப்பு இறப்புப் பதிவாளர் பரமசாமி காரிலே வந்து இறங்கினார்.

''என்ன வல்லிபுரம், விடிய முன்னம் முகம் கழுவவும் விடாமல் ஆள் அனுப்பி விட்டீர். அவ்வளவு அவசரமா?''

''இந்த இராமனைத் தெரியாதா. பாவம். மகன் நல்லான் திடீரென இராத்திரிச் செத்துப் போனான். நேரத்தோடை பிரேதத்தை எடுக்க விரும்புறான். உங்களுக்குச் சொல்லாமல் கொள்ளாமல் செய்தால் பொலிசுக்குச் சொல்லி, பிடிச்சு, அடைச்சு, பிணையெடுத்து, கோட்டுக்கு அலைஞ்சு...! ஏன் இந்தத் தொல்லையெல்லாம். அவன் ஏழை அன்றாடு உழைச்சுத் தின்னிறவன். நீங்களும் நிலமையறிஞ்சு கொஞ்சம் உதவி செய்தால் என்ன?''



அவர் தமது மரணப்பதிவேட்டை எடுத்து விபரங்களை எழுதினார்.

''எப்படிச் செத்தான்?''

''பனை மரத்தில் ஓலை வெட்ட ஏறேக்கை தவறி விழுந்து.''

''இதில ஒருகையெழுத்துப் போடுறியா?''

இராமன் பெருவிரலை நீட்டினான். மையிலே தொட்டு பதிவேட்டில் ஒரு அழுத்தம் அழுத்தினார் பரமசாமி.

விஷயமெல்லாம் முடிந்தது.

இராமன் போகும்போது வல்லிபுரம் மீண்டும் சொன்னார்:

''நான் சொன்னதை மறந்திடாதை. வெள்ளைச்சியிடமும் சொல்லி வை.''

''என்ன வல்லிபுரம் என்றுமில்லாத வழக்கம்.''

''எதுக்கும் கைகாவலாக முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லதுதானே. இவங்களிலை எவனோ பெரிய இடங்களிலை தொடர்பு வைச்சு வேலை செய்யிறாங்கள். அவங்களைப் பிடிச்சு ஒழிச்சுக் கட்டிவிட வேணும். இல்லாட்டி நாங்க போக நேரும்.''

விதானையார் வல்லிபுரத்தின் விவேகமும் கூரிய புத்தியும் எல்லோருக்கும் இருந்துவிட வில்லை. வேளாளர் முட்டாள் தனமாகச் செய்யும் செயல்களுக்கெல்லாம் அவரே பரிகாரந் தேட வேண்டியு மிருந்தது.

இரவு செல்லத்துரையனும் நண்பர்களும் வந்தபோது வெள்ளைச்சி கதறிக் கொண்டிருந்தாள். அவள் கட்டிய கோட்டைகளெல்லாம் இடிந்து தரையில் கிடந்தது. அவனாலே துக்கத்தையும் ஏமாற்றத்தையும் தாங்க முடியவில்லை. அவன் இதயமும் உடைந்து கண்ணீராய்ப் பெருகியது.

பின்னர் கண்ணீர் வரவில்லை. நெஞ்சம் கனலாக மூண்டெழுந்தது; கண்ணீர் துளிர்க்கு முன் அக்கனலில் ஆவியாக மாறிக் கொண்டிருந்தது.

சாதாரண மனிதனுக்கு சமுதாயத்தில் செய்திருக்க வேண்டிய கடமையைக் கூட தாங்கள் செய்யத் தவறியதை நினைந்து அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் புண்பட்டது. கண் முன்னே தாமும் சேர்ந்து அவனைக் கொன்று விட்டதாகவே அவன் கருதினான்.

நல்லான் மரணம் ஒருநாள் மட்டும் தாமதித்திருந்தாலாவது அவன் நெஞ்சம் 'என் கடமையைச் செய்தேன்' என்ற சாந்தியிலாவது ஆறியிருக்கும்.

இரவு தொடக்கமே திருவிழாவில் கூடிய கூட்டம் அங்கு கூடிக் கொண்டிருந்தது.

கதிரன் கூட இரவு செய்தி கேட்டதுமே வந்துவிட்டான்.

அவன் பேச்சில் மாறுதல் இருந்ததைச் செல்லத்துரையன் உணராமலில்லை.

தாழ்த்தப்பட்ட சாதிக்காரிடையே ஒருவித தன்மான உணர்ச்சி பீறிட்டெழுந்ததுபோல் தோன்றியது.

அதிகாலையிலிருந்தே என்றும் இல்லாத வழமையாக பள்ளர் பள்ளியரெல்லாம் தமது வேலைகளை விட்டு செத்த வீட்டுக்கு வரத் தொடங்கி விட்டனர்.

வேளாளரின் வீட்டு வேலைகள், தோட்ட வேலைகளெல்லாம் அன்று தேடுவாரற்றுக் கிடந்தன. கள்ளிறக்கக் கூட எவரும் போகவில்லை.

மாதவனும் மற்றைய தோட்டத் தொழிலாளரும் அதிகாலையில் ஒரு தடவை வந்தனர். அதே வழியாக அவர்கள் வேலைக்குச் சென்றனர். புறப்படும்போது மாதவன் வந்து செ லத்துரையனிடம் சொன்னான்:

''நான் அரை நேரத்தோடை வரப் பார்க்கிறன். நீ மட்டும் எங்கையும் போய் விடாதை.''

சாவீட்டில் செய்ய வேண்டிய ஆயத்தங்களெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பிற ஊர்களிலிருந்த உறவினர்களுக்குச் செய்தி சொல்லியனுப்பினர். தகனம் செய்யும் வேம்பன் சுடலை கூப்பிடு தொலைவில்தான் இருந்தது. விறகு வாங்கி அடுக்கும் வேலையைக் கவனிக்கச் சில பேர் சென்றனர். வேறு சிலர் பூவரசந்தடிகளை வெட்டி பாடை கட்டும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். பிணத்தை பாடையில் வைத்து மூடச் செய்வதே வழமை. ஆனால் திடீரென இராமன் சொன்னான்:



''பெட்டி எடுக்க வேணும். புது வேட்டியும் சட்டையும் வாங்க வேணும்.''

இவனுக்கு ஏன் இந்த ஆசை திடீரெனப் பிறந்தது என்று செம்பாட்டுப் பள்ளர் ஆச்சரியப்பட்டனர். இரண்டு பள்ளரைக் கூப்பிட்டு ஐம்பது ரூபா காசைக் கொடுத்து கள்ளியங்காட்டுச் சந்தைக்கு அனுப்பினான்.

எந்த வேளாளனிட்டைக் கடன் வாங்கி ஊதாரித்தனம் செய்கிறான் என்று எல்லோரும் பேசிக் கொண்டனர்.

வெற்றிலை, பாக்கு, சுருட்டு வாங்குவதற்கெல்லாம் தாராளமாகப் பணம் கொடுத்து ஆட்களை அனுப்பினான்.

பெண்கள் நெஞ்சில் அடித்து ஒப்பாரி சொல்லிக் கொண்டிருந்தனர். வெள்ளைச்சி மார்பிலும் தலையிலும் மோதியடிச்சு மூர்ச்சையடைந்து விட்டாள். வெய்யில் ஏறிக் கொண்டு வந்தது. முருங்கை நிழல் தவிர வேறு நிழல் எதுவுமே இல்லை.

## 29

தாமதமில்லாமல் நேரத்தோடு சவம் எடுத்துவிட வேண்டும் என்று இராமன் முயன்று கொண்டிருந்தான். பெட்டி வருவதில்தான் தாமதம். செம்பாட்டு ஒற்றையடிப் பாதையால் மூன்று மைல் நடந்து போய் வர வேண்டியிருந்தது. வண்டில் கட்டிப் போவதென்றாலும் வேளாளரிடம் தான் போய் கெஞ்ச வேண்டும். அந்தச் சூழ்நிலையில் அவர்களிடம் போய் யாசிக்க எவரும் முன்வரவில்லை. தன்கையே தனக்குதவி என்ற முறையிலேயே வேலைகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

எந்தப் பள்ளர் இறந்தாலும் அவர்கள் வேலை செய்யும் வேளாளராவது வந்து துக்கம் விசாரித்து விட்டுப் போவது வழக்கம். அன்று மட்டும் எவரும் வரவில்லை.

செல்லத்துரையன் முருங்கை நிழலில் குந்தியிருந்து சிந்தித்துக் கொண்டேயிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த அநீதியை நாங்கள் மூடி வைப்பது சரியா?''

''இப்படியே விட்டுக் கொண்டு போனால் நாங்கள் எங்கே வளரப் போகிறோம்?''

மாதவனோடு பேசி ஏதாவது செய்திருக்க வேண்டும் போல் தோன்றியது. அவன் அருகேயில்லாதது பெரிய குறையாக இருந்தது. மத்தியானம் வருவானோ மாட்டானோ?

சவப்பெட்டி வந்து சேர்ந்தது. இராமன் துரிதப்படுத்திக் கொண்டிருந்தான். நல்லான் உடலைக் குளிப்பாட்டி, புதுவேட்டி சட்டை அணிவித்துக் கொண்டு வந்து கிடத்தினார்கள். பெட்டியை மூடும்போது 'உன் முகத்தை இனி எப்பிறப்பிலை காணப் போறன்' என்று வெள்ளைச்சி வீறிட்டு அழுதாள்; ஒப்பாரி சொன்னாள். பெட்டியை எடுத்து வந்து பாடையில் வைத்தார்கள். தூக்க வேண்டியதுதான் பாக்கி. செம்பாட்டு ஒழுங்கை முகப்பிலே இரண்டு கார்கள் வந்து நின்றன.

பொலிஸ் இன்ஸ்பெக்டர், பொலிஸ்காரர் இருவரும் ஒரு காரிலிருந்து இறங்கினர். மற்றக் காரிலிருந்து டாக்டரும் கையாளும் இறங்கி வந்தனர்.

முதலில் இன்ஸ்பெக்டரும் பொலிஸ்காரரும் வந்து பிரேதத்தை எடுக்க விடாது தடை செய்தனர்.

இராமனுக்கு எல்லாம் கனவு போலத் தெரிந்தது. விதானையாரைக் காணாததால் அவன் என்ன செய்வதென்று தெரியாது 'திருதிரு'வென விழித்தான். உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

செல்லத்துரையன் போன்ற பல இளைஞர்கள் தெய்வந்தான் நீதி கேட்க வந்திருப்பதாக உணர்ந்தனர்.

உடனே வரும்படி விதானையார் வல்லிபுரத்திற்கு ஆள் அனுப்பப்பட்டது.

சாவீட்டில் ஒரே குழப்பம். பெட்டியில் மூடிய பிணத்தை மீண்டும் திறந்து வெளியே எடுத்தனர்.

டாக்டரின் கையாள் திரையை எழுப்பி பிணத்தை அவர் வேண்டிய இடங்களில் கீறினான். டாக்டர் பரிசோதனை நடத்தினார்.



விதானையார் வல்லிபுரம் முகத்தில் பிரேதக்களை சொட்ட வந்து கொண்டிருந்தார். பள்ளிரிடை வரும்போது அவரின் அரையில் கட்டிய வேட்டி நழுவி விழுவது போலிருந்தது. ஆயினும் நெஞ்சிலே வஞ்சத் தீயை அப்பொழுதும் வளர்த்துக் கொண்டுதானிருந்தார்.

விதானையார் மேசை, நாற்காலிகள் எடுத்துவரும்படி சின்னராசா வீட்டிற்கு ஆட்களை அனுப்பினார். அவர் தமது 'டயரி'யை கமக்கட்டுக்குள்ளே வைத்திருந்தார். விழுந்து முதுகிலே மண்பட்ட போதும் புறங்கையால் தட்டிவிட்டு மீண்டும் எழுந்து போராட நிற்கும் மல்யுத்த வீரன்போல அவர் நின்று கொண்டே பள்ளிரிடையே அதிகாரத் தொனியில் ஆணைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

செய்வதறியாது மிரண்டு கொண்டிருந்த இராமனுக்கு விதானையார் வருகை ஆறுதலளித்தது. முன்பே தமக்கு அறிவிக்காததையிட்டு இன்ஸ்பெக்டருக்கு தமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

''இதெல்லாம் மேலிடத்து உத்தரவு'' என்று இன்ஸ்பெக்டர் தமது நிலைமையை எடுத்துக் கூறினார்.

இன்ஸ்பெக்டர் தமது விசாரணையை முதலில் ஆரம்பித்தார்.

விதானையார் பதிவாளர் பரமசாமிக்கும் ஆள் அனுப்பினார்.

சிறிது நேரம் கழித்து மற்றோர் கார் வந்து நின்றது. மரண விசாரணை அதிகாரி இறங்கி வந்தார்.

மரண விசாரணை ஆரம்பமாகியது. இராமனை விதானையார் அடிக்கடி வெறித்துப் பார்த்துக் கொண்டார். அவன் தன்னைக் கைவிடமாட்டான் என்ற துணிவு அவருக்கிருந்தது. விதானையார் தன்னைக் காப்பாற்றுவார் என்ற துணிவு இராமனுக்கிருந்தது.

இராமனின் வாக்குமூலத்தையொட்டி விதானையாரும் பதிவாளரும் சாதுரியமாக தமது வாக்கு மூலங்களைக் கொடுத்துத் தப்பிக்கொள்ள வழி தேடினர்.

டாக்டரின் பரிசோதனை அறிக்கை முற்றும் மாறாக இருந்தது. விலா எலும்பு நாலு முறிந்திருந்தது. இரத்தக் கண்டல்கள், உள்காயங்கள் ஏழு இடத்தில் இருந்தன. ஏற்பு நிலை வந்து மரணம் ஏற்பட்டதாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டார். மரத்தால் விழுவதால் இவ்விதமான உடல் காயங்கள் ஏற்பட முடியாது என்பது அவர் கருத்து.

வெளியாரில் முதலில் செல்லத்துரையன் முன்வந்து வாக்குமூலம் கொடுத்தான். தான் கண்டவற்றையெல்லாம் அப்படியே சொன்னான். அடித்தவர்கள், உதைத்தவர்கள் பெயர்களையெல்லாம் சொன்னான். நாலு வேளாளரின் பெயர்களைப் பதிவு செய்தனர்.

மரண விசாரணை அதிகாரி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோர் கேட்ட குறுக்குக் கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் கூறினார்.

''நல்ல சாட்சி, இன்ஸ்பெக்டர்''

மரண விசாரணை அதிகாரி ஆங்கிலத்தில் இன்ஸ்பெக்டருக்கு நினைவூட்டினார்.

விதானை வல்லிபுரத்தின் முகத்தில் ஈயாடவில்லை. ஆனால் நெஞ்சம் தணலாக வெந்து கொண்டிருந்தது. ஆசுபத்திரிக்குக் கொண்டு போவதை விதானையார் தடை செய்திருந்தார் என்ற வாக்கு மூலம் ஒன்றே அவருக்கு எதிராக இருந்தது. அவரின் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின. செல்லத்துரையனின் வாக்குமூலத்தை யொட்டி மேலும் இரண்டு வாக்கு மூலங்கள் பதிவாயின.

''மரத்தாலை விழேல்லை. கோவிலிலைதான் என்ரை பிள்ளையை அடிச்சு உழக்கிப் போட்டாங்கள் பாவியள்''

வெள்ளைச்சியே வந்து இராமனுக்கு மாறாக வாக்கு மூலம் கொடுத்தாள். விதானையார் அவளை எரித்து விடுவதுபோல் பார்த்தார்.

விதானையாரை அவள் காப்பாற்றினாள். ஆசுபத்திரிக்குக் கொண்டு செல்வதற்குத் தடைபோட்டது இராமன், விதானையாரல்ல என்று சொன்னாள்.

இரத்தினம், நடராசா, குமாரவேலு, குட்டித்தம்பி ஆகிய நாலு வேளாள வாலிபரையும் கைது செய்வதற்கு மரண விசாரணை அதிகாரி அதிகாரமளித்தார்.

அதிகாரிகள் சென்றதும் பிரேத ஊர்வலம் ஆரம்பமாகியது. நேரங்கழிந்த போதும் பள்ளரெல்லோரும் நல்லானின் இறுதிக் கடன்களில் கலந்து கொள்வதற்காகக் காத்திருந்தனர்.



மிகப் பெரிய ஊர்வலம் சுடலையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. மாதவன் உட்பட எல்லாத் தோட்டிப் பறையரும் கூட வந்திருந்தனர். ஒரே அமைதி. புயலுக்கு முந்திய அமைதி.

''அக்கிரமம் அநீதி எண்டு தெரிஞ்சு கொண்டும் பேசாமல் இருப்பதை விடக் கோழைத்தனம் கிடையாது. அதிலும் பார்க்க உண்மையை உண்மை எண்டு சொல்லி விட்டாவது சாவது மேல்.''

அமைதியைக் கலைத்துக் கொண்டே மாதவன் செல்லத் துரையனுக்குச் சொன்னான்.

நல்லானின் உடலுக்குத் தீ மூட்டினார்கள். தீ சுவாலைவிட்டு எரிந்தது.

விதானையார் வல்லிபுரம் மரண விசாரணை முடிந்து போனபோது செல்லத்துரையனைப் பார்த்துச் சிரித்த நளினச் சிரிப்பு மாதவனின் மனதில் ஒரு தடவை நிழலாடியது.

பள்ளர் பறையரின் உள்ளங்களிலே தீ மூண்டு சுவாலை விட்டெரியத் தொடங்கியதை அவர் எங்கே அறியப் போகிறார் என்று மாதவன் மனதிற்குள்ளே எண்ணிக் கொண்டான்.

மாதவனும் செல்லத்துரையனும் ஒருமித்து வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தனர். அதிகம் பேசவில்லை. இருவரது சிந்தனைகளும் பலமாக வேலை செய்து கொண்டிருந்தன.

''செல்லத்துரை, இனிமேல்தான் அதிகம் விழிப்பாயிருக்க வேணும். சூடுபட்ட புலிகள் எண்டைக்கும் தூங்கி விடுவதில்லை.''

செல்லத்துரையனைப் பிரியும்போது மாதவன் சொல்லிவிட்டுச் சென்றான்.

## 30

செல்லத்துரையன் தோய்ந்து, உடுப்புகளைத் தோய்த்துக் காயப்போட்டுவிட்டு சாப்பிட வந்தபோது பொழுது சாய்ந்துவிட்டது. உள்ளது ஒரே கிணறு. எல்லாப் பள்ளர்களும் வந்து ஒரே தடவையில் குளிப்பதற்குத் தண்ணீரே போதாதிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலும் அவன் பாளை சீவவில்லை. கடமையைச் செய்ய விரைந்தான்.

சீனிவாசகத்தார் வீட்டுக்கு அவன் சென்றபொழுது அவர் வெறித்துப் பார்த்தார். அந்தப் பார்வையில் அன்றைய சம்பவ மெல்லாம் நிழலாடியது. அவன் கள்ளெடுப்பதை அவரால் தடை செய்யவும் முடியவில்லை. அங்கு இருக்கவும் விரும்பவில்லை. சால்வையையும் கைத்தடியையும் எடுத்துக் கொண்டு வெளியேறினார்.

''செல்லத்துரை, ஏன் நீ ஒண்டுமாறி ஒண்டாய் இந்தத் தொல்லையளுக்கே போறாய். இனிக்கோடு, வழக்கு. எல்லாரும் சேர்ந்து உன்னைக் கொல்லப் போறாங்களே.''

சரஸ்வதி தன் மனப் புழுக்கத்தைக் கக்கினாள். அவளின் முகம் சோர்ந்து போயிருந்தது. அதைப் பொருட்படுத்தாதவனாக அவன் வெளியேறினான்.

தங்கள் வீட்டில் சாவு நடைபெற்றது போல வள்ளியின் முகம் சோகமயமாக இருந்தது. அவளின் உள்ளத்தில் குதூகலமேற் படுத்துவதற்காக அவன் பேச்சை வேறு திசையில் ஆரம்பித்தான்.

''உனக்குக் கடலை கொண்டுவர முடியாமல் போச்சுதெண்டு எனக்குக் கவலையாயிருக்கு.''

''அதுதான் இப்ப இல்லாத் குறை.''

''அதாலைதானே இப்ப நீ சிரிக்காமல் இருக்கிறாய்.''

அவன் உள்ளத்தில் எது இருக்குமென்று அவள் எண்ணுகிறாளோ அதற்கு எதிர் மாறாகவே அவன் எண்ணுவதுதான் அவளுக்கு விசித்திரமாகத் தோன்றியது. அவன் நல்லான் சாவைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டு வருவான் என அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். அவன் கடலை கொண்டு வராததற்காக கவலைப்படுபவன் போலப் பேசுகிறான். அவன் இதயமே ஒரு புதிர். அதை அளந்தே அறிய முடியாதோ.

அவள் சிரித்தாள்.

''ஏன் இப்ப பாளை விரிச்ச மாதிரிச் சிரிக்கிறாய்?''

''நீங்கதானே சிரிக்கச் சொன்னீங்க.''



''ஏன் நீ சிரிக்காமலிருந்தாய்? கடலைக் கொட்டை கொண்டு வராததிலேயோ, எண்டெல்லோ கேட்டேன்.''

அவளுக்குச் சிறிது கோபமும் ஏற்பட்டது. அவளைச் சீண்டி விட்டு வேடிக்கை பார்ப்பதிலேயே அவன் தன் கவலைகளை மறக்க முயன்றான்..

''என்னை நெடுகப் பல்லைக் காட்டிக் கொண்டிருக்கச் சொல்லுறியளா?''

''இல்லை சிரிக்கச் சொல்லுறன்.''

''எனக்குப் பைத்தியமில்லை.''

''ஆர் சொன்னது.''

''நான் சொல்லுறன்.''

''பைத்தியக்காரெல்லாம் இப்படித்தான் சொல்லுவது வழக்கம்.''

''அப்ப நான் பைத்தியமா?''

முகத்தில் கோபம் பொங்கக் கேட்டாள்.

''இல்லையெண்டால் என்னை மறந்துவிடு.''

இதயத்தில் இடி விழுந்தது போலாயிற்று அவளுக்கு. பொங்கிய கோபமும் தணியவில்லை.

அவன் கள்ளுமுட்டிகளையும் தூக்கிக் கொண்டு திரும்பினான்.

''அப்ப நாளையிலையிருந்து இங்கை வராமை விடுங்கோ.''

கிணற்றிலிருந்து வந்த எதிரொலிபோல அவள் குரல் ஒலித்தது.

''சரி.''

அவன் அசையாது போய்க் கொண்டிருந்தான். அவள் வாய்க்காலில் நின்றபடியே அத்திசையைப் பார்த்து விம்மி விம்மி அழுதாள்.

அன்றிரவு கூட அவள் மனம் எதிலுமே ஓடவில்லை. அவன் ஏன் இன்று இப்படிப் பேசினான்?

''பகிடியாகவா! வெற்றியாகவா?''

பதில் காண அவளால் முடியவில்லை. முடிவு காண முடியாத வட்டம் போல இவ்விரு வினாக்களும் அவளின் சிந்தனை வட்டத்தில் ஓடிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனும் பொன்னியும் செல்லத்துரையனைப் பற்றியே இரவிரவாகப் பேசிக் கொண்டிருந்தது அவள் செவிகளில் விழுந்தது.

''அவனை இனி வாழவிட மாட்டாங்கள்! அவங்களைப் பகைச்சா கருவறுக்காமை விடமாட்டாங்கள்.''

வள்ளியின் இதயம் பொருமிக் கொண்டே இருந்தது. சரியான தூக்கம் வரவில்லை.

செல்லத்துரையன் குறிப்பிட்ட நேரத்திற்கு என்றுமே மரமேற வருவதில்லை. சில வேளைகளில் அவள் வெளியே வந்து பார்த்துப் பார்த்து அலுத்துப் போய் செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு படுத்திருப்பாள். தளநார் மரத்தில் உராயும் ஓசை கேட்டதும் வெளியே ஓடி வந்து விடுவாள்.

ஒரு தடவை அருண்டபோது அதே ஓசை அவள் செவிகளில் ஒலிப்பது போன்ற பிரமை. கனவிலேயே அவன் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தான். விடுபட முடியாத சங்கிலிப் பிணைப்பில் தன்னை எவரோ, தென்னை மரமொன்றில் கட்டி விட்டது போலவும், தான் திமிறி விடுபட முயல்வது போலவும் கனவு கண்டு கண் விழித்தபோது விடிந்து விட்டது.

வெளியே கிணற்றடியில் ஆட்கள் கூடிப் பேசும் சத்தம் கேட்டது. வள்ளியும் எழுந்து சென்று பார்த்தாள்.

கள்ளு வடியும் சீவிய பாளைகள், குருத்துப் பாளைகளெல்லாம் நிலத்திலே கிடந்தன! உடைந்த முட்டிகள் சிதறிக் கிடந்தன.

அடுத்த கிணற்றடியிலும், அதற்கடுத்த கட்டுவன் கிணத்தடியிலும் ஆட்கள் கூடிப் பேசிக் கொண்டு நிற்பதும் தெரிந்தது.

''எந்த நாசமாய் போனவன் வேலையோ, அவன்ரை பிள்ளை குட்டியள் ஒருக்காலும் உருப்பட மாட்டுது.''

வாய்க்கால் மண்ணை அள்ளிப்போட்டுக் கொண்டே வெள்ளைச்சி சபித்தாள்.

முதல் நாள் சம்பவங்களோடு ஒட்டிப் பார்த்த வள்ளியின் நெஞ்சம் புண்ணாகிப் பொருமியது. இதய நோயின் கோரத்தை தாங்க முடியாதவளாக அப்படியே இருந்து விட்டாள். கண்கள் உடைந்து பெருகின.



முருகன் கதிரன் வீட்டுக்குச் செய்தி கொண்டு சென்றான். செல்லத்துரையன் மட்டுமே அங்கிருந்தான். பின்னர் முருகன் கதிரனைத் தேடிச் சென்றபோது செல்லையாவின் தோட்டத்தில் கோவணத்துடன் துலாமிதித்துக் கொண்டிருந்தான்.

கதிரனும் செல்லத்துரையனும் கோவில் பங்கு கிணற்றடிக்கு வந்து பார்வையிட்டார். வள்ளி குடிசை வாசலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கிருந்து இருவரும் அடுத்த கிணற்றடிகளையும் பார்க்கச் சென்றனர்.

சின்னத்தம்பியன், பரமன், இலட்சுமணன் ஏறும் மரங்களின் பாளைகளும் வெட்டப்பட்டு விட்டன.

''ஆரைக் கொண்டு பாளைகளை வெட்டியிருப்பாங்கள்?''

கதிரன் கேட்டான்.

''எங்கடை ஊரார் ஒருத்தரும் செய்யச் சம்மதிச்சிருக்க மாட்டாங்கள்.''

செல்லத்துரையன் பதில் கூறினான்.

''வேறை ஊரிலையிருந்துதான் கூட்டிக் கொண்டு வந்திருப் பாங்கள்.''

முருகன் சொன்னான்.

செல்லத்துரையனுக்கு சீனிவாசகத்தாரின் வீட்டிலுள்ள இரண்டு மரங்கள் மட்டுமே தப்பியிருந்தன. மற்ற மரங்களில் புதுப்பாளைகள் வர குறைந்தது இரண்டு மாதங்களாவது செல்லும். பின்னரும் தொடர்ந்து கள்ளிறக்க விட்டு வைப்பார்கள் என்பதற்கு என்ன பாதுகாப்புண்டு? நாம்தான் பாதுகாப்பைத் தேடிக் கொள்ள வேண்டும்.

செல்லத்துரையன் மனம் தீர்மானித்தது.

மற்ற மூவருக்கும் அவசரத்தில் வெட்டத் தவறிய சில புதுப் பாளைகள் இருந்தன. அவற்றைப் பதப்படுத்தி எடுக்க வேண்டி யிருந்தது. அதுவரை வாழ்க்கைப் போராட்டந்தான்.

இத்தனை விரைவாக இப்படியெல்லாம் செய்துவிடுவார்கள் என்று செல்லத்துரையன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சூடுபட்ட புலிகள் எண்டைக்கும் தூங்கி விடுவதில்லை.''

மாதவன் நேற்று மாலையில் சொன்ன வார்த்தை எத்தனை உண்மையானது.

இளைஞர்களெல்லோரும் சேர்ந்து மூன்று, மூன்று பேர் கொண்ட கோஷ்டியாகச் சேர்ந்தனர். ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு கோஷ்டி இரவு வேளைகளில் கள்ளிறக்கும் மரங்களைக் காவல் செய்து வரவேண்டும் என்று அன்றே முடிவுசெய்தனர்.

அன்றிரவு செல்லத்துரையனைக் கண்டதும் மாதவன் சொன்னான்:

''இது இண்டைக்கோ நாளைக்கோ ஓய்ந்து விடப் போற போராட்டமில்லை. வெந்த புண்ணோடும் நாம் ஒற்றுமையை வளர்த்து போராடிப் போராடி முன்னேறப் பார்க்க வேணும். அதுக்கு நல்லான் போன்றோரின் தியாகமும் தேவைப்படும். அவர்களையெல்லாம் நாம் மறந்து விடாது மனதிலை வைச்சுத்தான் இந்தப் போராட்டத்தைத் தொடர வேணும்.''

## 31

கிராமத்தில் சிறிது அமைதி ஏற்பட்டு வந்தது. விதானையார் வல்லிபுரம் இதற்கு மேலாக வஞ்சம் தீர்க்க முன்வருவது அவ்வேளையில் புத்திசாலித்தனமில்லை என்று முடிவு செய்தார். அவரின் விதானை வேலையும், பதிவாளர் பரமசாமியின் வேலையும் பறிபோய் விடலாம் என்று கூட அவர் அஞ்சினார்.

இதற்கு மேலால் நல்லான் கொலை வழக்கு இருந்தது.

பொலிஸ் சுப்பிரிண்டனே அந்த வழக்கில் சிரத்தை எடுப்பதாக இன்ஸ்பெக்டர் வேறு சொல்லியிருந்தார்.

விதானையார் வல்லிபுரத்தின் நாணயமும் நம்பிக்கையும் மேலிடத்தில் குறையத் தொடங்கியது. அதனாலும் அவருக்குக் கவலையேற்பட்டது.

செல்லத்துரையன் சீனிவாசகத்தாரின் வீட்டுக்குத் தொடர்ந்து காலையும் மாலையும் சென்று வந்தான். அவரில்லாத வேளையெல்லாம் சரஸ்வதி அவனுக்குக் கோப்பி தயாரித்துக் கொடுத்து



வந்தாள். 'கள் வேண்டாம்' என்று சீனிவாச கத்தார் சொன்ன பின்னர் அவர் வீட்டில் இருக்கும் வேளை அவள் கோப்பி கொடுத்ததில்லை. அயல் வீட்டார் வரும் போதும் அவன் மேல் வெறுப்புக் காட்டியே பேசி வந்தாள்.

எவர் முன்பும் செல்லத்துரையை அவள் ஆதரித்தோ, அவன் மேல் இரக்கம் காட்டுவது போலவோ அவள் பேச மாட்டாள்.

அவனுக்குச் செருக்கு அதிகம் என்று எவராவது கூறினால் அவளும் ஒப்புக் கொண்டே பேசுவாள். அல்லது மௌனமாக இருப்பாள். தகப்பனார் சீறிப் பேசும்போது இதே கொள்கையை கடைப்பிடித்து வந்தாள். வெறுப்பு ஏற்படுவதன் முன்னர் அவர் அடிக்கடி பாராட்டிப் பேசுவார். அப்போதும் அவள் மௌனமே சாதித்து வந்தாள். அல்லது அவன் மேல் ஏதாவது குற்றம் சொல்லுவாள்.

திடீரென அன்று காலையில் அவர் புறப்படுமுன் சரஸ்வதியிடம் சொன்னார்:

''இரண்டு போத்தில் கள்ளு வைக்கச் சொல்லி செல்லத் துரையனிடம் சொல்லி வை.''

அவளுக்கே அவரின் மாறுதல் ஆச்சரியமாயிருந்தது. ஆனால் செல்லத்துரையனால் அதன் ஆழத்தை அறிந்து கொள்ள முடிந்தது. சில நாட்களாகவே எதிரெதிரே காண நேரும் போது அவர் சிரிக்க முயன்றதையும் அவன் கவனித்திருந்தான்.

மேலும் சில நாட்கள் கழிந்த பின்னர் சீனிவாசகத்தார் சொல்லியதை சரஸ்வதி உள்ளார்ந்த மகிழ்ச்சியோடு சொன்னாள்.

''மரம் போதா தெண்டால் மற்ற ரண்டு மரத்தைக் கூட ஏறச் சொன்னார்.''

கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவே அவன் விரும்பினான்.

''லைசென்சு எடுக்கக்காசு நான் தாறன்.''

அடித்தொண்டையால் அவள் கூறினாள். மறுநாளே அச்சு வேலிக்குச் சென்று மது பரிபாலனப் பகுதியில் காசு கட்டிவிட்டு வந்து அந்த மரங்களையும் ஏற ஆரம்பித்தான்.

அவர் கொடுத்த சலுகை லஞ்சங்களெதுவும் அவனது அடிமனதைக் கைப்பற்றி விடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கேட்பவை யாவையும் உதவுவதற்கே அப்பொழுது தயாராயிருந்தார். அவனால் இரண்டு முக்கிய விஷயங்கள் அவருக்கு ஆக இருந்தன.

ஒன்று வழக்கு. இரண்டாவது கிராமச் சங்கத் தேர்தல்.

அவன் எவ்வித சலுகையையோ உதவியையோ இச்சம்பவங்களின் பின் என்றும் வாய் திறந்தும் கேட்கவில்லை. சீனிவாசகத்தார் சந்தர்ப்பம் பார்த்து அவனோடு வேறு விஷயங்கள் பற்றிப் பேச்சுக் கொடுக்கவும் தொடங்கினார். அவனும் அளவோடு கேள்விகளுக்கு மட்டும் பதில் கூறிவிட்டுச் சென்று விடுவான்.

வழக்கு பொலிஸ்கோட்டில் இறுகுவதாகவே பேசிக் கொண்டனர். எதிரிகளான இரத்தினம், நடராசா, குமாரவேலு, குட்டித்தம்பி ஆகிய நால்வரும் பிரபல வழக்கறிஞர்களுக்கு தமது பணத்தையெல்லாம் அள்ளி வீசினர்.

எல்லாம் செல்லத்துரையனின் சாட்சியில்தான் தங்கியிருக்கிறதென்று எல்லோரும் பேசிக் கொண்டனர்.

இரத்தினத்தின் தாய் ஒருநாள் சீனிவாசகத்தாரின் வீட்டுக்கு வந்து சரஸ்வதியோடு பேசிக் கொண்டிருந்தாள்.

''பிள்ளை. எனக்கு ஒரே ஒரு பிள்ளை. அதுவும் இப்பிடிப் போட்டா நான் தெருவிலே நிக்க வேண்டியதுதான். இவன் செல்லத் துரையனிட்டை நீயாவது ஒரு தட்டவை அவங்களைக் காப்பாத்தும்படி கேட்டுப்பார்க்க மாட்டியா.. அவன் தானே இங்கை வந்து போறவனாச்சே.''

மன்றாட்டத்தோடு வேண்டினாள்.

''அவன் ஒரு செருக்குப் பிடிச்சவன். அவனோடை நானே கதைக்கிறதில்லை. அய்யாவின்ரை மருந்துத் தேவைக்காக நாலுமரத்தைக் கொடுத்திருக்கிறம், அவ்வளவு தான். நாங்க கேட்டாப் போலை கேட்டதெண்டதுக்காவது செய்யிறவனில்லை. எண்டாலும் நீங்க வந்ததுக்காக தருணம் கிடைக்கேக்கை ஒருக்கா சொல்லிப் பார்க்கிறன்.''

சரஸ்வதி மிகவும் சாதுர்யமாகக் கதைத்து அவளை வழியனுப்பினாள். மற்றவர்கள் கேட்கும்போது அவள் இதைப் போன்றே பதில் கூறி வந்தாள்.



நாள் போகப் போக தந்தையார் எதற்காக அவனுக்குச் சலுகை கொடுத்தார் என்பதை சரஸ்வதியும் உணர்ந்து கொண்டாள்.

எல்லோரின் வற்புறுத்தலின் பேரில் ஒரு நாளைக்கு அவள் அவனிடம் மன்றாடியாவது கேட்கவே தீர்மானித்தாள்.

அன்று சந்தர்ப்பம் கிடைத்தபோது மன்றாட்டமாக வேண்டிய போதும் அவள் எதிர்பார்த்த பதிலே கிடைத்தது.

''உங்களுக்காக வேணுமானால் என்ரை உயிரையும் தருவன். ஆனா ஆத்மாவை மட்டும் விக்க மாட்டன்.''

இதற்கு மேல் அவள் என்ன பேச முடியும்?

விதானையார் வல்லிபுரம் மட்டும் தமது மனதிலிருந்த அச்சத்தை வெளியே காட்டிக் கொள்ளாத விதமாகப் பேசி வந்தார். பொலிஸ் கோட்டிலே தவறினாலும் சுப்ரீம் கோட்டுக்கு கொழும்பிலிருந்து பெரிய அப்புக்காத்துஒருவரைக் கொண்டு வந்து இவனைக் கூண்டிலே விட்டுக் கேக்கிற கேள்வியிலேயே வழக்கு உடைந்துபோகும் என்ற நம்பிக்கையோடு சொல்லி வந்தார்.

அவர் எதிர்பார்த்தபடியே வழக்கு சுப்ரீம் கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டது. எதிரிகள் நால்வரும் தொடர்ந்து விளக்கமறியலிலேயே இருந்து வந்தனர்.

கோவில் பங்கு கிணற்றடி மரங்களில் மீண்டும் செல்லத்துரை ஏறத் தொடங்கினான். இரண்டு மாத இடைக்காலத்தில் இரண்டு மூன்று தடவையே முருகன் வீட்டுக்கு அவன் வந்திருந்தான். ஆயினும் வள்ளியோடு பேசத்தக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

பாளையை மட்டும் பதப்படுத்தும் வேலை அப்போது இருந்ததால் நாள்தோறும் ஒரு தடவை மட்டும் வந்து சென்றான். அவ்வேளைகளிலும் கிணற்றடியில் தண்ணீர் இறைத்தல், கிழங்கு வெட்டுதல், புகையிலைக் கன்றுகள் நடுவதற்கான நிலம் பதனிடுதல் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் நல்ல வாய்ப்பு எதுவும் வள்ளிக்குக் கிடைக்கவில்லை. ஆவலை அடக்கிக் கொண்டே நல்ல சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

பாளைகளில் கள் வடியத் தொடங்கி விட்டது. அன்று மாலையும் செல்லத்துரையன், கள் இறக்க வந்திருந்தான். பொழுது கருகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை தூறிக் கொண்டிருந்ததால் தோட்டங்களில் எவருமில்லை. தூறல் படாது தென்னை மரவட்டு ஒன்றின் கீழே அவனை வள்ளி பிடித்துக் கொண்டாள்.

''என்னோடை கோபமா?''

''ஏன்? நீயா என்ரை மரத்துப் பாளைகளை வெட்டு விச்சாய்.''

''ஓம்''

ஒரு நளினச் சிரிப்பை உதிர்த்தாள்.

''ஏன்?''

''அண்டைக்கு, உங்களை மறக்கச் சொல்லிப் போட்டு போனீங்கள் அதுக்குத்தான்.''

''இப்ப மறந்திட்டாய்தானே. அப்ப ஏன் வந்தனி.''

''மறக்க முடியாதபடியால்தான்.''

''அதுக்காக.''

''நீங்க என்னை எதுக்காக மறக்கப் பாக்கிறீங்கள். என்னைக் கொஞ்சமும் பிடிக்காட்டி உந்தக் கிணத்துக்கை தள்ளி விடுங்களேன்.''

''என்னை மறக்காட்டா ஒரு நாளைக்கு கிணத்துக்கை தள்ளித்தான் விடுவன்.''

''ஒரு நாளைக்கேன். இப்பவே தள்ளி விடுங்கோவன்.''

''இப்பிடியெல்லாம் ஆரிட்டைப் பேசப் பழகினாய்.''

''உங்களிட்டைத்தான்.''

அவனுக்கு உள்ளூறச் சிரிப்பு வந்தது.

கள்ளையும் எடுத்துக் கொண்டு கதிராசி வீட்டை நோக்கிச் சென்றான். பாளை வெட்டப்பட்டதால் கதிராசியின் பிழைப்பும் கெட்டுப் போயிருந்தது. வேறு எவரிடமும் அவளால் வாடிக்கையாகக் கள்ளுவாங்க முடியவில்லை.

அன்னம்மாவின் பேச்சிலும் முன்னர் இருந்த வெறுப்பு இருக்கவில்லை. கொஞ்சம் மரியாதை இருந்தது.



''கொஞ்சம் இரன். தேத்தண்ணி ஊத்தித்தாறன்.''

''இருண்டு போச்சு. வேறை வேலையும் கிடைக்கு. இன்னொரு நாளைக்குப் பாப்பம்.''

## 32

**மா**தவனும் செல்லத்துரையனும் அடிக்கடி சந்தித்து வந்தனர். என்ன பிரச்சனையானாலும் மாதவனுடன் கலந்து பேசியே அவன் முடிவு செய்வான்.

அன்று சனிக்கிழமை. பூரணையின் முதல் நாளிரவு. மாதவனின் குடிசையின் முன்னே இருந்த திறந்த வெளியிலே மாதவன், வல்லி, சின்னான், சின்னட்டியன் யாவரும் வட்டமாக இருந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''சீனிவாசகத்தார் மீண்டும் கிராமச் சங்க எலெக்ஷனுக்கு என்னை வளைக்கப் பாக்கிறார்.''

''இந்த முறையும் நாங்கள் ஏமாந்து விடப்படாது. திட்டம் போட்டு வேலை செய்ய வேணும்.''

மாதவன் சொன்னான்.

''மாதவன், நீதான் ஏதாவது வழிவகுத்துச் சொல்ல வேணும். நாங்களெல்லாம் அதன்படி நடப்பம்.''

''பள்ளர் பறையார் வோட்டுகளெல்லாத்தையும் சிதற விடாமல் ஒண்டு சேர்க்க முடியுமெண்டால் நாங்களே எங்களுக்கை ஒருத்தரைத் தெரிஞ்சு அனுப்பிவிடலாம்.''

''அதெப்படி முடியும்?''

சின்னான் கேட்டான்.

''மேற்கு வட்டாரத்திலை எங்கடைவோட்டு 454இருக்கு அவங்கடை 475 இருக்கு. ஆனால் நாங்க கவனமாய் ஒவ்வொருத்தராய் தவறாமல் வோட்டுப் போடப் பண்ணி 400 வோட்டாவது போட்ப் பண்ணிவிட வேணும். அவங்களாலை இவ்வளவு போடப் பண்ண முடியாது. வெளியூரிலை கனக்கப் பேர் இருக்கிறாங்கள். பெண்டுகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவியள் கிராமச் சங்கத் தேர்தல்தானே எண்டு பேசாமை இருந்திடுவாங்கள்.''

மாதவன் தன் திட்டத்தை வெளிப்படுத்தினான்.

''வேளாளரிலையே போட்டியிருக்கும். எப்பவும் இரண்டு பேரே கேட்டு வந்தாங்கள். பென்சன்கார இராசையாவோடை ஆரெண்டாலும் அடுத்த முறையும் போட்டி போட்டுத்தான் தீருவினம். அப்ப அவங்கடைவோட்டுப் பிரிய நாங்க சுகமாய் வெண்டிடலாம்.''

செல்லத்துரையன் தன் விளக்கத்தை விரிவுபடுத்தினான்.

''அப்பிடியெல்லாம் நாங்க எதிர்பார்க்கப் படாது. ஏனெண்டா அவங்க இரண்டு பேர் எலக்ஷனுக்குப் பேர் கொடுத்தாலும் பிறகு நாங்களும் கொடுத்ததெண்டு அறிந்ததும் கடைசி நேரத்திலை பள்ளனை விடுறதா எண்டு ஒண்டு சேர்ந்திடுவாங்கள். அந்த வேளையிலை எங்களுக்கு இருக்கக் கூடிய சகாயமென்னெண்டா பென்சன்கார இராசையர் எண்டாலும் அவருக்கும் அவங்களுக்கை எரிச்சல் பொறாமைக்காரர். பரம்பரைக் கோவக்காரர் கொஞ்சப் பேர் இருப்பாங்கள். அதாலையும் 20, 25 வோட்டு போடாமல் போய் விடலாம்.''

''மாதவன் இப்பதான் நல்லாய் விஷயம் புரியுது. நாங்க கவனமாய் வேலை செய்தா, நிட்சயமாய் வெண்டு விடலாம்.''

''ஆனா ஒண்டு மட்டும் கவனமாயிருக்க வேணும். அவங்க கள்ளையோ, சாராயத்தையோ, காசையோ காட்டி எங்கடை வோட்டைப் பிரிக்காமலிருக்க வேணும். அவங்கடை வோட்டிலை ஒண்டும் எங்களுக்கு வரப் போறதில்லை. ஆனபடியாலை நாங்க எங்கடை வோட்டைக் காப்பாத்திக் கொள்ள வேணும். நீங்க நினைக்கிற மாதிரி வெற்றி அத்தனை லேசில்லை. எங்கடை வோட்டிலை பத்தைப் பிரிச்சு அங்காலை எடுத்துப் போட்டாலும் வெண்டிடுவாங்கள். அப்பிடிப் பிரிச்சாளுவதற்கேற்ற பணம், பதவி, ஆதிக்கமெல்லாம் அவங்களிட்டைத்தானிருக்கு.''

மாதவன் விளக்கினான். செல்லத்துரையனுக்கு ஏதோ அன்றே வெற்றியில் நம்பிக்கை பிறந்து விட்டது.

''எங்களுக்கை யோசிச்சு நல்ல ஆளாய் ஒருத்தரைப் போட வேணும்.''



மாதவன் அதற்கும் தீர்மானித்து வைத்தவன் போலச் சொன்னான்:

''செல்லத்துரை, நீதான் எலெக்ஷனுக்கு நிக்க வேணும்.''

அவன் ஒரு கணம் திகைப்பு அடைந்தான். தன்பேரை மாதவன் சொல்லுவான் என்று அவன் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

''எனக்கு என்ன தகுதியிருக்கு? நீதான் மாதவன் நிக்க வேணும்.''

செல்லத்துரையன் இதய சுத்தியோடு சொன்னான்.

''இல்லை செல்லத்துரை. நீதான் கட்டாயம் எலெக்ஷனுக்கு நிக்க வேணும். நான் பறையன். நான் முன்வந்தால் வேறை எத்தினையோ பிரச்சினைகள் வரும். நாங்க பறையர் பள்ளர் வோட்டுகளையெல்லாம் ஒண்டு சேர்க்க வேண்டுமெண்டு சொன்னேனே. நீ நிப்பதாலை எங்களுக்கும் நம்பிக்கை இருக்கு. எங்கடை வோட்டையெல்லாம் நான் ஒண்டு சேர்த்துத் தருவன். இதுக்கெல்லாம் என்ன தகுதி வேண்டிக் கிடக்கு. அவங்களெல்லாம் ஒழுங்காக கிராமச் சங்கக் கூட்டத்துக்கே போறேல்லை. வெறும் பேருக்காகத் தானே கேக்கிறாங்கள். நீயெண்டால் ஒழுங்காய் கூட்டத்துக்குப் போவாய். அங்கை எங்களுக்கு வேண்டியதை தைரியமாய் கேட்டுக் கொண்டே இருக்க வேணும். அவ்வளவுதான். தலைவர் போட்டிக்கும் உன்ரை வோட்டைக் கேப்பாங்கள். அப்பவும் எங்களுக்கு வேண்டியதையெல்லாம் உதவ வேண்டும் எண்டு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளலாம்.''

மாதவன் பெரிய திட்டமெல்லாம் போட்டு வைத்திருந்தது அவன் பேச்சிலே தெரிந்தது. அவன் ஒரு முடிவு எடுத்து விட்டால் விவாதித்து வெல்லுவதும் சிரமமே. செல்லத்துரையன் எதுவும் பேச முடியாதவனாய் மௌனமானான்.

''எதுக்கும் இப்ப நாங்கள் வெளியிலை ஒண்டும் பேசாமல் இருக்கிறதே நல்லது. எலெக்ஷனுக்கு நிக்கிறத்துக்கு பேர் கொடுக்கிற அண்டைக்கு நாங்களும் போய் பேசாமைக் கொடுப்பதே நல்லது.''

எல்லா விஷயங்களையும் அவன் தீர்மானித்து வைத்திருந்தான். தேர்தல் வேளையில் மீண்டும் தலைவிரிக்கத் தக்க சாதி வெறி பற்றியும் அதுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காலப் போக்கிலை நாங்கள் செம்பாட்டுப் பள்ளரிலை ஒருத்தனை தெற்கு வட்டாரத்துக்கும், வேதக்காரப் பள்ளரிலை ஒருத்தனை கிழக்கு வட்டாரத்துக்கும் போட வேணும். சில வேளை வேளாளரிலை போட்டி ஏற்படும் போது அந்த இடங்களையும் பிடிச்சுவிடலாம்.''

மாதவனின் நீண்ட காலத் திட்டம் வெளிப்பட்டது. அதை நோக்கி உழைக்க வேண்டும் என்று செல்லத்துரையனும் தீர்மானித்தான்.

பல்வேறு சிந்தனைகள் நெஞ்சில் நிழலாட செல்லத்துரையனின் பழக்கப்பட்ட கால்கள் வீட்டை நோக்கி நடந்தன.

நாய்கள் குரைக்கும் சத்தமும் ஊளைச் சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தது.

''ஆர், அண்ணையா போறது?''

பிய்ந்த வேலியின் மறுபுறத்திலிருந்து பழக்கப்பட்ட குரல். கற்பகத்தின் குரல்.

''கற்பகமா, இந்த நேரத்திலை.''

''நாய் குலைச்சுது. அப்போதை நீங்களும் இதாலை போனதைப் பார்த்தன். அண்ணையாய்த்தான் இருக்க வேணுமெண்டு நினைச்சன். சரியாய் போச்சுது.''

''அப்ப வரட்டா, தங்கச்சி.''

''வீட்டிலை பேசிற பாஷை என்னையறியாமலே வந்திடுது. எங்கை அடிக்கடி இந்தப் பக்கம் போட்டு வாறியள்.''

அவளின் கேள்வியின் உள் அர்த்தத்தை அவன் புரியாமலிருக்க வில்லை. ஆயினும் பேச்சை வளர்க்க விரும்பாதவனாகப் பதில் சொன்னான்:

''பறைய கடவைக்கு.''

''அடிக்கடி அங்கை என்ன விஷயம்?''

''அங்கை ஒரு பறைப் பெட்டையிலை கண் வைச்சிருக்கிறேன். உனக்கு இன்னும் தெரியாதா?''



ஆத்திரத்தோடு அவளின் சந்தேகக் கேள்விக்கு மறைமுகமாகச் சாட்டை கொடுத்தான்.

''ஏன் அப்பிடியெல்லாம் கோவிக்கிறியள்?நான் சும்மா பகிடிக்குக் கேட்டன். நீங்க வாங்கித் தந்த கல்லு வைச்ச குச்சி எனக்கு நல்லாய் பிடிச்சுப் போச்சு. இங்கை பாத்தியளா?''

அவள் தன் காதைத் திருப்பிக் காட்டினாள். நிலவொளியில் அந்த இமிட்டேஷன் கல்லு ஒளிர்ந்தது.

''நல்ல குச்சி, ஆர் வாங்கித் தந்தது எண்டு எல்லாரும் கேட்டாங்கள். நீங்க வாங்கித் தந்த தெண்டு பெருமையாய் சொன்னன்.''

''உனக்கு என்ன துணிச்சல்? உன்ரை காசிலையெல்லோ வாங்கித் தந்தன். நீ ஏன் இப்பிடிக் கதை பரப்பினாய்?''

''ஏன் நீங்கதானே வாங்கித் தந்தீங்கள், இதைப் பன்ரண்டு ரூபாய் எண்டால் எல்லாரும் சிரிப்பாங்கள்.''

''அன்னத்தின்ரை காதிலை விழுந்தா உன்னைப் பிடிச்சுத் திண்டு போடுவாள்.''

''அவளுக்கெல்லாம் நான் இப்ப பயப்பிட மாட்டன்.''

''உனக்கு அத்தனை துணிச்சல் வந்திட்டுதோ.''

அவளின் கன்னத்தைக் கிள்ளினான். அவன் கிள்ளிய கையை அவள் பிடித்துக் கொண்டாள்.

## 33

சுப்பிரீம் கோட்டில் வழக்கு எடுக்கப்பட்டபோது ஊரே அங்கு திரண்டிருந்தது.

கொழும்பிலிருந்து பிரபலமான வழக்கறிஞர் ஒருவர் வந்திருந்தார். குறுக்குக் கேள்வி கேட்பதில் அவருக்கு நிகர் வேறொருவருமில்லை என்று பேசிக் கொண்டனர். யூரிமாரது பட்டியலைப் பார்த்து அவர்களைப் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டார். நீதிபதி முன்னிலையில் பெயர்களைச் சொல்லி அழைத்தபோது உயர்சாதிச் சைவ வேளாளர்களாக யூரிமாரை தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் பெயர் அகப்பட்டபோது பல்வேறு விதமான சாக்குகள் சொல்லித் தடை செய்து விட்டார்.

செல்லத்துரையனின் குறுக்கு விசாரணை மட்டும் இரண்டு நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றது. நிலவிலே குமையலில் ஆட்களை அடையாளம் கண்டு கொண்டதைப் பற்றியே உருட்டியுருட்டிக் கேள்வி கேட்கப்பட்டது.

சண்டையின் போது இருந்த நிலவின் ஒளித்தன்மை, கோவில் கோபுரத்தின் நிழல், வானத்துப் புகாரோட்டம் எல்லாவற்றையும் வைத்து அவனை உருட்டி மடக்கினார். கும்பலிலே இருந்தவர்களின் தொகை, ஒவ்வொருவரும் அணிந்திருந்த வேட்டி சால்வைக் கரைகளின் நிறம் ஆகியவற்றையெல்லாம் கேட்டார்.

''நல்லான் நித்திரையிலே புரண்டபோது கயிற்றுக்கு உள்புறம் போனது வேண்டுமென்று செய்த குற்றமா? நினைவில்லாத நிலையில் செய்த குற்றம். அதற்காக இவர்கள் அடித்துக் கொன்றார்கள் என்றால் எவராவது நம்ப முடியுமா? அதுவும் கோவிலிலே செய்தார்கள் என்றால் சிரிப்பாகத்தான் முடியும். இவர்களை மிருகங்களென்று தீர்ப்புக் கூறுவதா? உயர்ந்த சாதியைச் சேர்ந்த சைவவேளாளர்கள். அவர்களின் நெற்றியைப் பாருங்கள். சைவ மதத்தின் சின்னம். நல்லான் பெரிய வாலிபனா? இத்தனை பேர் அடித்து உதைப்பதற்கு? உயர் குடிப் பெண்கள் உட்காரும் இடத்திலே அழுக்குப் படிந்த நல்லான் தூங்கிக் கொண்டிருந்தான். அவனைத் தூக்கத்தால் எழுப்பி இவர்களைத் தவிர்ந்த வேறு யாரோ அடித்துக் கலைத்திருக்கிறார்கள். மறுநாட் காலையில் நொங்கு வெட்டுவதற்காக பனையில் ஏறியபோது தவறி விழுந்து காயங்கள் முறிவுகள் ஏற்பட்டன. கீழே முரடான மரத்தின் மேல் விழுந்து புரள நேரிட்டிருந்தாலும் இதே முறிவுகள், இரத்தக் கண்டல்கள் ஏற்பட்டிருக்க முடியும் என்று பிரேத பரிசோதனை செய்த டாக்டரே குறுக்கு விசாரணையின் போது கூறியிருக்கிறார். மேலும் சாட்சிகளெல்லாம் நல்லான் சாதியினர். கீழ்ச்சாதிக்காரர். வேலிக்கு ஓணான் சாட்சி போலே. இவர்களின் பொய்க்கதைகளை நம்பி இவர்களைத் தண்டிப்பது நீதியைக் கொல்வதாகும்.''

அப்புக்காத்துவின் விவாதத் திறமையில் யூரிமார் எடுபட்டு விட்டனர்.



எதிரிகளான நால்வரும் விடுதலையடைந்தனர்.

ஊரிலே வெற்றித் திருவிழா நடைபெற்றது. பிள்ளையாருக்கு அபிஷேகங்கள் நடைபெற்றன.

விதானையார் வல்லிபுரத்திற்கு உத்தியோக பூர்வமான எச்சரிக்கை ஒன்று மட்டும் வந்தது. அதை அவர் ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

வழக்கால் ஏற்பட்ட மனக்கஷ்டங்களையும், பீதியையும் மறந்தனர். அது வேளாளருக்குக் கிடைத்த வெற்றியாகவே அனைவரும் கருதினர். பணச் செலவுதான் அதிகம். நால்வரின் குடும்பங்களும் தலை தூக்க நாலு வருடங்களாவது செல்லலாம். இதுதவிர ஊரிலேயே வழக்கிற்காகப் பணம் சேர்க்கப்பட்டது. சீனிவாசகத்தார் உட்படப் பலர் தாராளமாகப் பணம் கொடுத்து உதவினர்.

வழக்கு முடிவு மாதவனுக்கு ஆச்சரியமளிக்கவில்லை. பணம், சாதியின் செல்வாக்கு எத்தனை தூரம் பாயமுடியும் என்பதை அவன் முன்பே நன்கு அறிந்திருந்தான்.

கரம்பனிலை மாணிக்கனுக்கு நடைபெற்றதைப் பற்றி ஊரில் அறியாதவரில்லை. எத்தனை அக்கிரமம் நடந்தது.

மாணிக்கன் ஐந்து வருடங்கள் மிலிட்டரியில் இருந்து வேலை நீங்கி வந்தவன். கொழும்பில் சாதி மறந்து பழகியதாலும் மிலிட்டரி யிலிருந்தாலும் துணிச்சல் மிக்கவனாயிருந்தான். அரும்பு மீசையுடன் நல்ல ஆணழகனாகவும் இருந்தான். பொன்னம்பலத்தார் ஊரில் தோட்டமும் கிளிநொச்சியில் வயலும் செய்து வந்தார். தன் நிலத்தை உழுவதற்கும் பிறர் நிலங்களை கூலிக்கு உழுவதற்குமாக வாங்கிய டிராக்டரை ஓட்டும் வேலைக்கு மாணிக்கனை நியமித்தார். மாணிக்கன் அடிக்கடி வீட்டிலே தங்க நேரிட்டது. பொன்னம்பலத்தாரின் பூமணி இளமைப் பூரிப்பில் துடித்துக் கொண்டிருந்தாள். மாணிக்கனோ நெருங்கிப் பழகி 'காதல் சாதிகளுக்கு மேற்பட்டது' என்று நம்பிக்கையூட்டினான். பூமணியின் தாயும் அயல் பெண்களும் இவர்கள் 'தொடுப்பை'க் கண்டதும் சீறினர். மாணிக்கனின் வேலை போயிற்று. ஆயினும் அவன் அவர் வாழும் ஒழுங்கையால் இடையிடை வந்து போய்க் கொண்டிருந்தான். 'காதல் என்றும் அழியாது. நான் என்றைக்கும் உன்னோடு ஓடிவரத் தயார்' என்று அவள் அவனுக்குக் கடிதம் எழுதினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் பொழுதுபடும் வேளையில் 'நான் கோவிலுக்குப் போட்டு வாறன்'' என்று சொல்லி பூமணியின் தாய் படலையைப் பூட்டி அவளிடமே சாவியைக் கொடுத்துச் சென்று அடுத்த வீட்டில் ஒளித்திருந்தாள். பூமணி படலையைத் திறந்து வைத்திருந்தாள். ஒழுங்கையால் சென்ற மாணிக்கனைக் கண் காட்டி உள்ளே அழைத்தாள். தாயும் அயல் வீட்டுப் பெண்களுமாக ஒன்று சேர்ந்து அரவமின்றி மெதுவாகச் சென்று ஒருத்தி அலவாங்கால் குத்தமற்றப் பெண்கள் கோடாலியால் கொத்தி பூமணியின் கண் முன்னேயே அவனைக் கொன்றுவிட்டனர். பின்னர் இரவிரவாக அயல்வீட்டு ஆண்களும் சேர்ந்து சாக்கிலே பிணத்தைக் கட்டி, கார் ஒன்றின் 'டிக்கி'யில் ஏற்றிச் சென்று நள்ளிரவிலே தொலைவிலுள்ள தனிக் கிணறு ஒன்றில் போட முயன்றனர். தூரத்திலே மற்றோர் காரின் வெளிச்சம் தெரிந்ததும் பிணத்தை அப்படியே விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

பொலிசார் புலன் விசாரணை செய்து பெண்களைக் கொலைக் குற்றத்துக்குச் சாட்டினர். ஆனால் வேளாளர் எவருமே சாட்சி சொல்ல முன்வரவில்லை. போதிய சாட்சியில்லாததால் பொலிஸ் கோர்ட்டிலேயே வழக்குத் தள்ளுபடியாகி விட்டது.

சாதியைத் தொட்டு நடைபெறும் வழக்குகள் யாவும் இதே நிலையடைந்து வருவதையும் அதற்குரிய அடிப்படைக் காரணங்களையும் மாதவன் அறிவான். ஆயினும் கொடுமை செய்தவர்கள் ஊருக்கு அம்பலப்படுத்துவது, அவர்கள் பணம் இவற்றால் சிதைவது, விளக்கமறியல் தண்டனைக்காலம் ஆகியவையாவது இவர்களுக்கு தண்டனையாக அமைவதில் நீதி சிறப்படைந்தது என்றே மாதவன் கருதி வந்தான். இந்த நிலையாவது அடையாது மறைக்கப்படும் கொடுமைகளும் பலவாயிருந்தன. அவற்றைத் தாம் அம்பலப்படுத்த துணிச்சலான சாதுரியமான வழிகளைக் கையாள வேண்டும் என்றும் அடிக்கடி நண்பர்களுக்குக் கூறி வந்தான்.



# 34

கிராமச் சங்கத் தேர்தல் வெறி உச்ச கட்டத்தை அடைந்தது.

செல்லத்துரையனும் மேற்கு வட்டாரத்திற்குப் பெயர் கொடுத்தானாம் என்ற செய்தி கிராமத்தில் பரவியபோது வேளாளர் எல்லோரும் கொதிப்படைந்தனர். 'என்றுமில்லாத வழக்கம். பள்ளருக்கு இத்தனை துணிச்சலா?' என்று சீறினார். ஆயினும் அவர்களால் எதுவும் செய்துவிட முடியவில்லை.

மேற்கு வட்டாரத்திற்கு பென்சன்கார இராசையா, சுருட்டு முதலாளி சின்னத்தம்பியும் விண்ணப்பம் கொடுத்திருந்தனர். செல்லத்துரையனும் விண்ணப்பம் கொடுத்ததைப் பார்த்ததும் அவர்கள் மூளை துரிதமாக வேலை செய்யத் தொடங்கியது. பறையரை பள்ளரோடு ஒட்டவிடாமல் பிரித்தால் செல்லத்துரையனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று முடிவு செய்தனர். இராசையாவும் சின்னத்தம்பியும் வோட்டுள்ள ஒவ்வொரு பறையர் பறைச்சியரையும் பார்த்து தமக்கு வோட்டுப் போடும்படியும், பள்ளன் இதுக்குள் வருவதால் அவர்களுக்கு நன்மை எதுவும் வராதென்றும் பிறகு பள்ளர் பறையரை மேலும் குறைவாக மதிப்பார்கள் என்றும் பிரசாரம் செய்து திருப்ப முயன்றனர். வீண் தொல்லையில் அனாவசியமாக மாட்டுப்பட விரும்பாதவர்களாக 'எங்க வோட்டு நயினைதைக்குத்தான்' என்று பெரும்பாலோர் இருவருக்கும் சொல்லி வந்தனர்.

ஆயினும் மற்ற வட்டாரத்தைச் சேர்ந்த பெரிய மனிதர் வேறு விதமாக அறிவுரை கூறினர்.

''இவங்களெல்லாம் அந்தக் காலத்துப் பள்ளர், பறையர் எண்டு நினைக்க வேண்டாம். இப்பெல்லாம் அவங்களும் கொஞ்சம் படிச்சுக்கிடிச்சு உலகத்தை அறியத் தொடங்கி விட்டார்கள். அவங்களை நம்பினால் முன்னாலை ஓம் எண்டு விட்டு பின்னாலை கருவறுத்து விடுவாங்கள்.''

''எல்லாத்துக்கும் நல்ல வழி நாங்கள் ஒற்றுமையாயிருக்க வேணும். அப்பதான் இவங்களையும் வழிக்குக் கொண்டு வரலாம். நாங்கள் பிரிஞ்சால் நிட்சயமாக அவங்கள் வந்திடுவாங்கள். முதலிலை ஒருத்தர் வாபசாகி மற்றவருக்கு விட்டுக் கொடுப்பதே நல்லது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அறிவுரையை இருவர் செவிகளிலும் போட்டு வற்புறுத்திய போது எவர் விட்டுக் கொடுப்பது என்ற பிரச்சனை வந்தது.

''போன தடவையும் நான் எலக்ஷன் கேட்டுத் தோற்க நேரிட்டது. சென்ற முறையும் இராசையாதானே போனார். இந்த முறை என்னை அனுப்பினால் என்ன?''

சுருட்டு முதலாளி சின்னத்தம்பி கேட்டார்.

''சென்ற முறை வெற்றி பெற்ற எனக்குத்தான் உரிமையிருக்கு.''

இராசையா உரிமை பாராட்டினார். கடைசியில் மத்தியட்சமாக விதானையாரும் சீனிவாசகத்தாருமாக நின்று சின்னத்தம்பிக்கு ரூபா ஆயிரம் கொடுக்கும்படி இராசையாவிற்குக் கட்டளையிட்டனர்.

சின்னத்தம்பியும் விட்டுக் கொடுத்தார். ஒற்றுமை காரணமாக தாம் விலகுவதாகவும் தனது ஆதரவாளர்களும் இராசையாவுக்கே வோட்டுப்போட வேண்டும் என்றும் ஒரு துண்டுப் பிரசுரம் மூலம் வாக்காளரைக் கேட்டுக் கொண்டார்.

மாதவன் எதிர்பார்த்தது சரியாக நடந்தது. செல்லத்துரையன் தேர்தலில் கடுமையாக உழைக்க நேரிட்டது. யாவருமாகச் சேர்ந்து சிறிது பணமும் சேர்த்துக் கொடுத்தனர். தோட்டிப் பறையரும் தம்மாலியன்றதைக் கொடுத்தனர். இரவிரவாக பள்ளர் பறையரின் ஒற்றுமை பற்றியும் செல்லத்துரையனை அனுப்பினால் தமக்கு என்னென்ன வசதி கிடைக்கலாம் என்பது பற்றியும் வீடு வீடாக பிரசாரம் செய்தனர். தோட்டிப் பறையர் மிகவும் தீவிரமாக உழைத்தனர்.

பள்ளர் பறையரின் வோட்டுகளில் சிறிதளவாவது பிரித்தெடுக்க வேண்டுமென்று இராசையா தமது சகபாடிகளுடன் சேர்த்து அணைத்துப் பேசவேண்டிய இடங்களில் அணைத்து பேசி, அச்சுறுத்த வேண்டிய இடங்களில் அச்சுறுத்தி, பணம் வீசவேண்டிய இடங்களில் பணம் வீசி வந்தார்.

செல்லத்துரையன் தேர்தலுக்காக விண்ணப்பம் கொடுத்ததைக் கண்ட அன்று தொடக்கம் மீண்டும் சீனிவாசகத்தார் அவன் மேல் வெறுப்புக் காட்டத் தொடங்கினார். ஆயினும் வீட்டிலிருந்து வெளியேற்ற அவரால் முடியவில்லை. மரங்களேறுவது இதுதான் கடைசி வருடம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.



தமது நண்பர் இராசையாவிற்காக மேற்கு வட்டாரத்திலும் அவர் கடுமையாக உழைத்தார்.

செல்லத்துரையனை வீழ்த்துவதற்கேற்ற வஞ்சகமான உபாயங் களையெல்லாம் கையாண்டார்.

தேர்தல் வெறி உணர்ச்சியும், வெறுப்புணர்ச்சியும் உச்சக்கட்டத்தை யடைந்த போது அவனைக் கொலை செய்து, பள்ளர் பகுதிக் குடிசைகளுக்குத் தீவைக்கலாமா என்று கூட ஆலோசித்துப் பார்த்தார்.

ஆயினும் அதனால் பின்னர் விளையக் கூடிய விளைவுகள் அச்சத்தையூட்டியது. வேதக்காரப் பள்ளரிடை தோன்றிய சூழ்நிலை இப்பள்ளருக்குமிடையில் தோன்றினால்? கொலை என்றதும் நல்லான் மறைவால் ஏற்பட்ட சூழ்நிலைகள் அவர் முன் காட்சியளித்தன. இது தவிர விதானையாரின் ஆலோசனை ஆதரவில்லாமல் இப்படியான விஷயங்களில் நுழைவது பெரிய ஆபத்து என்றும் முடிவுகட்டினர். விதானையாரும் யாவரையும் இது விஷயமாக அச்சுறுத்தியிருந்தார்.

''பள்ளர் பறையருக்குள்ளைஆரோ ஒருத்தன் பெரிய இடத்து அணைவோடு திட்டம் போட்டு வேலை செய்யிறான். நாங்களெல்லோரும் கவனமாயிருந்து ஒன்றுபட்டு வேலை செய்ய வேணும். அதைவிட்டு சட்டத்துக்கு மாறாய் போனால் எல்லா வேளையும் என்ரை தயவு இருக்குமெண்டு இனிமேல் எதிர்பார்க்கப்படாது.''

தேர்தல் வேலைகளால் தனது மரங்களின் கள்ளை ஒழுங்காய் இறக்குவதற்கே அவனுக்குப் போதிய நேரம் கிடைக்க வில்லை. வேறு நண்பர்களை அடிக்கடி அனுப்பி வந்தான். ஆட்கள் நேரத்திற்குக் கிடையாதபோது மாலையில் ஒரு தடவை மட்டும் பாளைகளைச் சீவி வந்தான். அன்று காலையிலும் சீவாததால் மாலையிலும் எவரும் கிடைக்காதபோது, செல்லத்துரையனே மரமேற வந்தான். தளநார் மரத்தில் உராய்ந்த ஓசை கேட்டு சரஸ்வதி வந்து பார்த்தாள். உடனே அடுப்பிலே தண்ணீரைக் கொதிக்க வைத்தாள்.

நாலு மரங்களையும் மிக விரைவாக ஏறி முடித்து விட்டு உடலிலே வழிந்து கொண்டிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டிருந்தான்.

''செல்லத்துரை, வந்து கோப்பியைக் குடி.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனிவாசகத்தார் உள்ளே இல்லை என்பதை அறிந்து கொண்டான். அவன் நாவும் களைப்பால் வரண்டு போயிருந்தது.

இறப்பில் செருகியிருந்த மூக்குப் பேணியை எடுத்து தானே கழுவிவிட்டு கோப்பியை அதிலே ஊற்றிக் கொடுத்தாள்.

அவன் கண்களெல்லாம் உள்ளே தாண்டு, முகம் வாடிக்காய்ந்து போயிருந்ததை சரஸ்வதி கவனித்தாள்.

''ராத்திரியிலை நீ நித்திரையே கொள்ளுறேல்லையோ, முகமெல்லாம் அதைச்சுக்கிடக்கு.''

''இன்னும் ரண்டு நாளைக்குத்தானே.''

''நீ வெண்டாலும் தொல்லை. தோத்தாலும் தொல்லை வரும்போலதான் தெரியுது. ஊர்ப் பேச்சையெல்லாம் அய்யாவுக்குக் கொஞ்சம் சூடேறியதும் அவர் வாயாலேயே கேட்கலாம்.''

''எனக்கு நேரம் போச்சுது. கோவில் பங்குக்கு ஓட வேணும்.''

''இதோடை உனக்குச் செத்தாலும் மரமில்லை எண்டு அய்யா சொல்லிவிட்டார். நீ ஏன் தான் மாறி மாறி இந்தத் தொல்லையளுக்கை மாட்டிக் கொண்டிருக்கிறியோ தெரியேல்லை.''

அவள் குரலில் இரக்கமும் பச்சாத்தாபமும் ஒலித்தன.

''எலக்ஷனிலை ஆர்வெல்லுவினமெண்டு சொல்லுறார்?''

அவர்களின் பேச்சின் சாரத்தை அறியும் ஆசை உள்ளூர கேட்டான்.

''ராசையாவின் பகையாளியள் கொஞ்சப் பேர் வோட்டுப் போடிறேல்லை எண்டு நிக்கினமாம். அதாலை ஐந்து பத்து வோட்டாலை நீ வெண்டாலும் வெண்டு போடுவாய் எண்டே இரவிரவாய் தன்ரை வெற்றி பற்றியும் கவலைப்படாமல் அங்கைதானே திரியிறார். இந்த வீடு வளவைக் கூட ஈடு வைச்சுப் போட்டார். பென்சனே அவர் சிலவுக்குப் போதாது. எப்படித்தான் மீளப் போறாரோ தெரியாது.''

''அப்ப நான்தான் வெல்லுவன் எண்டு சொல்லிப் போட்டாரே.''

தெளிவாக அறியும் ஆவலோடு செல்லத்துரையன் கேட்டான்.



''ஒரேயடியாய் அப்பிடிச் சொல்லேல்லை. நாளை இரவுக்குத்தான் முழுமூச்சாய் முடிவு காணுறது எண்டு இருக்கினம். பறைச்சியளுக்குச் சீலை, பறையருக்கு வேட்டியும் சாராயமும் நாளையிரவு கொடுக்கப் போயினமாம். ஆருக்கு வோட்டுப் போடினமெண்டு தங்கடை ஆளைக் கொண்டு வோட்டுப் போடுமிடத்திலை பார்த்து, ஏமாத்தினால் எல்லாரையும் குடியெழுப்பிறதாகக் கூடப் பயமுறுத்தப் போறாங்கள்.''

செல்லத்துரையின் முகத்திலே சோர்வு தட்டியது. என்றாலும் மாற்றார் விஷயங்களை அறிந்தளவில் திருப்தி. ஆழ்ந்த சிந்தனையோடு கோவில் பங்குக்குச் சென்றான்.

## 35

பழக்கப்பட்ட சூத்திரப்பாவைபோல் மரங்களில் ஏறி இறங்கினான்.

வள்ளி வந்து எதிரே சிரித்துக் கொண்டு நின்றாள்.

''ஒழுங்காய்ப் பாளை தட்டி ரண்டு நேரமும் பாளை சீவாட்டால் கள்ளுக் குறைஞ்சு பாளையும் பழுதாய்ப் போய் விடுமெல்லே. உங்கடை ஒழுங்கைப் பார்த்தால் இந்தத் தொழிலையே கைவிட்டிடுவீங்க போலை கிடக்கு.''

அவனைப் பார்த்துப் பார்த்து ஏமாந்த தொனி அவளின் குரலில் இருந்தது.

''நான் இந்தத் தொழிலைக் கைவிட்டால் உனக்கென்ன?''

அவள் சிரிப்பு ஒரு கணத்தில் மறைந்து முகம் நீண்டு விட்டது. அவனோடு எப்பிடிப் பேச்சை ஆரம்பிப்பது. எதைப் பற்றிப் பேசினால் பிடிக்கும். என்ன வகையான நடிப்போடு பேச வேண்டும் என்பதையெல்லாம் அவளால் இன்னும் கணித்துக் கொள்ள முடியவில்லை. அவன் அவளுக்கு அத்தனை புதிர் மனுசனாக விளங்கினான்.

''நான் அழுவன்.''

குழந்தை போல் பதில் சொன்னாள்.

''நீ அழுதா எனக்கென்ன?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்ப நீங்க லெச்சனிலை தோத்துப் போவீங்க.''

''தோத்தா தோத்துப் போறன்.''

எதையும் பொருட்படுத்தாதவனாக அவன் அடுத்த கிணற்றடியை நோக்கி முட்டிகளுடன் நடந்தான். தான் தவறு செய்துவிட்ட குற்ற உணர்வோடு அவள் ஓடிச் சென்று முன்னே நின்று மறித்தாள்.

''ஏன் நீங்க இப்பிடியெல்லாம் சீறி விழுறியள். என்னோடை கோபமா? நான் இரவு பகலாய் நீங்க வெல்ல வேணுமெண்டு வைரவரைக் கும்பிடுறன். காட்டு வைரவருக்கு என்ரை சேவல்கோழி ஒண்டைக் கூட நேர்ந்துவிட்டிருக்கிறன். நீங்க கட்டாயமாய் வெல்லுவியள். எனக்கு வைரவரே வந்து கனவிலை சொன்னவர்.''

மன்றாட்டத்தோடு தன் மனதைத் திறந்து சொன்னாள்.

''பாதையைவிடு. நேரம் போட்டுது.''

''நீங்க நான் சொல்லுறபடி கேட்டாத்தான் விடுவன்.''

''சரி, என்ன செய்ய வேணும் சொல்லி முடி.''

''என்னோடை கோபமில்லை எண்டு சொல்லுங்க.''

''கோபமில்லை.''

''ஒருக்கா சிரியுங்க.''

அவன் சிரித்தான். அவள் மேலும் நெருங்கி வந்தாள்.

நிலத்தில் வைத்த முட்டிகளை மீண்டும் எடுத்துக் கொண்டு வாய்க்கால் பிட்டியிலிருந்து அவன் இறங்கியபோது அவள் ஓடிப்போய் கேட்டாள்.

''எலெக்ஷனிலை வெண்டா, எனக்கு என்ன தருவியள்.''

''சோறு''

மாதவனிடம் உடனே சென்று மாற்றாரின் திட்டத்தை யெல்லாம் சொன்னான். இரவிரவாக வீடு வீடாகச் சென்று தேர்தலில் அடையாளம் போடும் முறையையும் எவருக்குப் போட்டதென்பதை எவராலும் கண்டுபிடிக்க முடியாதென்பதையும் வேளாளரின் எவ்வித பயமுறுத்தலுக்கும் அடிபணிய வேண்டாம் என்றும் சொல்லி வைத்தனர்.



மறுநாள் இரவு எதிர்பார்த்தபடி நடைபெற்றது. என்றுமேயில்லாத் தீபாவளித் திருநாள் போல பறையர் பகுதியில் பல வீடுகளிலும் பள்ளர் பகுதியில் சில வீடுகளிலும் கொண்டாட்டம் நடைபெற்றது. தோட்டி வீட்டுப் பறையரிடம் அவர்கள் வரவில்லை. செல்லத்துரையனுக்காக பாடுபட்டு உழைத்தவர் இடங்களிலும் அவர்கள் நுழையவில்லை.

சீனிவாசகமும் இராசையாவும் அவரது கையாட்களும் சாராயப் போத்தில்களோடு பறையர் பகுதியில் நடமாடிய போது அவர்களை எதிரெதிரே சின்னானும் சின்னட்டியனும் சந்திக்க நேரிட்டது. மனக்கொதிப்புத் தாங்க முடியாமல் சின்னான் சொன்னான்:

''கள்ளச் சாராயத்தைத் தாருங்கோ வாங்குவம். ஆனா எங்கடை வோட்டை இதாலை வாங்கி விடலாமெண்டு நினைச்சிடாதையுங்கோ. நாங்க மானம் ரோசமுள்ள பறையர்.''

''ஏண்டா வீரம் பேசிறாய். நாளைக்கு எல்லாம் தெரியும், உன்ரை மானத்தையும் ரோசத்தையும்.''

இராசையா சொன்னார்.

''நான் சாராயம் குடிச்சு ரொம்ப நாளாய் போட்டுது. எனக்கும் ஒரு போத்தில் தாறியளே. நானும் வோட்டுப் போடுறன்.''

வல்லி நளினமாகச் சொன்னான்.

''எலெக்ஷன் நாளைக்கு முடியட்டும். பிறகு உங்களுக்குத் தாறம்.''

சீனிவாசகம் சீறினார்.

இரவு பூராவும் இரு பகுதியினரும் தூங்கவேயில்லை.

முன்னர் இப்படியாக தேர்தலுக்கு என்றும் உழைக்கவில்லை என்று இராசையா கூறினார். இப்படிப் பணமும் செலவழிக்க வில்லை என்று சீனிவாசகம் திருத்தினார். கிராமத்தில் மட்டுமல்ல அயல் கிராமங்கள், சந்தைகளெல்லாம் அதே பேச்சாயிருந்தது. மற்ற வட்டாரத் தேர்தலைப் பற்றியே எவரும் அவ்வளவாகக் கவலைப்படவில்லை.

பள்ளன் வென்று விடுவான் என்றும் பலர் பந்தயம் கட்டினர்.

பள்ளன் வென்றாலும் அவன் தேர்தலுக்கெதிராக வழக்குப் போட்டுத் தேர்தலைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் சிலர் பேசிக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36

காலையில் எட்டு மணிக்கு வோட்டுப் பதிவு ஆரம்பமாகியது. வேளாளர் கார்களைக் கொண்டு சென்று வாக்காளர்களை ஏற்றியிறக்கினர். தேர்தல் சாவடியிலிருந்து கூப்பிடு தூரத்திலிருந்த வர்களையும் கார்களிலேயே ஏற்றியிறக்கினர்.

முதல் நாளிரவு சேலை, வேட்டி, சாராயம் கொடுத்த பள்ளர் பறையர் வீட்டுக்கெல்லாம் கார் அனுப்பி அவர்களையும் கார்களிலேயே ஏற்றியிறக்கினர். கார் வேண்டாமென்று அவர்களால் தடுக்க முடியவில்லை. செல்லத்துரையனின் ஆட்களைக் கண்டபோது அவர்கள் தலைகுனிந்தபோதும் வேறு வழியின்றி கார்களில் ஏறிச் சென்றனர்.

''பள்ளியளோ பறைச்சியளோ பிள்ளைப் பெற முடியாமல் கிடந்து செத்தாலும் கார் விடமாட்டாதவங்களெல்லாம் இண்டைக்கு மட்டும் கெஞ்சிக் கெஞ்சி ஏத்திறாங்கள்.''

சின்னான் தாங்க முடியாமல் சீறினான்.

''என்ரை தம்பி தருமனை லொறியடிச்சு கானுக்கை கிடந்து ரத்தம் பெருகி செத்துக் கொண்டு கிடக்கேக்கை, தர்மத்துரை கேக்கிற காசுதாறன் எண்டு காலிலை விழேக்கையும் பள்ளருக்கு கார்விட நான் துரும்பனில்லை' எண்டு சொன்ன நேசதுரை இண்டைக்கு பறைச்சியளை ஏத்தித் திரியிறான் பாத்தியளா?''

சின்னத்தம்பியன் சினம் தாங்க முடியாமல் சீறினான்.

அவர்களுடைய சீற்றமும் சினமும் எதையும் நிறுத்தி விடவில்லை. மாலையில் தேர்தல் முடிந்து வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டன.

முடிவைக் கேட்பதற்கு கிராமமே பள்ளிக்கூடத்திற்கு வெளியே கூடி நின்றது. சாதி வெறியைத் தூண்டத்தக்க பேச்செல்லாம் கக்கப்பட்டன. பள்ளர் பறையரில் வாலிபர் மட்டும் ஒதுக்குப்புறமாக முடிவைக் கேட்கும் ஆவலோடு நின்றனர்.

பொலிசார் அசம்பாவிதமான சம்பவம் எதுவும் நிகழாது பார்த்துக் கொண்டார்.



ஒரே கூச்சல் கேட்டது.

''எங்கள் ஐயாவுக்கு ஜே! இராசையாவுக்கு ஜே!''

தெருவில் நின்றவர்களின் கூக்குரல் வானத்தை எட்டிப் பிடித்தது. ஒரே கைதட்டல் ஆரவாரம்.

இராசையாவுக்கு 396 வாக்குகள்; செல்லத்துரைக்கு 383 வாக்குகள்.

இராசையா வெளியே வந்ததும் மாலை போட்டு வரவேற்றுத் தூக்கித் தோளிலே ஏற்றினர். ஊர்வலம் புறப்பட்டது.

''எங்கள் ஐயா''

''இராசையா''

''எங்கள் ஐயா''

''இராசையா''

வெற்றிக் கூச்சலுடன் ஊர்வலம் சென்றது.

வெளியே கூடியிருந்த பறையரும் பள்ளரும் தலைகுனிந்து சோர்வோடு நின்றனர். மாதவனும் செல்லத்துரையனும் வரண்ட சிரிப்பை வரவழைத்துக் கொண்டே வெளியே வந்தனர்.

கம்யூனிஸ்ட் குமாரசாமியும் காந்திய சேவா சங்கத்தின் செயலாளர் தம்பிராசாவும் செல்லத்துரையனுக்குக் கை கொடுத்துப் பாராட்டினர்.

''இது ஒரு தோல்வியேயல்ல. வெற்றியின் முதல் படி இதுதான். இத்தனை சாராயம், லஞ்சம் கொடுத்தும் பதின்மூன்று வோட்டால்தான் வெல்ல முடிஞ்சுது.''

குமாரசாமி ஆறுதல் கூறினார்.

''இந்தத் தேர்தல் வெறி அடங்கும் வரையும் எல்லோரும் அமைதியாக இருப்பதே நல்லது.''

தம்பிராசாவும் அறிவுரை கூறினார்.

செல்லத்துரையனின் மனம் சிறிது உடைந்தபோதும் மாதவன் மனம் மட்டும் சிறிதும் அசையவில்லை.

எத்தனை நாள் உழைப்பு வீணாகி விட்டதாக நினைத்து செல்லத்துரையனின் மனம் சிறிது உடைந்தது. மாதவன் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு கருதிவிட வில்லை. அவன் அம்முடிவை முன்பே எதிர்பார்த்திருந்தவன் போல வழமையான தன் கடமைகளைத் தொடர்ந்து செய்தான்.

இராசையா தேர்தல் செலவு கணக்கைப் பார்த்தபோது மனச்சோர்வும் பறையர் பள்ளர் மேல் ஆத்திரமுமடைந்தார். இத்தனை செலவு செய்தும் பதின்மூன்று வாக்குகளால் வெற்றி பெற்றது அவருக்கு உள் மனதில் தோல்வியையே தந்தது. சேலையும் வேட்டியும் சாராயமும் வாங்கிக் கொண்ட பெரும்பான்மைப் பள்ளரும் பறையரும், தான் அனுப்பிய காரிலேயே வந்து செல்லத்துரையனுக்கு வோட்டுப் போட்டிருப்பதை அவரால் தாங்க முடியவில்லை. அவர்களுக்குப் பாடம் படிப்பிக்க வேண்டுமென்று அவரது ஆறாமனம் சொல்லியது.

## 37

தேர்தல் முடிந்தபோதும் அவ்வட்டாரத்தில் வெறிமுற்றாக அடங்கிவிட வில்லை. அந்த வெறியின் முதல் பிரதிபலிப்பான சம்பவமொன்று நடந்தது.

சின்னட்டியனின் குடிமைப் பகுதியில் ஒரு சாவீடு. சீதாத்தைக் கிழவி இறந்து போனாள். சின்னட்டியன், சின்னான், வல்லி உட்பட மற்றும் இரண்டு சிறு பறைப் பெடியங்களுமாக அதிகாலையிலேயே பறைமேளம் கொட்டப் போயினர்.

முழங்காலுக்கு கீழே இறங்க அவர்கள் வேட்டி கட்டப் படாது. தோளிலே துண்டு போடப்படாது. அரையிலேயே கட்டிக் கொள்ள வேண்டும். ஊரிலுள்ள உயர்ந்த சாதியினர் வரும்போதெல்லாம் அவர்களை வரவேற்பது போல மேளம் கொட்ட வேண்டும்.

பிரேத ஊர்வலத்தின் போது ஆங்காங்கே நின்று சமா நடத்துவது போல மேளம் கொட்ட வேண்டும். ஊர்வலத்தில் பாடையின் முன் செல்லும் அம்பட்டன் செலவுப் பொறுப்பாளரிடம் ஒற்றைச் சதங்கள் பெற்று நெல்லுப் பொரியோடு கலந்து மேலே வீசுவான். ஒற்றைச் சதங்களை அவர்கள் பொறுக்கி எடுத்துக் கொண்டே மேளத்தை அடித்துக் கொண்டு முன்னேறுவர். மீண்டும் அடுத்த சந்து முனையில் சமா தொடரும்.



சுடலையில் கொள்ளி வைத்தபின் பள்ளர் பறையருக்கு அவரவர் கடமைகளுக்கு ஊதியம் கொடுப்பர்.

சாவீட்டின் ஆடம்பரத்திற்கு பணத்தை அள்ளி வீசின போதும் தாழ்த்தப்பட்டவரின் கூலியில் கஞ்சத்தனமே காட்டுவர். செல்வர்களின் சாவீடானாலும் கூலிகளை தாராளமாக கொடுக்க விடமாட்டார்கள். ஒரு தடவை கொடுத்தால் அதேயளவு தொடர்ந்து கொடுக்க வேண்டும்; ஏழைகளின் சாவீட்டின் போது கஷ்டப்பட நேரும் என்று சொல்லி விடுவர்.

கையில் கிடைத்த கூலிப் பணத்தையும் வாங்கிக் கொண்டு சுடலை ஒழுங்கை வழியே வந்து தெருவால் திரும்பிச் செல்லாது குறுக்குப் பாதையான பள்ளிக்கூட ஒழுங்கையால் மேளமடித்த பறையர் யாவரும் இறங்கி நடந்தனர்.

அரையில் கட்டியிருந்த துண்டால் வியர்வைத் துடைத்து விட்டு சின்னானும் சின்னட்டியனும் துண்டைத் தோளிலே போட்டுக் கொண்டு நடந்தனர். வேளாளர் எதிரே வந்தால் அவர்கள் கடந்து போகும் வரை ஒதுங்கி நிற்க வேண்டும்.

ஒழுங்கையின் மறுபுறத்திலிருந்து இராசையாவும் சீனிவாசகமும் மற்றும் இருவரும் வந்து கொண்டிருந்தனர். இருவரும் இராசையாவின் கையாட்கள். அவர்கள் நடையிலிருந்து அருந்திய மதுவின் தன்மை தெரிந்தது.

அண்மையில் வந்ததும் நிற்க விரும்பாதவர்களாக வல்லியும் சின்னானும் சின்னட்டியனும் ஒதுங்கியபடி மேளத்தைச் சரித்துக் கொண்டே வேலியோடு நடந்தனர்.

''டே நில்லுங்கடா அப்பிடி.''

''பறையாளுக்கு மரியாதை காட்டத் தெரிஞ்சாத்தானே''

''தோளாலை எடுங்கடா துண்டுகளை.''

''மட்டு மரியாதை தெரியாத பறையள்.''

நால்வரும் சீறினர்.

பெடியங்கள் ஓட சின்னானும், சின்னட்டியனும் வல்லியும் அப்படியே நின்றனர். தோள் துண்டுகளை அவர்கள் எடுக்க விரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இவங்க எலெக்ஷனுக்கு முதல் நாளிரவு என்ன பேசினாங்கள் தெரியுமா?''

இராசையா கேள்வியாலே வஞ்சத்தைக் கொட்டினார். அவர் நினைத்ததை அவரின் கையாட்கள் செயலில் காட்டினர்.

கன்னத்திலே அடி. மேளத்தில் உதை; குத்து.

மூவரும் எதிர்த்து நிற்காது ஓடினர்.

உடைந்த மேளங்களுடனும் பொங்கிய நெஞ்சங்களுடனும் குடிசைகளுக்குத் திரும்பினர்.

இரவு பறைமேள மடிக்கும் பறையரெல்லாம் மாதவன் தலைமையில் ஒன்று சேர்ந்தனர். மாதவன் சொன்னான்:

''எந்த வெள்ளாளரற்றை செத்த வீட்டுக்கும் இனி மேளமடிக்கப் படாது. அப்பிடிப் போறதெண்டாலும் நாங்க எங்கடை ஒற்றுமையைக் காட்டி மானம் மரியாதையோடை போக வேணும்.''

''அப்ப எங்களுக்குப் பிழைப்பு?''

சின்னான் கேட்டான்.

''ஆர் சாகினம் எண்டு காத்திருந்து கூலி கூடக் கேக்க முடியாது பிச்சைபோல் தாறத்தை வாங்கிப் பிழைப்பதும் ஒரு பிழைப்பா. பட்டண முனிசிபாலிட்டியைப் பெருப்பிக்கப் போயினம். அங்கை எங்களோடை தோட்டி வேலை செய்ய விரும்பிறவை வரலாம். தோட்டி வேலையெண்டாலும் மானத்தோடை செய்யலாம். தொழிலாளிகள் எண்டு பெருமைப்படலாம். வரவிரும்பாதவர் எங்கையாவது கூலி வேலை செய்யட்டும்.''

அவன் பேச்சை எல்லோரும் கேட்டுக் கொண்டனர்.

செல்லத்துரையனும் வந்து அன்று மாலையில் நடந்த சம்பவங்களை விசாரித்துச் சென்றான்.

பெரிய வேளாளர் பரம்பரையில் வந்த பொன்னம்பல வாண முதலியார் அடுத்தவாரம் இறந்து விட்டார்.

வண்ணார், அம்பட்டர், கோவியர் ஆகிய குடிமக்களுக்கு அறிவித்ததுபோல பறையருக்கும் இரவே அறிவிக்கப்பட்டது.



ஆறு மணி!

ஆறரை மணி!

பறைமேளம் வரவில்லை. வழமையாக ஆறு மணிக்கே கொட்ட வேண்டிய பறைமேளம் கொட்டப்படவில்லை.

யாராவது சொல்லத் தவறினார்களா என இரண்டாவது தடவையும் சென்று அறிவித்து வந்தனர்.

ஏழு மணிக்கும் பறைமேளம் கொட்டாததைக் கண்டு சா பற்றி அறிந்தவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

பெரிய மனுஷராக இருவர் - சின்னராசாவும் செல்லத்தம்பியும் காரிலே அவசரமாகச் சென்றனர்.

''என்னடா சின்னான்?''

உடைந்த மேளத்தை கொண்டு வந்து காட்டினான்.

''இங்கேயே ஒருத்தருமில்லை. எல்லோரும் வேலைக்குப் போட்டாங்கள்.''

அடக்கத்தோடு கையை விரித்தான்.

''ஒரு மேளத்தையாவது நீ கொண்டு வந்து இப்ப அடிக்கப்படாது.''

''முடியாது நயிந்தை.''

''செருக்கு அதுக்குள்ளே, நயிந்தை எண்டு ஒரு நளினம். சரி இருங்கோ பாப்பம். இந்தக் கிராமத்திலை இதுவரை காலமும் நடைபெறாத அகங்காரம். இது எத்தனை நாளைக்கு நடக்குதெண்டு பாப்பம்.''

சின்னராசா ஆத்திரத்தோடு பேசினார்; அவருடைய கண்ணும் ஆத்திரத்தால் சிவந்திருந்தது.

இருவரும் திரும்பி வந்து நிலைமையைச் சொல்லினர். சீனிவாசகம், இராசையா, விதானையார் யாவரும் சேர்ந்து நிலைமையைச் சமாளிக்க ஆவன செய்தனர்.

நீர்வேலி கிராமத்திற்கு இரண்டு கார்கள் அனுப்பப்பட்டன. இரண்டு மணி நேரத்தில் நீர்வேலிப் பறையர் மேளங்களுடன் வந்து இறங்கினர். நீர்வேலி விதானையார் அவர்களைக் கூட்டி அனுப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறைமேளம் கொட்டப்பட்டது. ஆயினும் பொன்னம்பலவாணரின் பிள்ளைகளுக்கு அதிருப்தி. சாதிச் செருக்கோடு வாழ்ந்த தங்கள் தந்தைக்கு பிற ஊரிலிருந்து பறைமேளம் கொண்டு வர நேர்ந்ததேயென்று கவலை. சுடலை ஆற்றுதல், எட்டுக்கு வைத்தல் ஆகிய சடங்குகளுக்கும் வெளியூரிலிருந்து பறையரைக் கொண்டுவர நேர்ந்தது.

''பிற ஊரிலும் சென்று வாற மேளங்களை நிறுத்துவமா?''

சின்னான் மாதவனைக் கேட்டான்.

''இப்ப வேண்டாம், நாலைஞ்சு செத்த வீடு முடியட்டும் பாப்பம்.''

மாதவன சொன்னான்.

நாலைந்து மரண வீட்டுச் சடங்குகள் முடிந்தன.

ஒவ்வொரு தடவையும் பறையரை பிற ஊரிலிருந்து அழைத்து வருவது சிரமமாயிருந்தது. தவிர அதிக வீண் செலவுகள் ஏற்பட்டன. ஏற்றியிறக்கல் செலவு தவிர சம்பளமும் அதிகமாக கேட்டனர்.

இதற்கு மேலால் தங்களூர் தன்மானமும் பிற ஊருக்கு விலை போவதாகக் கருதினர்.

எங்கிருந்தாவது பறையரைக் கொண்டு வந்து குடியேற்றலாமா என்றும் ஆலோசித்தனர்.

''குடியேத்துவது சிரமம். ஒருத்தனும் வரச்சம்மதியான். வந்தாலும் இவர்கள் சும்மா விடப் போறாங்களா?''

விதானையாரே மறுத்துப் பேசினார். அவர் பறையர் பள்ளரின் பலத்தை நன்கு உணர்ந்திருந்தார்.

விட்டுக் கொடுத்தாதவது ஏதாவது ஒழுங்குக்கு வருவதே நல்லது என்று யாவரும் முடிவு செய்தனர்.



## 38

அன்று காலையில் கள்ளு இறக்க வந்த செல்லத்துரையனோடு எதிர்பாராத விதமாக சீனிவாசகம் பேச்சுக் கொடுத்தார்.

''நடந்தது நடந்து போச்சு. நாங்களும் மறந்திட்டம். வல்லி, சின்னான், சின்னட்டியனெல்லாம் உன்னோடை தானே எலெக்ஷனிலை நிண்டாங்கள். பரம்பரைத் தொழிலெல்லாம் மறைஞ்சு போறது சரியில்லை. எந்த ஊரிலையும் இன்னும் தொடங்காத வழக்கமெல்லாம் இந்த ஊரிலை ஆரம்பிச்சுட்டுது. நீயாதல் பேசி ஒரு ஒற்றுமைக்குக் கொண்டு வர முடியுமா?''

''ராத்திரிக்குப் பேசிப் பார்த்து நாளைக்குச் சொல்லுறன்.''

செல்லத்துரையன் அதிகம் பேச விரும்பவில்லை. சென்று மரத்தில் ஏறத் தொடங்கினான். சீனிவாசகத்தாரின் பேச்சை நீண்ட நாளைக்கு நம்புவதற்கில்லை என்பது அவன் அறியாததல்ல. அவர் தாழ்ந்த சாதியினருக்குச் செய்த கொடுமைகள், துரோகங்கள் எவற்றையும் அவன் மறந்துவிடவில்லை.

தேர்தல் என்றும் முடிந்து விடப் போவதில்லை. அவர் என்றும் தன்பக்கமாகச் சார்ந்துவிடப் போவதில்லை. நாங்கள் எதிர் முகாமிலேயே இந்தப் பரம்பரை அழியும் வரையாவது இருக்க நேரும். இம்மரங்களைக் கூட தொடர்ந்து கள்ளிறக்க அவர் தந்துவிடப் போவதில்லை. இப்போது தேவையை வேண்டியே இவர் வந்திருக்கிறார். இப்போது இந்தப் பிரச்சனையைத் தீர்த்துத்தான் புகழ் சம்பாதிக்கலாம் என்றும் பார்க்கிறார். கிராமச் சங்கத் தேர்தலில் இந்த வட்டாரத்திலே தன்னை எவரும் அசைக்க முடியாது என்று வீம்பு பேசித் திரிகிறார். அடுத்த தேர்தலில் எங்கள் திட்டப்படி இவரை நாம் எதிர்த்தே தீர நேரும். மீண்டும் எதிரி முகாமிலேயே வேலை செய்வோம். ஆகவே தொடர்ந்த ஒற்றுமை என்பது இப்பிறவியில் ஏற்பட முடியாது.

செல்லத்துரையன் பலமான ஆராய்ச்சியில் ஈடுபட்டான். அவன் மனதில் எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒருநாள் அவர் மேல் வஞ்சம் தீர்க்க வேண்டும் என்ற எண்ணமே எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலையில் மாதவனிடம் சென்று விஷயத்தைச் சொன்னான். வல்லி, சின்னான், சின்னட்டியன் எல்லோரும் சேர்ந்து நிலைமையை ஆராய்ந்தனர்.

மாதவன் சொன்னான்:

''எங்கள் பலத்தைக் காட்டி அவர்களைப் பணிய வைச்சு விட்டம். இப்ப மரியாதையோடு வருகிறார்கள். ஆகவே நாங்களும் மரியாதையாகப் போவம். இந்த வழக்கங்களை யெல்லாம் நாங்க அத்தனை விரைவிலே அழிச்சுவிட முடியாது. காலம் மாறும்போது, தானே அழிஞ்சுபோம். மேளம் உடைச்சது அடிச்சது தவறெண்டாலும் மன்னிப்புக் கேக்க மாட்டாங்கள். அதுக்காக இருபத்தைஞ்சு ரூபா கேட்டு வாங்க வேணும். அதே மன்னிப்பாக முடியும். அடுத்தது மேளம் அடிப்பதற்கு பிற சடங்குகளுக்கு தக்க கூலி கேக்க வேணும். நாளுக்கு அஞ்சுரூபா தரும்படி கேளுங்க.அரை நேரமெண்டால் மூண்டு ரூபாய். இப்ப இருக்கும் நிலையிலை அவங்க மறுக்க மாட்டாங்க. பேச்சேதாவது மரியாதையீனமாய் மாறினா நாங்க தோட்டி வேலை செய்வமெண்டு சொல்லிப் போட்டுத் திரும்ப, கூப்பிட்டுச் சமாதானத்துக்கே வருவாங்க.பாவம் அவங்களுக்கு வழியில்லை. அழிஞ்சு கொண்டு போகப் போகும் சாதிச் சுய கௌரவத்தை முடிஞ்சவரை காப்பாத்துறத்துக்கு வேறு வழியில்லை.''

மாதவன் பேசும் பேச்சுக்களிலெல்லாம் செல்லத்துரையனுக்கு நல்ல நம்பிக்கையிருந்து வந்தது. சில விஷயங்கள் அவனுக்கு விளங்காத போதும் தெய்வ வாக்குகள் போல அவன் நம்பத் தொடங்கி விட்டான்.

செல்லத்துரையன் திரும்பிப் போகும் போது கற்பகம் வீட்டுப் படலையில் நின்று அழைத்தாள்.

''இப்ப நீ உலகத்தையே மறந்துவிட்டுத் திரியிறாய் போல கிடக்கு.'' கற்பகம் சொன்னாள்.

''ஆர் சொன்னது.''

''எங்களையே திருப்பிப் பார்க்காம அந்தப் பக்கம் மட்டும் அடிக்கடி போட்டுவாறாய். ஆரேன் பறைச்சியளிலை ஆசை வைச்சிருக்கிறியோ.''

''ஓம். ஆர் இல்லையெண்டது.''



''ஆர் அந்தப் பறைச்சி, அவளை நான் கொன்று போடுவன்.''

''எல்லாப் பறைச்சியளிலையும் ஆசை வைச்சிருக்கிறன். எல்லாரையும் நீ கொன்று போடுவியோ.''

''ஏன் இப்படியெல்லாம் பேசிறாய்? உன்னை இப்பெல்லாம் பார்க்கவே முடிவதில்லை.''

''வீட்டுக்கு வந்தாப் பார்க்கலாந்தானே.''

''அன்னத்துக்கென்னைக் கண்டாலே பிடிக்குதில்லை.''

''ஏன் பிடிக்குதில்லை?அவள் அப்படி ஒருநாளும் என்னட்டைச் சொல்லேல்லை. நீதான் எங்கடை வீட்டை வாறத்தை விட்டிட்டதாக அண்டைக்கொருநாள் சொன்னாள்.''

''எல்லாம் இந்தக் கல்லுக் குச்சியாலைதான். இதைக் கழட்டித் தாறன். அவளுக்கு குடுத்துவிடு. அல்லது உனக்குப் பிடிச்ச எவளுக்காவது குடுத்துவிடு.''

கற்பகம் காதில் கையை வைத்துச் சுரையைக் கழட்டத் தொடங்கினாள். கழட்ட விடாது அவள் கையை அவன் பிடித்துக் கொண்டான். அவ்வேளை அவளின் கண்ணீர் துளி அவன் கையில் பட்டது. அவன் உடல் ஒரு கணம் சிலிர்த்தது.

## 39

மறுநாட் காலை சீனிவாசகத்தாரின் வீட்டுக்குச் சென்ற போது அவர் அவனுக்காகக் காத்திருப்பவர் போல எழுந்து வந்தார். அவரின் முகத்தைப் பார்க்க அவன் இப்போது விரும்புவதில்லை. வஞ்சகமும், சூதும் சுயநலமும் சுயகௌரவமும் உடல் முழுதும் நிறைந்த மனிதராகவே அவரைப் பார்த்தான். வீடு தொடக்கம் கிராமச் சங்கம் வரை அவர் காட்டும் வாழ்வு இவற்றையே பிரதிபலித்துக் கொண்டிருப்பதை அவன் கண்டான்.

''என்ன சேதி?''

ஆவலோடு கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நேரடியாக வந்து பேச்சு வார்த்தை நடத்தத் தயாராக இருப்பதை செல்லத்துரையன் தெரிவித்தான்.

''மாலை மூன்று மணிக்கு அழைச்சு வாறியா?''

''இங்கை எண்டால் வரமாட்டாங்கள்.''

''கிராமச் சங்கத்துக்கு.''

''சரி''

மூன்று மணிக்கு அவர்களையும் அழைத்துக் கொண்டு கிராமச் சங்கத்திற்குச் சென்றனர்.

சீனிவாசகத்தார் உட்பட நாலு கிராமச் சங்க அங்கத்தவர்கள், விதானையார் வல்லிபுரம் மற்றும் ஊர்ப் பிரமுகர் இருவர் இருந்தனர்.

சின்னான் தமது முடிவுகளைச் சொன்னான். அவற்றைச் சின்னட்டியன் ஆமோதித்தான். அவ்வேளை ஏற்பட்டிருந்த நிலையில் பார்த்தபோது அவை நீதியாகவே இருந்தன. அவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

''முந்தி நடந்ததையெல்லாம் மறந்திடுவம் சின்னான்.''

இராசையா கூறினார். அவர் பேச்சில் அடுத்த தேர்தலுக்கு இப்பவே தூபம் போடுவதை செல்லத்துரையன் மட்டுமல்ல சின்னான் வல்லியும் கண்டு கொண்டனர்.

''நாங்க மறந்திட்டுத்தான் வந்தனாங்கள்.''

சின்னான் அவருக்கு மேலால் தூக்கி ஒரு தூபம் போட்டான்.

இராசையா இருபத்தைந்து ரூபாவை எடுத்து நீட்டினார். மேளம் உடைந்ததற்கும், அடித்ததற்கும் மன்னிப்புக் கேட்பது போலிருந்தது.

அன்று மாலையில் மரங்களால் இறங்கியதும் கோப்பியை செல்லத்துரையனின் கையில் திணித்தபடியே சரஸ்வதி சொன்னாள்:

''அய்யாவும் நீயும் இப்ப ஐயக்கியமாகி விட்டியள் போலைத் தெரியுது.''

''ஆர் சொன்னது? அது இந்த யுகத்திலை நடக்கிறதாய் தெரியேல்லை.''



''இரண்டு பேரும் ஐக்கியமாய் கூட்டம் கூடுறியள்.''

'வெளியாலை பேசிறத்தைப் பார்த்து ஒரு நாளும் ஒருத்தரையும் ம்பிவிடப் படாது.''

''ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?''

''மனம்எண்டது ஒரு இருட்டுக் குகைபோலை. அங்கை எந்த மனுஷன் என்னத்தை வைச்சிருக்கிறான் எண்டு கண்டு பிடிக்கிறது கஷ்டம்.''

''ஏன் அய்யாவின்ரை மனக் குகையுக்கை என்ன கிடக்கு தெண்டு கண்டு பிடிச்சிட்டாய் போலையிருக்கு.''

''அதை முழுக்கக் கண்டு பிடிச்சிட்டா நீயே தற்கொலை செய்தாலும் நான் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒண்டு மட்டும் எனக்கு நல்லாத் தெரியும். அய்யா இந்த உலகத்திலை முதலில் கொலை செய்ய வேணுமெண்டு நினைக்கிற ஆள் ஒண்டு இருக்குமானால் அது நான்தான்.''

''ஏன் அப்பிடியெல்லாம் சொல்லுறாய்''

''உண்மையான படியாலைதான்.''

''அப்ப உன்ரை மனக் குகையுக்கை என்ன கிடக்கு?'?'

''அதை ஒருத்தராலும் கண்டுபிடிக்க முடியாது.''

அவன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

''நான் கட்டாயம் ஒருநாளைக் கெண்டாலும் கண்டு பிடிச்சிடுவன்.''

சிரித்துக் கொண்டே தன் பின்னலை மார்பிலே எடுத்து விட்டுக் கொண்டு சொன்னாள்.

''ஆளுக்கு விசர் வந்த பிறகுதான் முந்திக் கடிச்சது விசர் நாய் என்று ஆரூடம் சொல்லக் கூடியவர்களும் இருக்கிறார்கள்.'

அவன் மீண்டும் சிரித்துக் கொண்டே கள்ளு முட்டியையும் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். ஒன்றும் புரியாதவளாக சரஸ்வதி வாயில் வரை வந்து அவன் வெளியேறியதும் படலையைச் சாத்திக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் செல்லத்துரையன் பகல் சாப்பாடு முடித்துப் படுக்க வந்தபோதுதான் அன்னம் குடத்தையும் எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றாள். நாகி கடைக்குப் போயிருந்தாள். பல நாட்களாகவே அவனோடு பேசாத கதிரன் அன்று சொன்னான்:

''எலெக்ஷன்தான் வருகுதெண்டு அதுவும் வந்து போட்டுது. நீயும் கண்ணை மூடிக் கொண்டு சுத்தித் திரியிறாய். வீட்டிலை ஒரு குமர் இருக்கெண்டு கொஞ்சமாவது யோசித்துப் பார்க்கிறியா?''

''ஏனப்பு அப்பிடி நினைக்கிறியள்? என்ரை தங்கையை நல்ல இடத்திலை கட்டிக் குடுக்க வேணுமெண்டு எனக்கு மட்டும் ஆசையில்லாமலா போயிடும்.''

செல்லத்துரையன் தணிவாகவே பதில் சொன்னான்.

''ஏன் உன்னோடைதானே எத்தினை பெடியங்கள் சிநேகிதமாய் திரியிறாங்கள். அவங்களுக்கை நல்லவனாய் ஒருத்தனைப் பாத்துக்கேக்கலாமே.''

''ஆரை அப்பு நீ மனதிலை வைச்சுக் கொண்டு கேக்கிறாய்?''

''சின்னத்தம்பியன் நல்ல பெடியன்போலை கிடக்கு. அதோடை நல்ல உழைப்பாளி. உழைச்சு முன்னுக்கு வர வேணுமெண்ட துடிப்பிருக்கு. எட்டுப் பத்து மரத்தை ஏறிப் போட்டு வந்து பூனைத் தூக்கமாதல் போடாமல் பின்னேரம் மரமேற முடியாதெண்டு நீ கிடக்கிறாய். வேறை தோட்டந் துரவு நீ செய்யிறியா? அவன் பதினைஞ்சு இருபது பனை ஏறிப் போட்டு தோட்டமும் அதோடு இரண்டு தொட்டில் மாடும் வச்சிருக்கிறான். அவனெல்லோ ஆம்பிளை. நீ வாய்விட்டுக் கேட்டால் அவன் மாட்டனெண்டு சொல்ல மாட்டான்.''

ஆண்மை என்பதைப் பற்றி கதிரவன் கொண்டிருந்த தத்துவங்கள் அவர் வாயிலாக வெளிவந்தன.

''என்ன இருந்தாலும் இப்பிடி விஷயங்களை நான் வாய்விட்டுப் பழகிய சிநேகிதர்களிடம் கேக்க மாட்டன்.''

அழுத்தமான குரலில் அவன் கூறினான்.

''அப்ப அவள் குமராயே உனக்குச் சமைச்சுக் கொண்டு இங்கை கிடக்கட்டும். நீ உன்ரை விருப்பம் போலை நெடுகச் சுத்தித் திரியலாம்.''



''நான் எங்கை திரியறன்?''

''நீ கட்டாக்காலியாய் உங்கினை திரியிறதொண்டும் எனக்குத் தெரியாதெண்டு நினைக்காதை.''

கதிரன் குரலில் கடுமை இருந்தது. செல்லத்துரையனும் அவர் வாயால் அப்படிப் பேச்சை எதிர்பார்க்கவில்லை.

அன்னம் தண்ணீர்க் குடத்துடன் வந்து விட்டதனால் பேச்சு அத்தோடு தடைப்பட்டது.

## 40

செல்லத்துரையன் பாயில் கிடந்து புரண்டான். அவன் குடும்ப இன்பம், வளர்ச்சி ஒரு புறமாகவும் பள்ளர் பறையர் சமூகத்தின் வளர்ச்சி, சுபீட்சம் மற்றொரு புறமாகவும் இதயத்தைத் தாக்கிக் கொண்டிருந்தன. இரண்டில் எதையுமே கைவிட்டு விட முடியாதென உணர்ந்தான். வாழ்க்கை என்பதே இந்த இரண்டுக்குமிடையில் ஏற்படும் போராட்டமா?

மாதவனைச் சில நாட்களாக இரவிலே காண்பதே சிரமமாயிருந்தது.

''இராத்திரியிலை பதினொண்டு, பன்ரண்டி மணிக்கு வாறார். காலையிலையும் வழக்கம்போலை அஞ்சு அஞ்சரை மணிக்குப் போயிடுறார். அவரோடை வேலை செய்யிறவங்களெல்லாம் அப்பிடித்தான் இப்ப வந்து போறாங்கள்.''

தேடிச் சென்ற செல்லத்துரையனுக்குச் சீதை சொன்னாள்.

''பத்துப் பதினொரு மணி வரை அங்கை வேலையா? இல்லாட்டி ஒவ்வொரு நாளும் கூட்டம் வைக்கிறாங்களோ..''

''கூட்டம் போடுறாங்களாம். தோட்டியள் வீட்டையெல்லாம் ஊரூராய் திரிஞ்சு கள்ளுக்குடிக்க வேண்டாம், காசைச் சிலவழிக்க வேண்டாமெண்டெல்லாம் பிரசாரம் செய்யிறாங்களாம். என்னையும் கூப்பன் அரிசி காய்கறி தவிர வேறு எதையும் வாங்கப்படாதெண்டு கண்டிப்பாய் சொல்லி வச்சிருக்கிறார். இங்கையும் அவரோட வேலைக்குப் போறவங்களெல்லாம் குடிக்கிறதைக் குறைச்சுப் போட்டாங்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையனுக்கு எதுவும் சரியாகப் புரியவில்லை. யாவும் விசித்திரமாய் தெரிந்தது. மாதவனை ஓய்வாகக் கண்டு விபரம் யாவும் விசாரிக்க வேணுமெண்டு தீர்மானித்தான். அப்படியே திரும்ப இருந்தவன் ஆவல் உந்த சீதையையே கேட்டான்:

''எதுக்காக இப்பிடிவெல்லாம் செய்யினம்?''

''பெரிய வேலை நிறுத்தம் செய்யப் போயினமாம். அது முடியுமட்டும் கூலியே குடுக்க மாட்டாங்களாம்.''

வேலை நிறுத்தங்கள் பற்றி முன்னர் மாதவன் கூறியவை அவன் நினைவில் வந்தன.

யாழ்ப்பாணப் பட்டணத்திலே வேலை செய்கிற தோட்டிகளெல்லாம் வேலைக்குப் போகவில்லையென்றால்! அவனால் நினைத்துப் பார்க்கவே முடியாதிருந்தது. பட்டணமே நாறிப் போய்விடும். தோட்டிகளிடைலேயே எத்தனை வலிமையிருக்கு என்பதை அப்போதுதான் அவனால் உணர்ந்து பார்க்க முடிந்தது.

பத்து நாட்கள் கழித்துத்தான் மாதவனைக் காண முடிந்தது. அவன் இளைத்துப் போயிருந்தான். வேலை நிறுத்தம் பற்றிய செய்தியெல்லாம் சொன்னான்.

''எல்லாம் வெற்றிதானே?!'

செல்லத்துரையன் கேட்டான்.

''ஓரளவு வெற்றி எண்டுதான் சொல்ல முடியும். எல்லாம் ஒரே தடவையிலை கிடைச்சுவிட முடியுமா? இதே சந்தர்ப்பமாக தொழிற் சங்கத்தைப் பலமா அமைச்சிட்டம். தோட்டியளெல்லாம் தங்க பலத்தை அறியத் தொடங்கி விட்டாங்கள். அதுவே பெரிய வெற்றிதானே.''

''நீயில்லாமல் கொஞ்ச நாளாய் பொழுதே போகேல்லை. அடிக்கடி வந்து பார்த்திட்டுப் போனன்.''

''அப்பிடித்தான் சீதை சொன்னாள். இத்தினை நாளாய் எதுக்குமே நேரங்கிடைக்கேல்லை. ஊர்ப்புதினமே ஒண்டும் தெரியாது. உனக்குத்தான் தெரியுமே. சொல்லன்.''



''இங்கையும் பிரமாதமாய் ஒண்டும் நடக்கேல்லை.''

''சீனிவாசத்தார் எப்படியிருக்கிறார்?''

''அவர் அதே தன்நலப் புலியாகவே இருக்கிறார். சாகு மட்டும் அவர் அப்படியே இருப்பார். தன் சொந்த நலனுக்காக தன் மகளையே திருமணம் செய்து குடுக்காமல் கிழவியாக விட்டுக் கொண்டிருப்பவர். வேறு எவர் நலத்தையாவது என்றும் கவனிப்பாரெண்டு நினைக்கிறியா? இன்னும் நான் தான் அவரின் முதல் பகைவனாக இருக்கிறன். போதிய பணம் இப்போது அவரிடமில்லை. இருந்திருப்பின் என்னை இதுவரையில் கொலை செய்து புதைத்திருப்பார். ஆனால் இப்ப நான் அவரை வஞ்சம் தீர்த்து சமூக வாழ்விலிருந்தே ஒழித்துக்கட்டுவதாய் தீர்மானிச்சிட்டன்.''

செல்லத்துரையன் வெஞ்சினத்தோடு கூறினான்.

''இப்படிப்பட்டவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். எதிலையும் மாட்டி விடப் பாப்பாங்கள். எம்மைக் கொல்ல வரக் கூடிய தெண்டால் நாங்கள் முந்திறதிலை தவறில்லை, ஆனா மிக விழிப்பாயிருப்பதே நல்லது. இப்பவும் அங்கை மரத் தொழிலுக்குப் போறாய்தானே.''

''இன்னும் சில மாசத்துக்குத்தான். அதுக்குப் பிறகு மரம் தரமாட்டார். தந்தாலும் நான் ஏற்க மாட்டேன்.''

''அதுதான் நல்லது. எதிரி எண்டு தெரிஞ்ச பிறகு ஒட்ட வெட்டிச் சரிப்பதற்கு வேண்டுமானாலும் விழிப்போடு கிட்ட இருக்கலாம். இல்லாவிட்டால் எட்ட இருப்பதே நல்லது. பஞ்சதந்திரக் கதைகள் படிச்சிருக்கிறியா? அதைத்தான் நான் சொல்லுறன்.''

இருவரும் நீண்ட நேரம் பல்வேறு விஷயங்கள் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். சீதை இரண்டு மூக்குப் பேணிக்குள் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து வைத்திருந்தாள். செல்லத்துரையன் தேநீரைக் குடித்து விட்டு விடைபெற்றுக் கொண்டு எழுந்தான்.

அப்போதுதான் நினைவு வந்தவனாக மாதவன் சொன்னான்:

''பெரிய எலக்ஷன் நடக்கப் போகுது. கொழும்பிலை பாராளுமன்றத்தைக் கலைச்சு விட்டார்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41

பல நாட்களின் பின்னர், அன்று முன் பிறை நிலவில் வள்ளி செல்லத்துரையனைப் பிடித்துக் கொண்டாள். ஒருமுட்டி கள்ளை மரத்தடியில் வைத்துவிட்டு மறுமரத்தில் ஏறும் போது எடுத்து ஒளித்து வைத்து விட்டாள். அவன் மரத்தால் இறங்கி முட்டியைத் தேடிய போது அவள் முன்னே தோன்றி நகைத்தாள்.

''கள்ளி, கள்ளு முட்டியைக் கொண்டா..''

''நான் கள்ளியில்லை, வள்ளி.''

''சரி வள்ளி, கொண்டா முட்டியை''

ஆத்திரத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டான்.

''கொண்டராட்டா''

''அடிப்பன்''

வெருட்டினான்.

''அப்ப அடியுங்க.''

முகத்தை நீட்டிக் கொண்டே கிட்ட வந்தாள். கன்னத்தில் சாட்டுக்கு ஒரு அடி போட்டான்.

''இனி முட்டி தேவையில்லைத்தானே, போங்களேன்''

''பகிடியை விடு. நேரம் போட்டுது''

''நான் கேட்கிறதுக்கு முதலிலை பதில் சொல்லுங்க.''

''எலெக்ஷன் வருதாம். அதிலை நீங்க கேப்பியளா...?'' குழந்தை போல கேட்டாள்.

''இல்லை''

''ஏன்?''

''இது கொழும்புக்குப் போற பெரிய எலெக்ஷன்.ஆனா நான் கேக்கிறத்தாலை உனக்கென்ன வரப் போகுது''

''நீங்க அடுத்த எலெக்ஷனிலை வெல்ல வேணும்.''



''வெண்டால்''

''வெண்டால் நான் கேக்கிறது கிடைக்கும். போன முறை ஏமாந்து போனன்.''

''அந்தச் சாவல் கோழியை என்ன செய்தாய் எண்டு பிறகு நீ சொல்லேல்லை.''

''வைரவருக்கே வெட்டிப் போட்டம். அடுத்த எலெக்ஷனிலை நீங்க வெல்ல வேண்டுமன்று நேர்ந்து வெட்டி, கோழியை ஆறு ரூபாய்க்கு வித்துப் போட்டம்.''

''அந்தக் காசு எங்கை?''

''வைச்சிருக்கிறேன், எனக்கொரு மூக்குத்தி வாங்க வேணும். முந்தினது துலைஞ்சு போச்சு. பத்து ரூபாய் சேர்த்துத் தாறேன். பட்டணத்திலை வாங்கித் தருவியா?''

''மூக்கிலை ஓட்டை இருக்கா மூக்குத்தி போட''

''ஓம்''

''அதிலை இப்ப என்ன கிடக்கு''

''நாரத்தை முள்ளு''

''எங்கே பாப்பம்''

அவளின் மூக்கைப் பிடித்தான். அவள் திணறினாள். ''முட்டி தாறியா?''

''ம்ம்''

கதிராசி வீட்டுக்குச் சென்றபோது தாயும் மகளும் குதூகலமாகவே இருந்தனர். தேநீர் குடிக்கச் சம்மதித்தான். வாசல் பிட்டியில் உட்கார்ந்தான்.

''எலெக்ஷன் வருது, இனி உங்கபாடு அது முடியுமட்டும் வேட்டைதான்.''

செல்லத்துரை சொன்னான்.

''நீ கள்ளைக் கூட ஒழுங்காய் தாறாயில்லை.''

''கிடைக்கிறதெல்லாத்தையும் உங்களுக்குத் தானே தாறன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இது என்னத்தைப் போதும். கள்ளு விலையும் கூடினதாலை இப்பெல்லாம் கள்ளில்லாமல் சீனி சக்கரையிலேயே வடிக்கத் தொடங்கி விட்டினம். தரத்தை ஆர் இப்ப பாக்கினம். விலையைத்தான் கேக்கினம். நாங்களும் உன்ரை கள்ளிலை காய்ச்சிறதை மருந்துக்காறருக்காகத் தனிய வைச்சுக் கொண்டு சக்கரையிலும் கரைச்சு வைச்சுக் காச்சிறம்.''

கதிராசி சொன்னாள்

செல்லத்துரையனில் தன் மகன் இருந்த காலத்திலிருந்தே அவளுக்கு நல்ல நம்பிக்கை. அவன் ஒருவனுக்குத்தான் தன் தொழில் அலுவல்களைக் கூட தயங்காமல் அவள் கூறுவதுண்டு.

## 42

பாராளுமன்றத் தேர்தல் வெறி கிராமத்திலும் ஏறிக் கொண்டு வந்தது. அதையொட்டி கள்ளச் சாராயத்துக்கும் கள்ளுக்கும் மதிப்பு உயர்ந்து வந்தது. வேலையில்லாது சந்தி மதில்களிலிருந்து அரசியல் வீம்பும், வம்பும் அளந்து விட்டு குடும்பத்தார் உழைப்பை உறிஞ்சிக் கொண்டிருந்தவர்கள் இப்போது நேரடிக் கட்சி வாரியாகப் பிரிந்து தேர்தல் வெறியேற்றிக் கொண்டிருந்தனர். தேர்தலின் வாடை அவர்கள் வாயிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. அரசியல் கருத்து வேற்றுமைகளை சந்தி மதில்களிலேயே பேசிவிட்டு பின்னர் ஒன்று கூடி தேநீரோ, கள்ளோ, சிகரெட்டோ பரிமாறியவர்கள் தற்போது பகைவர்களாயினர். ஒருவரை ஒருவர் வெறித்துப் பார்த்துக் கொள்வது மட்டுமல்ல இடையிடை கை கலப்புகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கட்சிக் கொடி கட்டுவதிலேயும் சண்டை நடந்து கொண்டிருந்தது. இரவிலே மற்றக் கட்சியாரின் கொடியை அறுப்பது, தம் கொடியை அதே இடத்தில் ஏற்றுவது இரகசிமாக நடைபெறும். மறுநாள் அதைத் தொடர்ந்து வாய்ச்சண்டை நீண்டு கைச்சண்டையாகவும் மாறும். அதைத் தொடர்ந்து பழிக்குப் பழி மறுநாளிரவு.

தமிழர்களைக் காப்பாற்றி தலை நிமிர்ந்து நிற்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தோன்றிய தமிழ் காங்கிரஸ் கட்சியிலேயே



பாலசிங்கமும் முதல் தடவை தேர்தலில் நின்று வெற்றி பெற்றவர். தமிழ் காங்கிரஸ் தலைவரும் சிலரும் சிங்கள ஆட்சியினருடன் ஒன்று சேர்ந்ததும், பெரும்பான்மையோர் விலகி தமிழரசு என்ற கட்சியை அமைத்தனர். பாலசிங்கம் இதே கட்சியைச் சார்ந்தே மறுதடவை தேர்தலில் வெற்றி பெற்றார். அதே தமிழரசுக் கட்சியிலேயே மீண்டும் தேர்தலுக்கு நின்றார். தமிழினத்தையும் தமிழ் மொழியையும் நாட்டின் பெரும்பான்மையான சிங்களவர்கள் அழிக்கத் திட்டமிட்டு வருகிறார்கள். எம்மொழியையும் நாம் வாழும் பகுதியையும் உரிமையுடன் தனியே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று தமிழரசுக் கட்சி பிரசாரம் செய்து வந்தது. சிங்களவர்களுடன் ஒன்று சேர்ந்து நின்று நாம் எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தமிழ் கட்சி, சிங்களக் கட்சி ஏன்று இவை உருவம் பெற்றன. தமிழ் காங்கிரஸ் சார்பாக சென்ற தடவை தோல்வியடைந்த புரக்டர் கதிரவேலு இத்தடவையும் போட்டியிட்டார்.

இவ்விரண்டு கட்சிகளும் வகுப்புவாத முதலாளிகள் கட்சி என்று சொல்லிக் கொண்டு கம்யூனிஸ்டு குமாரசாமியும் மூன்றாவதாளாக போட்டியிட்டார். குமாரசாமியை மாதவனும் செல்லத்துரையனும் பறையர் பள்ளர் குடிசைக்கெல்லாம் அழைத்துச் சென்று வோட்டுப் போடும்படி வேண்டினர்.

வேளாளரில் பெரும் பகுதியினர் தமிழரசுக் கட்சியை ஆதரித்தனர். பள்ளர் பறையரில் பெரும்பான்மையோர் குமாரசாமி பக்கமாக நின்றனர். வேளாளர் வாயில் கம்யூனிஸ்ட் கட்சி 'பள்ளர் பறையர் கட்சி'யாக மாறியது. பள்ளரில் ஒரு பகுதியினர் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிப்பதாக இருந்தனர்.

மோதல் யாவும் 'தமிழ்' கட்சிக்கும் 'சிங்கள'க் கட்சிக்கும் இடையே நடைபெற்று வந்தது. கூட்டங்கள், ஊர்வலங்கள், வாய்ப்போர்கள் யாவும் தேர்தல் நாளை ஒட்டி உச்ச நிலைக்கு வளர்ந்து வந்தன.

குரும்பையூரில் பல குடும்பங்கள் கள்ளச் சாராயம் வடிப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தன. தேர்தல் அவர்களுக்கெல்லாம் நல்ல வருவாயைத் தேடிக் கொடுத்தது. அவர்களின் வீடுகளெல்லாம் விடிய விடிய அடுப்பெரிந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேர்தல் போல் வேகமாக முன் எத்தேர்தலும் நடைபெற்ற தில்லை என்று ஊரில் பேசிக் கொண்டனர். தேர்தலை யொட்டி பெரிய மாற்றங்கள் நாட்டிலே ஏற்படலாம் என்று எதிர்பார்த்தனர்.

தேர்தல் திருவிழா நாள் வந்தது. அங்கு எதிர்பார்த்தது போல் தமிழரசுக் கட்சி அபேட்சகர் பாலசிங்கமே மீண்டும் வெற்றி பெற்றார்.

''எங்கள் சிங்கம்''

'பாலசிங்கம்''

சுலோகமாக கத்தியபடி தெருவெல்லாம் ஊர்வலம் நடைபெற்றது.

நாடு பூராவும் தேர்தல் முடிய ஒருவாரம் எடுத்தது. மூன்று நாள் தேர்தல்.

''மக்கள் ஐக்கியக்கட்சி எலெக்சனிலை வெற்றி பெற்றிருக்கு. கனக்க மாற்றங்கள் வரும். முதலாளிக் கட்சி ஒழிஞ்சு போச்சு'' என்று மாதவன் செல்லத்துரையனிடம் மகிழ்ச்சியோடு சொன்னான்.

நாட்டில் பெரிய மாற்றங்கள் சில ஏற்பட்டன. தமிழர்களைப் பொறுத்தவரையில் அவூர்களது மொழியுரிமை பாதிக்கப்பட்டதால் மனம் நொந்து போயிருந்தனர். அதையொட்டி அசம்பாவிதமான சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

## 43

**மா**தவன் அன்றன்று பட்டினத்தில் படிக்கும் செய்திகளைச் செல்லத்துரையனுக்குச் சொல்லி வந்தான். அதன் மேல் அங்கு பத்திரிகை படிப்பவர்களே அந்தப் பகுதியில் இல்லை. அவர்களுக் கெல்லாம் நாள் முழுவதும் வேலையிருந்தது. அவர்களுடைய கலியாணங்கள், செத்த வீடுகள், அடிபிடி சண்டைகள் எஞ்சிய நேரத்திற்கு இருந்தன. ஆட்டுக்கிடாய் வளர்ப்பது அவர்கள் பொழுதுபோக்கு. கிராமத்தில் நாலு வைரவர் கோவில்கள் இருந்தன. அவற்றில் வேள்விகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. வேள்வியன்று பெரிய விழாவாக இருக்கும். கோவில் வீதிகளில் இரத்த ஆறு ஓடும். ஒரு கிடாய் வெட்டுவதற்கு இரண்டு ரூபா கோவில் முதலாளிக்குக் கொடுக்க வேண்டும். கிடாய் வெட்டில் சாதி பார்ப்பதில்லை. காசு



கொடுத்தவர் படி 'கியூ' வரிசையில் கிடாய்களை நிறுத்துவர். ஒருவன் காலை இழுத்துப் பிடிக்க மற்றவன் தலையைப் பிடிக்க முத்தையன் பூசையிலிருந்து எடுத்து வந்த கத்தியால் ஒரே வெட்டு. முத்தையனுக்கு கிராமத்திலே நல்ல பெயர். எந்தப் பெரிய கிடாயானாலும் ஒரே வெட்டு. ஒரே வெட்டுக்குத் தப்பிய கிடாய் எதுவும் இல்லை.

கோவில் வீதியெல்லாம் கிடாய்களும், தலைகளுமாக போர்க்களம் போல காட்சியளிக்கும். சந்தை போல விலை பேசி வியாபாரம் நடைபெறும். மொத்த வியாபாரம், தரகுத் தொழில் யாவும் நடைபெறும். பிற ஊர்களிலிருந்து வண்டில்களும் கார்களும் சந்தைக்கு அதிகாலையிலேயே வந்து சேர்ந்துவிடும். பொழுது ஏறத் தொடங்க வண்டில், கார்கள் திரும்பத் தொடங்கி விடும். தலையிழந்த கிடாய்கள் தொங்காத வண்டிகளை தெருவிலே காண முடியாது. கார்களின் பின்புறத்தில் இரண்டு மூன்று கிடாய்களாவது இருக்கும்.

''ஆலயங்களில் உயிர்ப்பலி ஆகாது.''

''கோவில்களைச் சந்தையாக்காதீர்கள்''

இவை போன்ற சுலோகங்களை சந்திச் சுவர்களில் காணலாம்.

கோவில்களில் கிடாய் வெட்டுவதை தவிர்ப்பதற்காகவும் சிலர் பாடுபட்டே வந்தனர். அவர்களின் குரல்களை கோவில் முதலாளிகள் செவிமடுப்பதில்லை. ஒரு கிடாய் பலியிடுவதற்காகக் கிடைக்கும் இரண்டு ரூபா பணத்தைக் கைவிட அவர்கள் தயாராயில்லை.

பென்சன்கார சீனிவாசகத்தார், விதானை வல்லிபுரத்தார் ஆகியோர் கோவில் முதலாளிகள் பக்கமே நின்றனர்.

வேள்வியென்றால் அவர்கள் வீடெல்லாம் தீபாவளி போன்ற கொண்டாட்டம். எண்ணெய் தேய்த்த முழுக்கு, சாராயம், இறைச்சியோடு விருந்தெல்லாம் தடல்புடல். சீனிவாசகத்தார் தமது கொண்டாட்டத்திற்காக பிற ஊர் நண்பர் சிலரையும் அழைத்து விடுவார். சரஸ்வதிக்கு வீட்டில் ஒரே வேலையாயிருக்கும். அன்று அவள் முகத்தில் ஒரே சோர்வு. இப்போதெல்லாம் அவள் முகத்திலே ஒளியைக் காண்பதே அபூர்வம். யந்திரம் போல் வீட்டு வேலைகளைச் செய்வாள்.

மாலையில் நண்பர்களுடன் சீனிவாசகத்தார் சினிமா பார்க்க பட்டணம் போய்விட்டார். செல்லத்துரையன் வரவை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளநார் மரத்தில் உராய்ந்த சத்தம் கேட்டதும் சரஸ்வதி வெளியே வந்தாள்.

''சொல்லாமல் போய் விடாதை''

சரஸ்வதி மரத்தை நோக்கிக் குரல் கொடுத்தாள்.

மரத்தால் அவன் இறங்கி வந்ததும் ஒரு இலையோடு பொரித்த இறைச்சித் துண்டுகளைக் கொண்டு வந்து கொடுத்தாள். அவன் வாயிலே ஒவ்வொரு துண்டுகளாகப் போட்டு சுவைத்துக் கடித்தான்.

''நல்ல பொரியல்.''

அவள் முகத்திலே ஒரு கணம் ஒளிவீசி மறைந்தது.

''அடுத்த வேள்விக்கு நீ எங்கை வரப் போகிறாய்? அய்யா இனி எங்கை மரம் தரப் போறார்? எண்டாலும் நான் உயிரோடை இருந்தால் நீ வா. இறைச்சியாதல் தராமலா விடப் போறன்.''

''ஏன் பிள்ளை அப்படிச் சொல்லுறாய்.''

''பிள்ளை பிள்ளை எண்டு என்னைக் கூப்பிட வேண்டாம் எண்டு எத்தனை நாள் சொல்லுறன்.''

''அய்யா எங்கை.''

''படம் பார்க்கப் போலை போட்டார்.''

''உன்னை விட்டுட்டா..''

''எனக்கு இப்ப படமே பிடிக்கிறதில்லை.''

''எத்தினை மணிக்கு வருவர்.''

''அவரிப்ப வெல்லாம் சாராயமாகவே குடிச்சுக் கொண்டு திரியிறார். அதோடை வருத்தம் வேறை. ஒழுங்காக நேரத்துக்கு வீட்டையும் வாறேல்லை. என்னைக் கூட தலைநிமிர்ந்தும் பார்க்கிறதில்லை.'

''முட்டியன் இஞ்சை கிடக்கட்டும். நான் பிறகு வந்தெடுக்கிறேன்.''

கோவில் பங்குக் கிணத்தடிக்குச் சென்றபோது அங்கே வள்ளி காத்திருந்தாள்.



''எப்படி வேள்வி?''

செல்லத்துரையன் கேட்டான்.

''உங்களுக்கு இறைச்சியும் சோறும் குழைச்சு வைச்சிருக்கிறன்.''

''இப்ப எனக்கு வேண்டாம்!''

''ஏன் வேண்டாம்?''

''வயிறு நிறைஞ்சு போச்சு.''

''வேறையும் ஆரிட்டையேன் வாங்கித் திண்டியளோ?''

''ஓம்''

வள்ளிக்கு ஒரே ஏமாற்றம். ஆத்திரமும்பொங்கி கொண்டு வந்தது.

''ஆரிட்டை....''

''அதேன் உனக்கு''

''அவள் கற்பகத்திட்டையா''

செல்லத்துரையன் முகத்தில் அறைந்தது போல் இருந்தது. தீயை மிதித்தவன் போல் திரும்பிப் பார்த்தான்.

''என்ன சொல்லுறாய்?''

அதட்டிக் கேட்டான்.

''அவள் மேலைதானே உங்களுக்கு இப்ப ஆசை. அவளுக்குத்தானே கல்லுப்போட்ட குச்சி வாங்கிக் கொடுத்தியள். நான் காசு தந்து எத்தினை நாளாய் போச்சு, மூக்குத்தி கூட இன்னும் வாங்கித் தரேல்லை.''

வள்ளி விம்மி விம்மி அழுதாள். செல்லத்துரையன் இவ்வித நெருக்கடியை எதிர்பார்க்கவில்லை. சுற்றவரப் பார்த்தான். எவருமில்லை. அவளை எப்படி ஆற்றுவதென்று சிறிது நேரம் ஒன்றும் தெரியாது குழம்பினான்.

''இதெல்லாம் உனக்கு ஆர் சொன்னது?''

''ஏனுங்களுக்கு அதை. இது பொய்யா? அவள்தானே எல்லாருக்கும் சொல்லித் திரியிறாள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுக்குப் போட்டியாகவா நீ மூக்குத்தி கேட்டாய். எனக்குத் தெரியாமல் போட்டுது.''

அவள் பணம் கொடுத்த போதும் அதுவரை நாளும் அசட்டையாக இருந்ததற்காக அப்போதுதான் கவலைப்பட்டான். அவளின் விம்மலும் அழுகையும் ஓயவில்லை.

''இப்படிப் போட்டியெண்டு தெரிஞ்சிருந்தா நான் மறுநாளே வாங்கித் தந்திருப்பன். அவள் காசு தந்தாள். வாங்கிக் கொடுத்தன். உனக்கு நல்லதாய் செய்துதரச் சொல்லி தட்டானிடம் காசு கொடுத்திருக்கிறன், நாளைக்கே எடுத்துத் தாறன்.''

''எனக்கு இனி வேண்டாம். அதையும் எடுத்து அவளுக்கு குடுங்கோ.''

''சரி கொடுத்திடுறன்.''

அச்சுறுத்துவதுபோலக் கூறினான். அவள் அழுகை மேலும் வலுத்தது.

''நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேக்கிறியா.''

''இனிக் கேக்க என்ன இருக்கு?''

''சரி உன்ரை சோத்தைக் கொண்டாவன் சாப்பிடுறன்.''

''அவளின்ரை சோத்தைத் திண்டுதானே உங்கடை வயிறு நிறைஞ்சு போச்சே.''

''அவளின்ரை சோறு திண்டதெண்டு ஆர் சொன்னது. நீ தானே சொல்லுறாய்.''

''அப்ப ஆற்றை சோறு திண்டியள்.''

''வீட்டிலை எங்கடை சோறு.''

''அப்பிடி ஏன் முந்திச் சொல்லேல்லை.''

அவள் அழுகை சிறிது ஓயத் தொடங்கியது.

''நீ சொல்ல விட்டால்தானே, சரி போய் கொஞ்சச் சோறு கொண்டு வா.''



கண்ணீரை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டே வாய்க்கால் வழியே குடிசையை நோக்கி ஓடினாள்.

இருள் சூழ்ந்து விட்டது. பிறை நிலவின் மெல்லிய ஒளி படர்ந்து கொண்டிருந்தது. அவன் பல்வேறு சிந்தனைகளுடன் மரங்களை ஏறி முடித்தான்.

வள்ளி வாடிய வாழையிலையில் கொண்டு வந்த குழைத்த சோற்றை வயிற்றிலே தள்ளினான். அவளுக்கும் ஒரு தடவை ஊட்டி விட்டான். குனிந்த தலையை நிமிர்த்தாது வெட்கம் சூழ வாயில் வைத்து அசை போட்டாள்.

அவள் கொண்டு வந்த கப்பல் வாழைப் பழத்தை உரித்து ஒரு கடி கடித்து விட்டு அவள் வாயுள் மிகுதியைத் திணித்து விட்டு முட்டிகளுடன் புறப்பட்டான்.

புயல் ஓய்ந்த அமைதி, பல நாட்களாக வெந்து கொண்டிருந்த அவள் நெஞ்சில் பால் வார்த்தது போன்ற குளிர்மை ஏற்பட்டது.

கற்பகம், வள்ளி, சரஸ்வதி மூவரும் அவன் இதயத்தில் மாறி மாறித் தோன்றிப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரே இருள், சீனிவாசகத்தார் வீட்டில் கள்ளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றபோது ஒன்பது மணிக்கு மேல் ஆகிவிட்டது.

அன்னம் சாப்பிட வரும்படி அழைத்தாள்.

''எனக்குச் சாப்பாடே வேண்டாம்.''

## 44

மேலைக் கழுவி உடுப்பை மாற்றிக் கொண்டு மாதவனிடம் சென்றான்.

மாதவன் தான் செல்லத்துரையனுக்கு இலங்கை, உலகச் செய்திகள் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பான். அவற்றைக் கேட்டு நாட்டு நிலைமைகள், மாற்றங்களை அறிவதில் அவனுக்கு ஆர்வம் ஏற்பட்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஆங்கிலேயர் வைத்திருந்த போர்த் தளங்களை அகற்றுவது, கூப்பன் அரிசியின் விலையை கொத்துக்கு பத்துச் சதம் குறைத்திருப்பது, தொழிற் சங்கங்களின் விரிவான வளர்ச்சியை அரசாங்கம் ஆதரிப்பது பற்றியெல்லாம் விளக்கமாகக் கூறுவான். செல்லத்துரையனால் எல்லாவற்றையும் உடனுக்குடன் புரிந்து கொள்ள முடிவதில்லை. உலகச் செய்திகளையும் செல்லத் துரையனுக்குப் புரியத்தக்க விதத்தில் மாதவன் சொல்லி வந்தான்.

சப்பிரத் திருவிழாவன்றும், தீர்த்தத் திருவிழாவன்றும் நல்லான் பற்றி எல்லோரும் பேசிக் கொண்டனர். அவன் இறந்த போதும் அவன் நினைவு எல்லோர் மனதிலும் வாழ்ந்து கொண்டிருந்தது நன்கு தெரிந்தது.

தீர்த்தத் திருவிழாவிற்கு செல்லத்துரையனும் போயிருந்தான்.

மேளச்சமா நடந்தபோது ஆங்காங்கே கூட்டங் கூட்டமாக இளைஞர்களும் முதியவர்களும் நின்று அரசியல் பேசிக் கொண்டு நின்றனர். கொழும்பிலிருந்து திருவிழாவிற்காக வந்திருந்தவர்கள் சொல்லும் செய்திகளை எல்லோரும் ஆவலாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். தேர்தலின் பின் அங்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களைச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

கொழும்பிலிருந்து வந்த தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் ஆவேசமாகப் பேசியது செல்லத்துரையன் காதிலும் விழுந்தது:

'அங்கை தமிழன் குறைஞ்சவன் எண்டு எங்களை அடிச்சுக் கலைக்கப் பாக்கிறாங்கள். நாங்களும் இங்கை குறைந்த சாதி எண்டு சொல்லி தமிழரிலையே ஒரு பகுதியினரை ஒதுக்கிக் கொண்டு வாறம். அவங்களும் இப்ப மகாசபை எண்டு அமைச்சு சிங்களவரோடை சேரப் பாக்கிறாங்கள். கொம்யூனிஸ்டுகளுக்கு வோட்டுப் போடுறாங்கள். இப்பிடிப் பிரிவினைக்கு நாங்கள் இடங்குடுத்தால் தமிழினமே அழிஞ்சுபோம். நாங்களும் கோவில்களையும், ஒட்டல்களையும் திறந்துவிட்டு சாதி பேதம் காட்டாமல் ஒற்றுமையாய் வாழ வேண்டும்.''

கேட்டுக் கொண்டிருந்த யாவருக்கும் அக்கருத்துச் சரி போலவே தோன்றியது. தலையசைத்து ஆமோதித்தனர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருகிழவர் அவன் முன்னே வந்தார்.



''அப்பதம்பி பள்ளர் பறையரோடை சமபந்தி போசனம் செய்யச் சொல்லுறியா. நாளைக்கு சம்பந்தமும் பேசிக் கொண்டு வருவாங்கள், நீ போய் செய்வியா தம்பி தெரியாமைக் கேக்கிறன்.''

நளினமாகக் கிழவனார் கேட்டார். எல்லோரும் வாயடைத்து நின்றனர். அவன் மட்டும் சளைக்கவில்லை.

''அங்கை உங்கடை சாதிக்காரங்கள் சிங்களத்தியளைக் கட்டிறாங்கள். எங்கடை தமிழ் சாதீக்கை அப்பிடி ஒருத்தியைக் கட்டினால்தான் என்ன. உம்மடை வீட்டை நான் செம்பும் தண்ணியும் எடுக்க வரேல்லை.''

எல்லோரும் சிரித்தனர். கிழவனாருக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. வயதுக்குக் கூட மதிப்பு கொடுக்காது பேசிவிட்டானே என்று சீறினார்.

''அப்ப நாளைக்கு உங்கடை வீட்டை பறையர் பெண் கேட்டு வருவாங்கள், குடுங்கோ.''

அவரை மேலும் அங்குபேசவிடாது மற்றொரு கிழவர் இழுத்துச் சென்றார்.

திருவிழாவால் திரும்பும்போது சின்னத்தம்பியனும் முருகேசனும் சேர்ந்து கொண்டனர்.

''திருவிழாவுக்கு வரேக்கை உன்னையும் கூட்டிட்டு வாறதுக்காக வீட்டை வந்தம். மரஞ்சீவிப் போட்டு அப்பவும் நீ வரல்லை எண்டு அன்னம் இவனிட்டை சொல்லிச்சுதாம். அன்னம் உன்னட்டைச் சொல்லேல்லையா?''

முருகேசன் கேட்டான்.

''சொல்லேல்லையே. ஒருக்கா மறந்திருப்பாள்.''

பதில் சொல்லிய பின் செல்லத்துரையன் நாவைக் கடிந்து கொண்டான். அவள் மறந்திருக்க முடியாது. வேணுமென்றே சொல்லாது விட்டிருக்கலாம் என்றும் மனம் சொல்லியது. முன்பும் ஒருமுறை இப்படி நடந்தது அவன் நினைவில் வந்தது. கோபத்தோடு அவன் கேட்க மறந்துவிட்டதாக அவள் பிள்ளையாரைக் கொண்டு சத்தியம் செய்தாள். அவன் பேசாது விட்டுவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையன் மனதில் திடீரென மின்னல் வீசியது. வீட்டிற்கு வந்து படுத்தான்.

மறுநாட் காலையில் அவன் அன்னத்தின் மேல் சீறி விழவில்லை. அவளைப் பார்த்து மனதிற்குள் சிரித்துக் கொண்டான். எதுவுமே கேட்கவில்லை.

முருகேசன் மூலம் அன்றிரவு சின்னத் தம்பியனின் மனநிலையை அறிந்து கொண்டான். அவன் நினைத்தது சரியாகவேயிருந்தது. கதிரனின் 'ஆண்மகன்' சின்னத் தம்பியனே.

ஆகவே முறைப்படி சின்னதம்பியனின் தாயிடம் சென்று பேசி கலியாணத்திற்கு ஏற்பாடு செய்தான்.

ஒரு நாளிரவு அயலவர் சிலருக்கு மட்டும் அறிவித்துவிட்டு சின்னதம்பியனை அழைத்து வந்தனர். அச்சிறிய குடிசையின் அறைக்குள்ளே புதுப்பானையில் ஆக்கிய சோறை அவள் குழைத்து அவனுக்குக் கொடுத்தாள். அவள் கொடுத்த குழையல் உருண்டைகளை அவன் சாப்பிட்டான். அன்னத்தின் கழுத்தில் முடிச்சுகள் போட்ட கழிநூலைக் கட்டிவிட்டான்.

''சோறு கொடுத்தல்' என்று அவர்களிடையே பேசப்படும் திருமணச் சடங்குகள் அத்துடன் முடிவுற்றன.

## 45

மறுநாள் அன்னம் அங்கில்லை. செல்லத்துரையன் சிறகொடிந்தவனானான். தாய் ஆக்கி வைப்பதைச் சாப்பிட்டு வந்தான்.

தாய்க்கு சமையலுக்கு உதவுவதைச் சாட்டாக வைத்துக் கொண்டு கற்பகம் அங்கு அடிக்கடி வரத் தொடங்கினாள்.

அன்று காலையில் மரமேறிக் களைத்துப் போய் பசியோடு வீட்டுக்கு வந்தான். வீட்டில் ஒருவருமில்லை.ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

''ஆச்சி, எணை ஆச்சீ'' என்று கத்தினான்.



கற்பகம் சிரித்துக் கொண்டே வந்து அடுக்களைப் படலையை தள்ளிக் கொண்டே நுழைந்தாள்.

''என்ன பசிச்சிட்டுதோ, வாவன் சாப்பிட''

சிறிது கோபம் வந்தது, ஆயினும் அவளின் சிரிப்பிலும் அசைவிலும் அது கணத்தில் ஆறிவிட்டது.

''ஆச்சி எங்கை போட்டுது.''

அமைதியாகக் கேட்டான்.

''நீ வந்தால் சாப்பாடு போடச் சொல்லிப் போட்டு முச்சந்திக்கு மீன் வாங்கப் போட்டுது.''

தன் வீட்டில் பரிமாறும் உரிமையோடும் குழைவோடும் அவள் பரிமாறினாள். ஒரு கோட்டையைக் கைப்பற்றிய பூரிப்பும் செருக்கும் அவள் சிரிப்பில் விளையாடின.

ஒடியல் புட்டை இலைத்துண்டில் போட்டு உதிர்த்து விட்டாள். அதன் மேல் பழைய குழம்பை ஊற்றி விட்டாள்.

''புட்டையும் நீதான் குழைச்சியோ.''

''இந்த மீன் குளம்புக்குக் கூட்டுக்கூட நான்தான் அரைச்சுக் குடுத்தன். அன்னத்தாள் போன பிறகு நீ சாப்பிட்டதெல்லாம் நான் சமைச்சதெண்டு உனக்குத் தெரியாதா.''

''நல்லாய் தெரியுமே.''

''எப்பிடித் தெரியும்?''

''உப்புப் புளியிலை தெரியுமே, நான் இத்தனை நாளாய் ஆச்சி இப்பதான் சமையல் பழகுதெண்டு பேசிக் கொண்டிருந்தன். இப்ப நீதான் பழகினாய் எண்டு தெரியுது.''

''அன்னத்தாளிலும் பாக்க எனக்கு நல்லாய் சமைக்கத் தெரியும்.''

கற்பகத்தின் பேச்சில் கோபம் தொனித்தது.

''ஆரில்லை எண்டது. தன்னைப் புகழாக கம்மாளனில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்ப செம்பாட்டு வள்ளீன்ரை சமையல்தான் இப்ப பிடிக்கும் போலை கிடக்கு. அப்ப அவளைக்கூட்டி வந்து சமைக்கிறதுதானே.''

ஆத்திரத்தோடு கூறிவிட்டு அவள் எழுந்தாள். செல்லத்துரையன் ஒரு கணம் திகைத்து விட்டான். திரும்பி இடது கையால் அவளைப் பிடிப்பதற்கிடையில் அவள் திமிறிக் கொண்டு போய் விட்டாள்.

''கற்பகம்'' என்று கூப்பிட முயன்றான். நா எழ முன் சாப்பாடு விக்கி விட்டது. அதன் மேல் சாப்பிட முடியவில்லை. வெளியே வந்து முற்றத்துப் பானையைச் சரித்து கையை அலம்பினான். கையில் ஏந்திஒரு முடறு தண்ணீரைக் குடித்தான்.

நாகி அப்போது தலையில் ஓலைப் பெட்டுகளோடு பூவரசம் இலையில் சுற்றிய திரளி மீன்களுடன் வந்தாள்.

''ஏன் தம்பி சாப்பிட்டியா? பாத்துப் பாத்திருந்திட்டு நீ வந்தா சாப்பாடு போடும்படி கற்பகத்திட்டை சொல்லிப் போட்டுத்தான் போனன். அவள் வரேல்லையா, அந்தப் பெட்டைதான் இப்ப கொஞ்சம் உதவி. வயதுபோன நேரத்தில் எத்தனையை எண்டு என்னால் செய்ய முடியும்?''

''அவள்தான் வந்து போட்டிட்டுப் போட்டாள். அதுகளை மூடிவையெணை.''

செல்லத்துரையன் பாயை விரித்துப் படுத்துக் கொண்டான்.

சிறிது நேரம் கழித்து நாகி மேற்குப் புறத்தை நோக்கிக் குரல் எழுப்பினாள்.

''கற்பகம், கற்பகம்''

செல்லத்துரையன் படுத்திருந்தபடியே கண்களை விழித்து மேற்குப்புற வேலியைப் பார்த்தான். வேலிப் பொட்டுக்கால் குனிந்து கற்பகம் அமைதியாக வந்து கொண்டிருந்தாள். முகத்தில் கோபம் தணிந்திருந்தது. ஆயினும் சாப்பாடு போட வந்திருந்த போதிருந்த குதூகலமும் சிரிப்புமில்லை. அவளைக் காணாதவன் போல கண்களை மூடிக் கொண்டே படுத்திருந்தான்.



சமையல் நடைபெறும் அரவம் கேட்டுக் கொண்டிருந்தது. இருவரும் பேசிக் கொள்வதும் கேட்டது.

''நாங்கள் அரைக்கிற கூட்டு உங்க பிள்ளைக்குப் பிடிக்குதோ தெரியாது.''

கற்பகம் சொல்லியது அவன் காதில் விழுந்தது.

''அவனுக்கு ஏன் பிடிக்காது? பிடிக்காட்டாத்தான் என்ன. எனக்கும் அவருக்கும் நல்லதாய் பிடிக்குது. அன்னத்தின்ரையிலும் நல்லாயிருக்கெண்டு அவர் சொன்னார்.''

நாகி கற்பகத்தை உயர்த்திப் பேசினாள்.

## 46

செல்லத்துரையன் சீனிவாசகத்தார் வீட்டில் மரமேறுவதை நிறுத்தி மூன்று மாதமாகி விட்டது. கள்ளுச் சீவும் லைசென்சு காலம் முடிந்து விட்டது. சீனிவாசகத்தார் புது மரத்தைக் கொடுக்கவோ, லைசென்சைப் புதுப்பிக்கவோ விரும்பவில்லை. அவனும் அவரைக் கேட்கவில்லை. மரங்கள் கிடைக்குமென்று தெரிந்திருந்தால் சரஸ்வதியே பெற்றுக் கொடுத்திருப்பாள். சீனிவாசகத்தாருக்கும் கள்ளில் நாட்டம் குறைந்துவிட்டது. சாராயத்தையே குடித்துக் குடித்து மயக்கத்தில் கிடந்தார்.

மரமேறுவதை விட்ட ஓரிரு வாரத்தில் இரு தடவைகள் மட்டுமே அவன் அங்கு சென்றிருந்தான். ஒரு தடவை தனக்குச் சொந்தமான முட்டிகளை எடுப்பதற்குச் சென்றிருந்தான். மறுமுறையும் அங்கு வரச் செய்வதற்காக அவன் பட்டணம் செல்லும் போது சரஸ்வதி கத்தரிப்பூ நிறத்தில் பின்னல் நூல் வாங்கி வந்து தரும்படி சொல்லியிருந்தாள். சீனிவாசகத்தார் இருக்கும் போதே அவன் சென்றுநூல் கட்டைகளைக் கொடுத்து வந்தான். அப்போது அவளால் எதுவும் பேச முடியவில்லை. அவள் முகம் சோபையிழந்து உடல் இளைத்துப் போயிருந்ததைக் கண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று காலையில் தூக்கத்தால் அருண்டதும் முதல் செய்தியாக நாகி அவனிடம் சொன்னாள்:

''சீனிவாசக்கமக்காரன்ரை மேள், வீட்டுக் கிணத்துக்கை விழுந்து செத்துப் போச்சாம்.''

செல்லத்துரையனின் இதயம் ஒருகணம் அதிர்ந்தது. அப்படியே எழுந்து பாயில் உட்கார்ந்து விட்டான். சிந்தனை சக்கரம் போல் சுழன்று கொண்டிருந்தது. கண்கள் சூனியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. சிந்தனை முற்றி முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

''என்ன தம்பி, அப்படியே இருக்கிறாய், கோப்பியைக் குடியன் ஆறிப்போச்சு.''

நாகியின் பேச்சு அவன் நிலையை உணர்த்தியது. ஒரு மிடறு கோப்பியால் வாயை அலசிக் கொப்பளித்துவிட்டு மிகுதியைக் குடித்து முடித்தான். எதன் மேலும் அவன் நாட்டம் செல்லவில்லை.

''அந்தக் கமக்காரன் காலா காலத்திலை ஒரு கலியாணத்தைக் கூடக் கட்டி வைக்கேல்லை, அந்தப் பிள்ளைக்கு. அது உயிரை மாய்க்கத்தான் விழுந்திருக்கும். ஏன்ரா தம்பி உனக்குத்தானே கூடத் தெரியவேணும். நாளுக்கு ரண்டுதரம் வருசக் கணக்காகப் போய் வந்தனி. தேப்பனோடை கோவிச்சுக்கொண்டுதான் விழுந்துதோ, இல்லாட்டி ஏதாவது தவறுகிவறாய் நடந்துதான் வழியில்லாமல் விழுந்துதோ. குமராயிருந்தே கிழவியாகிறதெண்டா கஷ்டந்தானே. இப்பிடி ஒண்டு நடந்திட்டு தெண்டால் ஊரிலை ஒண்டாய் பத்தாய் கதைக்காமல் விடப் போகுதுகளா.''

செல்லத்துரையன் எதுவுமே பேசவில்லை. எழுந்து முகத்தைக் கழுவி சேட்டைப் போட்டுக் கொண்டு புறப்பட்டான்.

வழியிலே மேலும் செய்திகள் வந்து கொண்டிருந்தன.

''கிணத்துக்காலை எடுத்துப் போட்டினம். கண் கொண்டே பார்க்க முடியேல்லையாம். பேரப்பிள்ளைகளைப் பார்க்க வேண்டிய வயதிலையே குமராயிருக்கிற தெண்டால் சும்மாவா..''

மரமேறி முடித்துவிட்டு வந்து கொண்டிருந்த பரமன் சொன்னான்.



சுடலை ஒழுங்கை முகப்பிலே நல்லான்தாய் வெள்ளைச்சிநின்றாள்.

''என்ரை பிள்ளையை அடிச்சுக் கொண்டவங்கள் பக்கம் நிண்ட ஒரு குடும்பமும் வாழாது. விதானையானும் அங்கைதான் நிக்கிறானாம். கீறிச் சோதிக்காமல் கெதியாய் சவமெடுக்க ஆயித்தப்படுத்து கிறாங்களாம். ஏதோ பிழைபாடாய் அந்த பிள்ளை நடந்திருக்க வேணும். இல்லாட்டி ஏன் இப்பிடி அவசரப்படினம். கொழும்பிலை யிருக்கிற சகோதரிப்பெட்டியையும் கூப்பிடாமல் சவம் எடுக்கிறதா?'

வெள்ளைச்சி தன் மனக்கொதிப்பையும் சேர்த்துக் கொட்டினாள்.

செல்லத்துரையன் நிலைமையை ஓரளவு உணர்ந்து கொண்டான். பயம் அடங்கி பச்சாத்தாப உணர்ச்சி தலையெடுத்தது.

தண்ணீர் அள்ளும் போது கிணற்றில் தவறி விழுந்திறந்த சா வீட்டில் துக்கம் விசாரிக்கச் செல்பவன் போல் தயங்காது காலை முன் வைத்தான். தன் மேல் சீனிவாசகத்தாருக்குச் சந்தேகம் ஏற்பட்டாலும் வாய் திறக்க மாட்டார். வாய் திறந்தால் அவர் மானமே போய்விடும் என்பதையும் அவன் அறியாமலில்லை.

எத்தனையோ மாதங்களாக உரிமையோடு திறந்த படலையை அப்போது தயக்கத்தோடும் மனக் கூச்சத்தோடும் திறந்தான். உள்ளே அவனை வரவேற்க எவருமில்லை. சாவீட்டுக்குரிய சம்பிரதாயங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. வீட்டு விறாந்தையில் கட்டிலின் மேல் வெள்ளைத் துணியால் மூடியபடி பிணம் இருந்ததைப் பார்த்தபோது மனம் பதைக்கச் செய்தது.

அருகே போய் பார்க்க உரிமையில்லை. பார்க்காமல் இருப்பதையே அவனும் விரும்பினான்.

தலையில் கையை வைத்தபடி நாற்காலியில் கால்களையும் மடித்தபடி உட்கார்ந்திருந்த சீனிவாசகத்தார் ஒரு தடவை திரும்பிப் பார்த்தார். புதிரான ஒரு பார்வை, புரிந்து கொள்ள முடியாத பார்வை. ஒரு கணம் மட்டும் அவன் மேல் நிலைத்தது. பின்னர் அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

பந்தல் எழுப்பும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போதுதான் பறைமேளம் கொட்ட ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையன் ஒரு தடவை, தான் ஏறிய மரங்களை அண்ணாந்து பார்த்தான். பின்பு சரஸ்வதியைப் பார்த்தான். பழைய நினைவுகள், அவளின் பல்வகையான சுபாவங்கள், குரல்கள், தந்த உணவுகள் யாவும் மாறி மாறித் தோன்றி இதயத்தை பொருமச் செய்தன. கண்கள் அவனையறியாது துளிர்த்தன. எவரும் காணாத விதமாகத் துடைத்துக் கொண்டான். மனச்சாட்சியும் போரிட்டுக் கொண்டிருந்தது. அதன்மேல் அவனால் அங்கு நிற்க முடியவில்லை. அப்படியே வெளியேறினான்.

## 47

அன்று மரங்களே சீவவில்லை. ஒரு சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். புறப்படும்போது எதிரில் கண்ட பையனிடம் தான் பின்னேரம் வராவிட்டால் மரங்களைச் சீவி விடும்படி சின்னத்தம்பியிடம் செய்தி அனுப்பினான். எங்கே செல்கிறோம் என்ற எண்ணமேயில்லாது சைக்கிளை உழக்கினான். வேகமாக உழக்கினான். அவனையறியாமலே சிந்தனை உறுத்த வேகம் இடையிடை தடைப்பட்டது. எதிரே வரும் வாகனங்களையே கவனித்து ஒதுக்கி ஓட முடியவில்லை. நெஞ்சம் இடையிடை விம்மிப் பொருமி உடைந்தது. கண்கள் கலங்கி எதிரே யாவும் மங்கலாகத் தெரிந்தன.

பலாலியை நோக்கி ஓடிக் கொண்டிருப்பது நினைவில் வந்தது. பனைக்கூடல் ஒன்றைத் தாண்டியபோது பிளா ஒன்று தொங்கியதைக் கண்டான். கள்ளுக் கொட்டில் எங்கே என்று சுற்றுமுற்றும் பார்த்தான். பனைக் கூடலின் உள்ளே ஒரு குடிசையின் முன்னிலையில் முட்டிகள் இருப்பது தெரிந்தது. இறங்கி சைக்கிளை உருட்டியபடியே நடந்தான்.

கள்ளிறக்கியபோதும் அவன் குடிப்பது மிக அரிது. மயக்கம் வரும் வரை குடித்து மனத் துன்பத்தை மறக்க வேண்டும் போல் தோன்றியது.

மன அருவருப்போடு கண்ணை மூடிக் கொண்டே கள்ளைக் குடித்தான். இன்பத்திற்கு மதுவருந்துவதுபோல அவன் எண்ணிக் கொள்ளவில்லை. நோய் தீர மூக்கைப் பிடித்துக் கொண்டு மருந்தை விழுங்கும் குழந்தை நிலையிலேயே இருந்தான்.



சிறிது நேரம் வானத்தில் பறப்பது போன்ற ஒரு உணர்ச்சி. மீண்டும் சைக்கிளில் ஏறி உழக்கிக் கொண்டேயிருந்தான்.

கீரிமலை வந்துவிட்டது. சைக்கிளை ஓரிடத்தில் வைத்து உடுப்புகளையும் அதில் கட்டி விட்டு கடலிலே இறங்கி நீந்தினான். தலையை தண்ணீரிலே தோய்த்துத் தோய்த்து எடுத்தான். மனநிலை மாறவில்லை. கள் வெறி முற்றாக முறிந்ததும் மீண்டும் மனநிலை மோசமடைந்து வந்தது. காலை தொடக்கம் நண்பகலாகியும் பசியே எடுக்கவில்லை. இதுவரையில் பிரேதச் சடங்குகள் முடிந்திருக்குமா?

உலகத் துன்பமெல்லாம் தன் தலையில் சேர்ந்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. வேட்டியை கட்டி சேட்டைப் போட்டுக் கொண்டு மீண்டும் சைக்கிளில் ஏறினான்.

கடற்கரையோரமாக தென்னந் தோட்டத்திலிருந்த கள்ளுக் கொட்டில் ஒன்றில் நுழைந்தான். மீண்டும் விழுங்க முடிந்தளவை வயிற்றுள் செலுத்தினான். மன அமைதி ஏற்பட்டது போன்ற ஓர் உணர்வு. மீண்டும் சைக்கிளில் ஏறினான். உடல் சோர்ந்த போதும் சிந்தனை சோரவில்லை. மயக்கநிலை சிறிது தெளியத் தொடங்கியதும் மீண்டும் சரஸ்வதியின் நினைவே தலையெடுத்தது. இதுவரையில் சுடலைக்கு எடுத்துச் சென்றிருப்பார்கள். கொள்ளிக் கட்டையில் சவப் பெட்டியை வைத்திருப்பர்.

யாழ்ப்பாணப் பட்டணத்திற்கு வந்து சேர்ந்துவிட்டான். சாராயத் தவறணைக்குச் சென்று குடிக்க முடிந்தவரை குடித்தான். சைக்கிளை உருட்டிக் கொண்டே முனியப்பர் கோவில் வரை நடந்தான். சைக்கிளை வைத்துவிட்டு பூவரச மர நிழலில் சோர்ந்து போய் உட்கார்ந்தான்.

இதுவரையில் கொள்ளி வைத்திருப்பார்கள்.

எல்லோரும் சுடலையை விட்டு கிளம்பியிருப்பர். தீ மூண்டு எரிந்து கொண்டிருக்கும். அதன் சுவாலை நாக்குகள் சரஸ்வதியையும் சிசுவையும் பசியாறிக் கொண்டிருக்கும்!

மீண்டும் நினைவு வந்தபோது பொழுது சாய்ந்து விட்டது. எதிரே தெரிந்த சினிமாத் தியேட்டரின் முன் ஒரே கூட்டம். அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டான். தனியே ஓடி வந்த ஆறுகடலுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்பதுபோல் மனித கூட்டத்துடன் சேர்வதிலும் ஒரு சாந்தி இருப்பதாக உணர்ந்தான்.

தியேட்டருள்ளே ஒரே கூட்டம்; வியர்வை, கலகலப்பு, கைதட்டல்கள், திரையில் காட்சிகள் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. கடலலையிடையே அகப்பட்டு மறைந்து மறைந்து தோன்றும் தெப்பக் கட்டை போல சரஸ்வதியின் நினைவும் இடையிடை மேலெழுந்து கொண்டிருந்தது.

சினிமா முடிந்து வெளியேறிய போது நாவரண்டு போயிருந்தது. சிறிது பசியும் எடுத்தது. உடம்பு சோர்ந்து போயிருந்தது.

சைபிக்கிளில் ஏறிப் புறப்பட்டான். ஆரிய குளச்சந்தியில் திறந்திருந்த தேநீர் கடையில் நுழைந்து இடியப்பம் சாப்பிட்டு தேநீர் குடித்தான்.

பசிநடுக்கமும் சோர்வும் சிறிது நீங்கியது போன்ற உணர்வு ஏற்பட்டது. சைக்கிளில் ஏறி ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

## 48

வீட்டுக்குவந்தபோது யாவரும் தூங்கி விட்டனர். அவன் பாயை திண்ணையில் விரித்து விட்டு அப்படியே சாய்ந்து விட்டான். உடற்சோர்வு மனத் துன்பத்தை ஆட் கொண்டது.

சில நாட்களாக அவனால் நேரத்திற்கு உணவு உண்ணவே முடியவில்லை. அமைதியின்றி அலைந்தான். வேலைகளைச் செய்வதிலும் ஊர்சுற்றி நண்பர்களைப் பார்ப்பதிலும் நேரத்தைக் கழித்தான். இரவில் மாதவனுடன் நீண்ட நேரமிருந்து உரையாடி விட்டு வந்து படுத்துக் கொள்வான். அதிகம் உழைத்த உடற்சோர்வினால் தூக்கத்தை வரவழைத்துக் கொள்வான்.

நாட்கள் செல்லச் செல்ல மனம் ஓரளவு ஆறுதலடைந்து வந்தது. பல நாட்களாக அவன் வீட்டில் தங்கும் நேரமே மிகக் குறைவு. சாப்பிடுவதும் அருமையாகவே இருந்தது. நாகி காணும் போதெல்லாம் ஏசிக் கொண்டேயிருந்தாள்.



அன்று காலை மரம் ஏறிவிட்டு வீட்டுக்கு வந்திருந்தான். தாயைக் காணவில்லை.

''ஆச்சீ, ஆச்சீ''

குரலெழுப்பினான். மேற்கு வேலிக்கரைப் பொட்டைப் பார்த்தான். அவன் எதிர்பார்த்தபடி கற்பகம் வந்து கொண்டிருந்தாள்.

அவளின் கோபங்கள் ஆறியிருந்தது முகத்தில் தெரிந்தது. ஆயினும் தன் மனத்தின் குதூகலத்தை அடக்கிக் கொண்டு எதுவும் பேசாது சென்று அடுக்களைப் படலையை அவிழ்த்தாள்.

''நான் ஆச்சியையெல்லே கூப்பிட்டன்.''

''ஆச்சி என்னட்டைச் சொல்லிவிட்டுத் தோட்டத்துக்குப் போட்டா.''

''என்ன சொல்லிவிட்டு''

''நீ வந்தால் சாப்பாடு போடும்படி.''

''எனக்குச் சாப்பாடு வேண்டாம்.''

''என் சமையல்தானே உனக்குப் பிடிக்காது. இண்டைக்கு ஆச்சிதான் சமைச்சது. வாவன் சாப்பிட..''

''உன்ரை சமையல் பிடிக்காதெண்டு ஆர் சொன்னது.''

''நான் சமைக்கிறதெண்டுதானே இப்ப கொஞ்ச நாளாய் சாப்பிடாமல் திரியிறியள்.''

''ஆர் இப்பிடியெல்லாம் சொலித் தந்தது''

''நீதானே அண்டைக்குச் சொன்னாய்''

''நான் பகிடிக்குச் சொல்ல நீதானே வள்ளியைக் கூட்டி வந்து சமை எண்டு போட்டு ஓடினாய்''

''என்ரை சமையல் உண்மையாய் பிடிச்சுதா''

''உண்மையாய்''

''சத்தியமாய்''

''சத்தியமாய்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் முகத்தில் பெருமிதம் ஒளிர்ந்தது.

''அப்ப வாவன் சாப்பிட''

''எனக்குப் பசிக்கேல்லை''

''அப்ப ஏன் கூப்பிட்டியள்''

''உன்னைப் பார்க்க''

''பொய்''

''ஆச்சியைக் கூப்பிட்டா நீ வருவாய்யெண்டு தெரியும்''

''இப்ப என்ன வேணும்?''

''கோப்பி''

''கோப்பி போட்டுத் தாறன். எனக்காகக் கொஞ்சம் சாப்பிடுங் கோவன்.''

''சரி உனக்காக கொஞ்சம் சாப்பிடுறன்.''

குனிந்தபடி உள்ளே நுழைந்தான்.

ஓலைப் பெட்டியைக் கவிழ்த்து அதன்மேல் சிறு இலைத் துண்டை வைத்து தண்ணீரைத் தெளித்து கையால் தடவினாள். பின்னர் இடியப்பத்தைப் போட்டு சொதியை விட்டாள். சம்பலையும் அள்ளிப் போட்டு விட்டு பழைய கறி ஏதாவது இருக்குமா என அடுக்கியிருந்த சட்டிகளைத் திறந்து பார்த்தாள். ஒரு சட்டியிலிருந்த முருங்கக்காய் கூட்டுக்கறி முழுவதையும் வழித்துத் துடைத்துப் போட்டாள்.

அவன் சாப்பிட கற்பகம் மறுபக்கம் திரும்பி நீறுபடர்ந்திருந்த நெருப்பைக் கிளறி விறகு சுள்ளிகளை வைத்து நெருப்பை மூட்டினாள். முட்டியில் மெல்லிய சூடாக இருந்த தண்ணீர் போதுமா என்று திறந்து பார்த்தாள். பின் செல்லத்துரையன் பக்கம் திரும்பி அவன் சாப்பிடுவதைப் பார்த்தாள்.

''நீ மெலிஞ்சு போனாய். வீட்டை வந்து ஒழுங்காய் சாப்பிடுறதில்லை என்று ஆச்சி சொல்லி மனவருத்தப்பட்டுது.''

அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.



''உன்ரை பொட்டும் சட்டையும் நல்லாயிருக்கு.''

''உண்மையாச் சொல்லுறியா..''

''பொய்யா சொல்லுறன்''

''ஒண்ணு கேக்கிறன், கோவிக்க மாட்டியே''

''நான் ஏன் கோவிக்கிறேன், ஒண்டென்ன எத்தினையும் கேளு.''

''நெடுநாளாய் கேக்க இருந்தன். அந்த வள்ளி மேலை உனக்கு ஆசையா''

இப்படியான கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. எப்படிப் பதில் சொல்வதென்றே தெரியவில்லை. சாப்பாட்டை விழுங்குவது போல் ஒருகணம் பாவனை செய்தான்.

''ஆர் சொன்னது?''

அதட்டுதலாய் கேட்டான். கேள்வியிலேயே பதில் இருப்பதாக கற்பகம் எடுத்துக் கொண்டாள்.

''நான் சும்மா கேட்டேன். அதுதானே, ஒரு செம்பாட்டுப் பள்ளி மேலை நீ ஆசை வைக்கிறதாஎண்டு வம்பளந்தவைகளுக்கு நான் சரியான சூடு குடுத்தன். உனக்குச் சொல்ல வேண்டாமெண்டு மன்றாட்டம் கேட்டாளவை. பேரை மட்டும் கேக்காதை.''

தன் மனதில் ஏற்பட்ட சந்தேகத்தை தீர்த்துக் கொண்ட ஒரு திருப்தி அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அப்பேச்சை எடுத்ததற்காக அவளே வருந்துவதாகத் தெரிந்தது.

செல்லத்துரையன் தான் இலகுவில் தப்பிக் கொண்டதாக உணர்ந்தான்.

''இன்னும் ஒரு இடியப்பம் போடட்டா, கறிதான் முடிஞ்சு போச்சு, சட்டியிலை போட்டுப் பிரட்டித் தாறன்.''

பேச்சை மாற்றிவிட்டு, கொதித்த தண்ணீரை குவளையில் ஊற்றிக் கோப்பியைக் கலந்தாள்.

சிறிது நேரம் மௌனம் குடி கொண்டிருந்தது. செல்லத்துரையன் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தான். தன் மனதில் குமுறிக் கிடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவையும் அப்பொழுதே கொட்டிவிட வேண்டுமென்று அவள் மனம் குறுகுறுத்தது.

''உன்னைப் பற்றி இவளவையெல்லாம் எப்பிடி வம்பளக்கிறாளவை தெரியுமா? நான்தான் அவளவையின்ரை வாயை அடைச்சுவாறன். அண்டைக்குக் கிணத்துக்கை விழுந்து செத்துதே வெள்ளாடிச்சி. சீனிவாசகக் கமக்காரன்ரை மேள். அதுக்கு வயித்திலை பிள்ளையாம். அதுதானாம் கிணத்திலை விழுந்து செத்ததாம். அதோடை கூட உன்னைத் தொடுப்பு வைச்சுப் பேசிறாளவை, என்னால எப்பிடித்தாங்க.. முடியும்''

அதன் மேல் வார்த்தைகள் வரவில்லை. வாயும் நெஞ்சும் அடைத்துக் கொண்டது, விம்மி அழுதாள்.

'ஆர் எப்பிடி யெண்டாலும் கதைத்திட்டுப் போகட்டன். நீ ஏன் அழுகிறாய்?''

அவன் வார்த்தைகள் ஆறுதலாயிருந்தது. அவள் தன் சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்து மூக்கைச் சீறினாள்; நெஞ்சப் பாரம் இறங்கிய உணர்ச்சி.

கோப்பியை ஆற்றி, குவளையோடு கொடுத்தாள்; அவன் ஊதி ஊதி உறிஞ்சினான்.

''நல்ல கோப்பி''

''அன்னத்தின்ரையிலும் பார்க்கவா!''

''எல்லாற்றையிலும் பார்க்க..''

''அந்த வெள்ளாடிச்சி உனக்கு ஒவ்வொருநாளும் கோப்பி தாறவளாம், அதிலும் பார்க்கவா!''

''செத்துப் போனதுகளின்ரை பேரை ஏன் இழுக்கிறாய்? எல்லாற்றையிலும் பார்க்க எண்டு சொல்லுறன். போதாதா.''

சிறிது கடுகடுப்போடு சொன்னான்.

''உனக்கெல்லாம் இப்ப கெதியாக்கோபம் வருது. ஏனெண்டு தெரியேல்லை.''



''எனக்கு இந்த விழல் கதையெல்லாம் பிடிக்காது.''

எழுந்து வெளியே வந்து இலையை வீசிவிட்டு கையை அலம்பினான். வேட்டித் தலைப்பால் வாயைத் துடைத்துக் கொண்டு நின்றான். அடுக்களைப் படலையைச் சாத்தி விட்டு அவளும் வெளியே வந்தாள்.

''முந்தியெல்லாம் ராதிரியிலை அடிக்கடி கூப்பிடுவாய். இப்பெல்லாம் திரும்பிப் பாக்கிறதேயில்லை, அதுதான் வேறையெங்கையேன் ஆசை வைச்சிருக்கிறியோ எண்டு பயந்தன்..''

வருத்தத்தோடு வார்த்தைகள் வெளிவந்தன. பெருவிரல் நிலத்தைக் கீறிக் கொண்டிருந்தது. பற்கள் நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தன.

''ராத்திரிக்குக் கூப்பிடுறனே..''

''கட்டாயம் காத்திருப்பேன். பெரிய கல்லாலை வேலிக்கு எறியாதையுங்கோ. நாய் குலைக்கும். சின்னக்கல்லுப் போட்டாலே போதும். நான் வந்திடுவன். அடுப்பிலை சோறு அடிப்பிடிச்சிருக்கும். நான் போறன்.''

உள்ளக் கிளர்ச்சியுடன் மான் போல் அவள் துள்ளிக் கொண்டு ஓடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த அழகு மறைய இதயத்தில் ஊசி ஏறியது போன்ற உணர்வு ஒரு கணம் தோன்றி மறைந்தது.

## 49

**சுன்னாகச் சந்தையால் திரும்பி வந்த கதிரன் சொன்னான்:**

''கொழும்பிலே கலம்பகமாம். வாழைக்குலை புளுத்த மலிவு, கொழுபுக்கனுப்ப வாழைக்குலையை ஒருத்தனும் வாங்கேல்லை. றெயிலே ஓடேல்லையாம். டேசனுக்குக் கொண்டு போன பொயிலைச் சிப்பமெல்லாம் திருப்பிக் கொண்டு போயினம்.''

ஊரெல்லாம் அதே பேச்சாயிருந்தது. ''கொழும்பிலை தமிழ் கடையெல்லாம் உடைச்சுக் கொள்ளையடிச்சுப் போட்டாங்கள்; தமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடெல்லாம் எரிச்சு, தமிழரையெல்லாம் அடிச்சுக் கலைக்கிறாங்களாம். பட்டணத்திலையும் பரபரப்பாய் கிடக்குது,''

பட்டணத்திலிருந்து வந்த ஒரு கிழவர் தெருவிலே சொல்லிக் கொண்டிருந்தார்.

செல்லத்துரையன் மாதவன் வரவைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனும் பிந்தியே வந்து செய்திகளைச் சொன்னான்.

''கொழும்பிலையிருந்து சரியான செய்தி ஒண்டும் வரேல்லை. ஒவ்வொருத்தரும் பயங்கரமாய் கதைக்கிறாங்கள். பட்டணத்திலையும் சிங்களவர் கொஞ்சப் பேருக்கு அடிச்சப் போட்டாங்கள். புத்த கோயிலைக் கூட உடைச்சுப் போட்டாங்கள். பொலிசுக்காரர் சிங்களவரெல்லாரையும் குடியெழுப்பி கோட்டைக்குள்ளே பாதுகாப்பாய் விடுகினம். அரசாங்கம் ஊரடங்குச் சட்டம் போட்டிருக்கு. ராத்திரியிலை ஒருத்தரும் தெருவிலை போகக் கூடாது.''

கிராமத்திலே என்றும் அறியாத செய்திகளாயிருந்தன. இரண்டாவது உலகயுத்த காலத்திலும் அவர்கள் காணாத விஷயங்கள் நடைபெற்றன. தெருவெல்லாம் பட்டாளலொறிகள் இரைந்து கொண்டு சென்றன. இரவெல்லாம் பயங்கரமாயிருந்தது. எல்லோரும் பொழுதுபட முன்னர் வேலைகளை முடித்துவிட்டுத் திரும்பினர். இரவிலே தோட்டங்களில் இறைப்பதே நின்று விட்டது. தெருக் கடைகளையெல்லாம் மாலையிலேயே அடைத்துவிட்டனர். சந்திமதில்களிலிருந்து இரவிரவாக அரட்டையடித்து ஊர்வம்பு பேசுவதெல்லாம் நின்று விட்டது. கோவில் பூசைகளெல்லாம் மாலையிலேயே முடிந்து வந்தன. பாடசாலைகளெல்லாம் பாதி நேரத்தோடு பூட்டப்பட்டன.

சில நாட்களில் கொழும்பிலிருந்து கப்பல்களில் அகதிகளைக் கொண்டு வந்து இறக்கினர். அவர்களைப் பார்ப்பதற்கு பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கடற்கரைக்கு கிராமத்திலிருந்தும் பலர் சென்றனர். கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் உள்ள தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. சரியான செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை. பத்திரிகைகளில் அரசாங்க அறிக்கைகள் மட்டுமே வெளிவருவதாகப் பேசிக் கொண்டனர்.



கொழும்பிலேயும் பிற சிங்களப் பகுதிகளிலும் உல்லாச வாழ்வு வாழ்ந்தவர்கள் வெறும் கையுடனும், சிலர் கையிலே ஒரு சூட்கேசுடனும் மட்டும் வந்திறங்கினர். பிறந்த ஊர்களையே மறந்து கொழும்பிலே குடியேறியிருந்த பலர் 'இனிமேல் திரும்புவதேயில்லை' என்ற உறுதியுடன் வந்திருந்தனர்.

கடற்கரைக்கு தமது உறவினரைத் தேடி வந்து கப்பலில் காணாது ஏமாந்து கவலையுடன் பலர் திரும்பினர். சிலர் அழுதனர். வந்தவர் மூலம் செய்திகளை விசாரித்துக் கொண்டனர்.

கப்பல் பிரயாணத்தின் கஷ்டத்தைப் பற்றிச் சொல்லிப் பலர் வருந்தினர்.

பல சோகக் கதைகளும், பயங்கர சம்பவங்களும் அவர்கள் வாயிலிலிருந்து வெளிவந்தன. அவர்கள் பேச்சில் பயமும் பீதியும் எதிரொலித்தது.

இரண்டாவது உலகயுத்தம் முடிந்ததும் மலாயாவிலிருந்து வந்தவர்களின் வீடுகளுக்கு சுகம், செய்திகள் விசாரிக்க ஊரெல்லாம் திரண்டது. அதேபோல் கிராமத்திலும் கப்பல்மூலம் வந்தவர்கள் வீடுகளுக்கு ஊரார் பலரும் சென்று வந்தனர்.

சீனிவாசகத்தாரின் இரண்டாம் மகள் மகேஸ்வரியும் பஞ்சலிங்கத்தோடு வந்திருந்தாள். சரஸ்வதி செத்த போதே சீனிவாசகத்தார் அவளுக்கு அறிவிக்கவில்லை. அவசர அவசரமாகச் சவத்தை எடுத்துவிட்டார்.

''அவள் முந்தியே செத்துவிட்டாள்'' என்று சொன்னாராம். அவர் நேரடியாக அறிவிக்காததினால் அவளும் வரவில்லை. பஞ்சலிங்கம் வீட்டிலிருந்தே செய்தி மறுநாள் மகேஸ்வரிக்கும் கிடைத்ததாம். அங்கேயே அழுதுவிட்டு இருந்து விட்டாள்.

தனி வாழ்க்கை ஆரம்பித்த பின்னர்தான் சீனிவாசகத்தாருக்கு பிள்ளைகளின் அருமை தெரிந்தது. சரஸ்வதி இறந்ததோடு அவர் வாழ்க்கையே முடிந்து விட்டதாக எண்ணிக் கொண்டார். வெளியில் தலை காட்டவும் அவர் விரும்பவில்லை. தன் சுய நலத்திற்கேற்ற பலன் கிடைத்து, தான் அனுபவிப்பதாக உணர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இனி சூரிய நமஸ்காரம் செய்து பயனென்ன? என் வாழ்க்கையும் இத்தோடு முடிந்து விட்டது'' என்று சொல்லிக் கொண்டே சாராயத்தைக் குடித்துக் கொண்டே வீட்டிற்குள் கிடந்தார்.

தூரத்து உறவான கிழவியொருத்தி வந்து சமைத்துப் போட்டதை பசி நினைவு வரும்போது சாப்பிட்டுக் கொண்டு கிடந்தார்.

மகள் ஊருக்கு வந்த செய்தி அறிந்தபோது அவர் மனதில் சிறு புத்துணர்ச்சி ஏற்பட்டது. பேரப்பிள்ளையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலும் உந்தியது. பஞ்சலிங்கம் வீட்டுக்குச் செல்ல அவர் விரும்பவில்லை.

அவரைச் சுகம் விசாரிக்க வரும் சாட்டாக, அவர் வழமையாக குடிக்கும் ஸ்பெஷல் வடி சாராயத்தைச் சுவைத்துப் பார்க்க இடையிடை வந்து செல்லும் சின்னராசா அன்றும் வந்திருந்தான். சின்னராசா மகேஸ்வரியின் பேச்சை எடுத்தபோது அவரும் தமது விருப்பத்தை மறைமுகமாகக் காட்டி விட்டார்.

''நான் வரச் சொன்னதாக நேரடியாகச் சொல்லாதை. அவளாகவே வரத்தக்கதாகக் கதைச்சு விடன்.''

அன்று மாலையே சின்னராசா மகேஸ்வரியைக் கண்டு சாதுரியமாகப் பேசினான்.

''தாயைத் தின்னியான உன்னையும் அக்காவையும் தனிய வைச்சு வளத்துப் படிப்பிச்சவரல்லே. இப்ப கொக்காவையும் பறிகுடுத்து நோயாளியாய் படுத்துக் கிடக்கிறார். கொக்கா செத்ததுக்காலாதல் துக்கம் விசாரிக்க நீ அந்த வீட்டை போக வேணுமல்லே. அவர் பல்லுப்பிடுங்கின புலி தானே இப்ப. நீ பயப்பிடாமல் போகலாம்.''

பஞ்சலிங்கம் எதிர்ப்பு ஒன்றும் கூறவில்லை. பிள்ளையும் கையுமாக மகேஸ்வரி புறப்பட்டாள். நோக்கமறிந்து வீட்டுக்குள் செல்வோம் என்று பஞ்சலிங்கம் படலையோடு நின்று கொண்டு மகேஸ்வரியை உள்ளே அனுப்பினான்.

அடிமேலடி வைத்து மகேஸ்வரி உள்ளே நுழைந்தாள். பழைய நினைவெல்லாம் நிழலாடின. தமக்கையோடு விளையாடிய சம்பவங்கள், சண்டை பிடித்த நாட்களெல்லாம் மனத் திரையில்



தோன்றின. ''மகேஸ், வா'' என்று வரவேற்று குழந்தையைப் பறித்துக் கொஞ்ச அக்காவில்லை என்று நினைத்தபோது மனம் பொருமி நெஞ்சையடைத்தது. கலகலப்பாக ஒரு காலம் இருந்த வீடு சோபையிழந்து, பேய் குடிகொண்ட வீடாகத் தெரிந்தது. இருவருமாகச் சேர்ந்து தண்ணீரூற்றி வளர்த்த பூஞ்செடிகள் கருகிப் போயிருந்தன. சில பூஞ்சட்டிகள், செடிகள் எதுவுமின்றி மண்ணோடு சரிந்து போய் கிடந்தன.

படிக்கட்டில் ஏறி உள்ளே நுழைந்தாள். 'ஈசிசெய'ரில் கால்களை மடித்தபடி சுருண்டுபோய்க் கிடந்த சீனிவாசகத்தார் அரவம் கேட்டு விழித்துப் பார்த்தார். ஏதிரே மகள் பேரனை அணைத்தபடி நின்று கொண்டிருந்தாள்.

பார்வைகள் மோதின. சில கணங்கள் ஒரே மௌனம்.

''அய்யா.. அக்கா..'

நெஞ்சுப் பாரம் தாங்க முடியாது நிலத்திலே விழுந்தாள்.

''பிள்ளை.. மகேஸ்..''

அவரும் விம்மத் தொடங்கினார். குழந்தையை நிலத்திலே கிடத்தி விட்டு அவர் காலைப் பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். சீனிவாசகத்தாரும் மனமுடைந்து அழுதார். சரஸ்வதி செத்த அன்று கூட அப்படியாக அவர் அழவில்லை.

சத்தம் கேட்ட அயலவர்களும் வந்து கூடினர்.

அழுகை ஓய சிலநேரம் சென்றது. பொருமிய உள்ளங்கள் உடைந்து உருகி ஒன்று சேர்ந்தன.

சீனிவாசகத்தார் குழந்தையைப் பெருமையோடு தூக்கி வேடிக்கை காட்டினார்.

''அப்பா எங்கையடா''

பேரனைக் கேட்டார்.

''படலையடியில் நிற்கிறார்.''

அயல் வீட்டுக்காரி சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே வரும்படி சொல்லியனுப்பினார்.

பஞ்சலிங்கம் தயங்கித் தயங்கி வந்தான். நாற்காலியில் உட்காரும்படி வேண்டினார்.

கொழும்புச் செய்திகள் பற்றி விசாரித்தார்.

''கொழும்பு ரௌடிகளெல்லாம் பறைத்தமிழர் எண்டு கூப்பிடுறாங்கள். தமிழர் மேலை வெறுப்பேற்படுத்தி விட்டாங்கள். பொலிசார் அசட்டையாயிருந்தாங்கள். சந்தர்ப்பம் கிடைச்சதும் காடையர் கடையளை உடைச்சு கொள்ளையடிச்சாங்க. மிலிட்டரி வந்ததும் எல்லாம் அடங்கிப் போச்சு. எண்டாலும் நிலமை திருந்த கொஞ்சக் காலம் செல்லும்.''

பஞ்சலிங்கம் தன் கருத்தைச் சொன்னான்.

## 50

கொழும்புக்குப் பகல் வண்டி ஓடத் தொடங்கியது. கடிதங்கள், தந்திகள் போய்வரத் தொடங்கின.

நிலமை நாள்தோறும் சீரடைந்து வந்தது. ஊரடங்குச் சட்டமும் சிறிது சிறிதாகத் தளர்த்தப்பட்டது.

செல்லத்துரையனுக்கு மாதவன் நாள்தோறும் செய்திகளை விரிவாகச் சொல்லி வந்தான்.

''கொழும்பிலே கலம்பகம், சாதிக்காரர் சிலர், பிள்ளை குட்டியளோடை ஊருக்கு வந்திருக்கினம்'' என்பதைத் தவிர அந்தப் பகுதியில் எந்தச் செய்தியையும் அவர்கள் அறியார். அவர்களின் அன்றாட வேலை இருந்து கொண்டேயிருந்தது. கள்ளுக்கும், காய்கறிகளுக்கும் மதிப்பு அதிகரித்து வந்தது. சில சாமான்களுக்குச் சில நாள் மட்டும் தட்டுப்பாடாக இருந்தது. அவை கூட அவர்களை அவ்வளவாகப் பாதிக்கவில்லை.



கொழும்புக்குத் திரும்புவதில்லை என்று வந்தவர்கள் பலர், குடும்பங்களை ஊரிலேயே விட்டுவிட்டு வேலைக்குத் திரும்பிச் சென்றனர்.

சில வாரங்கள் கழிந்து குடும்பங்களையும் அழைத்துக் கொண்டனர்.

சீனிவாசகத்தாரின் வேண்டுதலின்படி பஞ்சலிங்கம் மகேஸ்வரியையும் பிள்ளையையும் அவர் வீட்டிலேயே விட்டுவிட்டு வேலைக்கு திரும்பினான். மரணம் நெருங்கிக் கொண்டிருப்பதை சீனிவாசகத்தார் உணர்ந்தார். பொது வேலைகளுக்கு முழுக்குப் போட்டுவிட்டார். தெருப்பக்கம் தலைகாட்டுவதேயில்லை. கனவிலும் சரஸ்வதியின் உருவமே தோன்றிக் கொண்டிருந்தது. மகளை மறக்க இரவு பகலாகக் குடித்துக் கொண்டேயிருந்தார். நீரழிவு நோயும் சேர்ந்து வாட்டிக் கொண்டிருந்தது. டாக்டர் வேண்டியபடி குடியையும் அவரால் விட முடியவில்லை.

அவசர கால நிலைமை முடிவடைந்து அரசியல் கூட்டங்கள், பிரசாரங்கள் மீண்டும் ஆரம்பித்து விட்டன.

தமிழர்கள் ஒன்று சேர வேண்டும்.

தமிழர்களுக்குள் பிளவு ஏற்படப்படாது.

தமிழர்களுக்குள் பேதம் பாராட்டப்படாது.

இவ்வாறான பேச்சுகள் கூட்டங்களில் அதிகமாகப் பேசப்பட்டு வந்தன.

செல்லத்துரையனும் தமிழரசுக் கட்சியின் கூட்டமொன்றிற்குச் சென்றிருந்தான்.

சாதிகள் என்று ஒன்றுமில்லை என்றும், கோவில் மற்றும் பொதுவிடங்களிலெல்லாம் சாதிமதபேதமின்றி எல்லோரும் செல்ல அனுமதியளிக்க வேண்டுமென்றும் ஒரு வாலிபன் பேசிக் கொண்டிருந்ததை ஆர்வத்தோடு கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிங்களவர் எம்மைப் பறைத்தமிழர் என்று ஏசி அடித்துக் கலைக்கும் போது நாம் தமிழர்களிலே ஒரு பகுதியினரை பறையர், பள்ளர் என்று அழைத்து ஒதுக்கி வைப்பது சரியா?''

இவ்வாறு அந்த வாலிபன் கேட்டபோது ஒருவரும் எதுவுமே பேசவில்லை.

இந்தச் சம்பவத்தை அன்றிரவு மாதவனிடம் செல்லத்துரையன் சொன்னான். மாதவன் யாவையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''சிங்களவர் வகுப்புவாத உணர்ச்சியிலை ஏசினதாலும் சிலருக்கு இப்ப ஞானம் பிறந்திருக்கு. அரசியல் காரணத்தாலும் இப்ப சாதிபேதம் காட்டப்படாது எண்டு பேசிறாங்கள். நாடு வளர்ந்துதான் வருகுது. தேயேல்லை. வாயாலையாதல் தண்ணி போலை பேசிறதுக்கு வந்திட்டாங்கள். இதுவே நன்மைக்குத்தானே, செயலளவிலை வாறது அத்தனை சுலபமில்லை. ஏதோ உணர்ச்சி வெறியிலை பேசினாங்கள். கொஞ்சமாவது செயலிலை செய்யட்டும், செய்தால் அதை ஏற்றுக் கொள்ளுவம்.''

''கோவில்களெல்லாம் திறந்து விடுவாங்களோ''

''நல்லூர் கந்தசாமி கோவிலை அடுத்த மாதம் திறந்து விடப் போறாங்களாம். அதோடை வேறும் சில கோவில்களைத் திறந்துவிடலாம். பட்டணத்திலையும் இதைப் பற்றித் தான் இப்ப பேச்சு.''

''இங்கை ஒரு கோயிலுக்கையும் எங்களை விட மாட்டாங்களோ.''

''பட்டணங்களெல்லாம் சரி, கிராமத்திலை அத்தனை கெதியாய் எல்லாம் நடந்திடாது. நல்லான் சம்பவம் நடந்து மூண்டு நாலு வருசங் கூட ஆகேல்லை. அதுக்கிடையிலை சாதி வெறியற்றை மனமெல்லாம் மாறிவிடுமெண்டு சொல்லிவிட முடியாது. அரசியல்காரர் கோவில் முதலாளிமாரைப் பிடிச்சு ஒண்டு இரண்டைத் திறந்துவிட்டாலும் நடைமுறையிலை அவ்வளவு கெதியாய் சாத்தியமாகி விடாது. கிராமங்களெல்லாம் நகரத்தைப் போல மாறுவதெண்டதுஅத்தனை சுலபமில்லை. நாங்களும் சும்மா இருக்கப் போறதில்லை. கொஞ்சங் கொஞ்சமாக சண்டைபிடிச்சு வளர்ந்து கொண்டு தான் போகப் போறம். கோவிலுக்கை நுழையிறதாலை மட்டும் எங்கடை பிரச்சினைகள் தீர்ந்து விடப் போறதில்லை. திறந்து விட்ட போதும் நாங்கள் தயங்கிக் கொண்டு நிக்கப்படாது. துணிச்சலோடை உள்ளுக்குப் போக வேணும்.''



## 51

நல்லூர் கந்தசுவாமி கோவில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் திறந்து விடப்பட்டது. அது பெரிய விழாவாக நடைபெற்றது. அரசியல் தலைவர்கள் வந்து நடாத்தி வைத்தார்கள். அதைத் தொடர்ந்து பட்டணத்திலும் கிராமங்களிலும் பல கோவில்கள் தாழ்த்தப்பட்ட வர்களுக்காகத் திறந்து விடப்பட்டன.

குரும்பையூர் கிராமத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தாமும் ஏதாவது செய்ய வேண்டுமென்று முன்வந்தனர்.

பாராளுமன்ற அங்கத்தவர் பாலசிங்கம் மற்றும் பிரமுகர்கள் கோவில் முதலாளிமார்களைக் கண்டு பேசினர். அரசடிப் பிள்ளையார் கோவில், கந்தசுவாமி கோவில் முதலாளிகள் மட்டும் உடன்பட்டனர்.

ஊரெல்லாம் பறைபோட்டு விளம்பரத் துண்டுகள் விநியோகிக் கப்பட்டன. கிராமத்திலே பெரிய எதிர்ப்பும் ஏற்பட்டது. அமைதியை நிலைநாட்டப் பொலிசாரும் வந்தனர். விதானையார் வல்லிபுரம், பென்சன்கார இராசையா, சின்னராசா எல்லோரும் வந்து நின்றனர். மேளதாளம், அபிஷேகம், பூசையோடு தாழ்த்தப்பட்டவர்களை உள்ளே அழைத்துச் சென்றனர். அவர்களுடைய அர்ச்சனைப் பொருட்களை வாங்கி வைத்து ஐயர் பூசைகள் செய்தார். பிரசாதம் வழங்கிய பின் கோவிலிலேயே ஒரு கூட்டம் நடைபெற்றது. அரசியலும் சமயமும் கலந்த கூட்டமாக அது விளங்கியது.

செல்லத்துரையனைப் பற்றி அறிந்த ஒரு வெளியூர் பிரசங்கியார் விழா முடிந்து திரும்பிய போது தாம் பேசிய விஷயங்களை மீண்டும் ஒரு தடவை அவனிடம் ஒப்புவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ தலைவனாக நிண்டு கள்ளுக்குடிப்பதை நிப்பாட்ட வேணும்.''

''நாங்கள் மரத்திலிருந்து இறக்கிறதையெல்லாம் வெள்ளாளர்தானே குடிக்கினம்.''

அவனால் பதில் கூற முடியவில்லை. மனதுக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

''சாராயம் குடிப்பதை நிறுத்த வேணும்.''

'வெள்ளாளர் மட்டுந்தானே காய்ச்சினம். எங்களுக்குச் சாராயம் குடிக்க காசெங்காலை.''

மனதுக்குள்ளேயே பதில் சொன்னான்.

''துப்பரவாய் உடுப்பு உடுத்திக் கொண்டு கோயிலுக்கு வரவேணும்.''

''நல்ல உடுப்பு உடுத்த அவர்களுக்கு விருப்பமில்லையா. வாங்கப் பணமெல்லோ வேணும்.''

மேலும் பொறுமை காக்க முடியாது வாய் திறந்தே சொல்லி விட்டான். பிரசங்கியார் அவனின் பேச்சை எதிர்பார்க்கவேயில்லை. சிறிது நேரம் வாயடைத்துப் போய் நின்றார்.

''நல்ல உடையாய் இருந்தால்தான் கடவுள் விரும்புவாரென் றில்லை. 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்றுதான் அவ்வைப் பிராட்டி சொல்லியிருக்கிறார்.''

அவர் பாணியிலே சமாளித்துப் பதில் கூறினார்.

''உள்ளத்தைத்தான் நாங்களும் தோய்த்துக் கட்டிறம்.''

அவன் பதிலைப் பொருட்படுத்தாதவராக அவர் மீண்டும் சொன்னார்.

''பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காய் அனுப்பி படிக்கச் செய்ய வேணும்.''

செல்லத்துரையன் எதுவும் பதில் சொல்லு முன்னர் பென்சன்கார இராசையா அவருக்கு வணக்கம் செலுத்தி, மரியாதை காட்டிப் பேசத் தொடங்கி விட்டார்.



பள்ளர் பறையர் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதி லுள்ள சிரமங்களைப் பற்றி செல்லத்துரையன் சிந்தித்துக் கொண்டே சென்றான்.

பள்ளிக்கூடங்களில் இடமெடுப்பது, உடைகள், புத்தகங்கள், காலையிலும் மத்தியானத்திலும் நேரத்திற்கு உணவு கொடுப்பது ஆகிய சிரமமான விஷயங்களைப் பற்றியெல்லாம் அவன் மனம் ஆராய்ந்தது.

நல்ல உணவைப் பார்த்து நாவூறுவது போல நல்ல உடையுடுத்துக் கொண்டு பள்ளிக்குச் செல்லும் வேளாளரின் குழந்தைகளை கோவணம் கட்டிக் கொண்டு நின்று பார்த்து ஆசைப்படும் பள்ளர் பறையர் குழந்தைகளின் கண்கள் அவன் முன்னே ஒரு கணம் தோன்றின. 'துப்புரவான நல்ல உடையோடு கோவிலுக்குள் நுழைய வேண்டும்' என்று பிரசங்கியார் சொன்னது மீண்டும் நினைவு வந்தபோது அவன் மனம் கொதிப்படைந்தது.

## 52

அன்றிரவு மாதவனிடம் நடந்தவை யாவையும் செல்லத்துரையன் சொன்னான். அவன் கண்ணோட்டத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைக் கண்டு மாதவன் மனம் மகிழ்ந்தான்.

''கோவிலுக்கு பென்சன்கார இராசையரும் வந்திருந்தாரோ..''

''ஓம்''

''அதுதானே கேட்டன். அவர் விடுவாரே. கிராமச் சங்கத்தேர்தல் வரப் போகுதெல்லே. அங்கைவந்து தலையைக் காட்டினால் தானும் ஆதரிப்பதாகச் சொல்லி எங்கடை வோட்டிலை கொஞ்சம் பறிக்கலாமெண்டு கோட்டை கட்டியிருப்பார். எலெக்ஷன் வரப் போகுதெண்டுதான் இப்ப எங்களுக்குக் கிணறு வெட்டிறதுக்கும் ஒழுங்கு செய்யிறார். கோயிலைத் திறக்க வந்தவர் வெள்ளாளர் வீட்டுக் கிணறுகளையும் எங்களுக்குத் திறந்து விடட்டுமன். ஏன் தனிக் கிணறு வெட்ட வேணும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையனுக்கு அப்போதுதான் புதிய விஷயங்களும் புரிந்தன.

''நாங்கள் நேரத்தோடையே எல்லாத்தையும் முடிவு செய்து கவனமாயிருப்பது நல்லது. சீனிவாசகத்தார் பாயோடு பாயாகி விட்டார். அந்த இடத்தையும் நாங்கள் முயற்சி செய்து பாக்கிறது நல்லது. செம்பாட்டுப் பக்கத்திலைதான் இம்முறை அதிக வேலை செய்ய வேணும்.''

''இந்தப் பக்கத்தை நாங்கள் பார்த்துக் கொள்ளலாம். நீதான் வேறை ஆட்களுடன் செம்பாட்டுப் பக்கத்தைப் பார்க்க வேணும். அங்கை உங்கடை ஆட்கள்தானே இருக்கினம். வேதக்காரப் பகுதிக்கும் நான் சொல்லி வைச்சிருக்கிறேன், தெற்கையும் கிழக்கையும் இரண்டு இரண்டு வெள்ளாளர் நிண்டால் வெற்றி எங்களுக்குத்தான் நிச்சயம்.''

மாதவன் தன் திட்டங்களையெல்லாம் வெளிப்படுத்தினான். விரைவிலேயே பலரையும் சேர்த்து வேலைகளை ஆரம்பிக்க முடிவு செய்தனர்.

முருகன் நோய்வாய்ப்பட்டிருந்ததால் வள்ளி மாலை வேளைகளில் வழமை போல செல்லத்துரையனிடம் வந்து ஓய்வாகப் பேச முடியாதிருந்தது. குடிசையின் முற்றத்திற்கு அடிக்கடி வந்து அவன் மரமேறுவதை மட்டும் பார்த்துக் கொண்டு நிற்பாள். மரத்தின் வட்டில் இருந்து கொண்டே அவன் சிரிப்பான். அவளும் சிரிப்பாள். சைகையாலும் கண்ணாலும் பேசிக் கொள்ளுவர். முருகனை சுகம் கேட்க, முட்டி கத்திக்கூடு வைக்கும் சாட்டாக இடையிடை வீட்டுக்கு வருவான். அச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி வள்ளி அவன் விருப்பம் கேட்டு ஏதாவது குடிக்க வைப்பாள். அது காரணமாக அங்கு சிறிது நேரம் அவன் தங்கிச் செல்வான்.

முருகனும் பொன்னியும் அவளின் மனதை ஓரளவு அறிந்து அவளைக் கண்டித்தும் வரத் தவறவில்லை.

''மறக்கணாக்காரர் செம்பாட்டுப் பள்ளரிட்டைப் பெண்ணெடுக்க வரமாட்டாங்கள். நீ அவங்களை நம்பிப் பழகி எங்களுக்குக் கெட்ட பேரெடுத்திடாதை.''



பல தடவை கண்டித்தும் அவள் மனதைக் கட்டுப்படுத்தி விட முடியவில்லை. தனக்கும் அவனுக்கும் ஒரு தொடர்பும் இல்லாதவிதமாகவே முருகனுக்கும் பொன்னிக்கும் அவள் காட்டி வந்தாள். அவர்கள் அறியாதவிதமாக களவு நட்பை மீண்டும் நீடித்தாள்.

மூக்குத்தி வாங்குவதற்கு அவனிடம் சொல்லி வைத்த போதும் முருகனும் பொன்னியும் அறியவே அவள் பெரிய உதவி வேண்டும் என்று சொல்லி பணம் கொடுத்தாள்.

''அப்புவுக்கும் நேரமில்லை. நீங்க அடுத்த தடவை பட்டணம் போகேக்கை காசு தாறன் எனக்கு ஒரு மூக்குத்தி வாங்கித் தருவியளா.''

''இதுதானா சின்ன விஷயமாச்சே. நாளைக்கே நான் போனாலும் போவன்.''

அவள் அப்பொழுது பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

மூக்குத்தி பிந்தி வந்தபோதும் அவளுக்கு நன்கு பிடித்துக் கொண்டது. அவனை நினைக்கும்போதெல்லாம் அதைத் தடவிக் கொள்வாள்.

அன்று மாலை முருகன் தூங்கி விட்டான். பொழுது கருகியும் பொன்னி தோட்டத்திலிருந்து வரவில்லை. செல்லத்துரையன் மரங்கள் சீவிமுடித்து இறங்கவும் அவள் எதிரே போய் நின்றாள்.

''இப்ப இரவிரவாய் எங்கடை செம்பாட்டுப் பகுதியிலை விளக்கோடை திரிகிறியளாம். இங்கையா எலெக்ஷன் கேக்கப் போறியள்.''

''இல்லை, நான் முந்தின இடத்துக்குத்தான் திரும்பவும் கேக்கப் போறேன்.''

''ஏன் நீங்களிங்கை வந்து கேக்கப்படாதோ?''

''ஏன் கேக்கப்படாது; எண்டாலும் உங்க பக்கத்தைச் சேர்ந்த மாணிக்கனைப் போடப் போறம்.''

''எங்கடை பள்ளருக்கும் உங்கடை ஆட்களுக்கும் என்ன வித்தியாசம்?''

''ஒரு வித்தியாசமும் இல்லை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உண்மையா நீங்க அப்பிடியா நினைக்கிறியள்''

''உண்மையாய் தான் சொல்லுறன்''

''வைரவராணை''

''வைரவராணை''

சுற்றவரப் பார்த்துவிட்டு அவனோடு வாய்க்கால் வழியே நடந்தாள். இருபுறமும் வளர்ந்தெழுந்த வள்ளிக் கொடிகளிடையே வந்ததும் அவன் மார்பிலே சாய்ந்தபடி கழுத்தை தோளில் பதித்து எதிரே பார்த்தபடி கேட்டாள்.

''எத்தினியோ நாளாய் கேக்கவெண்டிருந்தன். இனி மேலும் என்னாலை கேக்காமலிருக்க முடியாது.''

பேச்சு வராது அவள் நெஞ்சம் அடைத்துக் கொண்டது. இதயத்தில் பாரமேறிக் கொண்டிருந்தது.

''ஏன் கேக்காமலிருந்தாய்? கேளன்''

''எனக்குப் பயமாய் கிடக்குது''

அவள் கண்கள் துளிர்த்து விட்டன.

''பயப்பிடாமல் சொல்லன். நான் என்ன அடிக்கப் போறனா?''

''உங்களுக்குக் கற்பகத்தின் மேலையா என் மேலையா கூட ஆசை.''

இப்படியாக ஒப்பிட்டுக் கேட்பாள் என அவன் எதிர்பார்க்க வில்லை, ஒருகணம் ஒன்றும் பேசாது நின்றான்.

''நீ ஆர்மேலையெண்டு நினைக்கிறாய்?''

''அவள் மேலையெண்டுதான்''

''ஏன் அப்பிடி நினைக்கிறாய்?''

''நான் செம்பாட்டுப் பள்ளிதானே''

''என்னட்டை இப்ப சத்தியம் கேட்டியே அதை மறந்திட்டியா''



''எண்டாலும் என்னாலை நம்ப முடியாமைக் கிடக்கு.''

''எலெக்ஷன் முடிஞ்சதும் எல்லாம் நம்புவாய். அந்தா கோச்சி கூப்பிடுறா, ஓடு..''

வள்ளிக்கொடிக்குள்ளே நுழைந்து, மறைந்து குடிசையை நோக்கி ஓடினாள், வள்ளி.

## 53

செல்லத்துரையன் கதிராசி வீட்டுப் படலையைத் திறந்த போது அந்த மது பரிபாலனப் பகுதி இன்ஸ்பெக்டர் வெளியேறிக் கொண்டிருந்தான். அவன் உதவியால்தான் கதிராசியும் மகளும் முன்னேறி விட்டார்கள் என்று ஊரில் பேசிக் கொண்டனர்.

முட்டியைக் காட்டி விட்டு, விளக்கையும் தானே எடுத்துச் சென்று கோடிப்புற பானையில் ஊற்றி விட்டு வந்தான். கதிராசி காசைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

அவளிடம் இப்போது பணம் தாராளமாகப் புரண்டது. ஆயினும் தோட்டத்தை விட்டுவிடவில்லை. பள்ளரை கூலிக்கு வைத்துத் தோட்டத்தைச் செய்வித்தாள். தன் வருமானத்திற்குரிய வழியை ஊராருக்குக் காட்டுவதற்காக நட்ட நயத்தைப் பாராது அதைத் தொடர்ந்து செய்து வந்தாள்.

அன்னம்மா இப்பொழுது தோட்டம் செல்வது குறைவு. அவள் கைகளிலும் கழுத்திலும் தங்க நகைகள் ஏறின. மூக்கிலும் காதிலும் முத்துகள் ஒளிர்ந்தன. திருவிழாவிற்குப் போகும்போது தோய்த்துக் கட்டிய சேலையைப் பார்க்க முடியாது. நாளுக்கொரு புதுப் புடவையாகக் கட்டிச் செல்வாள்.

பிள்ளையைச் சிங்காரித்துப் பள்ளிக்கு அனுப்பி வந்தாள். 'தண்ணீரிலை உழைச்ச காசு நில்லாது' என்று ஊரார் பேசிக் கொண்டனர். ஊரார் பேச்சைப் பற்றியெல்லாம் அவள் பொருட்படுத்த வில்லை. 'பொறாமை பிடிச்ச சனங்கள்' என்று மனதிற்குள் குமைந்து கொள்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் வெறிநாளுக்கு நாள் ஏறிக் கொண்டு வந்தது. சாதிச் சண்டைகள் முற்றி கிராமமே தீப்பிடித்து எரிந்து விடுமோ என்று கூட பலர் அஞ்சிக் கொண்டிருந்தனர்.

மேற்கு வட்டாரத்திற்கு செல்லத்துரையனும் இராசையாவும் நேரடிப் போட்டி.

சீனிவாசகத்தார் நீரிழிவுப் புண்ணோடு அழுந்திக் கிடந்தார். தெற்கு வட்டாரத்திற்கு சிதம்பரப்பிள்ளை ஆசிரியரும் சின்னராசாவும் மாணிக்கனும் நின்றனர். மாணிக்கனை ஒரு துரும்பாகவே சின்னராசா மதித்தான். பள்ளர் வோட்டு யாவும் தனக்கு வருமென்றும் விதானை வல்லிபுரத்தின் தயவும் தனக்கே உண்டென்றும் சின்னராசா உறுதியோடு நின்றார். சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் சென்ற முறை தனக்குப் போட்ட அத்தனை வோட்டும் கிடைத்தாலே வெற்றி தனக்கே என்று வீரம் பேசிக் கொண்டிருந்தார். அத்தோடு பள்ளிக்கூட மாணவர் ஆசிரியரின் தயவெல்லாம் தன் பக்கமே என்று சொல்லிக் கொண்டார்.

கிழக்குப் பக்கத்தில் அந்தோனியோடு இரு வேளாளர் போட்டியிட்டனர்.

பள்ளரோடு தனிப்போட்டி ஏற்படுத்த ஊரிலுள்ள பிரமுகர்கள் முயன்றனர். ''பள்ளர் தங்கள் வோட்டைத் தங்களோடு வச்சிருக் கட்டும். அது வெற்றிக்குப் போதாது. எந்த வேளாளனும் அவங்களுக்கு வோட்டுப் போடப் போறதில்லை'' என்று இரு பகுதியிலும் போட்டியிட்டவர்கள் தட்டிக் கழித்து விட்டனர்.

சாதி மோதல்கள் ஏற்படாத விதமாக மாதவன் செல்லத்துரையன் மூலமாக ஏற்பாடுகள் செய்து வந்தான். மாதவனுக்கு நல்ல நம்பிக்கை ஏற்பட்டு வந்தது.

''செம்பாட்டுப் பக்கத்திலை விதானையார் பயமுறுத்தல் வேலை செய்யிறார். அவற்றை நிலத்திலை பன்ரண்டு குடிசையிருக்கு. சின்னராசாவுக்கு வோட்டுப் போடாட்டில் குடியெழுப்பிறதாகப் பயப்பிடுத்திறார்.''

மாதவனிடம் செல்லத்துரையனும் மாணிக்கனும் முறையிட்டனர்.



''விதானைமார் கொட்டமெல்லாம் கெதியாய் போகப் போகுது. அரசாங்கம் எல்லா விதானைமாருக்கும் பென்சன் கொடுத்திட்டு கிராம சேவையாளர்கள் என்று புதிதாக ஆட்களை நியமிக்கப் போறார்கள். இது அவருக்குத் தெரியாமல் இருக்காது. விதானைமாற்றை ஆட்சியும் அட்டூழியமும் இனி நீடிக்கப் போவதில்லை. விதானையார் வாலைக் காட்டினால் பென்ஷனுமில்லாமல் போக நேரலாம். நான் வேறு தோழர்களோடு வந்து எல்லாருக்கும் விளங்கப்படுத்தி, பயப்பிடாமல் இருக்கும்படி சொல்லுறன். குடியிருக்கும் நிலத்திலிருந்து அவர்களை விதானையார் கோட்டுக்குப் போயும் எழுப்ப முடியாது. நிலத்தில் இருப்பவர்களே அந்த நிலங்களை வாங்கிக் கொள்ளலாம்.''

மாதவன் நிலைமையை விளக்கிச் சொன்னான். உடனே வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக் கொண்டான்.

அரசாங்க அதிபர், பொலிஸ் அதிகாரிகள் மூலம் விதானையாருக்கு எச்சரிக்கை வந்தது. ஒன்றையும் வெளிப்படுத்தாது தனக்கு உடல் நலமில்லை என்று சொல்லிக் கொண்டே பெட்டிப் பாம்பானார்.

தான் இனிமேல் மிகவும் கண்டிப்பாக இருக்கப் போவதாக தேர்தல் அபேட்சகர்களுக்கும் கையாள்களுக்கும் விதானையார் செய்தி அனுப்பினார். என்ன அசம்பாவித சம்பவங்களாயினும் பள்ளர் பறையருக்கெதிராக நடைபெற்றால் தமது தாட்சணியம் இருக்கப் போவதில்லை என்று உறைப்பாகச் சொல்லி வந்தார்.

''அரசாங்கமே இப்ப அவங்கடை பக்கம் இருக்கு. அவங்களுக்குப் பெரிய இடத்து ஆதரவு இருக்கு. காலம் முன்போலையில்லை. எல்லாம் மாறிப் போச்சு.''

இவ்வாறு புத்திமதிகள் எல்லோருக்கும் சொல்ல ஆரம்பித்தார்.

பென்சன்கார இராசையாவிடம் சென்ற தடவை போலச் செலவு செய்யப் பணமில்லை. சாதி அபிமானமுள்ள பிரமுகர்களும் மூன்று திக்கிலும் வேலை செய்ய வேண்டியிருந்தது. ஆயினும் இராசையா ஆதரவாளர்களுடன் இரவிரவாக, வீடு வீடாகத் திரிந்தார். பறைய கடவையில் அதிக கவனம் செலுத்தி பள்ளருக்கெதிராகத் தூண்டிவிட முயன்றார்.

''எப்ப கமக்காறன் சீலை தரப் போறியள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த முறை சாராயமில்லையா''

பள்ளரும் பறையரும் கேலியாகக் கேட்டனர்.

சின்னராசா கடைசி நாட்களில் பள்ளரெல்லாருக்கும் சாராயம் கொடுக்க ஆயத்தம் செய்வதாகச் செய்தி கிடைத்தது.

மாதவன் மதுபரிபாலனப் பகுதி சுப்பிரண்டனுக்குத் தெரிவித்து இன்ஸ்பெக்டர் அங்குவர ஏற்பாடு செய்தான்.

இச்செய்தி இராசையாவின் காதில் எட்டியதும் அவர் சாராயம் கொடுக்கும் எண்ணத்தை உடனே கைவிட்டு விட்டார்.

தேர்தலன்று பறையர் பள்ளர் பகுதிக்கு மட்டுமே இராசையா கார்களை அனுப்பினார். ஆனால் அவர்கள் எவருமே அவற்றில் ஏறிக் கொள்ள மறுத்து விட்டனர்.

கிழக்குப் பக்கத்தைப் பற்றி மாதவன் அதிக கவனம் செலுத்தவில்லை. அவர்கள் எல்லோரும் ஒரே மதத்தவர். அப்படியே அந்தோனிக்குப் போடுவார்கள் என முடிவு கட்டினான்.

செம்பாட்டுப் பக்கத்தில் வோட்டுப் போடப் பள்ளர் பள்ளியரை அனுப்புவதே சிரமமாயிருந்தது. செல்லத்துரையனும் மாலையில் அந்தப் பக்கமே நின்று ஒவ்வொரு குடிசையாக பெயர் பட்டியலை சரி பார்த்து ஆட்களை வோட்டுப் போட அனுப்பிக் கொண்டிருந்தான்.

சின்னராசாவின் சாராயம் யாவும் பறிபோய் விட்டது. ஆனாலும் கடைசி நேரத்தில் காசு கொடுத்து வோட்டு வாங்க முயன்றார்.

மாலையில் வோட்டுகள் எண்ணப்பட்டன. செல்லத்துரையனுக்கு 34 வோட்டால் வெற்றி கிடைத்தது.

சிதம்பரம்பிள்ளை ஆசிரியருக்கும் சின்னராசாவுக்கும் வேளாளர் வோட்டு சரிபாதியாகப் பிரிந்ததால் மாணிக்கனுக்கு எட்டு வோட்டால் வெற்றி கிடைத்தது.

கிழக்குப் பகுதியில் வேளாளரிடையே சரியான போட்டி ஏற்பட்டு வோட்டுப் பிரியாததால் அந்தோணி தோல்வியடைந்தான்.



ஐந்து பேர் கொண்ட கிராமச் சங்கத்தில் இரண்டு இடம் அவர்களுக்குக் கிடைத்தது. பள்ளர் பறையர் தாழ்ந்த சாதியினர் என்று ஒதுக்கப்பட்டவர்கள் தலைநிமிர்ந்து நடந்தனர். செல்லத்துரையனுக்கும் மாணிக்கனுக்கும் மாலைகள் போட்டு ஊர்வலமாக தங்கள் பகுதிகளுக்கு அழைத்துச் சென்றனர்.

கம்யூனிஸ்ட் குமாரசாமி மட்டும் வந்து அவர்களிருவரையும் வாழ்த்தினார்.

அவர்கள் வெற்றி பிற கிராமங்களெல்லாம்பரவியது. தாழ்த்தப் பட்டோர் சங்கங்களைச் சேர்ந்தவர்களெல்லோரும் வாழ்த்துக்கள் அனுப்பினர். தங்கள் கிராமங்களுக்கும் அழைத்துக் கௌரவித்தனர்.

''எங்கடை வெற்றி யாவும் உன்ரை வெற்றி'' அன்றிரவு செல்லத் துரையன் மாதவனிடம் கூறினான்.

''இது ஒரு சிறு வெற்றிதானே. இந்தக் களிப்பில் எங்கள் நீண்ட பயணத்தை மறந்துவிடப் படாது. நாங்க இனிமேல்தான் விழிப்போடு போராடிக் கொண்டிருக்க வேணும். எம்மால் சாதிக்கக் கூடியதை யெல்லாம் எம் நன்மைக்கு மட்டுமில்லை, கிராமத்தின் நன்மைக்கும் செய்து காட்ட வேணும்.''

மாதவன் தொடர்ந்து தன் திட்டங்களையெல்லாம் தெரிவித்தான். செல்லத்துரையன் ஆவலோடு யாவையும் கேட்டுக் கொண்டான். மாதவன் மீண்டும் வலியுறுத்திச் சொன்னான்.

''ஆயிரக்கணக்கான வருஷமாக மனிதன் அடிமைத்தனத்திலை இருந்து போராடிக் கொண்டிருக்கிறான். நல்லானைப் போல லட்சக்கணக்கான பேரைப் பலி குடுத்துத்தான். அடிமை இனம் வளர்ந்து வந்திருக்கிறது. இந்த நீண்ட பயணத்திலை இந்த எலெக்ஷன் ஒரு மைல்கல். இதோடை நாங்கள் ஓயப் போறதில்லை. இந்த மனித சாதியின் அடிமைத்தனத்தை எண்டைக்கோ ஒழிக்கத்தான் போறம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 54

கற்பகத்திற்கு விரைவில் கலியாணம் செய்து வைக்க வேண்டுமென்று தகப்பன் வெள்ளையன் முடிவு செய்தான். அவனுக்கும் செல்லத்துரையன் மேல் விருப்பமிருந்து வந்தது. அதை எண்ணியே அவளையும் அங்கு தாராளமாகப் போய் வரவிட்டு வந்தான் வெள்ளையன். இனிமேல் முடிவொன்றும் இல்லாமல் போய்வர விடுவது நல்லதில்லை என்று தீர்மானித்தான்.

தேர்தல் வெற்றியால் செல்லத்துரையனுக்குப் பெண் கொடுக்க பலர் முன் வரலாம். அதன் முன்னர் அவர்கள் நோக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலும் மனதை உந்தியது.

அன்று நண்பகல் கதிரன் தோட்டத்தால் வந்து வீட்டில் தனியாக இருந்தபோது வெள்ளையன் அங்கு வந்தான்.

தேர்தலில் ஆரம்பித்து கடைசியில் கற்பகத்தின் கதையைத் தொடங்கினான்.

''கற்பகத்தையும் இனி எங்கையாவது கட்டிக் கொடுக்க வேணும். ஊரோடையெண்டால் வயது போற காலத்திலை எனக்கும் கொஞ்சம் துணையாயிருக்கும்.''

கதிரனால் அவனின் உள் விருப்பத்தை அறிய முடியாது போய்விடவில்லை.

ஆயினும் அவன் ஒழிவு மறைவின்றி தன் மனதில் பட்டதை அப்படியே சொன்னான்.

''கற்பகம் நல்ல பெட்டைதான். எனக்கு மட்டுமில்லை. நாகிக்குக் கூட நல்ல விருப்பம். அன்னம் போனண்டு தொடக்கம் எங்க வீட்டுக்கு எவ்வளவு உதவி. ஆனால் இவன்ரை மனசைஅறிய முடியாதிருக்கு. அவன் எலெக்ஷன், ஊர்த் தொண்டென்று தொழிலையும் கவனியாமல் திரியிறான். இவனை நம்பியிருக்காமல் நல்ல இடம் வந்தாக் கட்டிக் குடுக்கிறதுதான் நல்லது. இவனுக்குக் கட்டிக் குடுத்தாலும்நாங்க இருக்கு மட்டுந்தான் உந்தப் பிள்ளை ஒரு மாதிரி



வாழலாம்.நாங்க கண் மூடின பிறகு என்ன நடக்குமெண்டு சொல்ல முடியாது.''

வெள்ளையனால் எதுவுமே பேச முடியவில்லை. ஒரே ஏமாற்றமாக இருந்தது. ஆனாலும் நப்பாசை மறைந்து விடவில்லை. செல்லத்துரையனையே மறைமுகமாகக் கேட்டு அறிந்து விடுவதென்று வெள்ளையன் முடிவு செய்து காத்திருந்தான்.

அயல் கிராமமான கோண்டாவிலிருந்து கற்பகத்திற்கு ஒரு கலியாணப் பேச்சு வந்தது. அதைச் சாட்டாக வைத்துக் கொண்டு வெள்ளையன் செல்லத்துரையனைத் தனியே கண்டபோது மறைமுகமாக விஷயத்தைச் சொன்னான்.

''தம்பி, கற்பகத்தை இனியும் வீட்டிலை வைச்சிருக்கிறது நல்லதில்லை. ஆற்றையேன் கையிலை பிடிச்சுக் குடுக்கவேணும். ஊர் அயலோடை எண்டால் நல்லதுதான். எனக்கும் துணையாயிருக்கும். கோண்டாவிலிலை இருந்து ஒண்டு வந்திருக்கு'' என்றான் அவன்.

செல்லத்துரையன் முகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

''வாறது நல்லதெண்டால் பேசிச் செய்யிறது நல்லது தானே'' என்று சாவதானமாகப் பதில் கூறினான்.

''கோண்டாவிலிலை பொன்னன்ரை மகன்வியாகேசனாம். மரஞ்சீவுறானாம். ஒருக்கா விசாரித்துச் சொல்றியா.''

''வியாகேசன் தானே. எனக்கு நல்லாய் தெரியுமே. நல்ல பெடியன். சுறுசுறுப்பானவன். வேறு குடும்பப் பொறுப்பு எதுவுமில்லாதவன். விடாமல் செய்யிறதுதான் நல்லது.''

''நீயுமொருக்கால் வாறியா தம்பி. அவங்களைப் போய் பார்த்து முடிவு கட்டிப் போடுவம். எப்ப தம்பிக்கு வசதியிருக்குமோ.''

''ராத்திரிக்கே போய் முடிச்சிடுவம்.''

அன்றிரவே ஏற்பாடுகள் யாவும் முடிந்தன.

செய்தியறிந்த கற்பகத்திற்கு எல்லோரும் சேர்ந்து தன்னை ஏமாற்றி விட்டதாகத் தோன்றியது. வீட்டிலே சமையலே செய்யவில்லை. அயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளுக்கும் போகாது குடிசைக்குள்ளேயே கிடந்து விம்மி அழுதாள். மண்டைப் பாரமும் மனப்பாரமும் தீரும் வரை அழுது தீர்த்தாள். தற்கொலை நினைவுகளும், வீட்டை விட்டு ஓடிவிடும் எண்ணங்களும் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

அடுத்த வெள்ளிக்கிழமை இரவே சோறு கொடுக்கும் சடங்கு நடைபெற்றது. கழுத்திலே முடிச்சுப் போட்ட கழி நூல் கட்டப்பட்டது.

நாகியும் கதிரனும் சேர்ந்து நின்றே விருந்து வைபவங்களை நடத்தி வைத்தனர். செல்லத்துரையனும் வந்திருந்து விருந்து சாப்பிட்டான். கற்பகம் தலை நிமிர்த்தியே அவனைப் பார்க்கவில்லை.

## 55

கற்பகத்தின் பிரிவை வெள்ளையன் மட்டும் உணரவில்லை. கதிரன் நாகியும் உணர்ந்தார்கள்.

கதிரனுக்கு மறுநாள் கவலை பொங்கிக் கொண்டு வந்தது.

''கையுக்கையிருந்த நல்ல பெட்டையையும் கை நழுவ விட்டிட்டம். நீ இன்னும் எத்தினை நாளைக்கு இப்பிடித் திரியப் போறாய். கோச்சிகூட எப்பிடிக் கஷ்டப்படுறாள் பாத்தியா?''

கதிரன் செல்லத்துரையைக் கேட்டான். அவன் ஒன்றும் பேசாமலிருந்தான். கதிரனின் கோபம் அதிகரித்தது.

''ஏன்ரா பேசாமலிருக்கிறாய். உனக்கிருக்கிற பேர் போதாதா. இப்ப கிடைச்சிருக்கிற நல்ல பேரைக் காப்பாத்திறத்துக்காவது நீ இனிமேலாவது ஒழுங்காய் இருக்கப்படாதா? ஆரையேன் பார்த்து வைச்சிருந்தால் சொல்லன், அதையாவது கட்டித் துலைப்பம்.''

கதிரன் அடக்கி வைத்திருந்த தன் ஆத்திரத்தை யெல்லாம் அளந்து கொட்டினான். அதன் மேலும் பொறுமை தாங்க முடியாது செல்லத்துரையன் சொன்னான்.

''இப்பவே போய் கூட்டிக் கொண்டு வந்திடுவன். உனக்குப் பிடிக்காதெண்டெல்லோ பேசாமலிருக்கிறேன்.''



''ஆரடா அவள்''

அடுக்களைக்குள் சமைத்துக் கொண்டிருந்த நாகி எழுந்து வந்தாள்.

''அவளைத்தான், முருகன்ரை வள்ளியை''

''போயும் போயும் செம்பாட்டுக்கையா போய் சம்பந்தம் பண்ண யோசிச்சாய். உனக்கு வேறை ஒருத்தியும் கிடைக்கேல்லையோ. நீ எங்கையோ வெள்ளாடிச்சியைக் கூட்டிக் கொண்டுவரப் போறா யெண்டல்லோ நினைச்சன். இப்பென்னெண்டால் எங்களிலையும் குறைந்த செம்பாட்டுப்பள்ளியை கொண்டுவரப் போறானாம்.''

கதிரன் நளினமும் கோபமும் கலந்து பேசினான்.

''ஏன், வள்ளிக்கு என்ன குறைச்சல்?''

''செம்பாட்டுக்கை நாங்க ஒருத்தரும் சம்பந்தம் செய்யிறேல்லை எண்டு உனக்குத் தெரியாதோ?''

''நான் முதலாச் செய்யப்போறன். அவள் பள்ளி, நான் பள்ளன். அதுக்கை பிறகு என்ன வித்தியாசம்?''

''அவளை இஞ்சை கூட்டிவர வேண்டாம்''

''அப்ப என்னை அங்கை போய் குடியேறச் சொல்லுறியா.''

கதிரன் மனம் துடித்தது. மான ரோச உணர்ச்சி இதயத்தையும் துடிக்கச் செய்தது.

எதுவும் கூறாது கோபத்தை அடக்கிக் கொண்டான்.

நாகி வந்து நுழைந்தாள்.

''அதிலையென்ன, அவனுக்குப் பிடிச்ச பெட்டையைக் கூட்டிக் கொண்டு வாறது.''

நாகி தயங்காது சொன்னாள். ஆரெண்டாலும் மருமகள் ஒருத்தி விரைவில் வீட்டுக்கு வர வேண்டும் என்றே அவள் விரும்பினாள். கற்பகத்தையே வேண்டாம் என்று விட்டு விட்டான். வள்ளி அவளிலும் நல்ல பெண்ணாயிருக்க வேண்டுமென்று எண்ணினாள்.

''தாயும் மேனும் செம்பாட்டிலை பெண்ணெடுத்துக் கொண்டு வாங்கோ, நான் வெளிக்கிட்டுப் போறன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுதானே சொல்லுறன். நாங்களும் பள்ளர் அவங்களும் பள்ளர். பிறகென்னப்பு குறைச்சுப் பேசிறாய்.''

''சம்பந்த மெண்டால் நாங்களும் எங்கடையாக்களுக்கை நாலு பேருக்குச் சொல்லி அழைச்சுச் கொண்டெல்லே போக வேணும்.''

''அதுதான் நான் சொல்லி அழைச்சிட்டு வாறன்.''

நாகி துணிச்சலோடு சொல்லினாள்.

கதிரன் எதுவும் பேசாதிருந்தான். தான் தடுத்தாலும் விஷயம் முற்றிவிடும் என்பதை உணர்ந்து அமைதியாக இருந்தான் செல்லத்துரையன்.

விஷயத்தைச் சொன்னபோது முருகனாலும் பொன்னியாலும் நம்பவே முடியவில்லை. ஆனந்த மிகுதியால் கண்கள் துளிர்த்தன.

அன்றிரவே மாணிக்கன், முருகன் இருவரும் முறைப்படி கதிரன் வீட்டுக்கு வந்தனர். நாகிதான் வரவேற்று உபசரித்தாள். கதிரன் கடமைக்காகக் கதைத்து வைத்தான். சின்னத்தம்பியன் மாப்பிள்ளை பகுதிக்காகப் பேச வேண்டிய யாவையும் பேசி முடித்தான்.

அடுத்த புதன் இரவே சோறு கொடுப்பதாக நிச்சயம் செய்தனர்.

## 56

செல்லத்துரையனுக்கு பள்ளரிடையே நல்ல செல்வாக்கு இருந்தபோதும் செம்பாட்டுப் பகுதியில் சம்பந்தம் செய்வதை அவர்களும் முற்றாக விரும்பவில்லை. செல்லத்துரையன் அழைத்ததின் பேரில் யாவரும் முருகன் வீட்டுக்குச் சென்றனர்.

சோறு கொடுத்து, கழுத்தில் கழிநூல் கட்டும் சம்பிரதாயங்கள் நடந்து முடிந்தன. வள்ளி அடக்கமான பெண்ணாகி, ஒடுங்கி நின்றாள். செல்லத்துரையனைத் தலை நிமிர்ந்தும் பார்க்கவில்லை. நாகியும் அன்னமும் செத்தையின் உள்ளே அழைத்துச் சென்று தாங்கள் கொண்டு வந்த பட்டுச் சேலை ஒன்றை அவளுக்கு உடுத்தினர்.



விருந்து வைபவம் ஆரம்பமாகியதும் மாப்பிள்ளையோடு வந்த ஒரு பகுதியினர் எழுந்து வீட்டுக்குத் திரும்பினர். பெரும்பாலும் கதிரன் வயதை ஒட்டிய பெரியவர்களாகவேயிருந்தனர். கதிரன் முகம் ஒரு கணத்தில் மாறி விட்டது. தன் மானமெல்லாம் இழந்ததாக உணர்ந்தான். வேறு வழி எதுவுமின்றி உள்ளக் கொதிப்பை அடக்கிக் கொண்டான். செல்லத்துரையன் இப்படியான நிகழ்ச்சியை எதிர் பார்த்திருந்ததினால் ஆத்திரமடையவில்லை. அப்புவின் காலத்தவர் அப்படித்தான் இருப்பர் என்று நினைந்து மனதை ஆற்றிக் கொண்டான். மற்ற இளைஞர்களெல்லோரும் விருந்துண்டனர். பெண்ணை அழைத்துக் கொண்டு புறப்படும் வரை காத்திருந்தனர்.

கதிரனின் வீட்டுக்கு எல்லோரும் வந்தபோது பெரிய கூட்டமே அங்கு காத்திருந்தது. மாதவன் தலைமையில் பெரும்பாலான பறையரெல்லோரும் வந்து கூடி நின்று வரவேற்றனர். செல்லத்துரையனைக் கண்டு பேசி விடைபெற்றுச் சென்றனர்.

தன் நீண்ட நாள் கனவு நிறைவேறியதாக வள்ளி பூரித்தாள். தான் எதிர்பாராத பெரிய இடத்திற்கு வந்திருப்பதாக எண்ணி மகிழ்ந்திருந்தாள். சில நாட்களிலேயே சுறுசுறுப்பாக வீட்டு வேலைகளை யெல்லாம் செய்யத் தொடங்கி விட்டாள். நாகியிடமும் கதிரனிடமும் நல்ல பெயர் எடுக்க அதிக நாள் செல்லவில்லை.

அந்தச் சிறு குடிசையே அவளுக்குச் சொர்க்கமாயிருந்தது. ஓலைப்படலையைக் கொண்ட அந்தச் சிறு அறையுள்ளே மங்கிய வெளிச்சத்தில் தன் ஆசையெல்லாவற்றையும் அவன் மேல் சொரிந்தாள். மனதில் தோன்றியவை, மறைத்து வைத்திருந்தவை அனைத்தையும் இரவிரவாக மனந்திறந்து சொல்லி, சிரித்து, சிணுங்கி, பொய்க்கோபம் காட்டி, ஊடிக் கூடி மகிழ்ந்த போதும் அவள் மனத்தின் அடியில் ஒரு விஷ முள் மனதை உறுத்திக் கொண்டேயிருந்தது.

அதைக் கேட்கலாமா, விடலாமா என்று மனம் துடித்துக் கொண்டேயிருந்தது. கடைசியாக அன்றிரவு கேட்டுவிடுவதென்றே தீர்மானித்தாள். மனம் குறுகுறுத்துக் கொண்டது. அடிமனத்தில் சிறிது அச்சமும் எழுந்தது. நல்ல சந்தர்ப்பமாகப் பார்த்துக் கேட்டாள்.

''நான் ஒண்டு உங்களைக் கேட்டா கோபிக்க மாட்டியளே?''

''ஏன் உன்னட்டைக் கோபிக்கப் போறன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உண்மையைச் சொல்லுவீங்கதானே''

''ஓம்''

''உன்னாணை''

''உன்னாணை''

''கிணத்துக்கை விழுந்து செத்துதே அந்த வெள்ளாடிச்சி அது நாலு மாதப் பிள்ளைத்தாச்சியாம், அதோடை உங்களுக்குத் தொடுப்பு இருந்ததா எண்டுதான் கேக்க இருந்தன்.''

''சீ, போயும் போயும் அந்தக் குமராயே கிழடு தட்டிப் போன வெள்ளாடிச்சியோடையா? உன்னைப் பார்த்துப் பழகிய பின்னையா?''

கேலியும் ஆச்சரியமும் கடுகடுப்பும் ஒருங்கே அவன் குரலில் ஒலித்தன.

''கோவிக் காதையுங்கோ. நான் பகிடிக்குத்தான் கேட்டன். இனி ஒரு நாளும் இப்பிடிப் பேச்சி போலைக் கேக்க மாட்டன். நான் தவறாய் கேட்டதுக்காக நீங்க என்னை அடிக்க வேணுமெண்டாலும் அடியுங்கோ.''

அவள் கண்கள் கலங்கின. தாங்க முடியாத வெட்கத்தை மறைக்க முடியாதவளாக தன் முகத்தை அவன் மார்பிலே புதைத்துக் கொண்டாள்.

அவனது உதட்டில் அரும்பிய புன்னகை இருளில் மறைந்தது. அவளை மார்போடு அணைத்துக் கொண்டான்.



## ஆசிரியரின் பிற நூல்கள்

**நாவல்கள்**

மரணத்தின் நிழலிலே
ஒரு குடும்பத்தின் கதை
இரண்டாவது சாதி
உலகச் சந்தையில் ஒரு பெண்
ஒரு பெண்ணின் கதை
விலங்கில்லா அடிமைகள்
சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை!
பொய்மையின் நிழலில்...
அயலவர்கள்
புதிய சந்தையில்
இளமையின் கீதம்
அந்நிய மனிதர்கள்
வதையின் கதை
மண்ணும் மக்களும்
போர்க்கோலம்
தரையும் தாரகையும்
செவ்வானம்
சடங்கு
நீண்ட பயணம்
சிறையும் குடிசையும்
கூட்டுக்கு வெளியே
குடும்பச் சிறையில்
தாய்வீடு
கவர்ச்சிக்கலையின் மறுபக்கம்
ஓர் அரசியலின் கதை
ஈனத்தொழில்
திரும்பிப் பார்க்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரமும் சொர்க்கமும்
நீ ஒரு பெண்
நான்கு சுவர்களுக்குள்
போட்டிச் சந்தையில்
இலட்சியக் கனவுகள்
அடைப்புகள்
வன்முறை வடுக்கள்
ஒரு மண்ணின் கதை

**சிறுகதைத் தொகுப்புகள்**

சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்
கொடுமைகள் தாமே அழிவதில்லை
சங்கமம்
ஒரே இனம்
நல்லவன்
செ.க. சிறுகதைகள் - காவியக் கதைகள்

**கட்டுரைகள்**

அறிவுக் கடிதங்கள்
பெண்ணடிமை தீர
கலையும் சமுதாயமும்
குந்தவிக்குக் கடிதங்கள்
குமரனுக்குக் கடிதங்கள்
மான்விழிக்குக் கடிதங்கள்
நவீனத்துவமும் தமிழகமும்
மக்கியாவலியும் வள்ளுவரும்
அர்த்தசாஸ்திரமும் திருக்குறளும்
பெண்ணியப் பார்வையில் திருக்குறள்

* *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org